பிஸ்மில்லா(ஹ்)

# முஸ்லிம்களின் நவீன அனுஷ்டானச் சம்ஹாரம்.

ஆசிரியர்:

T. M. முஹிய்யித்தீன் லெப்பை,

ஹெட்மாஸ்டர், போர்ட் முஹம்மதிய ஸ்கூல்,

வல்லம்.

பிரசுரதார்:

'முஸல்மான்' ஆபீஸ், தென்காசி.

ஹி. 1349—ஜமாதில் ஆகிர்.

பதிப்பிடம்:

மீரானியா அச்சுக்கூடம்,

திருநெல்வேலி.

1930. [அணா 10.

பிஸ்மில்லா(ஹ்)

# முஸ்லிம்களின் நவீன அனுஷ்டானச் சம்ஹாரம்.

ஆசிரியர்:

T. M. முஹிய்யித்தீன் லெப்பை,

ஹெட்மாஸ்டர், போர்ட் முஹம்மதிய ஸ்கூல்,

வல்லம்.

பிரசுரதார்:

'முஸல்மான்' ஆபீஸ், தென்காசி.

ஹி. 1349—ஜமாதில் ஆகிர்.

பதிப்பிடம்:

மீரானியா அச்சுக்கூடம்,

திருநெல்வேலி.

விலை] 1930. [அணா 10.

## விஷய அட்டவணை.

பக்கம்.


1. இப்புத்தகத்தை பற்றிய வேதாந்திகளின் மதிப்புரைகள்
2. முகவுரை ... ... ... ... 1
3. மறுப்பு நூலைப்பற்றிய முன்னுரை விளக்கம் ... 4
4. குர்ஆன் ஷரீபு ஓதுவதன் பலன் ... ... 16
5. குர்ஆன் ஓதக் கூலி கொடுப்பதின் விபரம் ... ... 19
6. குர்ஆன் ஓதக் கூலி பெறுவதைக் குறித்து "தஹ்தாவி" கூறுவது 33
7. குர்ஆன்ஓதிக்கூலிபெறுவது 12 ரூபாய்க்கு குறையப்படாதென்பது 34
8. மௌத்தானவர்கட்கு நன்மையை எப்படிச் சேர்த்து வைப்பது 35
9. நன்மையைச் சேர்ப்பிக்க நாள் குறிப்பிடல் ... 39
10. நபிகள் நாதர் (ஸல்) தங்கள் குமாருக்கு மூன்றும் நாள் பாத்திஹா ஓதக் குறிப்பிட்டதின் உண்மை. 40
11. பொய் ஹதீது உண்டு பண்ணல் ... ... 45
12. கப்ரின் பேரில் சப்தமிட்டு ஓதுவது ... ... 55
13. மைய்யித்து வீட்டார்கட்கு தேர்தல் கூறுவது ... 56
14. மைய்யித்துக்கு முன் உணவுப் பதார்த்தம் கொண்டு செல்வது 58
15. உணவு பதார்த்தங்களை முன்னால் வைத்து பாத்திஹா ஓதல் 62
16. மரணச்சாதம் புசித்தல் ... ... ... 68
17. மைய்யித்து வீட்டாருக்கு உணவளித்தலும் அவர்களிடம் தங்குவதும் ... ... ... ... 74
18. மைய்யித்துக்காக துக்கம் பாராட்டல் ... ... 76
19. மைய்யித்துச் சாதம் மனதை மைய்யித்தாக்குமாம் ... 77
20. கப்ராளிகளிடம் உதவி தேடல். அதாவது நீங்கள் கஷ்டப்படும் போது கப்ராளிகளைக் கூப்பிடுங்கள் என்பதின் உண்மை 78
21. கத்னச் செய்வதின் முறையும் ஒழுங்கும் ... ... 81
22. ஷஅபான் பராத்து வணக்கம் ... ... 83
23. கப்ரிலிருந்து அர்வாஹுகள் வெளிப்புறப்படல் ... 90
24. மௌலூத் ஷரீப் ஓதுவதன் விபரம் ... ... 94
25. மௌலூத் ஷரீப் தோன்றின காலம் ... ... 99
26. மௌலித் ஷரீப் ஓதக்கூலி பெறுவது ... ... 101
27. யாசைய்யிதீ பைத்தின் ஆராய்ச்சி ... ... 102
28. குழந்தைகட்குப் பாலூட்டல் ... ... ... 103
29. அகீகாச் செய்வதன் விபரம் ... ... ... 104
30. கப்ருகளை ஸியாரத் செய்வது ... ... 106
31. வஸீலாத்தேடல் ... ... ... 109

32. வஸிய்யத்தும் எதீம்களின் பொருளைப்புசிப்பதும் ... 109
33. மௌத்தானவுடன் சொத்துக்களைப் பாகிக்கும் முறையும் செலவு செய்வதின் ஒழுங்கும் ... ... 109
34. சுன்னத்தும் பிது அத்தும் ... ... ... 112
35. பிதுஅத்துக்காரனை ஆதரிப்பது ... ... 116
36. முஸ்தஹப்பு மக்ரூஹாய் விடும் விபரம் ... ... 117
37. வஹ்ஹாபியர்களின் விபரம் ... ... 121

## பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 5 | பிரசுரம் | பிரசாரம் |
| 5 | 8 | தொண்டிரு | தொண்டிறு |
| 6 | 12 | கட்டப்படி | காட்டப்பட்டி |
| 15 | 5 | அவர்கள் | அவர்களுக்கு |
| 19 | 32 | இதை | இந்த |
| 22 | 35 | ஆக்ஷேபம் | —— |
| 25 | 3 | இஸ்மாஹின் | இஜ்மாஹின் |
| 27 | 19 | ஏனிலும் | எனினும் |
| 29 | 30 | இவர்கள் | இவர்களை |
| 30 | 24 | ——. | —— |
| 45 | 8 | மரணவன் | மரணமானவன் |
| 48 | 15 | பெருமைகளைச்செயும் | பெருமைக்காகச்செய்[யும் |
| ,, | ,, | நன்மைக்காக | நன்மை |
| 52 | 7 | இதுபரத்து | இதுபாத்து |
| 78 | 17 | இப்படிப்பட்டி | இப்படிப்பட்ட |
| 102 | 11 | ஹறுமென | ஹறுமென்ற |
| ,, | 20 | மற்ற | வற்ற |
| 104 | 22 | சிறைவேற்ற | நிறைவேற்ற |
| 108 | 4 | மைய்யித்து | மைய்யித்தை |
| 117 | 30 | லெம்பை | லெப்பை |
| 120 | 25 | விஸ்வாஸியாய் | விஸ்வாஸியா |

பிஸ்மில்லாஹ்.

# முஸ்லிம்களின் நவீன அனுஷ்டான ஸம்ஹாரத்தைப்பற்றிய வேதவிளக்கப் பெரியார்களின் மதிப்புரைகள்.

மஜ்லிசுல்உலமா செக்ரட்டெரி, மௌலானா மௌல்வி ஹாஜி சி. கா. ஷைக் இபுறுஹீம் ஸாஹிப் அவர்கள் வரைவது.

முஸ்லிம் சோதரர்காள்!

குபிரிருள் சூழ்ந்த அந்தகாரமென்னும் அறியாமை தன் அரசாக்ஷியைச்செலுத்தி மானிடவர்க்கத்தை ஏகதத்துவக்கொள்கையை நீத்து மனம்போன போக்கில் நடக்கச் செய்துவரும் காலத்தில் அதை நிவர்த்திப்பான் வேண்டி காருண்யக் கடவுள் தனது ஹபீபாகிய நமது நாயகம் முஹம்மதுமுஸ்தபா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை இப்பூவுலகின்கண் அவதரிக்கச் செய்தான். நம்மீது கொண்ட பேரன்பால் நாம் இகபரமிரண்டினும் சுகஜீவியாய் வாழ்ந்துவரும் பொருட்டு முடிவுநாள் வரை நடக்கவேண்டியதும் விலகிக்கொள்ள வேண்டியதுமான விஷயங்களை தெளிவாக போதிக்கும் திருமறையை நாயகமவர்களுக்கு அளித்தான். எம்பெருமானவர்கள் நபிப்பட்டம் பெற்று 23 வருஷம் மனிதர்களுக்கிடையில் வாசம்செய்து நாம் நற்கதி பெறுவதற்குரிய வழிகளைத் தெளிவாகப் போதித்து மறைந்தார்கள். அவர்களுக்குப் பின் குலபாயேறாஷிதீன்கள் தாபியீன் தபஅதாபியீன்கள் இமாம்கள் முதலிய கைறுல் குரூனி என்னும் காலத்திய மஹான்கள் நாயகமவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சொல்செயலை எடுத்து நடந்து மற்றவர்களும் அவ்விதமே நடந்துவரும்பொருட்டு திருக்குர்ஆன் ஹதீதுக்களை எளிதில் விளங்கிக்கொள்ளும்படியாக எழுதி வைத்தார்கள். நாயகத்தின் அனந்தரக்காரர்களெனப் பட்டம்பெற்ற உண்மை உலமாக்கள் அவற்றை ஜனங்களுக்கு எடுத்துக் காட்டி நேர்வழியில் நடத்திவந்தார்கள். காலஞ் செல்லச் செல்ல, ஜனங்கள் ஆடம்பரங்களிலும்

ஆபாச விளையாட்டுகளிலும் ஆவல்கொண்டு பிறமதஸ்தர்களின் வீண் அனுஷ்டானங்களை எடுத்து நடக்க ஆரம்பித்தார்கள். கற்றறிந்த உலமாக்கள் அவற்றை விலக்காமலும் அவர்களில் பணஆசை பிடித்த சிலர் தங்கள் வருவாயை உத்தேசித்து அவர்களுடன் அச் செயலில் பங்கு எடுத்துக்கொண்டதால் பாமர ஜனங்கள் தாங்கள் செய்யும் வேலை மார்க்கத்திலுள்ளது என்று எண்ணிக்கொண்டார்கள். இவர்கள் "என்னுடைய ஸஹாபாக்கள் நக்ஷத்திரங்களைப் போல் அவர்களில் யாரைப் பின்பற்றி நடந்தாலும் நேர்வழி பெறுவார்கள்" என்றும் "செய்கைகளில் கெட்டது நூதனம் (பித்அத்து) நூதனமடங்கலும் வழிகேடு, வழிகேடனைத்தும் நரகில் சேர்க்கும்" என்றும் நாயகமருளிய வாக்கை மறந்துவிட்டார்கள். இந்த ஆபாச அனுஷ்டானங்கள் ஜனங்களுக்கிடையில் எவ்வளவு தூரம் பரவிற்றென்றால் 1. இவைகளை பர்லுவாஜிபுகளைக் காண மேலாக கருதுதல் 2. பர்லுவாஜிபு சுன்னத்து தவறிவிடினும் செய்யாவிடினும் கவலை கிடையாது. சடங்குகள் தவறிப்போனால் பெருங் கவலையும் குடும்பத்துக்கு நாசம் வந்துற்றதுபோலும் எண்ணுகிறார்கள். 3. மார்க்கத்தில் ஏவப்பட்டதற்கு கொடுக்கிறதில்லை. கடன் வாங்கியேனும் சடங்குகளை செய்து கெட்டுப்போகிறார்கள். இவற்றை கற்றுணர்ந்தோர் வாய்மூடி இருக்காமல் மார்க்கவிதியை ஜனங்களுக்கு சொல்லி நல்வழிக்கு கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இச்சமயத்தில் தென்காசி தாலுகா வல்லம், போர்டு முஹம்மதிய ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஜனாப் T. M. முஹியித்தீன் லெப்பை அவர்களால் வரையப்பெற்ற "இஸ்லாத்தின் நவீன அனுஷ்டான சம்ஹாரம்" என்னும் அரிய நூல் எனக்கு எட்டியது. அதை நான் பார்வையிட்டதில் இக்காலத்தில் நடந்துவரும் பழிக்கப்பட்ட நூதன அனுஷ்டானங்களை மேற்கோள்களுடன் சரியான முறையில் சீர்திருத்தி எழுதப்பெற்றிருக்கிறது. இது ஒவ்வொரு குடும்பத்தில் ஒரு புஸ்தகமாவது இருக்கவேண்டுமென்பதும் அதை வாங்கி பெட்டிகள்படிக்கும்படி பூட்டிவைத்துவிடாமல் தினசரி எடுத்துப்பார்த்து தானும் அதன்படி நடந்து மற்றவர்களையும் நடக்கும்படி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஜனாப் ஆசிரியரவர்கள் இந்நூலை இயற்ற எடுத்துக்கொண்ட பிரயாசைக்கு நாயன் அவர்களுக்கு இரு உலகிலும் சுகவாழ்வை கொடுப்பானாக. கற்றறிந்த உலமாக்கள் இந்நூலை பார்த்தாவது தாங்கள் வாய்மூடி இருந்ததற்கு

வெட்கித்து இது விஷயமாக பல நூல்களை வெளியிடுவார்களாக. மனிதர்களுக்கு பிரயோஜனம் கொடுக்கும்படியான வஸ்து பூமியில் நிலைத்திருக்கவும்.—திருமறை.

இந்நூலின் குறிப்பில் "முஸல்மான் கோஷ்டியாரின் முரணான கொள்கைகட்கு முக்கிய மறுப்பு" என்று ஜனாப் ம. கா. நா. முகம்மது ஷம்சுத்தீன் சாஹிபு வெளிரங்கமாகவும் ஆலி ஜனாப் எனது உஸ்தாது மௌலானா மௌலவி சைய்யிது முஹம்மது ஷரபுத்தீன் சாஹிபு அவர்கள் மறைவாகவும் ஒரு நூல் தென்காசி முஸல்மான் பத்திராதிபர் ஜனாப் மீ. இ. ஹாஜி முஹம்மது அப்துல்காதிர் ஸாஹிபு அவர்களை வஹ்ஹாபி, முனாபிக், காபிர் என்னும் வசைமொழிகளால் தாக்கி எழுதியிருப்பதாகத் தெரிகிறது. என் பார்வைக்கு ஷை புஸ்தகம் கிடைக்கவில்லை. எனக்கும் ஷை பத்திராதிபர் மீ. இ. அ. அவர்களுக்கும் சுமார் 15 வருஷத்துக்கு மேலாக நெருங்கிய பழக்கமுண்டு. அடிக்கடி என்னிடம் மார்க்க வினாவிடைகள் கேட்டுக் கொள்வதுமுண்டு. அவர்கள் நம் மார்க்கத்தவர்களில் சிலர் நடத்தி வரும் ஆபாச அனுஷ்டானங்களையும் சுன்னத்து ஜமாஅத்துக்கு முரணான கொள்கைகளையும் சதா கண்டித்தும் தங்கள் பத்திரிகைகளில் எழுதியும் வருகிறார்கள். அவர்கள் பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் பார்வையிட்டும் அவர்கள் வார்த்தைகளைக் கேட்டுமிருப்பவர்கள் சுன்னத்து ஜமாஅத்து கொள்கைக்கு கொஞ்சங்கூட மாறுபட்டவர்களென்று சொல்லத் துணியார்கள். மேலே சொல்லிய ஜனாப்கள் இருவரும், இக்குறிப்பில் கண்டபடி வசைமொழி எழுதியிருப்பார்களாகில் பத்திராதிபரவர்கள் பேரில் கொண்ட பொறாமையால் என்று சொல்வது மிகையாகாது. இனியாவது பத்திராதிபரவர்கள் பத்திரிகையையும் நூல்களையும் நீதமான கண்ணைக்கொண்டு பார்த்து கைசேதப்படுவார்கள் என்று நம்புகிறேன். இறைவா எங்களுக்கு நேரான பாதையைக் காட்டியருள்வாயாக.

சி. கா. ஷைக் இப்ுறுஹீம், பேட்டை.

பதக்குடி, மத்ரஸா அந்நூருல் முஹம்மதிய்யுவின் நாஜிரும்
பிரதம ஆசிரியருமான மௌலானா மௌல்வி
சே. மீ. ர. அப்துர் ரஹ்மான் ஸாஹிப் அவர்கள் வரைவது.

கனம் மிக்க ஆசிரியரவர்கட்கு. அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு. தங்களால் அனுப்பப்பெற்ற

இஸ்லாத்தின் நவீன அனுஷ்டான சம்ஹாரம் என்னும் பிரதி வரப் பார்வையிட்டேன். அடிமுதல் முடி ஈறாக நமது மார்க்க நெறிகள் ததும்பி யிருக்கின்றன. தற்காலம் நமது சமய சமூகத்தார் நடத்தி வரும் அனுச்சாரங்களைக் கெல்லி வீசிவிடுவதற்கான போதிய சான்று களுடன் பிரசுரித்திருப்பதைப் பார்த்து மிக்க மகிழ்வெய்துகிறேன். இதை ஒவ்வொரு முஸ்லிமும் வாங்கி வாசித்து உள்ளபடி யுணர்ந்து நமது சமயத்தில் நலம்பெற நடந்து நற்பலனடைவார்களென்று நம்புகின்றேன்,

சே. மீ. ர. அப்துர்ரஹ்மான், தென்காசி.

குலசேகரன்பட்டணம், மஜ்லிசுத்தாலிபில் இல்மு மத்ரஸாவின் ஆசிரியர், மௌல்வி ஹாபிஸ் கா. காதிர்முஹ்யித்தீன் ஸாஹிப் அவர்கள் வரைவது.

எனதன்பு மிக்க ஆசிரியரவர்கட்கு, அஸ்ஸலாமு அலைக்கும். உபய க்ஷேமத்துக்குத் தேட்டம். தங்களால் அனுப்பப்பட்ட நவீன அனுஷ்டான சம்ஹாரம் என்ற நூலை முற்றிலும் பார்வை யிட்டேன். அதில் அடங்கியுள்ள அம்சங்கள் யாவும் அறிஞர்களால் ஆமோதிக்கப் பெற்றதும் பெரியோர்களால் போற்றத் தக்கதுமா யிருப்பதைக் கண்டு அளவற்ற ஆனந்தமடைகிறேன். அநாகரீக மென்னும் அடாச்செயற்கள் அடர்ந்தேறிநிற்கும் இக்காலை ஜனாப் ஹெட்மாஸ்டரவர்களின் இப்பேருபகாரப் பெரும் பணியானது யாவருக்கும் பெரும் பயனளிக்குமெனக் கருதுகிறேன். எனவே, சகோதரர்கள் எல்லோரும் இந்நூலை வாங்கி வாசித்து அநாகரீகத் தை யகற்றட்டும்.

கா. காதிர்முஹ்யித்தீன், குலசேகரன்பட்டணம்.

தாஜுல் இஸ்லாம் ஆசிரியர் மௌலானா மௌல்வி ந. கா. நயினார் முஹம்மது ஸாஹிப் அவர்கள் எழுதுவது.

முக்திபெற நாடும் பக்திவான்களே!

எமது நண்பர் வல்லம் **T. M.** முஹிய்யிதீன் லெப்பை அவர் களால் இயற்றப்பெற்ற இஸ்லாத்தின் நவீன அனுஷ்டான சம்ஹா ரம் என்னும் இந்நூலை ஆதியோடந்தமாய் அதி நுட்பமாக ஆராய்ச்சி செய்தேன். இந்நூலின் ஆரம்பமுதல் கடைசிவரை எழுதப்பெற்ற

ஒவ்வோர் வாக்கியமும் பொன்னே போல் போற்றத் தக்கவை என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. 24 அத்தியாயங்களும் முஸ்லிம்கள் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்களென்பதே எமது துணிபு. தக்க மார்க்க நிபுணர்களால் எழுதப்பட்ட பல அரிய மார்க்க கிரந்தங்களிலிருந்தும் பத்வா (தீர்ப்பு நூல்) களிலிருந்தும் அநேக ஆதாரங்களுடன் இந்நூல் எழுதப்பட்டிருப்பதே இந்நூலின் மகிமையை துலக்குகின்றது. மக்கீ சாஹிபின் மறுப்பு நூலிற்காணும் எண்ணிறந்த அருசையான வார்த்தைகளே போலல்லாமல், இச்சிறந்த நூல் அழகிய முறையில் எழுதப்பட்டிருத்தலே இதன் சிறப்பை விளக்குகின்றது. அறிவிற் சிறந்த அறிஞர்களில் எவரும் இந்நூலைப் போற்றுகிறார் என்பதே எமது சித்தாந்தம்.

நவீன நாகரீகத்திலுழன்று இயற்கை மோகங்கொண்ட சில ஆங்கிலப் பட்டதாரிகள் இஸ்லாமதத்தில் வற்புறுத்தப்பட்ட பல உயரிய சட்டங்களை யெல்லாம் முல்லாக்கள் கட்டுக்கதை யென்றும் தற்காலத்திற் கொவ்வாத மூட வழக்கங்களென்றும் இயம்பியும் எழுதியும் வருவதால், நம் வாலிபர்களிற் பலர் அப்பிரசாரத்திற் சிக்குண்டு நம் பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தின் அஸ்திவாரத்தையே தகர்த்தெரியக் கங்கணம் கட்டிக்கொண்டு வருகின்றன ரென்பது நந் தமிழ் முஸ்லிம்களுக்கு மறைந்ததன்று. இன்னோர் மார்க்கம் வற்புறுத்திய தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஹஜ்ஜு பர்தா முறை முதலியவைகள் அநாகரீகமென்றும் இஸ்லாத்திற்கே அவசியமல்லாத வீண் வேலைகளென்றும் கூசாது கூறித்திரிகின்றனர். இவர்களின் பிரசாரம் இவ்வாறிருக்க.

படித்தவர்களெனப் பகட்டித் திரியும் சில பதர்களும், அவர்களையண்டிப் பிழைக்கும் அன்னக்காவடிகளும் நம் பரிசுத்த இஸ்லா மார்க்கம் ஒதுக்கித் தள்ளியவைகளையும், மார்க்கத்திலில்லாத அநாச்சாரங்களையும், பலகுபிர், ஷிர்க்கை வருத்தும் கொடிய கிரியைகளையும் கொஞ்சமுமஞ்சாது நமது இஸ்லாம் மார்க்கத்திலுள்ளவைகள் எனப் போதித்தும், எழுதியும், பாமர மக்களை வஞ்சித்து தொப்பை வளர்த்து வருகின்றார்கள். பாமர மக்கள் பரமதத்தினரின் சகவாச தோஷத்தால் செய்துவரும் சகல சடங்குகளையும் சுன்னத்தென்றும் முஸ்தஹப்பென்றும் மார்க்கத் தீர்ப்பளித்து தங்கள் நோக்கத்தை நிறைவேற்றி வருகின்றார்கள். அவ்வாபாச அனாச்சாரங்களைக் கண்டித்து. மார்க்கத்திலில்லாத பித்அத் எனச் சான்றோடு கூறும்

மார்க்க பக்தி நிறைந்த மகான்களை யெல்லாம் அப்பொல்லாத பிதுஅத்தீ பீர்கள் வாய்கொண்டமட்டும் திட்டவும், வஹ்ஹாபிப்பட்டம் கொடுக்கவும் அதிகாரம் பெற்று விடுகின்றனர். இவர்கள் தங்களுக்குப் பித்அத்திகள் எனப் பெயர் பெறுவதையும் கௌரவப்பட்டமாக மதிக்கின்றனர் போலும்? பித்அத்தீ என்ற பெயரினும் வஹ்ஹாபி யென்னும் பெயரே இவர்கள் நாக்களிலும் பேனுக்களிலும் துள்ளி விளையாடுகின்றது. "பித்அத்திகள் நரக அதிபதிகள்" என்று எம் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய எச்சரிக்கை இன்னோரின் செவிகளில் எட்டாது போனது ஆச்சரியமொன்றுமில்லை. ஏன்? எவர் பிணம் எங்கே போனாலும் பணம் பறித்து நிணம் வளர்ப்பதே இவர்கள் குணமானதால் தங்களுக்குச் சாதகமான குலூ வஷ்ரபூ (தின்னுங்கள்-பருகுங்கள்) போன்ற வாக்கியங்களை மட்டும் கத்தரித்துக்கொண்டு அதற்குப்பின் வரும் அடைமொழியாகிய வலா துஸ்ரிபூ (ஆனால் டாம்பீகச் செலவு செய்யாதீர்கள்) என்ற வாக்கியத்தைக் கவனியாமலேயே முக்த்தைத் திருப்பிக்கொள்கின்றனர்.

ஆகவே பொது மக்கள் மார்க்கநெறிகளை நன்குணர்ந்து கொள்ளாத வரை அவர்களுக்கு தாங்கள் செய்துவரும் மூடப்பழக்க வழக்கங்களைப்பற்றி யாதொன்றும் தெரியாது. "கத்தியை மந்திரித்துக் கொடுத்துக்" கோழியறுக்கச்செய்தகாலம் மலையேறிவிட்டதுபோல் மார்க்கத்தூரகர்களால் தற்போது நடைபெற்றுவரும் பல ஆபாசங்களும் கூடிய சீக்கிரம் மறைந்து போகுமென்பதிலையமின்று. உண்மையை யெடுத்துரைக்கும் உலமாக்கள் பலர் இப்போது பலவிடங்களிலும் தோன்றி வருவதே இதற்குப் போதிய ஆறுதலைக் கொடுக்கின்றது. மெய்யோங்கப் பொய் நீங்கும் என்ற வேத வாக்கியம் நமக்குத் தக்க ஊக்கத்தை யளித்து வருவதால் நாம் பொய்யர்களின் வசை பாணங்களைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. மெய்ப்பிரசாரத்தையே முஸ்லிம்கள் ஆவலுடன் எதிர் நோக்கி நிற்கின்றனர். தற்போது தக்க மார்க்க ஆதாரமான நூல்களே தேவையாக விருக்கின்றது. போலி மஷாயிகுகள் மௌலானாக்களின் தீய பிரசாரத்தை பொது மக்களே உதைத்துத் தள்ளும் காலம் வந்து விட்டது.

ஆகவே இந்நூலை இயற்றி நந்தமிழ் முஸ்லிம்மக்களுக்கு அளித்தது முஸ்லிம்களின் பெருந்தவப்பயனென்பதே எமது முடிவான அபிப்பிராயம் முஸ்லிம்கள் அன்னாருக்கு நன்றி செலுத்தக் கடமைப்

பட்டிருக்கிறார்கள். இந்நூல் பலவகையிலும் பொது மக்களுக்கு உண்மையை யூட்டும் சிறந்த நூலென்பதில் சந்தேகமில்லை. இல கூஷக்கணக்காக இந்நூல் இலவசமாக வேண்டியது அவசியமென்பதை எவராலும் மறுக்கமுடியாது. தமிழ் நாட்டிலுள்ள பல முஸ்லிம் சங்கங்களும், மார்க்க அபிமானங்கொண்ட தனவந்தர்களும் இந் நூலை நூற்றுக்கணக்காக வாங்கி பொது மக்களுக்கு விநியோகம் செய்ய முன் வரவேண்டியது அத்தியாவசியமாகும். ஒவ்வொரு தமிழ் முஸ்லிம்கள் கரங்களிலும் இவ்வருமை நூல் திகழ வேண்டு மென்பதே எமது பேரவா. நூலாசிரியருக்கும் பொருளுதவிய ஈரோடு கனம் ந. கா. முஹம்மது கௌஸ் ஸாஹிபவர்களுக்கும் எமது நன்றியைச் செலுத்துகிறோம். வஸ்ஸலாம்.

இப்படிக்கு

ந. கா. நயினார் முஹம்மது, (தாஜாசிரியன்)

தஅலீமுல் இஸ்லாம், ரத்துல்காதியானி போன்ற அரிய நூலாசிரியர், சா. இ. முஹம்மதுமூஸா ஆலிம் ஸாகிப் அவர்கள் எழுதுவது.

## இஸ்லாத்தின் நவீன அனுஷ்டான சம்ஹாரம்.

மகுடத்தில் கண்ட அரிய நூல் மிஸ்கீனின் பார்வைக்கு வந்து அதை முழுதும் பார்வையிட்டு மகிழ்ந்தேன். இத்தகை நூல் நந் தென்னாட்டிற்கு மிகவும் அதியத்யாவசிய மென்பதை எவருமறி வர். இந்நூலில் முஸ்லிம் பொது மக்களிடை காணப்படும் ஷிர்க், பித்அத் முதலிய நவீன அந்தகாரச் செயற்களை தக்க ஆதாரங்களு டன், கண்டிக்கப் பெற்றிருக்கின்றன. அநேக உலமாக்களின் பத் வாக்களிலிருந்தும் ஆதாரங்கள் வரையப் பெற்றிருக்கின்றன. என வே, இது சம்பந்தமாக யான் அதிகம் ஒன்றும் எழுதத் தேவை யில்லை. எமது தெய்வீகத் திருமதமான இஸ்லாமானது மகாப் பரிசுத்த மதமாகும். இதன் கொள்கைகள், அனுஷ்டானங்கள், போதனைகள் முதலியன புத்திக்கும், யுக்திக்கும் மிகமிகப் பொருத்த மாக அமைக்கப்பெற்றுள்ளன வென்பது உலகமறிந்த உண்மை. எமது பரிசுத்த மதமே அநேக கலா ஞானங்களை உலகத்திற்களித் துள்ளது. தூய பழக்க வழக்கங்கள், நாகரீகம், மானிட முன் னேற்றமிவைகளுக்கு இஸ்லாமே வழிகாட்டியாக விருக்கின்றது. இஸ்லாம் இத்தரணியில் உதயமாகி ஷிர்க், பித்அத் முதலிய கொடிய

அந்தகாரத்தை பாதாளம் சேர்த்தது. சுருங்கக் கூறுமிடத்து மானிடரை உண்மை மானிடராகத் திகழச்செய்தது இஸ்லாமதமே யாகும். ஆ! இத்தகை மதத்துடைய முஸ்லிம்களிடையே காலக் கிரமத்தில் அநேக ஷிர்க், பித்அத்தான கொடிய அநாகரிகச் செயல்கள் நுழைந்துவிட்டதைக் கவனிக்குங்கால் அளவுகடந்த வருத்தமுண்டாகின்றது. நவீன அனுஷ்டானங்களை தவிர்க்கமுடியாத கட்டாயக் கடமையாகக் கொண்டிருக்கின்றனர். எதுவரையெனில்:— தொழுகை, நோன்பு முதலிய தவிர்க்கமுடியாத கட்டாயக் கடமைகளை நிறைவேற்றுவதை பிரதானமாகக் கொள்வதில்லை. ஆனால், கொடிய நவீன அனுஷ்டானங்களை நிறைவேற்றுவது மிகவும் கட்டாய விதியாகவும், நிறைவேற்றாவிடில் இமயகிரி பருவதமே பெயர்ந்துவந்து தலையில் விழுந்துவிடுவதைப் போன்றும் கருதுகின்றனர். இத்தகையோர் எவ்வாறாக உலக ரட்சகரின் சரியான உம்மத்துகளாதல்முடியும்? இத்தகைய செயலால் இகபரமிரண்டிற்கும் கெடுதியாகவே யிருக்கின்றது. பாப மூட்டையை சுமந்துகொள்வது ஒன்று, வீண் சிலவுகளால் ஓட்டையாண்டியாகி திண்டாடுவது மற்றொன்று. ஆதலின் முஸ்லிம்கள் இத்தகைய அனுஷ்டானங்களை சம்ஹாரம் செய்யாதவரை முன்னேற்றமடைய முடியாதென்பதை வற்புறுத்திக் கூறுகின்றேன். இந்நூலில் இறந்தோர்களுக்கு நன்மை சேர்ப்பிக்கும் வழிகளை நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது. எனவே இச்சிறந்த நூலை மனப்பூர்வமாய் வரவேற்பதுடன் உண்மையான சுன்னத் வல்ஜமாஅத்தைப் பின்பற்றியொழுக ஆவல்கொண்ட ஒவ்வொரு தமிழ் தெரிந்த ஆண் பெண் அனைவரும் கட்டாயம் இந்நூலை வாங்கிப் படித்து அதன்படி பக்கா சுன்னத் வல்ஜமாஅத்து முஸ்லிம்களாய்த் திகழும்படியாய்ப் பன்முறையும் அதி வினயத்துடன் கோரும் உங்கள் முஸ்லிம் சகோதரன்,

சா. இ. முஹம்மதுமூஸா, ஈரோடு.

சிவகிரி முயீனுல் இஸ்லாம் சங்கப்பிரதம காரியதரிசியும்
நன்னெறி வாசகம், கொன்றை வேந்தன் போன்ற
நந்நூலாசிரியருமான, S. முஹிய்யித்தீன்
பாதுஷா ஹரீக் ஆலிம் ஸாஹிப் அவர்கள் வரைவது.

நீடித்த காலம் பிறமத ஆசாரங்களே தங்களுக்குரியதென நம்பி தத்தம் மதக்கிரியைகள் திட்டமாய் இன்னதெனக் கண்டறி

யக்களவிலும் கருதா. இத்தென்னாட்டு முஸ்லிம்களின் பெருங் குறையை நிவிர்த்திப்பான் வேண்டி இஸ்லாத்தின் உண்மைத்தத்து வங்களை ஆண் பெண் இரு பாலரும் எளிதில் உணர்ந்து தம்முள் அடங்கியுள்ள உலக அந்தகாரத்தைப் போக்கும் வண்ணம் நற்ற மிழில் நவிலப்பட்டுதவிய நவீன அநுஷ்டானச் சம்ஹாரம் என்னும் இந்நூல் தற்காலத்திற் கேற்ப சாலச்சிறந்த தென சகலரும் ஒப்புக் கொள்ள வேண்டியதவசியமாகும். இதிலடங்கியுள்ள பல அரிய விஷயங்களை ஒருங்கே திரட்டி சமர்ப்பித்த ஆசிரியரவர்களின் பரோ பகாரத்திற்கு அவசியம் ஆசிகூற வேண்டும். பொதுவாய் இதரபுத்தி மான்களுக்கும் முக்கியமாய் இஸ்லாமானவர்களுக்கும் இந்நூல் ஓர் ஞான ஜோதியே.

S. முஹியித்தீன் பாதுஷா ஹரீக்,
சிவகிரி.

ஷரபுல் இஸ்லாம் மத்ரஸா அரபி தலைமை ஆசிரியரும் மரைக்காயர் மஸ்ஜீதின் பேஷ் இமாமுமான மௌலவி கதீபு சைய்யித் முஹம்மது லெப்பை ஸாஹிப் அவர்கள் வரைவது.

ஒபிஹி நஸ்தயீனு.

வல்லம் போர்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஜனுப் T. M. முஹ்யித் தீன் லெப்பை அவர்களாலியற்றப் பெற்று நமக்கு அனுப்பப்பட்ட "முஸ்லிம்களின் நவீன அநுஷ்டானச் சம்ஹாரம்" என்னும் இந் நூலை முழுதும் பார்வையிட்டேன். இதில் காணப்படும் 24 அத்தியா யங்களும் சுன்னத்து வல்ஜமா அத்துக் கொள்கைக்கு முற்ற முற் றப் பொருத்தமானதாய் தக்க மேற்கோள்களோடு அழகிய முறை யில் விளக்கப்பட்டிருக்கிறது. கிரந்த கர்த்தா வருவாயை எதிர்பார்க் கும் கோஷ்டியினரின் மரபினிலுதித்தவரா யிருந்தும் உண்மையை கூறுமிடத்து அஞ்சா நெஞ்சத்துடன் அறிஞர் பலரும் போற்றும் வண்ணம் மார்க்க நெறிப்படி உள்ளதை உள்ளபடியே எடுத்துக்கூறி யிருப்பதானது போற்றுதற்குரியதே யாகும். இன்னும் விவாக முதலிய காலங்களிலும் புதுவீடு கிரஹப்பிரவேசம், கந்தூரி தர்கா மஹோற்சவம் முதலிய மற்றும் பல விசேட காலங்களிலும் நடை பெறும் மத விரோத அனுச்சாரங்களை நிவர்த்திக்கும் நூல்கள் பல இத்தகைய அறிவும் ஆற்றலும் படைத்த அறிஞர்களால் வெளிவரு மாயின் நந்தமிழ் முஸ்லிம்களுக்குப் பெரிதும் பலன் கொடுக்குமென்

பதில் சந்தேகமில்லை. இந்நூலாசிரியர் பொருளுதவியோர்களுக்கும் இந்நூலை வாசித்துப் பயனடைவோர்களுக்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பானாக.

கதீபு செய்யிது முஹம்மது லெப்பை,
தென்காசி.

திருச்சி இஸ்லாமிய நூற்பிரசுரச்சங்க தலைமை ஆசிரியரும் திருக்குர்ஆன் ஷரீபின் அழகிய தப்ஸீர், இயற்கைமதம் போன்ற பல உயரிய மதநூலாசிரியருமான மௌலானா மௌலவி ஆ. கா. அப்துல்ஹமீது ஸாஹிப் அவர்கள் வரைவது:

அஸ்ஸலாமுஅலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு. தங்களால் அனுப்பப்பெற்ற இஸ்லாத்தின் நவீன அநுஷ்டானச்சம்ஹாரம் என்னும் நூல் வரப்பெற்று ஏகதேசம் பார்வையிட்டேன் மிக்க பிரயாசைப்பட்டே தாங்கள் அதனை இயற்றியிருப்பதாகத் தெரியவருகிறது. மிக்க நல்லவிதமாக அமைந்திருக்கின்றது. நம் தேசத்திற்குவேண்டிய பலமுக்கியமான விஷயங்களையும் தக்க ஆதாரங்களுடன் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். எனினும் அது ஓர் தர்க்க நூல். இத்தகைய நூற்களுக்கு கனம் சி. கா. சே. போன்ற பெரியோர்களின் மதிப்புரைதான் அவசியம். என்னுடைய நிலைமைக்கு யான் அதற்கு மதிப்புரை எழுதுவதற்கில்லை அதைப்பற்றி மன்னிக்கக்கோருகிறேன். ஆ. கா. அப்துல்ஹமீது, திருச்சி.

ஸ்ரீரங்கம் ஜாமிஆமஸ்ஜித் பேஷ்இமாம் மௌல்வி ஹாபிஸ் ஷைக்முஹிய்யித்தீன் ஸாஹிப் அவர்கள் வரைவது:

மதபக்தி சுடர்விட்டெரியும் ஆசிரியர் அவர்கள் சமுகம். அஸ்ஸலாமுஅலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு. தங்களால் அனுப்பப்பெற்ற சம்ஹாரம் என்னும் நூல் வரப்பெற்று அதில் அமைந்திருக்கும் அரிய விஷயங்களையும், நன் நோக்கங்களையும் கண்டு அடங்கா மகிழ்வடைந்தேன். தாங்கள் கல்விக்கடலில் ஆழ்ந்து ஹனபி மதுஹபின் உயர்தரக் கிரந்தங்களின் மூலாதாரங்களைக் கொண்டு சுன்னத் வல்ஜமாஅத்துக் கொள்கையின் பிரகாரம் மிகு சிரமத்துடன் இந்த நவீன அநுஷ்டான்ச்சம்ஹாரம் என்னும் நூலை இயற்றியதற்கு எல்லாம் வல்ல இறைவன் தங்களுக்கு அருள்புரியட்டும். இந்நூல் தற்காலம் முஸ்லிம் உலகத்துக்கே ஓர் ஒப்பற்ற

துணையாகவும், வழிசறுகியவர்களுக்கு ஓர் ஊன்றுகோலாகவும் நின்று விளங்குமென நம்புகிறேன். முஸ்லிம்களின் துர்அநுஷ்டான டாம்பீகச் செலவுகளால் அன்னவர்களின் ஆஸ்திகள் காபிர்கள் கையில் சிக்கி முஸ்லிம்கள் ஓட்டாண்டிகளாய்ப் போய்க்கொண்டிருப்பதைப் பார்த்தும் கண்ணீர்விட்டழுவாரில்லையே. எனவே இதிற் சொல்லப்பட்டவைகளின் பிரகாரம் முஸ்லிம்கள் நடந்து க்ஷேமம் பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

(பேஷ்இமாம்) ஷைக்முஹ்யித்தீன், ருஜகிரி.

ருஜகிரி காஸிமிய்யா மத்ரஸாவின் தலைமை ஆசிரியர்
மௌலானா மௌல்வி,
ச. நே. அ. நயினார் முஹம்மது ஸாஹிப் அவர்கள் வரைவது:
ஆசிரியர் அவர்களின் மேலான ஸமுகம்.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரக்காத்துஹு. "முஸ்லிம்களின் நவீன அனுஷ்டானச் சம்ஹாரம்" என்ற பெயரையுடைய நூல் ஒன்று வரப்பெற்றேன். அதில் நமது மார்க்கத்தின் கெட்ட பித்அத்தான ஆசாரங்களைக் கண்டித்து, சுன்னத்தான ஆசாரங்களை விபரித்து, தக்க ஆதாரங்களைக் கொண்டு காண்பிக்கப்பட்டிருக்கிறது.

இதுகாறும் நம் தேயங்களில் நடந்துவருகிற கெட்டபித் அத்தான சடங்குகளைப் பற்றிக் கண்டித்து ஒரு நூல் வெளிப்படுத்தப்படாதிருந்ததால், இதைப்பற்றி பிரத்தியேகமாக ஒரு கிதாபு இயற்ற வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்த நான் இந்நூலைப் பார்த்து நிரம்பவும் சந்தோஷமானேன். ஆனால், இதில் கலியாணக் காரியங்களிலும், அவ்லியாக்களுடைய தர்காக்களிலும், இன்னும் வேறு சில இடங்களிலும் நடக்கும் சடங்குகளிலும், வழங்கும் கெட்ட பித் அத்துக்களைப்பற்றி எழுதப்படவில்லை ✱. தற்போது, நாடுகளில் நடைபெற்று வரும் சகல பித் அத்துகளையும் திரட்டி, சுன்னத்தான முறைகளை விபரித்துக்காட்டி, எழுதப்பெற்றிருந்தால்; இந்நூல் இன்னும் மிகப்போற்றத் தக்கதாகும். எனினும், இந்நூல் முடிவு பெற்றவரை மிகவும் அழகாக அமைந்திருப்பதைப்பற்றி சந்தோஷமாகிறேன்.

---

✱ அதைப்பற்றிய நூலொன்று எழுதவும்முயற்சிக்கப்படுகிறது.(ஆசிரியன்)

அல்லாஹுத ஆலா திருக்குர் ஆன் ஷரீபில் சில ஜனங்களைப் பற்றி, (வழிகேட்டின் பாதையைக் கண்டால் அதை அவர்கள் தங்களுக்குப் பாதையாக ஆக்கிக்கொள்ளுவார்கள்) என்று சொல்லியிருப்பதைப்போல்; இறுதி நாள் சமீபம் ஆக ஆக, மிகுந்த ஜனங்கள் கெட்ட பித் அத்தான விஷயங்களையே தங்களுக்கு மார்க்கமாக எடுத்துக்கொண்டு, சுன்னத்தான விஷயங்களை விட்டுவிடுகிறார்கள். (நல்ல காரியமடங்கலும் கெட்ட காரியங்களாகி, கெட்ட காரியங்களெல்லாம் நல்ல காரியங்களாகி விடும் வரை; கியாமத்து நாள் வராதென்று ரிவாயத்துவருவதைப்போல்) மிகுந்த ஜனங்கள்கெட்ட பித் அத்தான விஷயங்களை நல்ல காரியங்களாகவும், வணக்கமாகவும், எடுத்துக்கொண்டிருப்பது மல்லாமல், அதைக் கண்டிப்பவர்களைப் பகைத்து குற்றப்பாடு - குறை கூறுவதும், ஏசுவதும் தகாத பட்டங்கள் அளிப்பதும், சகஜம் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கிஞ்சிற்றும் பொருட்பண்ணாமல் நம் கடமையைச் செய்து விட நாடி முன் வந்த, இந்நூலாசிரியர் அவர்களுக்கு; அல்லாஹுத ஆலா இன்னருள் புரிவாராக.

முஸ்லிம் சகோதரர்கள், எவ்வித சந்தேகமும் கொள்ளாமல், இதில் சொல்லப்பட்ட பிரகாரம் அமல் செய்து, ஸலபெசாலிஹீன் (முற்காலத்தின் நல்லோர்)களைப் பின் பற்றிய கூட்டத்திலாகி, நற்பலனை யடையுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். "எல்லாம் வல்ல அல்லாஹுத ஆலா" பொது மக்களுக்கு, இதைப் பின்பற்றி நடக்குமாறு திருவருள் புரிவாராகவும். ஆமீன்.

ச. நே. அ. நெயினா முகம்மது,
வீரசோழம்.

## ராஜகிரி மதரஸா காஸிமிய்யாவின் நாஸிர் மௌலானா மௌல்வி முஹம்மது அப்துர் ரஸ்லாக் ஸாஹிப் அவர்கள் வரைவது.

இதில் வரையப் பெற்றிருப்பவைகள் சரியான சான்றுகளைக் கொண்டு எழுதப்பெற்றிருக்கின்றன. பித் அத்தான ஆசாரங்களில் வீண் ஆடம்பரச் செலவும், கஷ்ட நஷ்டமும் ஏற்பட்டு புண்ணியமில்லாமற் போய் விடுகிறது. அவ்விதம் சுன்னத்தின் வழக்கங்களில்

ஆகாதென்பது திண்ணம். ஆதலால் இதை ஆங்காங்குள்ள ஆலிம் களும் தலைவர்களும் அமலுக்குக் கொண்டு வருவார்களாக.

முஹம்மது அப்துர் ரஸ்ஸாக் பாகவீ,
அய்யம்பேட்டை.

இது தக்க மேற்கோள்களைக் கொண்டு இயற்றப்பெற்றிருப்ப தால் அஸ்ஸுன்னத்தான ஆசாரங்களை ஒவ்வொருவரும் அமலுக் குக் கொண்டு வந்து அரிய பலன்களை அடைவீர்களாக:

மௌலானா மௌல்வி க. அ. அப்துல் அஜீஜ்பாகவீ
அரபி பார்ஸீ ஆசிரியர் மதுரஸா
காஸிமிய்யா ருஜகிரி.

## ஷுக்ரிய்யா.

அடியேனால் வரையப் பெற்ற இந்நூலை தங்களது ஜோலிகளைப் பொருட்படுத்தாது ஆதியோடந்தமாகச் சரிபார்த்து உண்மையை உணர்ந்து நன்மதிப்புரை நவின்ற அதிபுன்னத மேதாவிகளென்னும் வேத நூலறிஞர்கட்கு இணையில்லா இறைவன் இருபதியிலும் அருள் புரிய இருகரமேந்திப் பிரார்த்திப்பதுடன் எனது மனமார்ந்த வந்தனத்தையும் அவர்கள் பால் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

ஆக்கியோன்.

بسم الله الرحمن الرحيم

# இஸ்லாத்தின்

# நவீன அனுஷ்டான சம்ஹாரம்.

அருமந்த நேயர்காள்!

தற்காலம் முஸ்லிம் சமுகத்திற்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களையும் இடுக்கண்களையும் இயம்புவதென்றால் ஏடு போதாது. சொல்லத்தகாத பேராபத்து தலைமேல் தொங்கிக்கொண்டிருக்கிற விடயமே இவ்வமயம் யாவற்றிலும் முதன்மையாக கவனித்தற்குரியதென்பது வெள்ளிடை. இதை நன்கு கவனித்த மத ஊழியர்களிற்பலர் தங்கள் தங்கள் தகுதிக்கேற்றவாறு தொண்டாற்ற முனைந்துவருமிக்காலை முஸ்லிம்களுக்குள்ளிருந்தே அப்படிப்பட்ட தொண்டர்களுக்கு விரோதமான மறுப்புநூல் வெளிவருதல் மிக்க ஆச்சரியத்தை தருகின்றது. முஸ்லிம் தொண்டர்களையும் பொது நலப்பிரியர்களையும் வம்புக்கிழுத்து வசைபாடி அவர்களின் பணியை சின்னாபின்னமாக்கிச் சீரழிப்பதையே தங்களது மதப்பணியெனச் சிலர் கருதிக்கொண்டனர் போலும்?

சமீபத்தில் பேட்டை ஜனாப் முஹம்மது ஷம்சுத்தீன் மக்கீ ஸாஹிப் அவர்களின் நாமத்தைக்கொண்டு வெளிவந்த "முஸல்மான் கோஷ்டியாரின் முரணான கொள்கைகட்கு முக்கிய மறுப்பு" என்னும் முதல் வெளியீடும் இரண்டாம் வெளியீடும் என் பார்வையில் வந்தது. அதனை முழுதும் வாசித்துப் பார்க்கும்போது அதில் கையாளப்பட்டிருக்கும் வசனநடை என் மனதை பெரிதும் வாட்டிவிட்டது. தவிர ஜனாப் முஸல்மான் ஆசிரியரவர்களையும் அவர்களோடு சேர்ந்து உழைக்கும் மற்றும் முஸ்லிம்களையும் குறை கூறும் விஷயம் அப்புத்தகத்தில் 9 அம்சங்கள் காணப்படுகின்றன. (1) குர்ஆன்ஷரீப் ஓதல் (2) கத்தம் பாத்திஹா ஓதல் (3) அக்கீகாச் செய்தல் (4) பராத்து வணக்கம்புரிதல் (5) குர்ஆன் கத்தம்

ஓதி கூலி வாங்கல் (6) மரணச்சடங்கு 3, 7, 15, 21, 40-ம் நாள் சடங்குகள் செய்தல் (7) கபுர்களை ஸியாரத்துச்செய்தல் (8) மௌலிது ஓதல் அதற்கு கூலி கொடுத்தல் (9) அவ்லியாக்களிடம் வஸீலாத் தேடல் ஆகிய இவைகளாம். இவற்றை முஸல்மான் கோஷ்டியார் கூடாதென மறுத்துப் பிரசுரம் புரிவதாகவும் ஆதலின் அவர்களனைவரும் வஹ்ஹாபி வழிகெட்டோர் காபிர் என்றும் பல பக்கங்களில் திருப்பித்திருப்பி மிகக்கொடிய வேகத்துடன் இழிச்சொற்களால் தாக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயங்களை யெல்லாம் எழுதினவர் நிகாஹ் செய்யக்கூடாதென நவில்கிறாரென்ற ஒரு விஷயத்தையும் சேர்த்துக் கூறியிருந்தால் தங்கள் நோக்கத்துக்கு மிக்க அநுகூலமாயிருந்திருக்கும். மனிதனுக்கு மறதி ஏற்படுவது சுபாவமாதலின் அதை விட்டிருக்கலாமெனக் கருதுகிறேன்.

முஸல்மான் கோஷ்டியார்கள்மீது சாற்றும் மேற்கண்ட விஷயங்கள் உண்மைக்கு முழுமாற்றமாயிருப்பதுடன் சுன்னத்துவல் ஜமாஅத்து விஸ்வாசத்துக்குள்ளடங்கிய சில்லரைப் பிரிவுமாகும். நாம் எதற்காக முஸல்மான் கோஷ்டியாரைத் தாக்குகிறோம். அந்த சட்டம் எத்தன்மையுள்ளது. இதற்கெவ்வளவு தூரம் முயற்சிக்க வேண்டுமென்ற பாகுபாடு தெரியாமல் கண்மூடித்தனமாய் கண்டவாறு தூஷிக்கப்பெற்றிருக்கிறது. யாங்கள் இதுகாறும் கவனித்து வந்ததில் அப்படிப்பட்ட யாதொரு குறையும் காணப்படவில்லை. மேலும் சுன்னி முஸ்லிம்களின் கொள்கையைப் பரத்துவதிலும் முஸ்லிம்கட்கு ஸன்மார்க்கப் பிரசாரம் புரிவதிலும் எதிர்மதவாதிகளின் சூழ்ச்சிகளை விளக்கி முஸ்லிம்களை விழிக்கச் செய்வதிலும் முன்னணியில் நின்று விளங்கிவருகிறதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட மதச்சேவை புரியும் பத்திரிகையைக் குறைகூறினால் பின்னை எதைத்தான் விடப்போகிறார்களென்பதை யறிந்த மிஸ்கீன் இவ்விஷயங்களைத் தகுந்தவளவில் என் சிற்றறிவிற் கேற்றவாறு ஆராய்ந்து பொதுமக்களுக்கு உண்மையை உணர்த்தல் வேண்டுமென என் மனம் என்னைத் தூண்டிற்றாதலின் இந்நூலை இயற்ற முன்வந்துள்ளேன்.

இந்நூலை மறுப்பு நூலென்று கொள்ளாமல் மதப்பிரசார நூலென்று கருதக் காரணமில்லாமலில்லை. முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் அவசியச்செலவு அவசியமற்ற பெருமிதச் செலவு

இன்னதென்றறியாமல் மூடநம்பிக்கையுடன் பொய் குருக்களென்னும் முல்லாஜீக்களின் மருட்டுதலுக்குட்பட்டு கத்தம் பாத்திஹா மௌலிது, கத்னு, விவாகம், மரணம் முதலிய வைபவங்களில் அளவுக்கதிகமாய்ச்செலவிட இதர மதஸ்தர்களிடம் வட்டிக்குக் கடன் கொண்டும் தக்க சமயத்தில் அக்கடனிறுக்க வழியின்றி வீடு முதலிய சொத்துக்களை அடகுவைத்து இறுதியாக இல்லிடங்களையும் இழந்து பரதேசிபோல் திண்டாடி விழிக்கின்றனர். இந்நிலைமையைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்துவரும் ஆரியர்களும் கிறிஸ்தவர்களும் வேட்டை சிக்கிவிட்டதென தங்களது பலத்தை யுபயோகிக்கவும் பல வழிகளிலும் வற்புறுத்தி தங்கள் மதத்தில் சேர்த்துக்கொள்ளவும் பிரயத்தனம் எடுத்துக்கொள்ளுகின்றனர். மால்கானு வகையரு இதற்குச் சான்றளிக்கும். இவ்வாறு முஸ்லிம்கள் ஏழைமக்களாய், நாளுக்குநாள் க்ஷீணதசையடைந்து இதர மதஸ்தர்கள்பால் சிக்குண்டு விழிக்கிறதைப்பற்றி இம்முல்லாஜீகளுக்கு சற்றும் கவலையோ, அக்கரையோ கனவிலும் இருப்பதாகக் கூறமுடியவில்லை. முஸ்லிம்கள் கடன் கொள்ளாமல் உள்ளதற்குத் தக்கவாறு சிக்கனமாகவும் செட்டாகவும் நடத்த இன்னுர் கற்பிப்பதுமில்லை. அவர்களின் எளிய நிலைமையில் அநுதாபங் காட்டுகிறதுமில்லை. அப்படி சிக்கனமாய் கழிப்பவர்களை கஞ்சன், லோபி, வஹ்ஹாபி, என்று தூற்ற முனைகின்றார்கள். யார் எப்படிப்போனாலும் கத்தம் பாத்திஹா ஓதிக் கூலி வியாபாரஞ் செய்வதிலும் பலவித பழவர்க்கம் அன்னபானாதிகளோடுகூடிய அதி ருசிகரமான மையித்துச் சாப்பாடுகளை யருந்துவதிலும் குறை நேர்ந்துவிடக்கூடாது. இதுவே இவர்களது உள்ளக்கிடக்கை. உதாரணமாக இம்மறுப்புநூலின் ஆசிரியரை எடுத்துக்கொள்ளலாம. ஆரிய ஹிந்துக்களின் கொடுமைகட்கும் உலகப் பகட்டைக்காட்டி மதத்தில் சாரச்செய்யும் கிறிஸ்தவச்சூழ்ச்சிகட்கும் இஸ்லாத்திற்குள்ளே முளைத்து இஸ்லாத்தின் மூலதத்துவங்களைக் கருவறுக்கவும் நாஸ்திகக் கொள்கையைப் பரிசுத்த வேதத்தில் புகுத்தவும் துணிந்திருக்கும் வழிதவறிய மாறுபாட்டுக்காரருக்கும் இவர்கள் ஒரு மறுப்புப் பிரசுரமோ பிரசங்கமோ புரிந்ததாக யாம் இதுகாறும் கேள்விப்பட்டில்லை. பின்னை எதற்காக முன் வருகின்றனரெனின் மையித்துச் சாப்பாட்டுக்கும் கத்த வியாபாரத்திற்குமே. இவ்வாறான நம்பிக்கையில் மூழ்கியிருக்கும் முஸ்லிம்களை அதைவிட்டும் நிவர்த்

தித்து உண்மையை உணர்த்துவதானுல் இதை ஒரு தக்க மதப்பிரசார நூலெனக் கொள்ளின் மிகையாகா. அன்றி இகபரமிரண்டிற்கும் பயன்படத்தக்க பல சீர்திருத்தங்களும் உண்மைகளும் நிரம்பிக் காணப்படுகிறதாதலின் ஒவ்வோர் குடும்பஸ்தர்களும் இதை வாசித்து மத உண்மையை யறிந்து சுய சட்டங்களை விதிக்கும் வேதபாரகர்களின் தொல்லையை விட்டு விடுதலை யடைந்து சன்மார்க்க வழியைப் பெறக்கூடும்.

இந்நூலை எதிராளியின் வாயை அடக்கவேண்டும், தர்க்கமிட்டலைய வேண்டும் என்ற நோக்கத்துடன் பார்வையிடுவது சிலாக்கியமாகா. மேலும் விரோதங்களும், குழப்பங்களும் நேரிடவும் கூடுமாதலின் சாந்தத்துடன் அனுஷ்டானத்துக்குக் கொணர்ந்து சமாதானத்துடன் உணர்த்துவதே அறிவுடையோரின் செயலாகும். எனது இப்புத்தகத்தின் மேற்கோள்களாவன:- குர்ஆன் ஹதீது, தப்ஸீர், ஹனபி மதுஹபின் பிக்ஹு கிரந்தங்களாவன:- தூர்ருல் முஹ்தார், ரத்துல் முஹ்தார், காயத்துல் அவ்தார், ஆலம்கீரி, ஷரஹ்விகாயா, இன்னும் மௌலானு அப்துல்ஹை, மௌலானு ரஷீத் அஹ்மத், மௌலானு கலீல் அஹ்மத், ஹகீமுல் உம்மத் மௌலானு அஷரப் அலீ, மௌலானு அப்துல் அஸீஸ் முஹத்திஸ், ஷாஹ் அப்துல் ஹக்முஹத்திஸ், ஷாஹ் முஹம்மது இஸ்ஹாக்(ரஹ்)ஆகிய இன்னும் பல மேதாவிகளும் அவர்களின் கிரந்தங்களுமாம். இப்புத்தகத்தை இயற்ற நிதிஈந்துதவிய பினுங்கு தோல் வியாபாரம் ஜனுப். ந. கா். முஹம்மது கவுஸ் ஸாஹிப் அவர்கட்கும் இதை அச்சிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட முஸல்மான் ஆபீஸ் மதாபிமானிகட்கும் இகபர மிரண்டினும் எல்லாம் வல்ல அல்லா(ஹ்) அருள் பாலிப்பானுக. ஆமீன்.

T. M. முஹியயித்தீன் லெப்பை,
ஹெட்மாஸ்டர், போர்டு முஹம்மதிய ஸ்கூல், வல்லம்.

---

## மறுப்பு புத்தகத்தைப்பற்றிய முன்னுரை விளக்கம்.

கனம் மிக்க சகோதர முஸ்லிம்காள்!

தற்காலம் முஸ்லிம்களுக்கிழைக்கப்பட்டு வரும் இடுக்கண்களை நிவர்த்திக்கவும் மதப்பிரசாரம் புரிந்து ஆசாரச் சீர்திருத்தம் செய்

யவும் முன் வருவோருக்கு நம் சகோதர சிகாமணிகளால் சமர்ப்பிக்கப்படும் சீரிய பட்டங்களைக் கவனித்து நம் சகோதரர் எத்தன்மை வீழ்ச்சியிலிருக்கின்றன ரென்பதை ஓர்ந்து உண்மையை உலக மக்களுக் கெடுத்துணர்த்த ஊக்கத்துடன் முன் வருவீர்களாக.

பல்லாண்டுகளாக இஸ்லாமியத் தொண்டாற்றிவரும் முஸல்மான் வகுப்பாருக்கு விரோதமாக பேட்டை ஜனாப். ம. கா. முஹம்மது ஷம்சுத்தீன் மக்கீ ஸாஹிப் அவர்களால் 33 பக்கங் கொண்ட மறுப்பு நூலொன்று வெளியாயிற்று. இஸ்லாமியத் தொண்டிருப்போருக்கு மறுப்பு நூலும் உளதோவென வியந்து அதைப் பார்க்குங்கால் அதில் முஸல்மான் கோஷ்டியினர் குர்ஆன் ஓதல், கத்தம் பாத்திஹா, மௌலிது ஓதல் ஆகாதென்று சுன்னத்துவல்ஜமா அத்துக்கு முரணான கோட்பாடுகளைப் பரப்பி வருவதாக ஆதாரம் காட்டாமல் வரையப்பெற்றிருந்ததுமன்றி இழிவு மிக்க வார்த்தைகளால் தாக்கப்பட்டு மிருந்தது. அம்மறுப்பு நூலுக்கு முஸல்மான் ஆசிரியர் பதிலிறுக்கும்போது நாங்கள் அப்படிப்பட்ட கொள்கையுடையோரல்ல. துவேஷத்தாலும் பொறாமையாலும் பொய்யாக எழுதப்பட்டது பற்றி பொய் பகர்வோர் மல்வூனென்னும் சட்டப்படி மல்வூன் தன்மையில் வரையப்பட்டிருக்கிறதெனப் பதிலிறுத்ததை யாவருமறிவர். (1) மேலும் முஸ்லிம்களுக்கிடையூறு நேர்ந்துவருமிச்சமயம் இவ்வித விதண்டா வாதத்தில் தலையிடுவது சமூகத்துக்கே துரதிஷ்டமெனக் கண்ட முஸல்மான் ஆசிரியர் 1347 ஜமாதில் அவ்வல் சஞ்சிகையில் எம்மீது ஆக்ஷேபமுள்ள விஷயங்களை ஓர் சபை கூட்டி மத்தியஸ்தர் முன் விவாதித்து உண்மையை ஆராய்வோம் என அழைத்திருந்தார். இவ்வழைப்பை நிகரற்ற பெரும் பாக்கியமென ஜனாப் மக்கீ ஸாஹிப் அவர்கள் கருதியிருத்தல்வேண்டும். அவ்வாறு கருதி நியாயத்தைக் கடைப்பிடித்தொழுகப் பிரயத்தனப்பட்டிருக்கின் தற்போது நிகழும் குழப்பத்திற்கு காரணமிலது. மக்கீ ஸாஹிப் அவர்கள் மௌனஞ் சாதித்துவிட்டார். இம்மட்டோடு அக்குழப்பம் சிறிது குன்றிவந்தது.

அப்பால் சில மாதங்கட்குப் பின் "முஸல்மான் கோஷ்டியார்களுக்கு" மறுப்பாக 100 பக்கங்கொண்ட ஓர் நூல் வெளியாயிற்று. அதைக் கண்ணுறுங்கால் மிக ஆடாசமானதும் பொய்களும் வசை

(1) ஹிஜ்ரி 1347—ரபீயுல் ஆகிர்சஞ்சிகை பார்க்க.

மொழிகளும் மிக தாராளமாகக் காணப்பட்டன. எந்த உண்மை முஸ்லிமும் அவ்வசைப் புராணங்களைப் பார்த்து வருந்தாதிரான். மறுப்பு எழுத முறையில்லையா?' ஒழுக்கமில்லையா? ஏசல்மாலைதான மறுப்பு. இழிச்சொல்தான பொறுப்பு? இதுதான விடை இறுப்பு? முஸல்மான் ஆசிரியர் உள்ளதை விளம்பி நமது மூடு மந்திரங்கட்கும் தந்திர வருவாய்கட்கும் தாளிட்டு உலை வைத்துவிட்டார் என்ற கோபாவேசக் கூற்றினல் வேறென்றும் செய்யாவிடினும் தலை கால் தெரியாமல் தாண்டவமாடி ஏசிப்பேசி பொய்களைப் புகன்றேனும் நமது கோபாக்கினியைத் தணித்துக்கொள்வோமென்ற முரட்டுச் சித்தத்துடன் எழுதப்பட்டதாக அறிந்தேன். பொது மக்களுக்கு இவ்வுபாயம் தெரியாதிருக்கும் பொருட்டு சில போலி காரணங்களையும் கட்டப்பட்டிருக்கிறது. ஒருவனைத் தொந்தரவு செய்வதாயின் ஏதாவதொரு காரணத்தை அவன்மீது கற்பித்துக்கொள்வது உலக மாந்தர்களின் பொது வழக்கம். மக்கி சாஹிப் மௌல்வி ஷரபுத்தீன் ஸாஹிப் ஆகிய இருவரும் அதே தந்திரத்தைக் கையாண்டு அவர்களை வாய்கொண்ட மட்டும் தூஷித்துத் தூற்றி தங்கள் மனக் கொதிப்பை யாற்றிக்கொண்டனர் போலும்? அவர்கள் காட்டும் காரணங்கள் கீழ்வருமாறு:— (1) குர்ஆன் ஓதப்படாது. (2) கத்தம் பாத்திஹா ஓதப்படாது (3) அதற்கு கூலிகொடுக்கலாகாது. (4) மூன்றும் நாள் ... நாற்பதாம் நாட்களில் பாத்திஹா முதலிய மரணச்சடங்குகள் புரியலாகாது. (5) பராத்து வணக்கங்கூடாது. (6) கபுர்களை ஸியாரத்துச் செய்யக்கூடாது. (7) மௌலிது ஓதக்கூடாது. அக்கீக்காச் செய்யக்கூடாது. கத்னச் செய்யக்கூடாது. வலிமார்களிடம் வஸீலாத் தேடக்கூடாது என்று முஸல்மான் கோஷ்டியார்கள் கூறுகிறார்களாம். இதுதான் இவர்களது ஆக்ஷேபம். இவற்றைத் திருப்பித் திருப்பி பொது மக்கள் உண்மையென்று நினைக்குமாறு பாசாங்குடன் வரையப் பெற்றிருக்கிறது.

நாங்கள் ஆரம்பத்திலிருந்து முஸல்மான் சஞ்சிகையையும் இதர பல புத்தகங்களையும் பார்த்துத்தான் வருகிறோம். இவர்களின் ஆக்ஷேபனைக்குத் தக்க விஷயங்கள் யாதும் கண்டதில்லையென்பதை நிட்சயமாய்க் கூறத்துணிவோம்.

---

## இரண்டாம் வெளியீட்டு மறுப்பின் ஆராய்ச்சி.

**A.** ஏசல்மாலை.

இவ்வெளியீட்டில் அநேக பக்கங்களை பொய்யிலும் புரட்டிலும் ஏச்சிலும் பேச்சிலும் செய்யுட்களை வரைந்து கவிகளை ஜோடிப்பதிலும் பாழாக்கப்பட்டிருக்கின்றன. தடிப்பேரிய வார்த்தைகளால் தலை கால் தெரியாமல் தாக்கப்பட்டிருக்கின்றன. சற்குண வாடை வீசப் பெறுதவனும் மேன்மக்கள் அல்லது மார்க்க உண்மையுடைய ஆலிம் சமூகம் பழகி பலனெய்தாத ஓர் பட்டிக்காட்டுப் பாமரனுங் கூட இப்படிப்பட்ட வார்த்தைகளை ஓர் மதப் பிரசாரகர் மீது உபயோகிக்கத் துணியான். அன்றி காட்டுமிராண்டியுங் கூட இவ்வாபாசம் நிறைந்த அருவருப்பான வார்த்தைகளை ஒருவரைக் குறிப்பிட்டு எழுதவோ இயம்பவோ இசையானென்பது திண்ணம்.

உதாரணமாக இரண்டாவது மறுப்பு வெளியீட்டின் 24-ம் பக்கத்தில் அறுக்கமாட்டாதவன் சூத்தில் அறுபத்தெட்டு அறிவாள் என்றும், 41-ம் பக்கத்தில் வேலையற்ற அம்பட்டன் கழுதையைப் பிடித்துச் சிரைத்தான் என்பதுபோன்ற இவ்வாபாசப் பதமொழிகளும் ஒழுக்கமற்ற ஏச்சுகளும் இப்புத்தகாசிரியரின் யோக்கியதைகளையும் ஒழுக்கத்தன்மையையும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றைக் கவனிக்கப் புகின் சன்மார்க்கர் துன்மார்க்கருக்குள்ள பேதா பேதம் தெற்றென விளங்குமென்பதிலையமில்லை.

“கெட்ட வார்த்தைக் கெதிராக நன்மையைக் கூறுக” என எம்மறை விதித்திருப்பதால் அவ்வாறான வார்த்தைகளால் பதிலிறுப்பது நமக்கழகல்லவென விடுகிறோம். இறைவனே விஜாரிக்கட்டும். சுருங்கக்கூறின் இன்னாரின் 100 பக்கங்கொண்ட புத்தகத்தில் ஒரு பக்கத்துக்கு சுமார் 10 ஏச்சுகள் விகிதம் பார்த்தாலும் ஆயிரம் ஏச்சுகளாகின்றன.

(ஹதீது) ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது நாயகம் திருவுளமானார்கள். நான்கு(அடையாளம்) எவனிலிருக்குமோ அவன் பக்காமுனாபிக் ஆகும். இன்னும் எவனில் அந்நான்கி (அடையாளங்களி)ல் நின்றும் ஒன்றிக்குமோ அதை நிவிர்த்திக்காத வரை அவனில் முனாபிக் உடைய ஓர் அடையாளம் இருந்துகொண்டே இருக்கும். (அந்த நான்கு அடையாளங்களா

வன) நம்பினால் மோசஞ் செய்வான், பேசினால் பொய்பேசுவான், வாக்களித்தால் மாற்றஞ் செய்வான், போராடினால் வீணாத்தன மான வார்த்தைகளை யுபயோகிப்பான். (மிஷ்காத்)

(ஹதீது) உங்களெல்லோரிலும் எனக்கு அதிகப்பிரியமான வனும் இன்னும் மறுமையில் எல்லோரிலும் விசேஷமாக என்னை சமீபிக்கிறவனும் நற்குணமுடையவனாகும். இன்னும் உங்களெல் லோரிலும் எனக்கு அதிக வெறுப்புடையவனும் இன்னும் மறுமை யில் எல்லோரிலும் அதிகமாக என்னைவிட்டு தூரப்பட்டிருக்கிற வனும் துர்க்குணமுடையவனாகும் எனவே இவ்வாறான அசுத்த வச்சுகள் சன்மார்க்க சீலர்களுக்குரிய தன்றென்பது வெளிப்படை யாம்.

B. போய்:—

இன்னும் அவ்வாபாசநூலில் ஒரு பெரும்பாகம் டொய்களுக்கு இறையாக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நூலாசிரியரெனப் பெயர் புனை வதே போதும். மற்ற அண்டப்புழுகுகளுக்கு நாம் கடமைப்பட் டில்லையென அவ்வாசிரியர் கருதிக்கொண்டனர்போலும்? மாபெரும் பாதகங்களிலொன்றான பொய்யை இத்துணை மலிவாக வழங்கப் பட்ட இன்னார் மற்றும் பெரும் பாதகங்கள் எதைத் தான் விட்டு விடுவாரெனக் கூறுவது? எவ்வாறாயினும் பக்கங்களை நிரப்பிவிடுவதே போதுமென எழுதப்பட்டிருக்கிறதாகக் காண்கிறோம். இம்மகா னது 100 பக்கங்கொண்ட புத்தகத்தில் ஒரு பக்கத்துக்கு சற்றே றத்தாழ பத்துப்பொய்களை வைத்துக்கொண்டாலும் ஆயிரம் பொய் வரை யாகின்றன. ஒரு புத்தகத்தில் ஆயிரம் பொய் புகல்வோரை யும் அப்புத்தகத்தின் பல பாகங்களில் மறைந்து மறைந்து வெளி வரும் மேதாவியின் நிலைமையையும் வாசிப்போர்களே உணர்ந்து கொள்ளும்படி விட்டுவிடுகிறோம். ஒழுங்கான விதத்தில் தர்க்கமிட்டு உண்மையை அறிய இயலாத பேர்வழிகளே இவ்வாபாசத்துறை யிலிறங்குவார்களென்பது வெள்ளிடை. மதவிஷயத்தில் சற்றேனும் அஞ்சாமல் இப்படிப் பொய் பகர்வதாயின் உலக விஷயத்தில் மரக் கால் போட்டுத்தான் அளக்கவேண்டும்.

திருமறையில் இறைவன் பொய் கூறுவோரை லஃனத்துக் குரியவரெனச் சாற்றுகின்றான்.

நாயகம் அருளினதாவது:— அடிமை பொய் பகர்வதனாலேற்பட்ட துர்நாற்றத்தால் (காவல் புரியும்) மலக்கு ஒரு மைல் தூரம் விலகி விடுகிறார். (ஹதீது)

மெய் கூறுவது நன்மையாகும். இன்னும் நன்மை சுவர்க்கத்தின் பால் சேர்த்துவிடுகிறது. இன்னும் பொய் பகர்வது குற்றமாகும். இன்னும் குற்றம் நரகத்தின் பால் சேர்த்து விடுகிறது. (மிஷ்காத்)

ஆகவே இத்தகைய பொய் புகல்வோர் உண்மைப் பேர்வழிகளல்ல வென்பது பிரத்தியக்ஷப் பிரமாணமாம்.

## C. குர்ஆன் ஹதீதை நகல்செய்தல்.

அப்புத்தகத்தின் ஓர் சில பாகங்களில் பரிசுத்த குர்ஆன் ஆயத்துக்களையும் ஹதீதுகளையும் எழுதப் பெற்றிருக்கின்றன. அதன் கருத்துக்களையும் அதை உபயோகிக்கவேண்டிய ஸ்தானங்களையுமறியாமல் கண்டவாறு கையாளப்பட்டிருக்கிறது வருந்தத்தக்கதே. எனவே, ஆயத்துக்களையும் ஹதீதுகளையும் பொய் நோக்கத்துக்காக உபயோகப்படுத்துகிறவர்கள் பெருங் குற்றவாளிகளென்பது மறைவிதியாம்.

D. சரிதை:—அப்புத்தகத்தில் சில சரிதைகள் வரையப் பெற்றிருக்கின்றன. அவை பொய்யும் பொய்யர்களால் உண்டு பண்ணப்பட்டதுமாகும். நூலாசிரியர் அவற்றை அலசிப் பார்த்திருக்கவேண்டும். நூலாசிரியர் அஃதெல்லாம் நமக்குத் தேவை இன்று. பக்கங்களை நிரப்புவதே போதுமெனக் கருதினாலும் மௌல்வி சாஹிபேனும் அவற்றைத் திருத்தாது பராமுகமாயிருப்பது ஜனாப் முஸல்மான் ஆசிரியர்மீதுள்ள துவேஷமென்றே தோன்றுகிறது.

E. பெரியோர்களை இகழ்தல்:—நூலியற்றுவோர் மதவிஷயமான எந்தக் காரியத்திலும் தக்க ஆராய்ச்சியுடன் எழுதல்வேண்டும். கோபத்துடனும் துவேஷத்துடனும் எழுதுவதாயின் உண்மை புலனாகா. ஆதலின் சமரசமான எண்ணத்துடன் எழுதும்போது தனக்குத் தெரியாததும் ஐயப்பட்டதுமான விஷயங்களைத் தக்கதோர் மௌல்வியிடம் தெரிவித்து உண்மையைக் கைக்கொள்ளல்வேண்டும். பிரஸ்தாப இந்நூலில் அங்ஙனம் எதையும் கவனித்

ததாக இல்லை. மறுப்பு வெளியிட்டோமென்ற ஒரு பெயர்மட்டும்
கிடைத்தால்போதும்; அதுவே நமது பாக்யம் என்ற ஹோதாவில்
எழுதப்பட்டதாக அறிகிறோம். கத்தம் பாத்திஹா மௌலிது முத
லியன ஓதுகிறதற்குக் கூலி கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடா
தென ஹனபி மதுஹபின் அகத்தாய்மையுடையோரும் ஆராய்ச்
சித்திறன் மிக்க அறிஞரும் ஏகோபித்துத்தீர்மானித்திருக்க அதைச்
சிறிதும் ஓர்ந்து பாராது வேத நூலறிஞரென்னும் அப்பெரியாரனை
வரையும் வஹ்ஹாபி வழிகெட்டவர், முனாபிக், காபிர், கன்னாஸ்,
ஷைத்தான் என மிக இழிவாகத் தூற்றப்பெற்றிருக்கிறது. இதனை
கவனிக்கும்போது இம்மகாத்மாக்களிருவரும் மத சம்பந்தமான
கிரந்தங்களைத்தெளிந்த சித்தத்துடன் கற்றறியாத பேர்வழிகளென்
பதும் வாய் வேதாந்தம் பேசும் குதர்க்க வாதிகளென்பதும் தெள்
ளிதில் விளங்குகிறது.

F. வடகரை நோட்டீஸ்:— ஜனாப் முஸல்மான் ஆசிரியர்
வடகரையிலுள்ள சில நண்பர்களிடம் சுயஜோலியை முன்னிட்டுச்
சென்றதாகவும் த. இரஜப்பக்கீர் இராவுத்தரேனும் அன்றி வேறு
யாரேனும் கத்தம், மௌலிது, பாத்திஹா முதலிய விஷயங்களைக்
குறித்து வினவியிருப்பதுமில்லை ஜவாபு கூறியிருப்பதுமில்லையென்
றும் ஆனால் பேஷ் இமாமுடைய விருப்பத்திற்கிணங்கி இமாமத்
துச் செய்தது மட்டும் உண்டுமென்றும் அப்பால் வேறு சிலர்
மௌல்வி ஷரபுத்தீன் ஸாஹிப் அவர்களின் விஷயங்களைக் குறித்
துக்கூறி சில சுவால்களைப் பிரசுரிக்கக் கொடுத்ததாகவும் உறுதியாக
அறிகிறோம். உண்மை இங்ஙனமாக ஷெ மறுப்பு நூல் 48, 65,
70 முதலிய பக்கங்களில் முஸல்மான் ஆசிரியர் கத்தம் பாத்திஹா
வகையறா ஓத வேண்டாமெனக் கூறினதாகச் சாற்றுவது அபாண்ட
மான படுதூறாகும். அவர்களாலியற்றப் பெற்ற சுன்னத்துவல்
ஜமா அத்து என்னும் நூலை மறுப்பு நூலாசிரியர்கள் பார்வையிடுக.

G. குறைஷி ஸாஹிப்:- மதறுஸ் மஹ்மூத் ஜனாப். குறைஷி
ஸாஹிபுக்கும் ஆசிரியர் முதலிய யாவருக்கும் அதிக சம்பந்தமில்லை
அன்னாரைப்பற்றி ஷெ நூல் 29-ம் பக்கத்தில் பலவித் ஆபாசங்களை
சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது. ஜனாப், குறைஷி ஸாஹிப் அவர்கட்
கும் மௌல்வி ஷரபுத்தீன் ஸாஹிபு அவர்கள் வகையறாவுக்கும்
நேர்ந்துள்ள பகையால் கோர்ட்டு நடவடிக்கை ஏற்பட்டது உலகப்

பிரசித்தம். இன்னும் தென்காசி ஆலிம் ஸாஹிப் அவர்கள் வீட்டில் மௌல்வி ஸாஹிப் அவர்கட்கும் குறைஷி ஸாஹிப் அவர்கட்கும் நடந்த செருப்பு யுத்தமும் கனம் முதலாளி அவர்கள் வீட்டில் வைத்து மௌல்வி ஷரபுத்தீன் ஸாஹிபுக்கும் ஓர் ஆலிம் ஸாஹிபுக்கும் நிகழ்ந்த போரையும் அறிந்தோர் உண்மையை நன்கறிவர். ஜனுப், குறைஷி ஸாஹிபை மௌல்வி ஷரபுத்தீன் ஸாஹிபின் உறவினர்கள் தான் விரும்பி உபாத்தியாயராக ஏற்படுத்தியிருந்தனர். அவர்களிடம் கேட்டாலும் உண்மை புலனாகும், இவ்விஷயத்திலும் முஸல்மான் ஆசிரியரை விடவில்லை. பொய்கற்பிக்கிறதற்கு கிடைத்தது முஸல்மான் கோஷ்டியினர் தான் போலும்; என்னே விஷமம்.

H. சம்பந்தமற்ற கட்டுரை:— ஷை மறுப்பு நூல் 7-ம் பக்கத்தில் முஸல்மான் ஆசிரியர் அடிக்கடி என் வீட்டிற்கு வந்தாரென்றும் வேண்டிய உதவி செய்து தரவேண்டுமென்று ஆலோசனை கேட்டாரென்றும் கூறப்பெற்றிருக்கிறது. நாம் நூலாசிரியரிடம் இதை விபரிக்க வேண்டிய அவசியமென்ன வெனக் கேட்கின்றோம். இம்மிஸ்கீனிடமும் சந்தா சேர்க்கும்படி ஆசிரியர் கூறியிருக்கிறார். இப்படி எல்லா ஆசிரியர்களும் கூறுவது வழக்கமே. தாங்கள் அதிலும் பொய் கலந்து அடிக்கடி என் வீட்டுக்கு வந்தாரென்றும் அது மறந்துபோனதென்ன? வென்றும் பொய் கூறுவது அவசியமற்றதும் புழுக்கமுமல்லவா?

குடும்ப சம்பந்தமான பொய்ப்பெயரை உண்டு பண்ணுவதும், சந்தா நன்கொடையில் மோசம் பண்ணுவதாகவும் ஓதப்போன விடத்தில் சோற்றுக்குத் திண்டாடினதாகவும் இது போன்ற பல விஷயங்களைப் பொய்யுடன் கலந்தெழுதுவது மறுப்பு நூலாசிரியருக்கு நியாயமாகா. ஓதப்போன விடத்தில் கஷ்டப்படுவது ஓர் இழிவான காரியமா? விவாதத்திற்கு எடுத்துக்கொண்ட மஸாயில்கட்கும் இவ்விஷயங்கட்கும் நெருங்கிய சம்பந்தமிருப்பதாகக் காணப்படவில்லையே.

மேலும் இவ்விஷயங்களனைத்தையும் பொய்யுடன் கலந்தெழுதும் போது பிரஸ்தாப தர்மாத்மாக்களிருவரும் சற்று தங்களது நிலைமைகளைக் கவனியாது விட்டதுதான் வியப்பைத்தருகின்றது. இப்படிப்பட்ட பரமாத்மாக்களின் நிலைமைகளை வெளியிடுவது பெருந்தன்மைக் குரியதன்றென்று யாம் விடுகிறோமாயினும் ஒரு

விஷயத்தை மட்டும் எச்சரிக்காமல் விடமுடியவில்லை. ஜனாப் மக்கீ ஸாஹிப் அவர்களே! தங்களை ஒருவன் ஏ வண்ணார்குலப்பெரியாரே என்றும் ஜனாப். மௌல்விஸாஹிப் அவர்களே! தங்களை யொருவன் ஏ! மடையர் குலப் பெரியாரே என்றும் மரியாதையுடன் அழைத்தால் தாங்களிருவரும் ஏற்றுக்கொள்வீர்களா? அன்றென்றால் மற்றோரின் குலப்பெயரைத் திரித்துக்கூறி இழிவுப்படுத்துவது தங்களிருவருக்கும் தகுமோ? வென்பதே கேள்வி. †

I. வஹ்ஹாபிப் பத்திரிகையின் மொழி பெயர்ப்பு:— அஹ்லஹதீஸ் காதியானி, ஷிஆ, கிறிஸ்தவ, இந்துப் பத்திரிகைகள் ஒரு பத்திரிகாலயத்துக்கு வரலாம். ஆசிரியர் அறிஞராயின் சுன்னத்து வல்ஜமா அத்துக்கு முரணில்லாத வியாசங்களைப் பிரசுரிக்கவும் முரணானதைக் கண்டிக்கவும் உரிமையுண்டு. முஸல்மான் பத்திரிகையில் அதனாசிரியர் அஹ்லஹதீஸ் முதலிய பத்திரிகையிலிருந்து சில முக்கிய விஷயங்களைப் பிரசுரித்தால் வஹ்ஹாபியாய் விட்டாரெனக் கூச்சலிட்டுக் கதறுவது அறிவுடையோர் செயலன்று. வஹ்ஹாபி யார்? சுன்னத்து வல்ஜமா அத்து யார்? என்பதையேனும் அறியாத நீவிர்கள் இதிற்றலையிட்டிருக்கக்கூடாது. மௌல்வி ஸனுவல்லா ஸாஹிபின் நூற்களுக்கு தேவ்பந்து உலமாக்கள் நற்சாக்ஷி பத்திரமளிக்கவில்லையா? அவரின் ஹக்பிரகாசத்தை முஸ்லிம்கள் மனமுவந்து மொழி பெயர்க்க வில்லையா? இந்து ஆரியர் கிறிஸ்தவர்களின் பத்திரிகையிலிருந்து நம் மேதாவிகள் விஷயங்களை நகல் செய்யவில்லையா? வென்ற உண்மைகளை ஓர்ந்தேனும் வாயை மூடுவீர்களாக. எனினும் * சு.ஜ. கொள்கையை யறியாத ஒருவன்மற்றவர்களுடைய கிரந்தங்களையும் பத்திரிகைகளையும் பார்ப்பதில் அபாயமுண்டென்றால் யாமும் அங்கீகரிக்கிறோம். தாங்களிருவரும் அப்படிப்பட்டவர்களின் நூற்களைப் பார்வையிடாதிருப்பதே உத்தமமென யான் ஆலோசனை கூறுகிறேன். முஸல்மான் ஆசிரியரைப்

---

† ஜனாப் மௌல்வி ஷரபுத்தீன் ஸாஹிப் அவர்களின் பிதாவுக்கும் எனது பிதாவுக்கும் அதிக சம்பந்தமுண்டு. ஆதலின் அவர்களின் குடும்ப பூர்வோத்ரங்களை யான் நன்கறிவேன் என்பதை மௌல்வி ஷரபுத்தீன் ஸாஹிப் அவர்கள் சிந்தையிலிருத்திக்கொள்ளட்டும்.

* சு. ஜ. வென்று வருமிடங்களில் சுன்னத்து வல்ஜமாஅத்து என்று கொள்க.

பற்றித் தாங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. அவர்களாலியற்றப் பெற்று சத்திய சீலர்களால் நன்மதிப்பும் சாற்றப் பெற்று வெளி வந்துலவும் சு. ஜ. வென்னும் நூலை தாங்களிருவரும் பார்த்துக்கொள்ள வேண்டுமென மீண்டுமொருமுறை வற்புறுத்தி ஆலோசனை கூறுகிறேன்.

J. தவறு:— மனிதனுக்குத் தவறும் மறதியும் ஏற்படுவது சுபாவம். அப்படிப்பட்ட ஒரு சில தவறுகளைப்பற்றிப் பிடித்துக் கொண்டு தங்களது பொய் நோக்கங்களை யெல்லாம் சாதித்து விடலாமென்றெண்ணுவது மதியீனமாகும். மறுப்பு புத்தகம் 50–ம் பக்கத்தில் "32–வது பக்கத்தில் வரைந்த ஹதீதை 33–ம் பக்கமெனத் தாங்கள் ஆராய்ச்சியில் எழுதியிருப்பதே போன்று தானே தங்கள் ஆராய்ச்சி முழுவதுமிருக்கும்" என்றும் 35–ம் பக்கத்தில் "நீண்ட ஜுப்பாவென்ற ஓர் வார்த்தை விட்டுப்போனதினால் ஓரே ஒரு கவியை நகல்செய்த தாங்கள் அக்கவியில் கூறுகிறபடிபொருள் எழுத ஆற்றலற்றுப் போனதென்ன? வென்றும் மிக முழக்கத்துடன் ஓலமிடப்படுகிறது. இத்தவறுகளிரண்டும் அச்சாபீஸ் தவறோ அன்றி ஆசிரியரின் தவறோ விளங்கவில்லை. சரி தவறென்றே வைத்துக் கொள்வோம். இப்படிப்பட்ட தவறைப்பிடித்துத் தொங்கிக்கொண்டு எல்லாம் இப்படித்தானே இருக்குமென்று முரணி நிற்கும் பக்ஷம் இதையே ஓர் ஆதாரமாகவைத்துக்கொண்டு தங்களது நூலையும் கவனிப்போமாக.

தங்களது நூல் 17–ம் பக்கத்தில் எதிர் பார்த்து பதிலழிக்கலாம் என வரையப்பட்டிருக்கிறது இது தவறு. பதிலளிக்கலாம் என்றிருத்தல் வேண்டும். 37–ம் பக்கத்தில் கெட்டவளமையுடையவனுக்கு என்றிருக்கிறது. இது தவறு. கெட்ட வழமையுடையவனுக்கு என்றிருக்க வேண்டும். 38–ம் பக்கத்தில் அருதலி என்றிருக்கிறது. அறுதலி என்று வேண்டும். 43–ம் பக்கத்தில் தவரான கொள்கை என்றிருக்கிறது. தவறான கொள்கை என்றிருக்க வேண்டும். 60–ம் பக்கத்தில் வளமைபோல் என்றிருக்கிறது. வழமைபோல் என்றிருத்தல்முறை. 82–ம் பக்கத்தில் நஜத் தேசத்தவர்கள் யாரசூலுல்லா(ஹ்) என்றிருக்கிறது. இது அரபி இலக்கண விதிக்கு மாறாகும். யாரசூலல்லாஹ் என்றிருத்தல் முறையாகும். 85–ம் பக்கத்தில் தன்மீர் என்ற கிதாபில் வருவதாக ஆதா

ரம் காட்டப்பட்டிருக்கிறது. இது தவறு. தன்வீர் என்றிருத்தலே முறை. 86-ம் பக்கத்திலும் தன்மீர் என்றிருக்கிறது. தன்வீர் என்றிருத்தல் வேண்டும். இன்னும் அநேக பக்கங்களில் மௌலிது என்பதற்குப் பதிலாக மௌலீது என்றிருக்கிறது.

எனவே, ஒன்றிரண்டு தவறுகளைப்பற்றித் தொங்கிக்கொண்டு மற்றெல்லா விஷயமும் அப்படித்தானிருக்க வேண்டுமெனச்சாதிப்பதாயின் தங்களது அதிகத் தவறுகளால் தங்களது புத்தக முழுவதும் அப்படித்தானிருக்க வேண்டுமென்று தாங்கள் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளீர்கள். அப்படியானால் தங்களது புத்தகமே முழுத்தவறுடைய ஆபாசக் களஞ்சியமென்பது ஸ்திரப்பட்டுவிட்டது. மக்கீ ஸாஹிப் அவர்களே! இனி என்னவேண்டும்.

K. முஸல்மானை நிறுத்திவிடல்:— உண்மைப் பிரசாரகர் மீதுள்ள வீண் துவேஷத்தால் உண்மைப் பிரசாரம் புரிந்து தென்னிந்திய மக்கட்கு நன்மையைப் புகட்டிவரும் முஸல்மானை நிறுத்திவிடுவதாகவும் சாவுமணி அடிக்கப்பட்டுவிடுமென்றும் (43 முதலிய பக்கங்களில்) பயமுறுத்தப்படுகிறது. இந்த சாதுக்களால் பார்க்கப் பத்திரிகை விருத்தியாகப்போகிறதுமில்லை. நின்றுவிடப் போகிறதுமில்லை. உண்மைப் பிரசாரங்கட்கு குதர்க்கம்புரிவதே தங்களிருவரின் நித்தியத் தொழிலென அறிந்துகொள்ளுகிறோம். ஆகவே தங்களது சாவுமணியால் ஓர்பத்திரிகை நின்றுவிடப்போகிறதுமில்லை. உயிர்மணியால் ஓர் பத்திரிகை ஜீவிக்கப்போகிறதுமில்லை. நம் தந்திர வரும்படிக்கு இது தடையாகநின்று நிலவுகிறதே என்ற கோபாக்கினி கொழுந்துவிட்டெரிவதனால் கூறின வெறும்பிலுக்கேயன்றி வேறன்று. இறைவன் நாடினால் நடக்கட்டும். நாடினால் நிற்கட்டும். அந்தரங்கத்தில் இறைவனின் நாட்டத்தைப் பொறுத்ததேயாகும்.

L. பட்டமளித்தல்:— ஜனாப் மக்கீ ஸாஹிப் அவர்களும் ஜனாப் வடகரை கனம் மிக்க மௌல்வி சைய்யித்முஹம்மது ஷாபுத்தீன் ஹஸ்ரத் அவர்களும் ஜனங்களுக்குப் பட்டமளித்துவரும் விழா ஒன்று எப்போதும் நடத்திவருவதாக அறிகிறோம். இவர்களின் தவறுகளையும் குறைகுற்றங்களையும் கபட தந்திரங்களையும் விபரிக்காமலும் எதிருரை கூறாமலும், அவர்கள் செய்வதெல்லாம் சரி• அணுத்துணையும் அங்கு பிசகு வருமா? அவர்களது இல்முக்குச்

சமமாக இத் தென்னிந்தியாவின்கண் எவரையும் ஒப்பிடலாமா? வெனப் புகழ்ந்து பணிவிடைபுரிந்து வேறு பல உதவியும் செய்து வருகிறவர்கள் சரியான முஃமீன்கள் பக்கா சு. ஜ. முஸ்லிம்கள். அன்றி மௌல்வி சாஹிப் அவர்களின் பெருந்தவறுகளை விளக்கத் தொடுத்துவிட்டாலோ வந்தது மோசம், அவர்கள் காபிர், வஹ்ஹாபி, முனபிக், ஷைத்தான், கன்னூஸ், வழிகெட்டோர் என்ற பட்டம் மிக தாராளமாய்க் கிடைத்துவிடும். அவன் தஹஜ்ஜது முதல் தொழுது பேணுதலாய் நடப்பவனுயிருந்தாலுஞ்சரி. சுருங்கக்கூறின் மௌல்வி ஸாஹிபைப் புகழ்ந்தவன் முமீன். அவர்களின் குறைகளை விண்டவன் காபிர். ஒருவனுக்கு முமீனென்ற பட்டம் வேண்டுமாயின் மௌல்வி ஸாஹிபைப் புகழ்தல்வேண்டும். காபிர் என்ற பட்டம் வேண்டுமானால் வேறொன்றும் வேண்டாம். மௌல்வி ஸாஹிபின் தவறுக்களைக் கூறிவிடல் போதுமானது. எனவே இவர்கள் பட்டமளிக்க லாயக் உள்ளவர்களாகவும் இல்லை. சு.ஜ. கொள்கையைத்தானும் அறிந்தவர்களாகவுமில்லை. ஆதலின், இப்படிப்பட்டவர்களால் அளிக்கப்படும் சீரிய பட்டங்கள் சிறப்பாக பாதத்தின்கீழ் வீசி எறியவோ, அன்றி குப்பைத் தொட்டிகளுக்குக் காணிக்கைபுரியவோ தகுதியேயன்றி உத்தம சாகித்யமுடைய ஒருவன் எறிட்டுப் பார்க்கவும் தக்கதாக இல்லை. தன் இஷ்டப்படி பட்டமளிப்போருக்கு அதுதான் மரியாதை.

M. சுன்னத்துவல்ஜமாஅத்:— சு.ஜ. கொள்கை இன்னது, வஹ்ஹாபி கொள்கை இன்னது, வழிகெட்டோரின் கொள்கை இன்னது எனத் தெரிந்திருந்தால் வினக்களுக்கு விடையிறுப்பது உசிதம். இன்றேல் எனக்குத் தெரியாதெனக் கூறிவிடுவது உத்தமம். அல்லது அதை விபரிக்கப் போதிய அவகாசமில்லாவிடின் அதையும் தெரிவித்துவிடவேண்டும். இதுவே யாவரும் ஒப்பத்தக்க முறை. இதை விட்டுவிட்டு வாய்க்கு வந்தவாறெல்லாம் பிதற்றிப் பொய்கூறி தூஷித்துத்திரிவது உத்தமனுக்கு வெகுதூரமென்பது உண்மையே.

பிரஸ்தாப மறுப்புநூலின் பல பக்கங்களிலும் வரைந்திருக்கும் ஒழுங்கீனமான வார்த்தையால் இன்னூர் சு.ஜ. கொள்கையை அறியாத பேர்வழிகளென்பதும் வாயில் வந்ததையெல்லாம் உழறிக் கொட்டிவிடும் சுபாவமுடையவரென்பதும் நமது ஆராய்ச்சியின் மூலமாக அறிஞர் கண்டுகொள்வர்.

இனி முஸல்மான் கோஷ்டியார்மீது மதசம்பந்தமாய்க் கூறப்பட்டுள்ள ஆக்ஷேபங்களைக் கவனிப்பாம். (1)

(1) குர்ஆன்ஷரீப் ஓதுவதன் பலன்:— திருக் குர்ஆன் ஷரீபென்னும் பரிபூர்ண வேதமானது மனித வர்க்கத்தாரின் இகபர நன்மைக்கெனவே இறங்கப்பெற்றுள்ளது. அதை ஓதிவருவதினாலும் அதன்படி நடந்துவருவதினாலும் நிகரற்ற மேன்மைகளும் அளவற்ற மகிமைகளும் ஏற்படுமென்பதற்கு ஸஹாபாக்களின் காலச்சரித்திரங்கள் சாக்ஷி பகரும். ஒரு கூட்டத்தார் உயர்நிலையடைய திருமறையே காரணமாகிறது. நபிகணாயகம் அவர்களின் காலத்திலிருந்த அஞ்ஞான மடமைகளைப் போக்கி மெஞ்ஞான நாகரீகங்களை நல்கி நிகரற்ற உயர்நிலையளித்தது திருமறையின் போதனை யென்பதை மறுக்கவல்லாரிலை என்பதே எமது துணிபு. ஆதலின் அப்படிப்பட்ட திருமறையை ஓதுவதிலும் அதைப் பின்பற்றி நடப்பதிலுமுள்ள மகிமைகளை எனது ஒரு நாவினால் கூறி விடல் தகாதெனினும் சுருக்கமாக அதன் மகிமையை விளக்குவாம்.

படைத்த உமதுரப்பின் நாமத்தைக்கொண்டு ஓதுவீராக (குர்ஆன்)

(ஹதீது)

1. ஹஸ்ரத் உதுமான் (ரலி) அறிவிப்பதாவது:— நாயகம் அருளினார்கள். குர்ஆன் ஓதுகிறவர்களும் ஓதிக்கொடுக்கிறவர்களும் இறைவனிடத்தில் மகா விசேஷமானவர்களில் நின்றுமாயிருக்கிறார்கள். (புகாரீ முஸ்லிம்)

---

(1) இதை வாசிக்கும் உண்மைச் சகோதரர்காள்! முஸல்மான் கோஷ்டியார் குர்ஆன்ஷரீபை ஓதவேண்டுமென்றும் அதன்படியொழுகி நடக்க வேண்டுமென்றும் பிரசாரம்புரிந்துவரும்போது அவர்கள்மீது சுமத்தப்படும் அபாண்டப் பழிமொழியைச் சற்று கவனிப்பீர்களாக.

முஸல்மான் கோஷ்டியர்களின் முரணான கொள்கைகட்கு முக்கிய மறுப்பு என்றெழுதின இரண்டாம் வெளியீட்டில் ஜனாப், ம. கா. நா. முஹம்மது ஷம்சுத்தீன் மக்கீ ஸாஹிப் அவர்கள் எழுதுவதாவது:- முஸல்மான் ஆசிரியர் என்னும் பதவியைப் பறக்கவிட்டுக் கொண்டு முஸல்மான் வகுப்பார் எனவும் முஸல்மான் கோஷ்டியார் எனவும் கூறி தாங்களும் தங்கள் குழாத்தினரும் அநுஷ்டித்து வரும் சுன்னத் வல்ஜமா அத்துக்கு முரணானகொள்கையாம் மௌலீது ஷரீப் குர்ஆன்ஷரீப் கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்ற வஹ்ஹாபிக்கொள்கையை முஸல்மானில் வெளியிட்டது மறந்தாபோயிற்று. ஷ்டி புத்தகம் (18-

2. ஹஸ்ரத் அபூமூஸா அஷ் அரி (ரலி) கூறுவதாவது:— குர்ஆனை ஓதும் ஈமானுள்ள மனிதனின் உவமை வாசனையுள்ள கனியைப்போலாம். இதில் வாசனையும் ருசியும் இரண்டும் உண்டு. இன்னும் குர்ஆனை ஓதாத ஈமானுள்ள மனிதனின் உவமையாகிறது. பேரீத்தம பழத்தை யொக்கும் இதில் ருசிமட்டும் உண்டு. வாசனை இல்லை. (புகாரீ—முஸ்லிம்)

3. ஹஸ்ரத் அபூ உமாமா (ரலி)

(ஹதீது) குர் ஆன் ஷரீப் ஓதுகிறவர்கட்கு மறுமை நாளில் குர் ஆன் ஷரீப் மன்றாடி நரக வேதனையை விட்டும் காக்கும் (முஸ்லிம்)

4. ஹஸ்ரத் அபூ ஹுறைறு (ரலி)

(ஹதீது) குர்ஆன் ஷரீப் ஓதப்படுகிற வீட்டில் அல்லா (ஹ்) வின் அருள் இறங்குகிறது. இன்னும் இறைவனின் அமரர்கள் குர்ஆன் ஷரீபைக் கேட்க அவ்வீட்டுக்கு வருகிறார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

---

இவ்விஷயம் முஸல்மான் சஞ்சிகையில் எங்கிருக்கிறதெனக் காட்டுவார்களா? இன்னும் இஃதே போன்று முஸல்மான் கோஷ்டியார்கள் குர் ஆன் ஷரீப் ஓதப்படாதெனத் தடை புரிவதாக ஷை மறுப்பு நூல் 30, 34, 38, 39, 41, 42, 43, 44, 45, 51, 52, 62, 63, 64, 66, 67, 74 முதலிய பக்கங்களில் சிறிது மாறுதலுடன் வரையப் பெற்றிருக்கின்றன.

லஃனத்துல்லாஹி அலல் காதிபீன் (குர்ஆன்) பொய்யர்கள் மீது அல்லா (ஹ்) வின் சாபம் உண்டாகட்டும். சீகோதரர்களே! முஸல்மான் ஆசிரியர் மீதும் அவரைச் சார்ந்தோர் மீதும் இத்துணைப் பெரிய பச்சைப் புழுகைக் கட்டிவிட்ட ஜனுப், மக்கீ ஸாஹிப் அவர்கட்கும் மௌல்வி ஷாபுத்தீன் ஸாஹிபவர்கட்கும் நேர்ந்த அவசியம் என்னவென வினவுகிறோம். அவர்களிருவரும் உண்மையாளர்களாயின் அந்த முஸல்மான் சஞ்சிகையிலிருந்து இவ்விஷயங்களை எண்பிக்கவேண்டும். இன்றேல் லஃனத்துக்குரியவர் யார் என்பதை உணரவேண்டும்.

மிஸ்கீனுக் கெட்டிய வரை முஸல்மான் ஆசிரியர் பலவிடங்களிலும் குர் ஆன் ஓதும் மதரஸா இயற்ற முயற்சித்துக் கொண்டிருப்பதுமன்றி அதற்குரிய பிரசாரமும் செய்துவருகிறார். குர்ஆன் ஷரீபை ஓதக்கூடாதெனத் தடைபுரிவது அக்காலத்திய இக்காலத்திய கடுங்காபிர்களின் செயலாகுமென்பதை முஸ்லிம் யாவரும் வெளிப்படையாக அறிந்துவரும்போது அப்படிப்பட்ட திருவசனத்தை ஓதக்கூடாதென முஸல்மான் ஆசிரியர் கூறுவதாக எழுதியிருப்பது நிகரற்ற அண்டப் புழுகல்லவா?

5. ஹஸ்ரத் அபூதர் (ரலி)

(ஹதீது) நீ காலையில் சென்று அளவற்ற அருளாளனின் தூய்மை பொருந்திய வேதத்தில் நின்றும் ஓர் ஆயத்தைக் கற்றுக் கொள்வாயானால் நூறு ரக் அத்து தொழுகிறதை விட உனக்கது மேன்மையாகும். (இபுனுமாஜா)

6. ஹஸ்ரத் அப்துல்லா ஹிபுனுமஸ்வூத் (ரலி)

(ஹதீது) குர்ஆன் ஷரீபை யோதுவோனுக்கு இதன் ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் பகரமாகப் பத்து நன்மைகளின் கூலி கிடைக்கிறது. நான் அலிப், லாம், மீம், இவற்றை ஒரக்ஷரமென்று கூறவில்லை. மேலும் அலிப் ஒன்று, லாம் ஒன்று, மீம் ஒன்றுமாகும். (ஆதலின் மூன்று அக்ஷரத்துக்கும் முப்பது நன்மை கிடைக்கும்.) (திர்மதீ)

7. ஹஸ்ரத் அபூ சயீத் குத்ரீ (ரலி)

(ஹதீது) குர்ஆன் ஷரீபை ஓதுவதில் பராக்காயிருப்பதை முன்னிட்டு ஒருவன் தனது தேவைகளைப் பற்றிய பிரார்த்தனை செய்யமுடியாமலிருந்து விட்டால் இறைவன் இப்படிப்பட்ட மனிதனின் மன விருப்பத்தை பிரார்த்தனை யன்றி தானே நிறைவேற்றி விடுவான். (திர்மதீ தாரமீ)

8. ஹஸ்ரத் அலி (ரலி) அறிவிப்பதாவது:— (ஹதீது) ஒருவன் குர்ஆனை ஓதி உண்மையான மனதுடன் உதவிதேடினாலும் பின்னர் அதன் ஹலாலை ஹலாலென்றும் ஹறாமை ஹறாமென்றும் உறுதி கொண்டாலும் இறைவன் அவனை சுவர்க்கத்தில் புகுத்துவான். இன்னும் எவர்கள் நெருப்பில் செல்ல அருகதையாய் விட்டார்களோ அப்படிப்பட்ட அவன் குடும்பத்திலுள்ள பத்துப்பெயர்களுக்கு அவனுடைய ஷபா அத்தையும் (இறைவன்) அங்கீகரிப்பான். (திர்மதீ இப்னுமாஜா)

9. ஹஸ்ரத் ஆயிஷா நாயகி (ரலி) அறிவிப்ப தாவது:— குர்ஆன் ஷரீபின் கருத்தை யுணர்ந்து ஓதுவோருக்கு கீர்த்திபெற்ற அமரர்களுக்குரிய பதவியை இறைவன் நன்கொடை யளிக்கிறான்.

சுருக்கம் புகாரீ முஸ்லிம்.

10. இன்னும் அல்ஹம்து ஆயத்துல் குர்ஸீ, யாஸீன், குல் ஹுவல்லா முதலிய சூரத்துகள் ஓதுவதனால் கிடைக்கும் பெரும்

பாக்கியங்களையும் வியாதிகளுக்காக சஞ்சீவி என்பதையும் நபிகள்நாய கம் பல ஹதீதுகளில் அருளியுள்ளார்கள்.

சகோதரர்களே! குர்ஆன் ஷரீப் ஓதுவதன் நன்மைகளும் அதன் அர்த்தத்தை யுணர்ந்து ஓதுவதனால் கிடைக்கும் அரிய வாழ்வுகளும் அன்றி ஒவ்வொரு சூரத்துகளுக்குத் தனித் தனியான பதவிகளும் ஹதீதுகளின் மூலமாக அருளப்பெற்றிருப் பதை யறிந்து அந்தப் பரிசுத்த குர்ஆனை யோதி ஓதுவித்து தக்க பல னெய்துவீர்களாக.

## (2) குர்ஆன் ஓதக்கூலி கொடுப்பதின் விபரம்.

சுன்னத்து வல்ஜமா அத்து முஸ்லிம்களின் நான்கு மதுஹபு களில் முதன்மையதாகிய ஹனபி மதுஹபில் வணக்கங்கட்கு கூலி கொடுப்பதும் வாங்குவதும் கூடாதென்பதே முடிவான தீர்ப்பாகும். பண்டைக்காலத்து மேதாவிகள் இபாதத் எனச் சாற்றப்படும் எவ் வகை வணக்கங்கட்கும் கூலி கொடுப்பது ஆகாதென்றும் குற்ற மென்றும் கூறுவதில் ஏகோபித்துள்ளார்களென்பது வெளிப்படை. அக்காலத்தில் கூலியை விரும்பாமல் மறுமையின் பாக்கியத்தைக் கருதி ஸர்வ இபாதத்தும் நடந்து வந்தன. பைத்துல்மாலிலிருந்தும் கால க்ஷேபம் நடந்துவந்தன. பிற்காலத்தில் மறுமையின் பாக்கியத் தை விரும்புவோர்குறைந்தும் பைத்துல்மால் பணம்கிடைக்காமலும் இப்பணியிலீடுபடுவதினால் தங்களதுபிழைப்புக்கு வழியின்றிமயங்கு வதாலும் மார்க்கத்தில் முக்கியமான இபாதத்துகட்கு கூலிகொடுக்க லாமென தீர்மானிக்கப் பெற்றுள்ளது. அதாவது குர்ஆன்ஷரீப் ஓதிக்கொடுத்தல் பிக்ஹு சம்பந்தமான இதர மதக்கலைகளைக் கற் பித்தல். இமாமத்துச் செய்தல், பாங்கு சொல்லல் ஆகிய இவை களாம். இவ்விஷயம் மார்க்கத்தில் முக்கியமான தென்பதையும் கற் றுக்கொள்வது ஆண்பெண் யாவர் பேரிலும் (பர்லு) கடமை என் பதையும் யாவருமறிவர். ஆயினும், மார்க்கத்தில் கூலி கொடுத் தேனும் செய்ய வேண்டு மென்ற இவைகளைக் கற்காமல் மார்க் கத்தை அறிந்துகொள்ள இயலாதென்பதையும் இதைக் கற்றக் கொள்வது ஆண் பெண் யாவர் பேரிலும் கடமை யென்பதையும் யாவரும் அறிவர். ஆயினும் மார்க்கத்தில் கூலி கொடுத்தேனும் செய்ய வேண்டுமென்ற இதை முக்கிய மல்லாத கத்தம், பாத் திஹா ஓதல், மௌலிது ஷரீப் ஓதல், ஸிபாரத் செய்தல், ஆகிய இவற்றிற்கு கூலி யளிக்கலாகாதெனவும் அப்படிக்கூலி கொடுத்

தூச் செய்தால் அதற்குரிய நன்மை கிட்டாதெனவும், வலியுறு த்திக் கூறப்பட்டிருக்கின்றன. இதன் உண்மைக் கருத்தை உணர்ந்தறியாத ஒரு சில மாக்கள் எல்லாவற்றிற்கும் கூலி கொடுக்கலாம் வாங்கலாமெனப் புகன்று தானும் கெட்டு பிறரையும்கெடுக்கத் துணிந்துவிட்டனர். அன்றி இதன் உண்மையை எடுத்தியம்பமுன் வருவோரை வஹ்ஹாபி என்றும் முனாபிக் என்றும், காபிர் என்றும், வாயில்வந்தவாறெல்லாம் விண்டு துன்பத்துக்கு ஆளாக்குகின்றனர். நடுநிசி நீடித்து கண்டபடியெல்லாம் கொள்ளை புரியலாமெனக் கருதுவோருக்கு கதிரவன் புலரும்போது சகிக்கொணு சங்கடம் ஏற்படுவதுபோல், உண்மை உதயமாகும்போது இவ்வர்க்கத்தாருக்கு நமது வருவாய்க்கு நாசம் வருகிறதே என்ற சங்கடம் ஏற்படுகிறது யார் எவ்வாறு கருதினாலும் உண்மையை உரைப்பதே உத்தமரின் பணியாகும். ஆதலின் எமது ஹனபி மதுஹபு பெரியார்களாலியற்றப்பெற்ற உயர்தர கிரந்தங்களை மேற்கோளாகக்கொண்டு இவ்விஷயத்தை விளக்கத்துணிந்தனம். சகோதரர் ஊன்றிப்படிப்பார்களாக.

என்னுடைய வசனங்களை சொற்ப கிரையத்துக்கு (துன்யாவுக்காக) விற்றுவிட வேண்டாம். (குர்ஆன்) குர்ஆனை யோதி இறைவனின் பொருத்தத்தை விரும்புங்களென்றும், பொருளீட்டலைக் கருதி குர்ஆனை யோதினவன் மறுமையில் முகத்தில் சதையற்றவனாய் வருவானென்றும், நீங்கள் குர்ஆனை ஓதுங்கள். அதற்காக கப்புசியாதீர்கள் என்றும் ஹதீதுஷரீபில் கூறப்பட்டிருக்கின்றது. 1 இனி ஹனபி மதுஹபின் பிக்ஹுடைய கிரந்தங்களை கவனிப்போம்

தற்காலம் பத்வாவான தீர்ப்பு என்னவெனின், குர்ஆன் பிக்ஹு கற்பித்தல், இமாமத்து பாங்கு சொல்லல், ஆகிய இவைகளுக்கு கூலி வாங்குவது நியாயமாகும் என்பதே. ஏனெனில் நம்மிடத்தில் வணக்கத்தின் பேரிலும், பாவத்தின் பேரிலும் கூலி வாங்குவது ஆகாதென்பதே சட்டமாகும். மார்க்க விஷயத்தில் சோம்பல் ஏற்பட்டதை முன்னிட்டும் இன்னும் இந்தக் காரியங்கள் அழிந்தும் தவறியும் விடக்கூடாதெனற பயத்தினாலும் குர்ஆன்பிக்ஹை கற்பித்தலுக்காக கூலி வாங்குவது ஆகுமென பத்வாக்கொடுக்கப்படுகிறது. (ஷரஹ்விகாயா) இறக்குந் தறுவாயிலுள்ள ஒருவன் தனது பொருளில் நின்றும் சிலவற்றை ஒருவனிடம் கொடுத்து

---

1. இது சம்பந்தமாக பல ஹதீதுகளை அஹ்மத் அபூதாவூத்பைஹக்கீ, தாமீ இப்னு மாஜா, ஹாக்கீம் ஆகிய இமாம்களைக்கொண்டு மௌலானா அஷ்ரப் அலி ஸாஹிப் அவர்களால் மதிப்புரை கொடுக்கப்பட்ட தன்வீருல் குர்ஆன் என்னும் நூலில் விபரிக்கப் பெற்றிருக்கிறது.

(நான் மரித்த பின்) எனது கபுரின் பேரில் குர்ஆன் ஓத வேண்டும் என்று வஸீயத்துச் செய்தால் கூடாது. மேலும் செல்லத்தக்கதல்ல. ஏனெனில் ஓதக்கூடியவனைக் குறிப்பிடினும் குறிப்பிடாவிடினும் கூலியின் ஸ்தானத்திலிருப்பதனால் (அந்த வஸிய்யத்துச் செல்லாது. அல்லா (ஹ்) வுடைய வணக்கத்தில் கூலி பெறுவது தகுதியல்ல. குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதின் பேரில் கூலி பெறுவது ஆகுமென்று உலமாக்கள் அழகாகக்கண்டதும்சரியே.(ஆகாது) எனினும் இது அவசியத்தைப் பொறுத்ததற்காக ஆகும். மௌத்தானவன் கபுரில் ஓதுகிறதின் பேரில் கூலி பெறுவது ஆகுமென்று கூறுவதற்கு அவசியம் காணப்படவில்லை. (தாத்தார்கானியா)

குர்ஆனைக் கற்றுக்கொடுப்பதின் பேரில் ஆழ்ந்த ஆராய்ச்சியின்படி கூலி பெறுவது ஆகுமென்பதே பத்வாவான வார்த்தையாகும். ஓதுவதற்காக கூலிபெறுவது தகுதியன்று. (பஹ்ருர் ராயிக்)

துன்யாவுக்காக (கூலிக்காக குர்ஆன்) ஓதுவதை விலக்கப்படும். கொடுப்பவனும் பெறுபவனும் ஆகிய இருவரும் குற்றவாளிகளே. (ஐனீ ஷரஹ் ஹிதாயா)

ஆயினும் இக்காலத்தில் குர்ஆனைக் கற்பிப்பதின் கூலி ஸஹீஹ் (ஆகும்) என்பதில் பத்வா உண்டாயிருக்கிறது. ஏனெனில் ஜனங்கட்கு சும்மா கற்பிப்பதற்குத் தகுதியில்லை. (கன்ஸ்) (2)

(2) குர்ஆன் ஷரீபு கற்பிப்பதற்கு மட்டும் கூலிவாங்கலாம் தவாபு சேர்த்து வைக்கும் நோக்கத்துடன் ஓதும் கத்தம், பாத்திஹா முதலிய வற்றிற்குக் கூலிகொடுப்பதும் வாங்குவதும் கூடாதென்றும் மேலும் குற்றமென்றும் ஹனபி மதுஹபின் உறுதியான கிரந்தங்கள் வலியுறுத்தும் போழ்து அதைச்சிறிதும் உணராமல் முஸல்மான் கோஷ்டியார்கள் மீதுள்ள பொறாமையாலும் புழுக்கத்தாலும் ஜனாப் மக்கீ ஸாஹிபும் வடகரை ஜனாப் மௌலவி ஷரபுத்தீன் சாஹிபும் கட்டுரை செய்யும் விநோதக்கூற்று கவனிக்கத்தக்கது. "முஸல்மானின் ஆசிரியருமாகிய தாங்களும் தங்கள் கோஷ்டியினர்களும் இஸ்லாமியப்பிரசாரம் செய்வதாகச்சொல்லி சாதாரண ஜனங்களை ஏமாற்றி மௌலிது ஷரீப், குர்ஆன் ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்றும் அதற்குக் கூலிகொடுக்கலாகாதென்றும் எம் சுன்னத்வல்ஜமா அத்திற்கு முரணான வழிகெட்ட வஹ்ஹாபிக் கொள்கையை பரப்பிவருகின்ற அணைகடந்த அல்லாமாவாகிய தாங்கள் ஆத்திரமும் சூத்திரமுங்கொண்டு ஆராய்ச்சியும், அறிக்கையும் வெளியிட்டுள்ளீர்கள்" (ஷை மறுப்புநூல் 59. ப. இன்னும் 34, 39 பக்கங்களிலும் சற்றுவித்தியாசத்துடன் இவ்விஷயங்கள் காணப்பட்டிருக்கிறன).

வணக்கங்கட்கு கூலி (கொடுப்பது) நியாயமாகாது. உதாரணமாக பாங்கு, ஹஜ், இமாமத்து, குர்ஆன் இன்னும் பிக்ஹை கற்பிப்பது போலாம். இக்காலத்தில் குர்ஆனை கற்பித்தல், பிக்ஹை கற்பித்தல், இமாமத்துச்செய்தல், பாங்கு சொல்லல் ஆகியவற்றிற்காக கூலி வாங்குவது ஆகுமென்பதாக பத்வாக் கொடுக்கப்பட்டிருக்கிறது.........அபிப்பிராயம் என்னவெனின் வணக்கங்கட்கு கூலி கொடுப்பது ஜாயிஸ் இல்லை. எனினும் பல்கு தேசத்து பிற்கால மஷாயிகுகள் குர்ஆன் பிக்ஹை கற்பித்தல், இமாமத்துச் செய்தல், பாங்கு சொல்லல் ஆகியவைகட்கு மட்டும் சம்பளம் வாங்கலாம் எனத் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். முற்காலத்தில் கல்விமான்களின் காலக்ஷேபத்திற்கு பைத்துல் மாலிலிருந்து ஏற்படுத்தப் பெற்றிருந்தது. இன்னும் ஜனங்கள் மார்க்க இல்மைக் கற்பிப்பதை வாஜிபெனக் கருதிக்கொண்டிருந்தார்கள். அன்றி ஜனங்கட்கும் இல்மைத் தேடிக்கொள்வதில் வேட்கை அதிகமிருந்தது. இக்

---

இதைக் கண்ணுறும் நேயர்காள்! மௌலவி ஷாபுத்தீன் ஸாஹிபு வெகுகாலமாக தலைமை உஸ்தாதாகவிருந்து வாணியம்பாடியிலும் பேட்டை மாநகரத்திலும் ஓதிக்கொடுத்தார்கள். மக்கீஸாஹிபும் ஓதியிருக்கலாம் அவர்களெல்லாம் இந்த வெளிப்படையான ஹனபிமத்ஹபு கிரந்த சட்டங்களை யுணராமலாயிருந்துவிட்டார்கள் என்று வியப்புறலாம். எனினும் பொறாமையும், வஞ்சக நெஞ்சமும் படைத்தோர் இதைவிட அதிககாலம் ஓதிக்கொடுத்துவந்தாலும் உண்மையை உணரார் என்பதை இதன் மூலமாக அறிந்து மனதை சமாதானஞ்செய்து கொள்வீர்களாக.

ஜனுப் மக்கீ ஸாஹிபு அவர்களே! ஜனுப் மௌலவி ஷாபுத்தீன் ஸாஹிபு அவர்களே! மேற்கூறிய மேதாவிகளின் தீர்ப்பில் தங்களது அபிப்பிராயமென்ன? தாங்களிருவரும் பார்த்த கிதாபுகளை அவர்கள் பார்க்கவில்லையென கூறுவீர்களோ? அன்றேல் இவர்களும் 'வஹ்ஹாபிக்கொள்கையுடையோரெனச் சாற்றுவீர்களோ? இவ்விருவரின் கூற்றையும் கண்ணுறும் நேயர்காள்! உயர்மிக்க ஹனபிமதஹபு இமாம்களையும், மேதாவிகளையும் அவர்களால் முழுதியானத்துடன் உம்மத்துகளின் நன்மையையுன்னி எழுதப்பட்ட கிரந்தங்களையும் ஏசிப்பேசி தூஷித்து வஹ்ஹாபிகளென்றும் வழிகெட்டவர்களென்றும் அவர்களை ஜமாஅத்தில் சேர்க்காமல் விலக்கிவைக்கவேண்டுமென்றும் இவ்விருவரும் தீர்ப்பளிப்பதைக் கேட்டுக்கொண்டு பின் கீழ்காட்டப்படும் விஷயத்தையும் சற்றே நோட்டமிடுவீர்களாக.

ஜனுப்களே! ஆக்ஷேபம் நீங்களிருவரும் கவனிப்பீர்களாக.

காலத்தில் இஸ்லாம் பலஹீனமாய்விட்டது. மேற்கூறப்பட்ட காரியங்களெல்லாம் மாறுதலடைந்து விட்டன. கல்விமான்கள் இரணம் சம்பாதிப்பதில் பராக்காய்விட்டார்கள். அல்லாவுக்காக கற்பிக்கும் வேதாந்திகள் குறைந்துவிட்டார்கள். சம்பளத்தைக் கொண்டு கற்பிக்கும் வாசல் திறக்கப்படாவிட்டால் குர்ஆனும் பிக்ஹும் தவறிப்போகும். ஆதலின் மேற்சொன்ன கூலி ஆகுமென்று பத்வா ஏற்படலாயிற்று. (காயத்துல் அவ்தார் தர்ஜுமா துர்ருல் முஹ்தார் கிதாபுல் இஜாரா)

துன்யாவுடைய எந்த வஸ்துவுக்குப் பகரமாகவும் குர்ஆன் தன்னை யோதுவது ஜாயிஸ் இல்லை. ஆதலின் (கூலி) வாங்குகிறவனும் கொடுக்கிறவனும் ஆகிய இருவர்களும் குற்றவாளியாயிருக்கிறார்கள். ஏனெனில் இது ஓதுவதன் பேரில் கூலி வாங்குவதற்கொப்பாகிறது. கிரஆத்தின் (ஓதுவதன்) பேரில் கூலிவாங்குவது ஜாயிஸ் இல்லை. உதாரணமாக பல உறுதியான கிரந்தங்களில்

---

(1) ஆழிய கடல்போன்ற அறிஞர்களான எம்ஹனபி மதுஹபு இமாம்களையும் மாபெரும் புருஷோத்தமர்களான ஹதீது பிக்ஹுடைய மேதாவிகளையும், மதிநுட்பமும் நிரம்பிய நல்லொழுக்கமுடைய சுன்னத்து வல்ஜமா அத்து முப்திகளையும், அகத்தூய்மையாளர்களான உலமாக்களையும் மக்கி ஸாஹிப், மௌலவி ஸாஹிப் ஆகிய தாங்களிருவரும் வஹ்ஹாபிகளென்றும் வழிகெட்டவர்களென்றும் கொஞ்சமும் நெஞ்சஞ்சாது துணிந்து கூறிவிட்டீர்களாதலின் தாங்களிருவரும் ஹனபிமதுஹபு அல்லவென்பது பட்டப்பகற்போல் திட்டமாய்விட்டது. எனவே தாங்களிருவரும் எந்த மதுஹபைச் சார்ந்தோரென்பதை மறைக்காமல் வெளியிடுவீர்களா?

(2) ஹனபி மதுஹபின் நுண்பொருள் நூலாரான இமாம்கள் உலமாக்கள் ஈறாக எல்லீரும் வஹ்ஹாபிகளாகவும், வழிகெட்டவர்களாகவும் ஆனால் நிகரற்ற இம்மேதாவிகளால் ஆழ்ந்த மதிநுட்பத்துடன் வரையப்பெற்ற இஸ்லாமியக் கிரந்தங்களை லோகத்தின் நடுநாயகமென விளங்கும் மக்கா மதீனா ஷரீபிலும் மற்றும் இஸ்லாமிய தேசங்களனைத்திலும் வடஇந்தியா முழுவதிலும் விசேஷமாக தென்னிந்தியாவின் கண் திகழ்ந்து விளங்கும் வேலூர், வாணியம்பாடி, பெரம்பூர், பொதக்குடி, ஞஜகிரி, பேட்டை முதலிய ஊர்களிலும் ஓதிக்கொடுக்கப்பட்டு வருவதால் இவர்களனைவரும் தங்களிருவரின் கூற்றுப்படி வஹ்ஹாபிகளாகவும், வழிகெட்டவர்களாகவும் ஆய்விட்டார்களன்றோ? ஆதலின் இவர்களை யெல்லாம் தவிர்த்து சுன்னத் வல்ஜமா அத்து முஸ்லிம்கள் யாரென்பது இனி விளக்குவது தங்களிருவரின் முதற் கடமையாகுமன்றோ?

அதை விபரிக்கப்பட்டிருக்கிறது. பிந்தின உலமாக்களோ அவசி யத்தை முன்னிட்டு குர்ஆன் ஓதிக்கொடுக்க கூலிவாங்குவது ஜாயிஸ் என்று பத்வாக் கொடுத்திருக்கிறார்கள். ஓதுகிறதற்கு அல்ல. இன் னும் அந்த ஆவசியகமும் குர்ஆன் (ஓதிக்கொடுப்பது) தவறிவிடுகிற பயத்திற்காகவே யாம். ஓதுகிறதின் பேரில் கூலி ஆகுமென்பதற்கு யாதொரு அவசியமும் இலது (ரத்துல்முஹ்தார்).

திரும்பவும் மையித்து வீட்டாரிடம் (குர்ஆன்) ஓதச் சம் பளம் வாங்குகிறார்கள். இது அதன் கூலியைப் போலாகிறது. இது அதைவிட பெரிய பித் அத்தாகும். (நிஸாபுல் இஹ்திஸாப் 50. ப.)

இன்னும் கபுரின் பக்கத்தில் ஓதுகிறதற்காக ஓதுகிறவனை ஏற்படுத்துகிறது பித் அத்தாகும். (ஷை 115 ப.)

இன்னும் அபுல் காசிம் (ரஹ்) அவர்களால் அறிவிக்கப்படு கிறது. ஒருவன் தனது கபுரை மண்ணால் உண்டுபண்ண வேண்டு மென்றும் அல்லது அதன் பேரில் (கோரி) கட்டவேண்டுமென் றும் அல்லது ஒருவனுக்கு ஏதேனும் கொடுத்து சதாவும் என் கபு ரின் பேரில் அவன் ஓதிக்கொண்டிருக்க வேண்டுமென்றும் வஸிய் யத்துச் செய்வது வீணானதாகும். (அதாவது செல்லத்தக்கதல்ல. ஷை கிதாப்–115 ப.)

ஹஸ்ரத் மௌலானா ஷாஹ் அப்துல் அஸீஸ் முஹத்திஸ் திஹ்லவி (ரஹ்) கூறுகிறார்கள்:—

---

(3) தங்களது (உபயோகமற்ற எசல்மாலே) மறுப்பு புத்தகத்தின் 82 முதலிய பக்கங்களில் இபுனு அப்துல் வஹ்ஹாப் நஜ்தீ தோன்றி 150 வரு டங்கட்கு மேலாகிறதென்றும் அவரைத் துயர்ந்ததினாற்றான் வஹ்ஹாபி யென்று கூறப்படுகிறதென்றும் அறைந்துள்ளீர்களே. அவ்வாறாயின் இப்னு அப்துல் வஹ்ஹாப் தோன்றுவதற்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன் தோன்றி (கூலி கொடுக்கலாகாதென்று) பல உயர்தர கிரந்தங்களை இயற்றி மக்கட்கு அளித்துச்சென்ற மகோன்னதப்பதவி வாய்ந்த இமாம் கள் உலமாக்கள் ஆகிய அனைவரும் எந்தவஹ்ஹாபியைப்பின்பற்றினார்கள்? எந்த இபுனு அப்துல் வஹ்ஹாப் அவண் சென்று வஹ்ஹாபிக்கொள்கை யைக் கற்பித்துக்கொடுத்தார்?

எஜனுப்காள், நீவிரிருவரும் ஒன்று சேர்ந்தேனும் அல்லது நமக்குத் துணையுதவிபுரியும் யாவரையும் கைகோர்த்துக்கொண்டேனும் இதற்குச் சான்றளிப்பீர்களா?

தன்னால் ஓதப்பட்ட குர்ஆன் ஷரீபின் நன்மையை பணத்திற்குப் பகரமாகவிற்கும் இவ்விஷயமாகிறது சுன்னத்து வல்ஜமா அத்துகளின் ஏகோபித்த (இஸ்மாஹின்) தீர்மானப்படி ஈத்த(பாத்தில்) வினைதாகும். எனினும் (சுன்னத் வல்ஜமா அத்தை விட்டும் நீங்கின்) இமாமிய்யாக் கூட்டத்தாரிடம் வழக்கமா யிருக்கிறது. ஒருவன் குர்ஆன்ஷரீபை கத்தம் செய்வதற்காக கூலி வாங்கி அந்த குர்ஆன் ஷரீப் ஓதின நன்மையைக் கூலி கொடுத்தவனுக்கு சேர்த்துவைக்கும் இவ்விஷயமாகிறது ஹனபிய்யாக்களிடத்தில் ஜாயிஸ் இல்லை. (பதாவா அஸீஸீ)

ஷாஹ் முஹம்மது இஸ்ஹாக் (ரஹ்) கூறுகிறார்கள்:—

புகஹாக்களுடைய அஸல் சட்டமாவது:— வணக்கத்துக்கு கூலி கொடுப்பதும் வாங்குவதும் கூடாது. ரூபாய்க்கு மூன்று கத்தமென்று ஹாபிஸ்களை ஏற்படுத்தியிருக்கும் நிலைமையாகிறது வெளிப்படையாகக் கூலி ஏற்படுத்துவதாகும். ஆனால் கூலி ஏற்படுத்தாமல் (ஓதின பின்) அவனுக்கு ஓதினகூலி கொடுப்பதும் கூலி கொடுப்பதற்குச் சமமாகும். ஹதீது ஷரீபைக்கொண்டு தெரிய வருகிறதென்னவெனின் குர்ஆன் ஓதிக் கூலிபெறுவதும் அதற்குப் பதிலாகப் புசிப்பதும் பெரும் பாவமாகும். (மிஅத்துமஸாயில்)

---

(4) ஜனாப் அவர்களே! தங்களது மறுப்புநூலுக்கிடையே மறைந்து வெளிவரும் ஜனாப் மௌலவி ஷாபுத்தீன் ஸாஹிபு அவர்கள் வாணியம்பாடியிலும், பேட்டையிலும் ஓதிக்கொடுத்த கிதாபுகள் கூலிகொடுக்கலாகாதெனக்கூறின எங்கள் ஆராய்ச்சித்திறன்மிக்க ஹனபி உலமாக்களின் கிரந்தங்களா அன்று? ஹனபி மதுஹபு உலமாக்களின் கிரந்தங்களென்றால் அதைவஹ்ஹாபிக்கொள்கையுடையதெனக் கழறிக்கொண்டு அதைத்தானே கற்பிக்கும் ஜனாப் மௌலவி ஷாபுத்தீன் ஸாஹிப் அவர்களை வஹ்ஹாபி யென்றும், வழிகெட்டவரென்றும் ஏன் அறையக்கூடாது? அப்படி அறைவதற்கு நியாயமுண்டா இன்று?

(5) ஜனாப் தாங்களிருவரும் எங்களது வேதநுண்பொருளாராய்ச்சியாளர்களான ஹனபி இமாம்களையும், உலமாக்களையும் அவர்கள் கூலி கொடுக்கலாகாதெனச் சாற்றினதன்காரணமாக வஹ்ஹாபிகளென்றும் வழிகெட்டவர்களென்றும் தீர்ப்பறை யறைந்துகொண்டு அவர்களாற்றானே இயற்றப்பட்ட உயர்தர கிரந்தங்களை ஓதிக்கொடுக்கிறதும் நான் ஹனபி என்பதும் ஓதிக்கொடுத்து சம்பளமும், உம்பளமும் பெறுவதும் ஆகுமா? வெட்கம்! வெட்கம்!! இதரார்கள் சொல்லொன்று செயலொன்றாக நடந்தால் முனாபிக் என்ற சன்மானப்பதக்கத்தை தாங்க

அல்லாமா காஸீ ஸனுவுல்லா பானிபட்டீ (ரஹ்) கூறுவதாவது:— பாங்கு சொல்வதன் பேரிலும் இன்னும் இமாமத்து, குர்ஆன், பிக்ஹை கற்பித்தல் ஆகிய இவைகளைத் தவிர்த்து ஏனைய இபாதத்துகளின்பேரில் கூலிபெறுவது இமாம் அஹ்லம் அவர்கள் இடத்தில் ஜாயிஸ் இல்லை. (தர்ஜுமா மாலாபுத்துமின்ஹு 96. ப.)

கீர்த்திபெற்ற மௌலானு முஹம்மது அப்துல்ஹை (ரஹ்) அவர்களின் பத்வாவாவது:—

முத அக்கிரீன் (பிந்தின உலமாக்) களிடம் குர்ஆனை ஓதிக் கொடுக்கிறதின் பேரில் கூலி பெறுவது ஆகும். முன்னோர்களிடம் (அதுவும்) அல்ல. தவிர நன்மையின் நோக்கத்தை கருதிமட்டும்

---

ளிருவரும் தக்கதாராளத்துடன் வழங்குவீர்களன்றோ? ஆனல் தர்மபுருஷர்களாகிய தங்களிருவருக்குமட்டும் அச்சட்டம் இல்லைபோலும் ஆ! ஆ!! நல்ல வழி காட்டிகள்; எங்கள் ஹனபி உலமாக்களனைவரையும் வஹ்ஹாபியென்றும் வழிகெட்டோர்களென்றும் பெரும்முழக்கத்துடன் முரசடிப்பது ஒருபுற மிருக்க அவர்களின் கிதாபுகளை ஓதிக்கொடுத்து சம்பளமும் சன்மானமும் பெறுவது மௌலவி ஷரபுத்தீன் ஸாஹிப் அவர்கட்கு ஹலாலாகுமாவென உசாவுகின்றேன்.

(6) ஷாபியீ, ஹம்பலி, மாலிக்கி, மதுஹபையுடையவர்களென்றும் தங்களைக் கூற நியாயம் காணப்படவில்லை. ஏனெனின் நான்கு மதுஹபையுடையவர்களும் ஒருவரை யொருவர் காபிர், முர்தத்து, வஹ்ஹாபி, வழிகெட்டோரென வழுத்தாமல் சுன்னத்வல்ஜமா அத் என்ற ஹோதாவில் ஒரே சோதரர் போல பாவித்து வருகிறார்கள். தாங்களிருவரும் சுன்னத்துவல்ஜமா அத்து ஹனபி உலமாக்களனைவரையும் வஹ்ஹாபிகளென்றும் வழிகெட்டோர்களென்றும் தள்ளுவதால் இம்மூன்று மதுஹபிலும் சார்வதற்கும் வழிகாணப்படவில்லை. ஆதலின் நான்கு மதுஹபையும் விட்டு நீங்கின நிலைமையில் தாங்கள் எவ்வகுப்பைச் சார்ந்தோரென மறைக்காமல் வெளியிடுவீர்களா?

(7) தாங்களிருவரும் சுன்னத் வல்ஜமாஅத்துயாரென்றும் ஹனபி மதுஹபு யாதென்றும் அறியாது கண்மூடித்தனமாய் கண்டவாறெல்லாம் கழறுகிறவர்களெனக் களங்கமறத் தெரிந்துவிட்டபின் இனி எந்த மதரஸாவுக்கேனும் ஆசிரியப்பதவி வகிக்கவோ எந்த மஸ்ஜித்துக்கேனும் பேஷ் இமாம் கதீப் ஆகவோ மஸாயில்களுக்குத் தீர்ப்புச்சொல்லும் முப்தியாகவோ இருப்பதற்கு தாங்கள் தகுதியற்றவர்களென்பது தங்களது விபரீதக் கூற்றிலிருந்து புலனுவதால் பொதுஜனங்கள் கவனித்துக்கொள்வார்களாக.

குர்ஆன் தன்னை போதுவதற்கும் கத்தம் குர்ஆன் ஓதுவதற்கும் கூலி கொடுப்பதும் வாங்குவதும் ஆகாது. (மஜ்மூஆ பத்தாவா வா. ப. 54.)

இன்னும் தஸ்பீஹ், தஹ்லீல், குர்ஆன் ஓதல், கபுரைஸியா ரத்துச் செய்தல் ஆகியவற்றிற்கு கூலி வாங்குவதும் கொடுப்பதும் கூடாது. (ஷை 70. ப.)

இன்னும் குர்ஆன் ஷரீபை ஓதி கூலி வாங்குவதும் இன்னும் அதையே தங்களது ஜீவனமாகத் தீர்மானித்திருக்கிறவர்களிடமும் மையித்துக்காக குர்ஆன் ஓதச் செய்கிறதும் அறிவீனர்கள் அவர்களை மௌலானா றாஹி எனப் பகர்வதும் ஆகுமா ஆகாதா? விடை ஆகாது. குர்ஆன் ஓதுவதற்கு கூலி வாங்குவது ஹறாமாகும். தன்கீஹ் பதாவா ஹாமீதிய்யா பார்க்க (ஷை 102 ப.) (1.)

வட இந்திய தேவ் பந்து உலமாக்களின் சிரேஷ்டரும் பித்து அத்துகளை சம்ஹாரம் புரிகிறதில் தீரரும் எனப் புகழோங்கும் ஹஸரத் மௌலானா ரஷீத் அஹ்மத் கங்கூஹி (ரஹ்) அவர்களின் தீர்ப்பாவது (2)

கூர்ஆனைக் கற்பித்துக் கூலி பெறுவது ஆகுமென்பதில் பின்னோர்களின் பத்வா (தீர்ப்பு) உண்டாயிருக்கும்போது இதில் தர்க்கம் எதற்கு? எனினும் நன்மையைச் சேர்த்து வைப்பதற்காக ஓதி சம்பளம் வாங்குவது ஹறாமாகும். ஏனெனில் (இது) வணக்கத்தின் பேரில் கூலியாகிறது. (ஆகலால் கூடாது) கற்பிப்பதற்கு கூலி வாங்குவது அவசியத்தை முன்னிட்டு ஆகுமாக்கப்பட்டிருக்கிறது. நன்மையைச் சேர்த்து வைக்கிறதில் (இவ்விஷயம்) அவசியகமுமில்லை. தீன் துன்யாவுக்கு யாதொரு கெடுதலும் காணப்படவுமில்லை. (பத்தாவா ரஷீதிய்யா வா. 1. ப. 99.)

---

(1) இவர்கள் ஹனபி உலமாக்களில் எத்தன்மை வாய்ந்தவர்களென்பதை உலகம் நன்கறியும்.

(2) இவர்கள் தேவ்பந்து உலமாக்களிடம் விசேஷ மதிப்புப் பெற்றவர்கள். ஹஸ்ரத் மௌலானா அஷ்ரப் அலி (ரஹ்) மௌலானா கலீல் அஹ்மத் (ரஹ்) ஷைகுல் ஹிந்து ஆகிய இப்பேர்ப்பட்டவர்களின் குருவும் புகழ்பெற்றவருமாவார்கள். அன்றி மௌல்வி ஷரபுத்தீன் ஸாஹிபு அவர்களாலும் விசேஷமாகப் புகழ்ப்பெற்றவர். இப்படிப்பட்டவர்களை யெல்லாம் கண்மூடித்தனமாக வஹ்ஹாபி எனக் கழறின் அவ்வார்த்தை எங்கெல்லாம் சுற்றிப்பிடிக்குமென்பதை உணராதது ஆச்சரியமே.

இன்னும் முல்லாக்கள் பண ஆசையினால் ஒன்றித்துச்சேகரமாக ஓதுகிறார்கள். முல்லாக்களுக்கு இவ்வளவு கொடுக்கவேண்டியது வருமென்றும் அது அவசியமென்றும் மைய்யித்தின் வாரிஸ்களும் கருதுகிறார்கள். ஆதலின் (அந்தக்கூலி) குறிப்பிடப்பட்டதாகவும் தீர்மானிக்கப்பட்டதாகவு மிருப்பதால் நமக்கு இவ்வளவு கிட்டுமென முல்லாக்களும் அறிகிறார்கள். எனவே எந்த வஸ்து அறியப்பட்டதாகவும் குறிப்பிட்டதாகவுமிருக்கிறதோ அதை நாவினால் பேசி நிர்ணயம் செய்தது போலவே ஷரீ அத்தில் கூறப்பெற்றிருக்கிறது. அல்மஹ்ரூப்கல் மஷ்றூத் என்பது பிக்ஹின் அங்கீகரிக்கப்பட்ட சட்டமாகும். ஆதலின் எதை முல்லாக்களுக்கு அளிக்கப்படுகிறதோ அது அவர்களின் ஓதலுக்கு கூலியாகிறது. எது கூலியின் பேரில் ஓதப்படுகிறதோ அதன் நன்மை ஓதுகிறவர்கட்குமில்லை. மைய்யித்துக்குமில்லை. ஆதலின் அன்னாரின் இச்செயல் வீணானதாகவும் வாங்கல் கொடுக்கல் ஆகிய இரண்டும் ஹறாமானதாகவும் (இருப்பதினால்) தவாபுக்குக் காரணமில்லை. மேலும் பாவமாகும். மூர்தாவுக்கு (மைய்யித்துக்கு) அதன் நன்மை கிடைக்மாட்டாது. அன்றி கொடுக்கிறவர்கள் வாங்குகிறவர்கள் ஆகிய இருதாரத்தினரும் குற்றவாளியாகின்றன ராதலின் இக்காரியத்தை தடை புரிவது வாஜிபாகும். ஆண்டவனுக்காக நன்மையைச்சேர்ப்பிக்க விரும்பினால் தன் ஸ்தலத்திலிருந்து ஓதி நன்மையைச் சேர்ப்பிக்கலாம். (பதாவா ரஷீதிய்யா வா. 2. ப. 84.)

இன்னும் கபுரின் பேரில் குர்ஆன் ஓதச்செய்வது ஆகும். அல்லாவுக்காக இருக்கவேண்டும். கூலியின் ஞாபகம் இருவருக்கும் இருக்கலாகாது. வழக்கப்பிரகாரம் கொடுக்கப் படுகிறதும் கூலியின் சட்டத்திலேயே சேருகிறது. இப்படி ஓதுகிறதினால் ஓதுகிறவனுக்கும் நன்மை இல்லை. மைய்யித்துக்கும் நன்மையில்லை.

(ஷை 87 ப.)

நாயகம் அவர்கள் காலத்தில் அரவந்தீண்டின ஒருவனுக்கு ஓர் ஸஹாபி அல்ஹம்து சூரத்தை யோதி ஊத விஷமிறங்கிவிட்டதால் அம்மனிதன் 30 ஆடு இனாமாகக் கொடுத்ததை நாயகமவர்களும் சம்மதித்துக் கொண்டதால் குர்ஆன் ஓதிக் கூலி வாங்குவது ஆகுமல்லவா வென்ற கேள்விக்கு விடையாகக் கூறுவதாவது:—

குர்ஆனைக் கற்பிக்கக் கூலி பெறுவதற்கு பின்னோர்கள் பத்வாக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் குர்ஆனை ஓதிக்கூலி பெறு

வதை யாரிடத்திலும் ஹலாலில்லை. பாம்பு கடித்தவன் பேரில் ஓதி ஊதினது அவிழ்தத்துக்காகவே யன்றி இபாதத்துக்காக வல்ல.........ஆதலின் ஆகுமான அவிழ்தத்துக்காக ஓதுவதில் நன்மை இல்லை. அவிழ்தத்துக்காக ஓதுவதையும் நன்மைக்காக ஓது வதையும் ஒன்றாகக் கருதுவது ஹதீதின் கருத்தை அறியாத் தன் மையாகும். (ஷை 102 ப.) இன்னும் 123-ம் பக்கத்திலும் இவ் விஷயம் காணப்படுகிறது.

மௌலானா காரீ ஹாபீஸ் கலீல் அஹ்மத் ஸஹாரம்பூரி மதனி (ரஹ்) அவர்கள் கூறுவதாவது (3)

குர்ஆனைக் கற்பிக்கவும் தீனுடைய இல்மைக் கற்றுக்கொடுக் கவும் ஆவசியகத்தை முன்னிட்டு கூலி வாங்குவது ஆகுமாக்கப்பட் டது) (பராஹீன காத்தி ஆ 137)

வட இந்தியா பரேலியிலுள்ள ஹனபி வகுப்பாருக்குத் தலை வரும் முஜத்தித் என்று கொண்டாடப் பெற்றவருமான ஜனாப். மௌலானா அஹ்மது ரஸாகான் ஸாஹிப் (ரஹ்) அவர்கள் கூறுவதா வது:— (5)

கபுரின் பேரில் குர்ஆன் ஷரீப் ஓதக்கூலி வாங்குவது விலக் காகும். ஜனங்கள் தீர்மானஞ் செய்வதில் கூலியின் பெயர் இடை யில் வருவதில்லை. (கூலியைப்பற்றிப் பேசுவதில்லை) ஆயினும் வாங் கல் கொடுக்கல் செய்கிறார்கள். இதுவும் கூலியாகவே இருக்கிறது. உதாரணமாக அவர்கள் வாங்குகிறதற்கே ஓதுகிறார்கள். இவர்கள் ஓதியதற்கே கொடுக்கிறார்கள் என்பது வழக்கமாம். (பதாவா ரஸ விய்யா)

---

(3) இவர்கள் ஸஹாரன்பூர் மலாஹிருல் உலூம் மதரஸாவின் தலைமை ஆசிரியர். மௌலானா அஷ்ரப் அலி (ரஹ்) முதலிய உலமாக்களால் சிலா கிக்கப் பெற்றவர்களுமன்றி மௌலானா ரஷீத் அஹ்மத் கங்கூஹி (கத்) அவர்களின் சிஷ்யருமாவர். தர்க்கசாஸ்திரத்தில் மகாநிபுணர் பல அரிய நூலாசிரியர் ஸஹாரன்பூரிலிருந்து பிரயாணமாகி மதீனா ஷரீப் சென்று பல வருஷங்கள் தங்கியிருந்து அவிடமே வபாத்தானார்கள்.

5. இவர்கள் பரேலி வகுப்பு ஹனபி உலமாக்கள் சுன்னத்துவல்ஜ மாஅத் இமாமென்றும் இன்னும் பலவாறாகப் புகழ்ந்து பாடுகிறார்கள். என வே ஹனபி மதுஹபின் உயர்தர நூற்களையும் நுண்ணறிவாளரான உல

ஹகீமுல் உம்மத் ஹஸரத் மௌலானா மௌலவி அஷ்ரப் அலி ஸாஹிப் தானவீ (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:— (4)

---

மாக்களையும் குர்ஆன்ஷரீப் கத்தம் ஓதக்கூலி கொடுக்கலாகாதெனச் செப்பிய காரணத்தால் வஹ்ஹாபி யென்றும் வழி கெட்டோரென்றும் முனாபிக்கென்றும் வழுத்துவதாயின் முதன் முதல் ஜனாப். மௌலவிஷா புத்தீன் ஸாஹிபு ஜனாப். மக்கீ ஸாஹிப் அவர்களும் இவ்வாறு ஆகவேண்டும். அப்பால் நாகூர் மௌலவி ரஹ்மத்துல்லா ஸாஹிபும் அவர்களைச் சார்ந்தோரும் பின்னர் காயல்பட்டணம் அல்ஹிதா யாவும் அதைச் சார்ந்தோரும் ஆக வேண்டும். ஏனெனில் இவர்களெல்லாம் தங்கள் தங்கள் நூற்களில் கூலி கொடுக்கலாகாதென்ற மேதாவிகளை வாயார வாழ்த்தி யிருக்கின்றார்கள். [1347 ஷவ்வால் அல்ஹிதாயா பார்க்க].

(4) இவர்களைப்பற்றி தென்னிந்தியாவுக்கு அறிமுகப்படுத்தவேண்டிய தேவையில்லை. ஸைபுல் இஸ்லாம், தாஜுல் இஸ்லாம், முஸ்லிமானில் இவர்களைப்பற்றி விசேஷமாகக்காணப்படுகிறது. தேவ்பந்து உலமாக்களின் சிரேஷ்டர். நாகூர் ஹஸ்ரத் மௌலானா மௌலவி அஸ்ஸெய்யிது ரஹ்மத்துல்லா ஸாஹிபு காதிரியவர்களின் உத்திரவின்மீது அச்சியற்றிய "ஹிதாயத்துல் அனும் இலா இஜ்தினு பிதர்ஜுமத்துல் குத்பா பைனல் அவாம்" என்ற நூலின் 9-ம்பக்கத்தில் இவர்களது நாமத்தை "மௌலானா, மௌல்வி, ஹாஜி, ஹாபிஜு, காரீ, முப்தீ, ஹகீம், ஷாஹ்முஹம்மது, அஷ்ரபு அலி ஸாஹிபு, தானவிய்யி, ஹனபிய்யி, பாருக்கியி, சிஷ்திய்யி, இம்தாதிய்யி, அபா அன்ஹு" என்று வரையப்பெற்றிருக்கிறது. அன்றி மௌல்வி ஷாபுத்தீன் ஸாஹிபு இவர்களது நூற்களை ஓதிக்கொடுக்கிறதுடன் இவர்களை மகா புகழ் சிறந்த மேதாவி யெனவும் புகழ்ந்துள்ளனர்.

பெயரோ உயர்தர உலமா மௌலானா, மௌல்வி "படே நலிக்கே நாம் முஹம்மது பாவில்" படிக்க எழுதத் தெரியாவிடினும் பெயரோ முஹம்மது பாவில்.

6. சில கத்த வியாபாரிகள் இந்தக் கூலி வாங்குவது ஓதுகிறதற்கல்ல மேலும் அவன தங்கியிருக்கும் நேரத்துக்கென்று சம்பிரதாயம் பண்ணுகிறார்கள். இது யாவராலும் ஏற்றுக்கொள்ளத் தகாததும் எவ்வாறேனும் வருவாயை விட்டு விடலாகாதென்ற தந்திரத்தைக் கருதியுமே யன்றி வேறல்ல வென்பது புலனாகாமலில்லை. இந்த சம்பிரதாயக்காரர் யாதும் ஓதாமல் அவன் சும்மாயிருந்துவிட்டுக் கூலி கேட்கட்டும் பார்ப்போம். வீட்டார்கள் மரியாதையுடன் பிடரியைப் பிடித்துத்தள்ளி ஓதாமல் சும்மா குந்தியிருந்துவிட்டு பணமுமா கேட்கின்றீரென்று விரட்டி விடுவர். அன்றி இவர்கள் ஓதுகின்றார்களா தாட்களைப் புறட்டுகின்றார்களாவென்பதை கவனித்தும் வருகிறார்கள். இம்படிப்பட்ட நிலைமையில் அவன் தங்கியிருக்கும் நேரத்துக்கு கூலியென்று ஏய்ப்பது பெரிய ஆச்சரியமே.

ஒருவன் கப்ரில் இத்தனை நாள்வரை ஓதி அதன்நன்மையை நன்கொடை செய்யுங்களென ஒரு ஹாபிஸை கூலிக்கு ஏற்படுத்தல் ஸஹீஹ் ஆகாது. வீணுனதாகும். ஓதுகிறவனுக்கும் நன்மைகிடையாது. மைய்யித்துக்கும் நன்மை கிடையாது. இவ்விஷயம் சம்பளம் பெறத்தக்கதன்று. (ஹிதாயா) (பிஹஷ்தீ ஸேவர் வா. 5. ப. 66)

ஒருவன் (மரணமாகும்போது) என் கபுரை பலமாகக் கட்ட வேண்டும் அல்லது குப்பா கட்டவேண்டும். அல்லது ஒரு ஹாபிஸை வைத்து ஓதி ஓதி ஹதியாச் செய்விக்கவேண்டும் என்றுவஸிய்யத்துச் செய்தால் இம்மூன்று வஸிய்யத்தும் முற்றிலும் ஆகாததாம். மேலும் பூர்த்தி செய்தவன் குற்றவாளியாவான் (துர்ருல் முக்தார் ஷை ப. 79.)

சில பாவையர்கள் ஒன்றிரண்டு ஹாபீஸ்களுக்கு ஏதேனும் கொடுத்து குர்ஆன் ஓதி மைய்யித்துக்கு நன்மையைச் சேர்ப்பிக்கச் செய்கிறார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் ரூபாய், பைசா அல்லது கடலை, இன்னும் புசிப்பின் ஆசையினால் குர்ஆனை ஓதுகிறதினால் அவர்கள் தனக்கே ஒரு நன்மையும் கிடைப்பதில்லை. அவர்களுக்கே யாதும் நன்மை கிட்டாதிருக்கும் நிலைமையில் மௌத்தானவர்கட்கு எதை நன்கொடையளிப்பார்கள்? அந்த ஓதினதும், ஓதவைத்ததும், கொடுத்ததும், கொடுக்கச்செய்ததும் வீணாகவும் உபயோகமற்றதாகவும் ஆய்விடுகிறது. (ஷை வா. 6. ப. 89.)

ஹாபீஸ்கள் மைய்யித்துகளின் பேரில் குர்ஆன் ஓதி ஏதும் வாங்குகிறதை விட்டு விடவேண்டும்.(அத்தகஷ்ஷுஃப் அன்முஹிம்மாத்துத் தஸவ்வுப் 9 ப.)

கபுரின்பேரில் அல்லது வீட்டின் பேரில் ஹாபீஸ்களை ஏற்படுத்தி சிலவிடங்களில் நாற்பது நாள் அல்லது சற்றேறக்குறைய குர்ஆன் மஜ்லிதை கத்தம் செய்விக்கிற வழக்கம் நடந்து வருகிறது. பின்பு (ஓதினவர்கட்கு) சில வஸ்துக்கள் அல்லது ரூபாய் கொடுக்கிறார்கள். இவ்வழக்கத்தை சிலர் பிரயாசைப்பட்டு ஆகுமாக்க விரும்புகிறார்கள். ஆயினும், இருதரத்தினரின் கருத்து கூலிவாங்குவதிலும் கொடுப்பதிலும் இருக்கிறதென்ற விஷயமோ வெளிப்படை. இன்னும் வணக்கத்தின் பேரில் கூலி வாங்குகிறது ஜாயிஸ் இல்லை யாதலின் இவ்வேலை ஒருக்காலும் நியாயமாகாது. இப்படி

குர்ஆன் ஓதுவதனால் நன்மை கிடையாது. ஓதுகிறவனுக்கே நன்மை கிடைக்கவில்லையாயின் மைய்யித்துக்கு கிடைப்பதென்ன? (இஸ்லாஹுர் ருஸூம் 145. ப.)

எந்தக் குறிப்பிட்ட வணக்கத்தின் பேரிலும் கூலி வாங்குவது கூடாதென்பதே அஸல் மதுஹபாகும். ஆனால் தீனின் முக்கியமான விஷயங்களை இச்சட்டத்தை விட்டும் நீக்கப்பட்டிருக்கிறது. (அதாவது இமாமத்து ஆகியவைகளுக்கு கூலி வாங்குவதும் கொடுப்பதும் ஆகும்.)

குர்ஆன் ஓதல் ஸியாரத்துச் செய்தல். தஹ்லீல் ஓதல் முதலியவைகள் அஸல் சட்டத்தைவிட்டும் நீக்கப்படமாட்டாது. ஆதலின் இவைகளுக்கு கூலி கொடுப்பதும் வாங்குவதும் ஆகாது. (சுருக்கக் கருத்து) (இம்தாதுல் பதாவா வா. 3. ப. 49.)

குர்ஆனை கேட்பதற்கு கூலி கொடுப்பதிலும் குர்ஆனை ஓதுவதற்கு கூலி கொடுப்பதிலும் வித்தியாசமென்ன வென்ற கேள்வியின் விடையில் கூறுவதாவது:— குர்ஆனைக் கேட்பதின் கருத்தாவது மறந்த இடத்தில் காட்டிக்கொடுப்பதாகுமாதலின் இது கற்பிப்பதாகும். கற்பிப்பதற்கு கூலி வாங்குவது ஆகுமென்பதில் பத்வா உண்டாயிருக்கிறது. குர்ஆன் ஓதுவதற்கு மாற்றமாக. ஏனெனில் இதில் கற்பிப்பது கருத்தல்ல. எனவே வணக்கத்தின் பேரில் கூலி வாங்குவது ஹறாமென்ற பொதுச் சட்டத்தில் இது சார்ந்திருக்கும். (ஷை 61. ப.)

குர்ஆன் கத்தம் முதலியவைகளில் கூலிவாங்குவதும் கொடுப்பதும் (ரத்துல் முஹ்தார் வா. 1. ப. 767. இன்னும் வா. 5. ப. 53. லும் வருகிறபடி) ஆகாது. இஸ்மாயீலிபுனு முஹம்மது சூரத்தீ சுன்னீ ஜாமிஉ மஸ்ஜிது இரங்கூன்.

தொழ வைப்பதற்கும் இறந்துபோனவர்கட்கு குர்ஆன் ஓதி ஹதியாச் செய்வதற்கும் சம்பளம் பேசி மேற்படி காரியங்களை நடத்தி வருகிறது. ஆகுமா? விடை:— தொழ வைப்பதற்கு ஆகும். குர்ஆன் ஓதி ஹதியாச் செய்வதற்குக் கூடாது. (ஸைபுல் இஸ்லாம் 19 ஜமாதில் அவ்வல் 1347, 3—11—1928)

ஒரு சுவாலுக்கு ஜவாபாக மஜ்லிசுல் உலமா முப்தி ஹாஜ் மௌலானா சி. கா. ஷேக் இப்ருஹீம் ஸாஹிபு அவர்கள் கூறுவதாவது:— மையித்துக்காக பாத்திஹா, இக்லாஸ் முதலிய சூருக்கள் ஓதி துஆ எத்தனை தடவை கேட்டாலும், ஓதினவர்கட்கும் மையித்துக்கும் நன்மை கிடைக்கும். குர்ஆன் ஷரீபு, ஸலவாத்து, திக்ரு, மௌலிது வகையறாக்கள் ஓதி பக்ஷ் செய்வதற்கு கூலி கொடுக்கிறதும் வாங்குவதும் மக்றூக் தஹ்ரீம் என்று ரத்துல்முஹ்தார், ஹிதாயா, தரீகத்துல் முஹம்மதிய்யா முதலிய அநேகம் கிதாபுகளிலும் பத்வாக்களிலும் வருவதாலும் தங்கள் சுவாலில்கண்டவர்கள் பணத்துக்காகவே ஓதுவதாகத் தெரிவதாலும் ஓதியவருக்கும் அவருக்கும் அதற்குட்டுப்பட்டு கொடுக்கிறவருக்கும் நன்மை இல்லை. மக்றூஹ் தஹ்ரீம் உடைய குற்றம் ஷை இருவருக்கும் கிடைக்கும். மையித்துக்கு யாதொரு நன்மையும் பிரயோஜனமும் இதனால் கிடையாது. (மஜ்லிசுல் உலமா பத்வா 32. ப.)

குர்ஆன்ஷரீப் ஸலவாத்து, தஸ்பீஹ், தஹ்லீல், மௌலிது முதலியன ஓதி நன்மை சேர்த்து வைப்பதற்கு கூலி வாங்குவதும் கொடுப்பதும் கூடாதென்று ஹதீது வந்திருப்பதுடன் அப்படிக் கூலி வாங்குவதிலும் கொடுப்பதிலும் மக்றூஹ் தஹ்ரீமுடைய குற்றம் ஏற்படுகிறதென்றும் அந்த நன்மைகள் மையித்துக்குச் சேராதென்றும் ஹனபி மதுஹபு கித்தாபுகளிலும் பாரவான்களான அநேக இமாம்கள் உலமாக்களுடைய பத்வாக்களிலும் எழுதியிருக்கிறார்கள். எழுதிக்கொண்டும் வருகிறார்கள்.

நிற்க தஹ்தாவி என்ற கிதாபில் அதன் ஆசிரியர் அஹ்மது அவர்கள் குர்ஆன்ஷரீப் ஓதுவதற்கு கூலி வாங்குவது ஆகுமென்று எழுதியிருப்பதையும் இவர்கள் எழுதியிருப்பதாக இன்னும்இரண்டு கிதாப்புக்காரர்கள் எடுத்து எழுதியிருப்பதையும் ஆதாரமாகக் கொண்டு சிலர் வாதிக்க முன் வருகின்றனர். ஆனால் தஹ்தாவியில் இவ்விதம் எழுதியிருப்பதை யறிந்த ரத்துல் முஹ்தார் கிதாபின் ஆசிரியர் இபுனு ஆபிதீன் அவர்கள் அவ்விதம் கூலிகொடுப்பதும் வாங்குவதும் அறவே ஆகாதென்பதற்குப் போதிய காரணங்களும் ஆதாரங்களும் எடுத்துக் காட்டி ஓர் பத்வா எழுதி ஷை தஹ்தாவிக்காரருக்கு அனுப்ப அதை அவர்கள் ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டிருக்கிறார்கள். இவ்விதமிருந்தும் தஹ்தாவியி லெழுதியிருப்பதை ஆதாரமாகக் காட்டுவது நியாயமற்றதாயும் வம்பு விவ

காரமாகவு மிருக்கும். முஸ்லிம் சகோதரர்கள் நேர்மையைக்கடைப் பிடித்து நடப்பீர்களாக. (மஜ்லிசுல் உலமா பத்வா 146. ப.) (முஸல்மான் 1343. ஷவ்வால் 275. ப.)

இராஜகிரி மதரஸாவின் தலைமை ஆசிரியரான
ஜனுப். மௌலானு மௌலவி நைியினுர் முஹம்மது ஸாஹிப்
அவர்கள் கூறுவது:—

குர்ஆன் ஓதி (கத்தம் பாத்திஹா வகையரு) கூலி வாங்குவது ஹனபி மதுஹபில் ஹக்கான சொல்படி ஹறுமாயிருக்கும். ஷாபியீ மதுஹபில் ஜாயிஸ் (ஆகும்) ஹனபி மதுஹபில் ஜாயிஸ் என்று எந்த கிதாபிலும் கிடையாது. (மீண்டும்) ஹறுமென்பதில் இக்திலாபும் (அபிப்பிராயப்பேதம்) கிடையாது. இந்தக் காலத்தில் ஹனபிய்யாக்கள் கூலி வாங்குவது வழக்கமாயிருப்பதால் (வாங்கலாமென்று ஆ—ர்) இதில் தர்க்கஞ் செய்வார்கள். அஃதெல்லாம் காசு பணத்துக்காகவே தவிர வேறில்லை. அதை ஒப்புக்கொள்ளக்கூடாது. லெப்பைமார்களுடைய பித்னுவைப் பயந்தால் இந்த மஸ் அலாவை வெளிப்படுத்தவும் தேவை இல்லை. (ஜவாஹிருல் மஸாயில் முதற் பாகம் 55. ப.)

ஹனபி மதுஹபின் ரத்துல் முஹ்தாரில் கூலி பேசி குர்ஆன் ஓதுவதும், கூலிகொடுப்பதும் ஜாயிஸ் அல்ல. கூலி வாங்கிக்கொண்டு ஓதுகிறவனுக்கு தவாபு கிடையாது. மைய்யித்துக்கும் தவாபுசேராது. ஓதுகிறவர்கட்கு கூலி கொடுக்கும்படி வஸிய்யத்துச் செய்வதும் கூடாது. இஃதெல்லாம் கெட்ட பித்அத்து. கூலி வாங்குவதும் ஹறுமென்று நீளமாக மிகுந்த கிதாபுகளுடைய நகல்களுடன் விபரிக்கப்பட்டிருக்கிறது. கூலி வாங்குவது ஹறுமென்பதில் கிலாபு (அபிப்பிராய வேற்றுமை) கிடையாது.

ஜௌஹறா (யென்ற கிதாபில்) வில் கிலாபு இருப்பதாக நகல் செய்யப்பட்டதை ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக்காலத்தில் சில லெப்பைகள் பன்னிரண்டு ரூபாய்க்கு கம்மியாக கூடாதென்று சொல்வதையும் ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. (ஜவாஹிருல் மஸாயில் முதற்பாகம் 258. ப.)

இதே விதமாக வேறொரு ஹதீதைக் கொண்டு 40 அல்லது 45 திர்ஹத்தி (சுமார் 12 ரூபாய்) ன் பேரில் குர்ஆன் மஜீத் ஓதலாமென ஸ்தாபிக்கிறது முழுதும் அஸ்திவாரமற்றதாகும். இப்படிப்

பட்ட (ஆதாரவிழந்த) ஹதீதுகளை பொது ஜனங்கட்குக் காட்டி அவர்களை வஞ்சிக்கிறது மகா பெரும் தவறுகவும் தீனின் பேரில் (அச்சமில்லாத) பெரிய தீரமாகவும் மிருக்கிறது. (தன்ஸீஹுல் குர் ஆன் மௌலான ஸைய்யித் அஹ்மத்ஹஸன் சிஷ்தீ ஹஸரத் ஹகீமுல் உம்மத் மௌலானு அஷ்ரப் அலி ஸாஹிப் (ரஹ்)

பின்னை எப்படி மௌத்தானவர்கட்கு நன்மையைச் சேர்த்து வைப்பது எனச் சந்தேகம் நிகழலாம். அதற்கு விடையாவது:—

சகோதரர்களே! மைய்யித்துக்கு நன்மையைச் சேர்த்துவைப்பதானுல் மார்க்கத்தில் சொல்லப்பட்ட நியாயமான முறையின்படியே நன்மையைச் சேர்த்துவையுங்கள். அஃதன்றி உங்களிஷ்டம் போல் கூலி கொடுத்து ஓதச்செய்வீர்களாயின் அதனுல் உங்களுக்கும் நன்மை இல்லை. மைய்யித்துக்கும் நன்மை இல்லை. மேலும், இருவருக்கும் (கூலி கொடுப்போருக்கும் வாங்குவோருக்கும்) குற்றம் ஏற்படுகிறதென்ற மார்க்கவிதியும் முழங்கிக்கொண்டிருக்கிறது. முஸ்லிம்களே! குர்ஆன்ஷரீபை ஓதக்கற்பது ஒவ்வொருவர்மீதும் இறைவனுல் விதிக்கப்பட்ட கடமையென்பது நிச்சயம். வரும்படியில் கவனம் வைத்த ஒரு சிலர் நுங்களை குர்ஆன் ஓதவேண்டாம், பாத்திஹா ஓதவேண்டாம் நாங்களிருக்கிறேமெனக் கூறி உங்களையும் கெடுத்து தாங்களும் கெட்டுப்போகிறுர்கள். ஆதலின் இவ்வாறுன பேர்வழிகளின் சொற்களுக்குச் செவிசாய்க்காது குர்ஆன் ஷரீப் ஓதக் கற்றுக்கொண்டு நீங்களே உங்கள் குடும்பத்தார்பேரில் ஓதி ஹதியாச் செய்யுங்கள். அன்றி நீங்கள் எவ்வளவு உள்ளச்சத்துடன் ஓதுவீர்களோ அவ்வாறு கூலிக்கு ஓதுகிறவர்கள் ஓதமாட்டார்களென்பது பிரத்தியட்சம். உங்கள் கண் தப்பினுல் பல பக்கங்கள் புறட்டப்பட்டுவிடும். இன்னும் முப்பது ஜுஸ்உ கொண்ட பரிசுத்த குர்ஆன்ஷரீபை 8 அணுவுக்கும் சிலவிடங்களில் 5 அணுவுக்குமாக ஓதுகிறுர்கள். வேறு சிலவிடங்களில் துட்டுக்கு எட்டு யாசீன் என்று கணக்கு வைத்து ஓதுகிறுர்கள். இப்படிப்பட்டவர்கள் எவ்வாறு ஓதி முடிப்பார்களென்பதை நீங்களே சிந்தித்துக் கொள்வீர்களாக. லப்பை தாள்புறட்டினுற்போல் என்ற பழமொழியை யாம் சொல்லத் தேவையில்லை.

குர்ஆன் ஷரீப் முழுதும் ஓதத்தெரியாவிடினும் தெரிந்த சூராத்துகளை ஓதி ஹதியாச் செய்யலாம். அன்றி குல்ஹுவல்லா-சூரத்

தை மூன்று விடுத்தம் ஓதினால் ஒரு குர்ஆன் ஷரீப் ஓதின நன்மை கிடைக்குமென்று ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் தஸ்பீஹ், தஹ்லீல், ஸலவாத்து முதலிய எதுவும் ஓதி நன்மையைச் சேர்க்கலாம்.

இன்னும் குர்ஆன் ஷரீபை ஓதுகிற பிள்ளைகளுக்கு இனாமளிக்கலாம். மார்க்க சம்பந்தமான பிக்ஹு அகாயிது, தஸவ்வுபு, ஹதீது தப்ஸீர் முதலிய கிரந்தங்களை வாங்கி ஓதுவோருக்கு தர்மஞ் செய்யலாம். ஓதுகிறவர்கள் தங்கியிருக்க மதரஸாக் கட்டி அதற்குச்சொத்துக்களை வக்பு செய்யலாம். மஸ்ஜிது இல்லாத விடங்களில் மஸ்ஜிது கட்டலாம். பொதுப்பிரயோஜனத்திற்காக கிணறுமுதலியன வெட்டலாம். மதப்பிரசாரர்களை நியமித்து மதப்பிரசாரம் புரியலாம். தகுதியற்றவர்கட்கு மத சம்பந்தமான நூற்களை வாங்கிக் கொடுக்கலாம். தொழிலன்றி கஷ்டப்பட்டு யாசகம் புரியத் துணிவோருக்கு அதைத் தடுத்து சுயமரியாதையுடன் வாழ்வதற்கு தொழிலாபீஸ் ஏற்படுத்தலாம். இவை போன்றது என்றென்றும ஓயாமல் கிடைத்துக்கொண்டிருக்கும் நன்மைகளாம்.

இன்னும் பசித்தோருக்கும் ஆடையற்றோருக்கும் பெருங்குடும்பமாயிருந்து வரும்படி குறைந்து கஷ்டப்படுவோருக்கும் கடனாளிகட்கும் ஒழுங்குப்படி விவாகம் செய்விப்பதற்கும், கேட்க வெட்கித்து வருந்துவோருக்கும், கதியற்ற பேஷ் இமாம், லெப்பை மோதீன், ஆலிம், குடும்பத்திலுள்ள ஏழைகள் வகையற்ற வியாதியஸ்தர்கட்கும் போதுமான உபகாரம் புரியலாம்.

இன்னும் எளியோர் வலியோரென்ற பாகுபாடின்றி யாவரும் செய்யத்தக்க வழிகளும் ஏராளமாயுண்டு. தானே ஓதலாம். நபில் தொழலாம். ஸலவாத்து ஓதலாம். இவைகளின் நன்மையை தாங்கள் நாடிய மைய்யித்துக்கும் பல மைய்யித்துகளுக்கும் சேர்ப்பிக்கலாம். ஆகவே எவ்விதத்திலும் நன்மையைச் சேர்ப்பிக்க வழியுண்டு

மேற் கூறப்பட்ட விஷயங்களைச்செய்து முடித்தவுடன் இதிற் கிடைக்கும் நன்மைகளை இறைவனே நான் இன்னாருக்கு ஹதியாச் செய்து விட்டேன். நீ அவர்களின் பிழைகளைப் பொறுத்து அன்னாருக்கு மேம்பதவி யளிப்பாயாகவென்று பிரார்த்தனை புரிவது போதும், இதற்கு ஒருவர் வந்து பாத்திஹா ஓதி பக்ஷ் செய்துதான் ஆகவேண்டுமென்றும் அதற்காகக் காத்திருக்க வேண்டுமென்

றும் நம்மார்க்கம் விதிக்கவில்லை. மேலும், இவ்விதப் புரோகிதத் தன்மையை வெறுத்துத் தள்ளுகிறது இப்படிப்பட்ட பல வழி களிலும் நன்மையைச் செய்து மௌத்தானவர்கட்குச் சேர்த்து வைக்கலாமென மார்க்கம் அநுமதியளித்திருந்தும் வருவாய் மீது வேட்கை கொண்ட ஒரு சிலர் அவற்றை யெல்லாம் மறைத்து எல்லாவற்றையும் தாங்களே அப்பிக்கொள்ள உங்களை ஏய்க்கப் பார்க்கிறார்கள். (ஹதீது) எவன் நம்மவர்களோடு வஞ்சகம் செய்வானோ அவன் நம்மில்நின் றும் விலகினவனாகும்.

எனவே, இப்படிப்பட்ட சௌகரியங்களெல்லாம் நம் பரிசுத்த மார்க்கத்தில் ஏற்பட்டிருக்க கூலி கொடுத்துத்தான் கத்தம் பாத்திஹா ஓதவேண்டு மென்ற சித்தாந்தம் எதற்கு? இஃதெல்லாம் வரும்படி மீது மோகங்கொண்ட ஒரு சிலரால் ஏற்படுத்தப் பெற்ற மனித விதியாம். ஆதலின், ஹனபி மதுஹபில் கூலி கொடுத்து ஓதுவதும் வாங்குவதும் கூடாதென்பதும் நன்மை கிடையாமல் குற்றம் ஏற்படுமென்பதும் நன்கு ருஜூவாய் விட்டது.

## முடிவான ஓர் ஆராய்ச்சி.

முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் இவ்விஷயத்தில் உண்மைப் பொருளை ஓர்ந்துகொள்ளாமல் எல்லாவற்றிற்கும் கூலிகொடுக்கலாம் வாங்கலாமென்றும் இன்னும் சிலர் 11—4—0 ரூபாய்க்குக் குறைந்து வாங்கலாகாதென்றும் விளங்கிக்கொண்டு தாங்களும் கெட்டு பிறரையும் பாவத்திலாழ்த்தி விட்டார்கள். அன்றி முஸ்லிம் சிறுவர் சிறுமிகள் குர்ஆன் ஷரீப் பிக்ஹூச் சட்டங்கள் கற்பதற்கும் இவர்கள் (வரும்படியை ஆசித்தவர்கள்) தடைக்கல்லாக நின்றார்களென்றே கூறவேண்டிய திருக்கிறது. எனெனில் இவ்வர்க்கத்தார் நாங்கள் குர்ஆன் கத்தம், பாத்திஹா முதலியன ஓதுவதற்கு ஏற்பட்டிருக்கும்போது நீங்கள் ஏன் உங்களது காலத்தை வீணில் கழிக்க வேண்டுமெனக் கூறுகின்றார்களாம். * இவ்வர்க்கத்தாரை பரம குருக்களென நம்பி வந்த பாமர மக்கள் இதை உண்மையென்றே நினைத்து குர்ஆன்ஷரீப் முதலியன ஓதாது காலந்

---

* மௌல்வி ஷரபுத்தீன் ஸாஹிப் அவர்கள் ஜனாப். குறைஷிஸாஹிபின் கேஸ் சம்பந்தமாக தென்காசி வந்திருக்கும்போது முஸல்மான் ஆசிரியரைக் குறைகூறி தூஷித்ததில் நாங்கள் மார்க்க விஷயத்தைப் பாத்த ஏற்பட்டிருக்கும்போது இவர் வியாபாரி மகன் ஏன் இத்தொழிலில் ஈடுபட்டு

தள்ளிவிட்டார்கள். இப்போது சிலர் "இவர் ஓதி கத்தம் ஓதப் போகிருரோ அல்லது ஓதி பாதிஹா ஓத இமாமத்துச் செய்யப் போகிருரோ தொழுகைக்காக கால்ஜுஸ் ஓதிக்கொள்ளல் போது மானது" எனக் கூறுவதைக் கேட்க மேற்கூறிய சம்பிரதாயக் காரரின் சூழ்ச்சியை அதிக உறுதிப்படுத்துகிறது. இன்னும் யாராவது மார்க்கச் சட்டங்களைக் கற்று இமாமத்துச் செய்தால் ஆங்கு இமாமத்துச் செய்யும் கதீப் ஸாஹிபுக்கு அடிவயிற்றில் நெருப்புக்கொள்ளியை வைத்துக் கட்டினதுபோலிருக்கும். உர்தூ பார்ஸீ மூலம் மார்க்க விஷயங்களைக்கற்று வெளியிடத்தொடுத்தால் உர்தூபாஷையைக் குறை கூறி அதில் வரும் விஷயங்கள் அவ்வளவு நம்பத்தக்கதல்ல வென்று ஜனங்கள் அதை உதறித்தள்ளுவதற்குரிய விதத்தில் பழித்துக் காட்டுகிருர்கள். அரபி அறிஞர்கள் இவ்விஷயங்களைக் கூறிஞல் அவர்கள் கால் படிப்பு அரைப்படிப்புக்காரர்களெனக் கூறி ஏய்த்து விடுகின்ருர்கள். *

எனவே இன்னுர் குர்ஆன் ஹதீதை யோதி அதன்படி ஒழுகப் பிரயத்தனப்படாமல் கத்தம் பத்திஹா ஓதுவதற்கே அதை இறக்கப்பட்டதென நினைத்து உபயோகித்து வருகிருர்கள். கத்தம் ஓதுகிறவர்களில் அநேகருக்கோ தொழுகை, நோம்பு, ஸகாத் ஹஜ் முதலிய வணக்கம் ஸைபர். வட்டி, பொய், சூது, ஏமாற்று, வஞ்சகமுதலியவைகளோ சொந்தம். இப்படிப்பட்ட மேதாவிகள் தாம் கத்தம் ஓதி பகஷ் செய்கிருர்கள். சில கத்த வியாபாரிகள் இறந்துபோன உங்கள் முன்னேர்கட்கு கத்தம் பாத்திஹா ஓத வேண்டாமா. அவர்கள் சொத்துக்களை வைத்துவிட்டுப் போகவில்லையா? சென்று போனவர்கள் எத்தனையோ எண்ணற்ற உபகாரங்களெல்லாம் புரிந்திருக்க அவர்கள் மீது நீங்கள் இரக்கங்காட்டவேண்டாமா? வெனச் சில குறிப்பிட்ட தினங்களில் சென்று அவர்கட்கு ஞாபக மூட்டுகின்ருர்கள். அப்பாமர வர்க்கத்தார் இவர்கள் சொல்

---

ஜனங்களை வழி கெடுக்கிருர் எனக் கூறினராம். இன்னும் சில வரும்படி மீது மோகங்கொண்ட சில ஆலிம்களும் இவ்வாறு கூறியிருக்கிருர்கள். எனவே உண்மையை மறைப்பதில் இவ்வர்க்கத்தார் எப்படிப்பட்டசாமர்த்தியர்களென்பதை முஸ்லிம்கள் அறியக்கடவர்.

* ஜனுப் மக்கீஸாஹிப் கூலி வாங்கலாகாதென்ற உலமாக்களை இவ்வாறு தமது நூலில் அறைந்துள்ளனர்.

வதை உண்மை யென நம்பி நல்ல சமயத்தில் ஞாபகப்படுத்தினீர் களென்று நன்றி பாராட்டுகிறார்கள். இன்னும் இவ்வியாபாரிகள் இடம் ஒவ்வொரு வீட்டிலும் இறந்தவர்களின் தெய்றி வருஷ முத விய ஜாப்தா கூட தயாராக இருக்குமாம். இவர்களின் தந்திரங் களைப் பொது ஜனங்கள் உணர்ந்து கொள்ளாதவாறு மிக்க உருக்க மாக மைய்யித்துக்கு நன்மையைச்சேர்த்து வைக்க வேண்டுமெனப் பகர்வார்கள். ஒருசமயம் அவ்வீட்டுப் பெரியார்கள் சரி நாங்களே குர்ஆன் கத்தம் ஓதி மைய்யித்துகளுக்குப் பக்ஷ் செய்துவிடுகிறோ மெனக்கூறின் அவ்வமயம் இவ்வியாபாரிகளின் அழகியவதனம் எவ் வாறு சோர்ந்து வாடிப்போய் விடுகிறதென்று கவனித்துப் பார்த் தால் இவர்கள் நன்னோக்கத்துடன் கூறினவர்களல்ல வென்ற உண் மை விளங்கும். இவ்வாறான பார்ப்பனத் தொழிலை இஸ்லாத்தில் நுழைத்து இஸ்லாமியச் சிறுவர் சிறுமிகளை ஓத விடாமல் தடை செய்து விட்டார்கள். என்னே கொடுமை,

கத்த வியாபாரிகள் இதைத் தக்கதோர் வியாபாரமெனக்கருதி குர்ஆன் ஷரீபின் மஹத்துவத்தைப் பங்கப்படுத்தி விட்டார்கள். இன்னும் அதைப் பிச்சைத் தொழிலுக்கு ஆதாரமாகவும் வைத் துக்கொண்டார்கள். மகா ஓங்கிய மகிமையுடைய திருக்குர்ஆன் ஷரீபை, இருண்ட உலகத்திற்கு வெளிச்சத்தை யருளிய திருமறை யை, மைய்யகத்தாருக்கு மனிதத்தன்மையை உணர்த்திய தூய வேதத்தை, கேவலம் 11—4—0 ரூபாய் 2—8—0 ரூபாய் சில சமயங்களில் அதனினும் குறைந்த கூலிக்கு ஓதுகிறார்களாம். திரு மறை இதற்காகவா இறங்கப்பெற்றது? இறைவா இக்கொடுமையை எங்களினின்றும் அகற்றி சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுக அருள் பாலிப்பாயாக.

## நன்மையைச் சேர்ப்பிக்க நாள் குறிப்பிடுவேது.

1. மௌத்தானவர்கட்கு குர்ஆன் ஸலவாத்து ஓதி நபில் வணக்கம் புரிந்து தான தர்மஞ்செய்து நன்மையை சேர்ப்பிப்பது உத்தம பணியாகும். சுன்னத்து வல்ஜமா அத்து முஸ்லிம்களின் ஏகோபித்த கொள்கையுமாகும். இஸ்லாம் மார்க்கத்தை மறுமுறை உலகத்திற்கு கொடுத்தருளிய நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் காலத் திலும் மௌத்தானவர்கட்கு நன்மையைச் சேர்த்து வைத்திருக்

கிறார்கள். சேர்த்து வைக்கும்படி ஏவி யிருக்கிறார்கள். சில சூரத்து ஆயத்துக்களின் வரிசைகளையும் நன்மைகளையும் விபரித்திருக்கிறார்கள். தவிர நாயகமவர்களின் குடும்பத்திலும் பலர் காலகதியடைந்து நாயகமவர்களே நல்லடக்கம் செய்திருக்கிறார்கள். துஆச் செய்திருக்கிறார்கள். மற்றும் ஸஹாபாக்களிலும் மவுத்துக்கள் ஏற்பட்டு அதற்குரிய காரியங்களெல்லாம் பூர்த்தி செய்திருக்கிறார்கள். எனினும் மூன்றும் நாள் 7-ம் நாள் 30, 40-ம் நாள் வருஷத்தினம் என்று நாள் குறிப்பிட்டும் அதற்காக ஜனங்களை யழைத்தும் செய்ததாக காணக்கிடைக்கவில்லை. (1)

2. ஸஹாபாக்களின் காலத்திற்குப் பிந்தின தாபியீன் தபஉ தாபியீன் இமாம்கள் காலங்களிலேனும் இவ்வாறு குறிப்பிட்டுச் செய்ததாகவும் ருஜூவாகவில்லை. பிற்காலத்தில் விசேஷமாக இந்தியாவில் இவ்வழக்கம் காணப்படுகிறது. இவ்வழக்கத்தை உற்பத்தி செய்தோர் யார். அக்காலம் எது வென்பதை நிச்சயமாக அறிந்து கொள்ள முடியவில்லை யாயினும் இந்தியாவில்தான் விசேஷமாகக் காணப்படுகிறதென உறுதியாய்க் கூறலாம்.

---

(1) நமது மறுப்பு நூலாசிரியர் கூறுவதாவது:— அபூதர்தா (ரலி) அவர்களால் அறிவிக்கப்பட்டதாக முல்லா அலி காரி [ரஹ்] அவர்கள் தங்கள் பத்தாவாவாகிய அவுஸ் ஜந்தி என்னும் கிதாபில் எழுதியிருப்பதாவது "ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் மகன் இப்ராஹீம் மௌத்தான மூன்றும் நாளில் ஒட்டகைப்பாலும் காய்ந்த ஈத்தப்பழமும் கொண்டு வந்து சூரத்து பாத்திஹா (அல்ஹம்து சூரா) ஒரு விடுத்தமும் குல் ஹுவல்லாஹு சூரா மூன்று விடுத்தமும் ஓதி அல்லாஹும்மஸல்லி அலா முஹம்மத் என்று துஆ ஓதி அதன் நன்மையைத் தங்கள் குழந்தை இப்ராஹீமுக்குச் சேர்த்து வைத்துவிட்டு பாலையும் ஈத்தம் பழத்தையும் அங்கிருந்தவர்கட்கு பங்கிட்டுக் கொடுத்தார்கள். (மறுப்பு நூல் 88. ப.) இன்னும் இவ்விஷயத்தை மௌல்வி ஷரபுத்தீன் ஸாஹிப் தரீக்குஸ் ஸவாப் என்னும் நூல் 9-ம் பக்கத்திலும் வரைந்திருக்கிறார்கள்.

விடை:— (1) மேற்கூறப்பட்ட விஷயம் நம்பத்தகாத கட்டுக்கதையாகும். ஏனெனில் நாயகமவர்கள் அவ்வாறு செய்திருப்பது உண்மையாயின் ஸஹாபாக்களனைவரும் அதைச் செய்து வந்திருப்பார்கள். ஹதீதைச் சேகரித்த இமாம்கள் அவ்விஷயத்தை தங்களது உயர்தர நூற்களில் விவரித்திருப்பார்கள். அவ்வாறு ஓர் குறிப்பும் காணப்படாததால் அது உண்டு பண்ணப்பட்ட ஒரு கதை என்பதை ஸ்திரப்படுத்திக்கொண்டிருக்கிறது.

இவ்வழக்கம் இடையில் தோன்றினதென்றும் பிதுஅத்தா குமென்றும் இதிற் பல கெடுதல்கள் நுழைந்து அதன் நன்மையைக் கெடுத்துப் பாழாக்கி விடுகிறதென்றும் இவ்வழக்கத்தைப் பின் பற்றும்படி நமக்கு கட்டளையிடப்படவில்லையென்றும் உலமாக்களில் ஒரு சாரார் ஆரம்பத்திலிருந்தே கண்டித்து வந்திருக்கிறார்கள். அன்றி இவ்வழக்கத்தால் ஏற்படும் நன்மையைவிட தீமை அதிகமென்பதையும் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள்.

நபிகள் நாதரவர்கள் காலத்திலேனும் ஸஹாபாக்கள் நான்கு இமாம்கள் காலத்திலேனும் இவ்வழக்கம் இருந்ததாகப் புலனாக வில்லை. மேலும் இவ்வழக்கத்தைப் பற்றிய ஓர் குறிப்பும் அவர்கள் சொல், செயல்களினின்றும் தென்படவில்லை. யாதலின் இது பிற்காலத்தில் தோற்றுவிக்கப்பெற்ற ஓர் புதிய வழக்கமென்பது திண்ணம்.

இவ்வழக்கானுஷ்டானமாகிறது:- படிப்படியாக விருத்தியடைந்து பர்லு, வாஜிபு, சுன்னத்துக்களை விட அதிக கௌரவமாக இருதயத்தில் வேரூன்றி விட்டது. ஒருவன் தொழுகை, நோன்பு, ஸகாத்து, ஹஜ், மற்றும் விதி விலக்குகளை சரிவர நடத்தி தஹஜ்ஜுத் முதல் தொழுகிறவனுயினும் இவ்வழக்கத்தை நடத்தவில்லையாயின் அவன் காபிர், முர்தத்து, முனுபிக் வஹ்ஹாபி, வழி கெட்டவன் என அழைக்கப்படுகிறான். இதற்கெதிராக தொழுகை, நோன்பு ஹஜ் முதலிய கடமைகளை அறவே செய்யாதவனுயினும் வட்டிகுடி முதலிய பெரும் பாதகங்களில் மூழ்கி கிடப்பவனுயினும் இவ்வழக்கத்தை யனுசரித்து நடத்தி வைத்தால் அவன் சரியான மூமின் இன்னும் சுன்னத் வல்ஜமா அத்தைச் சேர்ந்த பக்கா பக்திவான் என்று கருதப்படுகிறான். எனவே மார்க்கத்தில் அல்லாவாலும் ரசூல் நாயகமவர்களாலும், ஸஹாபாக்களாலும் நான்கு இமாம்கள் முதலியோர்களாலும், அநுமதி யளிக்காத ஓர் விஷயத்தில் ஜனங்கள் இவ்வாறு விஸ்வாசம் வைப்பதாயின் இதன் மகிமையைக்

---

(2) ஹனபி மதுஹபின் மேதாவிகள் முற்காலத்தில் இவ்வாறு நடந்திருப்பதில்லை யென்பதை பகிரங்கமாகக் குறிப்பிடுவதும் அக்கதை பொய் யென்பதை உறுதிப்படுத்துகிறது.

இப்போது அக்கதையைக் குறிப்பிட்டுக் கூறும் நுண்ணறிவுடைய மேதாவிகளின் மேற்கோளையும் தருகிறோம். நேயர்கள் கவனித்து உண்மையைக் கடைப்பிடிப்பார்களாக.

குறைத்து உண்மையை புகட்டுவது உத்தமர்களின் மீது விதிக்கப் பட்ட கடமை யென்பதை மறுக்க முடியாது. தவிர அல்லா ரசூ லின் வாக்கியங்களை இவ்வனுஷ்டானமும் இக்கொள்கையும் அகௌ ரவப்படுத்துதல் வெளிப்படையாகத் தோற்றுகிறது. உதாரண மாக தொழாதவன், வட்டி வாங்குகிறவனை இவ்வாறு யாராவது இழி த்துக் கூறுகின்றார்களா? வென்றால் இதனுண்மை புலனாகும். ஆத லின் இதனுண்மையைப் புகட்டுவது ஒதி யுணர்ந்த உலமாக்களின் பொறுப்பென்பதை அழுத்தமாய்க் கூறுவோம்.

3. நாள் குறிப்பிட்டுப் பாத்திஹா ஓதி விருந்தளிக்கும் இவ் வைபவத்துக்குச் செல்கிறவர்களும் அதற்கு உடந்தையாக விருந் து நடத்துகிறவர்களும் சில சமயம் பெரும்பாவத்தில் வீழ்ந்து அல் லா (ஹ்) ரசூல் உடைய வெறுப்புக்குட்பட்டு விடுகின்றார்கள். உதா கரணமாக இறந்துபோனவனுக்கு வாரீஸ்களும் சொத்துக்களும் கடன்களும் உண்டு என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் முதலாவதாக மையித்தை நியாயமான செலவுடன் அடக்கம் பண்ணி அம்மையித்தின் சொத்தில் நின்றும் கடன்கள் வஸியத் துகளை தீர்த்து எஞ்சிய பொருளில் ஸ்திரீகளுக்கும் அகதி (மைனர்) களுக்கும் மற்றும் பெரியார்களுக்கும் வீதாசாரப்படி பாகித்து அப் பால் இஷ்டப்பட்டவர்கள் தங்கள் சொத்தில் நின்றும் நியாயமான முறைப்படி தர்மஞ் செய்தல் வேண்டும். இதுவே பரிபூரணமான இஸ்லாம் மார்க்கம் விதித்துள்ள முறை. இதைத் தவிர்த்து வரை முறையின்றி எல்லாப்பொருளையும் தன்னிஷ்டப்படி செலவழித்துப் பாழாக்கும் துர்ச்செயலை நம்மார்க்கம் கண்டிக்காமலில்லை. மௌத் தானவர்களின் வாரீஸ்களில் மைனர் இருந்தால் கபன் தபன் வகை செலவுகள் தவிர வேறு செலவுகள் செய்யக்கூடாதென்று ரத்துல் முக்த்தாரில் ஜனுசாவுடைய பாடத்தில் வருகிறது. தற்காலத்தில்

---

3. மௌலானா முஹம்மது அப்துல் ஹைய்யில் லக்னவி (ரஹ்) அவர் கள் இவ்வினாவுக்கு விடையளித்ததாவது:—

கிதாபு அவுஸ் ஜன் தீ முல்லா அலிகாரியவர்களாலியற்றப்பெற்ற நூலு மல்ல. மேற்சொன்ன ரிவாயத்து உண்மையும் உறுதியுமுடையதுமல்ல. மேலும் மௌலூஹும் (உண்டு பண்ணப்பட்டதும்) இன்னும் வீணனது மாகும். அதன் பேரில் நம்பிக்கை வைக்கலாகாது. ஹதீதுடைய கிதாபு களில் இது போன்றரிவாயத்துகளின் குறிப்பும் காண்பதற்கில்லை. (மஜ்மூஆ பத்தாவா. வா. 2, ப. 67.)

இவ்வைபவத்தை நடத்துகிறவர்கள் இம்முறையை அநுஷ்டிக்கின்றார்களா? ஆலிம்களும் லெப்பைமார்களும் இவற்றைத் தெரிவிக்கின்றார்களா? வென்பதை நீங்களே சிந்தித்துக்கொள்ளும்படி விட்டுவிடுகிறோம். எனவே, கண் மூடித்தனமாக எதீம்கள் முதலியோரின் சொத்தில் கை வைக்கிறவர்கட்குச் சிறுமையான வேதனையுண்டு. அவர்கள் நெருப்பைத்தான் தின்னுகிறார்களென்று வேதம் விதித்துள்ளதால் இப்படிப்பட்ட விஷயங்கள் நிகழாதவாறு பாதுகாப்பது அறிஞர்களின் கடமை யென்பது பிரத்தியக்ஷம்.

4. மையித்து வீட்டார் மிக்க கவலையில் ஈடு பட்டிருப்பர். அக்கவலையை நிவிர்த்திக்க சாந்தப்படுத்துவதும் அன்று அவர்களின் புசிப்பிற்கு வேண்டியதை உதவி அவர்களை சமாதானப்படுத்துவதும் மற்றைய முஸ்லிம்களின் மீதுள்ள கடமை யென்பதை மார்க்கம் விதித்திருக்க மையித்து வீட்டார்களை மென்மேலும் அவஸ்தைப் படுத்தவும் நொந்த புண்ணில் கோலைவிட்டுக் குடைவது போல அவர்களிடமே விருந்துண்ணலும் இராப்பகலாய் இதர

---

4. ஹதிய்யத்துல் ஹறமைன் என்ற கிதாபில் நாயகமவர்கள் தங்கள் மகன் இப்றாஹீம் அவர்கட்கு 3—10—20 40-ம் நாட்கள் முதலியவற்றில் பேரீத்தம் பழத்தின் பேரில் பாத்திஹா ஓதினதாகவும் ஸஹாபாக்களுக்கு கொடுத்ததாகவும் எழுதப்பட்டிருக்கிறது. (உண்மையா?) எப்படி என்ற கேள்விக்கு மௌலானா அளித்த ஜவாபாவது:—

ஹதியத்துல் ஹறமைன் என்ற நூலில் எழுதியிருக்கும் இக்கதை சுத்தத் தப்பாகும். உறுதியான கிரந்தங்களில் இதைப்பற்றிய ஆதாரம் கிடைத்திலது. (மஜ்மூஅய பதாவா. வா. 2. ப, 98.)

5. இந்த ஹதீது உண்டு பண்ணப்பட்டதாகும். இதை உண்டு பண்ணினவன் பொய்யனும் படிர் கூறுபவனுமாகும். அவுஸ் ஜன்தி என்ற எந்தக் கிரந்தமும் முல்லா அலிகாரியவர்களின் கோர்வையில் நின்றுமல்ல.

இதன் கீழ் பல் வேறு தேசங்களிலுள்ள விசேஷ உலமாக்களின் கையொப்பமும் காணப்படுகின்றன. கடைசியாக அல்லாமா ரஷீத் அஹ்மத் கங்கூஹி (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:—

இந்த ஹதீதை உண்டு பண்ணினவன் மல்ஊனாகும். பகுர ஆலம் அலைஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் பேரில் கட்டுரை செய்கிறான். (பதாவா ரஷீதிய்யா வா. 1. ப. 137.)

6. இன்னும் நாயகம் தங்கள் குமாரர் இப்றாஹீம் அவர்கட்கு பாலும் பேரீத்தம்பழமும் வைத்து பாத்திஹா ஓதினது உண்மையாவென்ற வினாவுக்கு மௌலானா ரஷீத் அஹ்மத் கங்கூஹி (ரஹ்) அவர்கள் இறுத்தவிடை.

ஜனங்கட்கு ஊழியஞ் செய்விப்பது எவ்வளவு இழித்தொழிலென் பதை இஸ்லாமியச் சோதரர்கள் நினைத்துப் பார்க்க வேண்டாமா? கலியாணம் முதலிய விசேஷங்களில் விருந்துண்ணல் சந்தோஷத் தைப் பொறுத்ததற்காக ஆகுமாயினும் இழவு வீட்டில் விருந்தருந் தல் எந்த சந்தோஷத்தைப் பொறுத்தமெனக் கூறுவது?

மூன்றாம் ஸியாரத்தில் குடும்பத்தோடு வந்திருந்து சமைத் துப் புசித்து ஸர்வ கஷ்டங்களையும் மையித்து வீட்டாரின் தலை மேல் சுமத்தி அதிற்செய்த சிலவுக்கு இன்னும் அம்மக்கள் பூர்த்தி யாக்கவில்லை. அதற்குள்ளாக 7, 11, 16 21, 30, 40 முதலிய நாட்கள் வந்துவிட்டதென போயிருந்த கூட்டத்தினர் மீண்டும் வந்து குழுமி விடுகின்றனர். அந்தோ பரிதாபம்! இறந்தவர்களைப் பற்றிய துக்கமும், கடன்களும், மற்றும் சங்கடங்களும் இன்னும் முடிந்த பாடில்லை. குடும்பத்துடன் பல பாகங்களிலிருந்து விருந் துண்ண மென்மேலும் வந்து குழுமி பல நாட்கள் தங்கிவிட்டால் ஏழை மையித்து வீட்டாரென் செய்வர். வந்த விருந்தாளிகட் கும் அவர்களது சிப்பந்திகள் வண்டி மாடு முதலியவற்றிற்கும் ஊழி யம் புரிந்து தவித்து மயங்கி விடுகின்றனர். வந்த மகான்கள் கிரம மாகவாவது சென்று விடுகிறார்களா வெனின் அவ்வாறு கருதவும் இடமில்லை. அவர்கள் பாத்திஹாவுக்கு வருகிறோ மெனப் பகர்ந்து கொண்டாலும், அவர்களது நோக்கம் விருந்துண்டு கொண்டாடுவ தற்கும் வரவில்லையென்ற குறையை நிவர்த்திப்பதற்குமேயன்றி வேறன்றென்பதை அவர்களின் நடத்தை வெளிக்காட்டிக்கொண் டிருக்கிறது. இவ்வாறு மையித்து வீட்டார்களைத் தொந்தரவு

---

இவ்விஷயம் பொய்யும் நாயகம் அவர்கள்மீது கட்டுரையுமாகும். இப் படிப்பட்ட பேதீன் (மார்க்கமிழந்த அல்லது தெரியாதவர்) கட்கு முஸல் மான்கள் புத்தி கற்பிக்க வேண்டும். பின்னும் தௌபாச் செய்யவில்லை யாயின் அவனின் சிநேகத்தை விட்டும் பேணிக்கொள்ள வேண்டும். நம்பத் தகுந்த எந்தக் கிரந்தத்திலும் இவ்விஷயம் ருஜுவாகவில்லை. (பதாவா. ரஷீதிய்யா வா. 1. ப. 139.)

(7) தேவ்பந்து தாருல் உலூம் மதரஸா ஆசிரியர் மௌலானாமௌல்வி முஹம்மத் அஹ்ஸாஸ் அலி ஸாஹிப் அவர்கள் கூறுவதாவது:—

நாயகமவர்களின் குமாரர் ஹஸ்ரத் இப்ராஹிம் (ரலி) அவர்கள்பேரில் பாத்திஹா ஓதின சரித்திரமானது சுத்தத் தப்பும், உறுதி பெற்ற சரியான எந்த ஹதீதிலும் இல்லாததாகவுமிருக்கும். (முஹம்மத் அஹ்ஸாஸ் அலி)

புரிந்து கடனுளியாக்கி விருந்துண்ணல் தருமா? நம்மார்க்கம் இங்ஙனம் விதித்துள்ளதா, வென்பதுதான் கேள்வி?

5. மைய்யித்து வீட்டார்கள் மூன்றும் நாள் வகையறு குறிப்பிட்டு சாப்பாடு வைப்பதும் புசிப்பதுமான விடயங்களை பாரபக்ஷமற்ற நிதானப் புத்தியுடன் நோட்டமிடும் பக்ஷம் இந்துக்களிடமிருந்து கற்றுக்கொண்டு சிறிது மாறுதலுடன் நடத்திவருவதாக புலனுகும். ஹிந்துக்களின் பழக்கமாவது மூன்றும் நாள் பத்தாம் நாள் 16-ம் நாள், 40-ம் நாள் வருஷ நாள்களை குறிப்பிட்டு மரணவன் புசிக்கக்கூடிய வஸ்துக்களை யெல்லாம் திரட்டி பிராமணப்புரோகிதர் முன் படைத்து பாத்திரத்தில் ஜலமும் வைக்கிறுர்கள். புரோகிதர் மந்திரங்களை ஜெபித்து இறந்தோர்களுக்கு பலனைச் சேர்த்துவிட்ட பின் அங்குள்ள வஸ்துக்களை யெல்லாம் கட்டிச் சுருட்டி களிப்புடன் எடுத்தேகி விடுகின்றனர். இது சம்பந்தமான விஷயங்களை இந்துக்களிடத்தில் விஜாரித்தால் விரிவாகத் தெரிந்துகொள்ளலாம். இஸ்லாமானவர்களில் பெரும்பாகம் ஆரம்பத்தில் ஹிந்துக்களாக விருந்து முஸ்லிமானவர்களானதால் அந்த ஹிந்துக்களின் வழக்கானுஷ்டானங்கள் இவர்களின் ஞாபகத்தை விட்டும் அகன்று

---

உண்மை யுரைக்கும் முஸல்மான் ஆசிரியரை ஏசிப்பேசி தூஷிக்கிறதற்காக அரபி, பார்ஸி, உர்தூ, தமிழ் முதலிய கவிகளைத் தேடிப்பார்த்து வெகு சிரமத்துடன் நூறு பக்கங் கொண்ட புஸ்தகத்தை எழுதி முடித்த ஜனுப் மக்கீ ஸாஹிப் அவர்கட்கும் மௌலவி ஷாபுத்தீன் ஸாஹிப் அவர்கட்கும் மேற்சொன்ன சரித்திரம் கட்டுக்கதையா? அன்று வென்பதை அலசிப்பார்க்கச் சமயம் வாய்க்கவில்லையாம். என்னே! தந்திரம். அலசிப் பார்த்தால் மைய்யித்துச் சாப்பாட்டை யருந்துவதெங்ஙனம்?

### போய் ஹதீதை உண்டு பண்ணுவது.

ஹதீது நாயகமவர்கள் அருளினதாக மூஹீரபுனுஷஹ்பா (ரலி) கூறுகிறதாவது:— நிட்சயமாக என்மீது பொய் உண்டுபண்ணுவது இதரர்மீது பொய் உண்டு பண்ணுவதைப் போன்றன்று. எவன் என் மீது பொய் பகர்வானே அவன் தனது இருப்பிடத்தை நெருப்பில் தையார் பண்ணிக் கொள்ளட்டும். (புகாரி, முஸ்லிம், திர்மதீ, மௌலூஆத்த கபீர் 3. ப.) அல்லாமா முல்லா அலீகாரி [ரஹ்] தங்களது நூலில் நாயகமவர்கள் மீது கட்டுரை செய்பவனுக்குரிய கொடிய வேதனையை விபரிக்கிறபோது அவர்கள் தங்கள் நூலில் நாயகமவர்கள் தங்களது மைந்தருக்கு மூன்றும் கத்தம் ஓதினுர்களென்ற பொய் ஹதீதை உண்டு பண்ணுவார்களா வென்பது ஸாதாரண மனிதன் கூட அறிந்துகொள்ளும் ஓர் விஷயமாகும்.

விடவில்லை. எனவே, இவர்கள் அதே தினங்களில் நாமும் பாத்திஹா ஓதி அன்னதானஞ் செய்வோமாயின் வழக்கமும் நிறைவேறும். இஸ்லாமிய விதிப்படி மரணித்தவர்கட்கு நன்மையும் சேருமென்பதைக் கருதி இவ்வழக்கத்தை நடத்தலாயினர். அக்காலத்திய முல்லாக்களில் பலர் இதனைக் கண்ணுற்று குறிப்பிட்ட பல தினங்களில் ரொட்டியும், சாதமும், கறியும் விதவிதமான பலகார வர்க்கம் ஆடை ரொக்க முதலியன கிடைக்கிறதுமன்றி வருஷந்தோறும் நடந்துவரக்கூடியதாகவு மிருக்கிறதென்றும் உணர்ந்து இது மிக நன்மை பயக்கத்தக்கது என மார்க்கச் சட்டங்களையும் இதற்காதரவாக எடுத்துக்காட்டி இதற்கு மாற்றமாக சரியான அர்த்தத்தில் வரும் விதிகளை மறைத்துவிட்டனர். பாமரர்கட்கு மார்க்

---

இவ்வாறே, நாயகமவர்கள் காலத்தில வெற்றிலை உண்டுமென்றும் மேலும் அதைப்பற்றி நாயகமவர்கள் சிலாகித்துக் கூறிப் போந்தார்களென்றும் சிலர் கூறுகிறார்களே. அதன் உண்மை என்ன? வென்ற வினாவுக்கு அல்லாமா கங்கூஹி விடை யிறுப்பதாவது:—

வெற்றிலை தின்னுவது சிலாக்யமென்பதை நாயகமவர்கள் சொல்லைக் கொண்டு எவன் ஸ்தாபிக்கிறானோ அவன் பெரிய ஜாஹிலாகவும் அன்றி மார்க்கமிழந்தவனாகவுமிருக்கிறான். அவன் வார்த்தையை நம்பக்கூடாது. [பதாவா ரஷீதிய்யா வா. 2. ப. 93]

ஹதீது நாயகமவர்கள் எச்சரிக்கை செய்ததாவது:—

கடைசி காலத்தில் நீங்களும் உங்களது பிதா தாதாக்களும் கேட்டிராத ஹதீதுகளை வஞ்சகர்கள் உங்களிடம் விபரிப்பார்கள். ஆதலின் [அவர்கள்] உங்களைக் கெடுத்து பித்னாவில் போட்டு விடாதபடி நீங்கள் அவர்களை விட்டும் பேணியிருந்து கொள்வீர்களாக. [மிஷ்காத்]

இதைப் பார்த்த பின் மறுப்பு நூலாசிரியரின் நிலைமைகளை சிந்தித்துக் கொள்வது எளிது.

இன்னும் மறுப்பு நூல் 92, 93ம் பக்கத்தில் "ஆனால் குறித்த தினங்களில் பாத்திஹா ஓதினால் தான் நன்மை கிட்டும். முன் பின்னாக ஓதினால் பலனில்லை என்று எண்ணி பாத்திஹா ஓதுவது மக்ரூஹ். அவ்வாறில்லாது பாத்திஹா காரியம் நடை பெறுவதற்காக அவரவர் சௌகரியங்களைக்கருதி முக்கியமாக மௌத்தான மூன்றாம் நாள் 7—15—21 40 முதலிய நாட்களையும் வேறு வேண்டிய நாட்களையும் குறிப்பிட்டுக்கொள்வதில் குற்றமில்லை யென்று பத்தாவாக்களில் பரக்கக் காணப்படுவதோடு" என்றும் "இன்னும் ஓர் மஸ்லிஹத்தாயிருப்பது கொண்டு தேதிகளைக் குறிப்பிட்டு பாத்திஹா ஓதுவது ஆகுமென்று அநேக அறிவாளிகளாகிய சுன்னத்வல் ஜமா அத்து ஆலிம்களால் அங்கீகரிக்கப்பெற்றிருக்கின்றன" என்றும் எழுதுவது பெரும் பிழையாகக் காணப்படுகிறது.

கமும் இவ்வழக்கத்தை அநுசரிக்கிறதென்று விஷயம் தெரிந்த போது இம்முல்லாக்களை அளவு கடந்து ஏற்றிப்போற்றி அவர்கட்குப் பாதகாணிக்கைகள் முறையே செலுத்தி வந்தனர். இவ்வழக்கத்தை இந்துக்களிடமிருந்து எடுத்துக்கொண்டார்களென்பதற்கு அநேக சாக்ஷியங்கள் இப்போதும் காணப்படுகின்றன.

மைய்யித்தானவன் சாப்பிட்ட வஸ்துக்களையெல்லாம் முன்னால் வைத்து பாத்திஹா ஓதுகிறார்கள். அதோடு ஜலமும் வைக்கிறார்கள். லெப்பை முன்னால் வைத்து படைப்பு போட்டதுபோல் அதற்கொரு பாத்திஹா ஓதச் செய்கிறார்கள். முல்லாபுசிப்பதற்கு முன் யாரும் சாப்பிடக் கூடாதென்றும் எச்சில் ஆக்கிவிடக்கூடாதென்றும் கூறுகிறார்கள். இன்னும் தைப்பொங்கல் காலத்தில் ஹிந்துக்களைப் போன்று பலவிடங்களிலும் சில வழக்கங்கள் நடத்துகிறார்கள். குறி சூலம் பார்க்கிறார்கள். கலியாணங்களில் நடைபெறும் வழக்கங்களில் பெரும்பாகம் ஹிந்துக்களுடையதென வெகு தெளிவாய்த் தெரிந்துகொண்டிருக்கிறோம். நாற்பதாம் நாளில் நடத்தும் வைபவமோ விரிக்கிற் பெருகும்.

ஆகவே, இப்படிப்பட்ட எண்ணற்ற விஷயங்களை இந்துக்களிடமிருந்து முஸ்லிம்கள் கற்றுக்கொண்டது போல மேற்கூறின நாள் குறிப்பிட்டுச் செய்யும் வழக்கங்களையும் கற்றுக்கொண்டார்களென்பது வியக்தமாய் அறியக்கிடக்கின்றது. மேலும் காபுல் அரப் முதலிய தேசங்களில் இவ்வழக்கம் இல்லாததால் இந்தியாவில் வதியும் முஸ்லிம்கள் இந்துக்களிடமிருந்து கற்றுக்கொண்டதென்பது ஸ்பஷ்டமாய்த்தெரியவருகிறது.

இன்னும் ஏழைகட்கு அன்னமளித்தல் என்னும் பெயரால் நடத்தும் இவ்வழக்கம் விசேஷமாக சீமான்களுக்கே உணவாகிறது சீமான்கள் உண்டு கழித்த எச்சில்களே ஏழைகளுக்கு உதவுகிறது சீமான்களை கட்டாயப்படுத்தி அழைக்கப்படுகிறது. பாவம் ஏழைகளை உள்ளே நுழைய விடாமல் வாசலில் பாரா வைக்கப்படுகிறது. இன்று நாம் உணவளித்தால் நாளை நாமும் உணவருந்தலாமென்ற எண்ணத்தின் பேரில் இவ்வழக்கம் நடத்துவதால் துன்யாவுடைய பிரயோஜனத்தைக் கருதிச் செய்ததாக ஏற்படுகிறது. ஆதலின் நன்மை கிடையாதென்பது உண்மையாம். இன்னும் ஒருவர் தமது மைய்யித்தின் கத்தம் பாத்திஹாவுக்கு அழைத்தால் நான் இவ்விடமிருந்து கத்தம் பாத்திஹா ஓதிக்கொண்டேன் எனக்கூறினால் அம்

மைய்யித்து வீட்டார் சம்மதிப்பாரா? எவ்விதமேனும் அவன் சென்று உணவருந்தி பல ஊர்ச்சமாசாரங்களை யேனும் பேசி வரல் வேண்டும். இன்றென்றால் நாளை அவர் வீட்டு மைய்யித்துப் பாத் திஹா அல்லது விசேஷங்கட்கு இவர் ஒருக்காலும் செல்லத்துணி யார். எனவே, இவ்வழக்கமாகிறது நன்மையை நாடிச் செய்யப் படவில்லை யென்றும் பேருக்கும், பெருமைக்கும் செய்யப்படுகிற தென்று நன்கறிந்த பின் இதனால் நன்மை கிடைக்குமெனக் கழறு வதெங்ஙனம்?

அன்றியும் ஒருவன் தாய் தகப்பன் ஜீவித்திருக்கும்போது அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாமலும் அவர்கள் வருந் திக் கேட்கும்போதும் கொடுக்காமலும் அவர்கள் மௌத்தானபின் அவர்கள் பெயரால் 3, 7, 11, 21, 30, 40 வருஷத்தினம் முதலிய வற்றில் ஏழைகட்கும் முல்லாக்கட்கும் விருந்து செய்வதென்றால் இது வழக்கத்தைப் பொறுத்ததென்பதில் ஐயமில்லை யாதலின் பெருமைகளைச்செய்யும் இவ்வழக்கத்தில் நன்மைக்காக இல்லையென பெரியார் கூறுகிறார்கள். இன்னும் இதை ஆராய விருப்பமிருக் கின் அம்மையித்து வீட்டாரிடம் இதில்செலவாகும் தொகையை நன்மையை நாடி மதரஸாவுக்குக் கொடுங்கள். ஓதுகிற ஏழைமாண வர் மாணவிகட்கு குர்ஆன் கிதாபுகள் வாங்கிக் கொடுங்கள் எனக் கூறி நிலைமையைப் பார்த்துக்கொள்ளட்டும். ஆதலின் நன்மை கிடையாதென்பது உண்மை.

6. தூய்மையான நல்லெண்ணத்துடன் நன்மையை நாடிச் செய்வதாயின் குறிப்பிடாமல் எந்த நேரமும் செய்யலாம். எளி யோர்களுக்கே அளிக்கலாம். பிறர் தாக்ஷண்யம் வேண்டியதில்லை. கையில் இல்லாவிட்டால் இதற்காக கடன்பட வேண்டியதில்லை. கவலைப்படத் தேவையுமில்லை. தன்னாலியன்ற வேறுவகையில் நன் மையைச் சேர்த்து வைக்கலாம். மேலும் இதைத்தானும் குறிப் பிடாமல் இதில் செலவாகும் தொகையை மதரஸாக்களுக்கு அளித் துவிடலாம். இது போன்ற வேறு நன்மைகளிலும் உபயோகிக்க லாம். இங்ஙனமெல்லாம் மார்க்கம் அநுமதி யளித்திருக்க அவற் றைச் சிறிதேனும் ஓர்ந்து பாராது சாப்பாட்டில் தான் காரியமிருக் கிறதெனக் கவனிப்பது உண்மையாக நன்மையைச் சேர்த்துவைக் கும் சத்திய சீலர்களுக்குரியதன்றாம்.

7. நூற்றுக்கணக்கான வருடங்களாக நிகழ்ந்துவரும் இவ் வழக்கங்களின் நிலைமைகளையும் அதனால் அடையக்கூடிய பலன் களையும் செய்யும் முறைமைகளையும் கடன் வாங்கி கஷ்டப்படுவதை யும் எதீம்களின் சொத்து அநீதமாகக் கைபாளப்படுவதையும், இன் னும் இது போன்ற நூற்றுக்கணக்கான பாபாசாரங்களையும் விபரித் து உண்மையை உரைத்த ஆலிம்கள் யாரேனும் உண்டாவென வினவுகிறோம். இன்றேல் சாதாரண மக்களால் நிகழப்பெறும் பெரும் பாவங்களிலோர் பாகம் பாத்திஹா மட்டும் ஓதி வயிற்றை நிரப்பிவரும் மகான்களுக்கும் உண்டென்பதை மறக்கலாகாதென் பதை யறிவித்துக் கொள்கிறோம். எனவே, மேற்கண்ட விஷயங் களை யெல்லாம் கவனித்துக் கொண்டபின் ஹனபி, சுன்னத்துவல் ஜமா அத்து உயர்தர வேத நூலறிஞர்களின் முடிவான தீர்மானங் களையும் இவண் விளக்குவாம்.

1. மௌலானா ஷாஹ் அப்துல் அஸீஸ் முஹத்திஸ் திஹ் லவீ (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:—

கபுரை ஸியாரத்துச் செய்வதற்காக ஓர் நாளைக் குறிப்பிடுவது பிது அத்தாகும். உண்மையில் அஸல் ஸியாரத் ஜாயிஸ் (ஆகும்) நேரத்தைக் குறிப்பிடுவது முன்னோர்களில் இருக்கவில்லை. இந்த பிதுஅத் ஜாயிஸைப் போலொற்ற பிதுஅத்தாயினும் நேரத்தைச் சொந்தப்படுத்தினதினால் மட்டும் பித் அத்தாய்விட்டது (பதாவா. அஸீஸீ வா. 1. ப. 237.)

மனிதனுக்குத் தனது அமலின் தவாபை பெரியார்களுக்குச் சேர்த்து வைக்கும் சுதந்தர முண்டு. எனினும் இக்காரியங்களுக் காக ஓர் நேரம் அல்லது தினம் அல்லது மாதம் குறிப்பிடுவது பிது அத்தாகும். நாயகமவர்களால் எந்த மாதம் (அல்லது) நாள்குறி ப்பிடப்பட்டிருக்கிறதோ அதை யாரேனும் மறுக்கமுடியாது.

அமீருல் மூமினீன் ஹஸரத் அலி (ரலி) அவர்களின் சொல் லைக்கொண்டு ஸ்தாபகரமாவது யாதெனின்:— எந்த வஸ்துவின் விடயமாக ஸாஹிப் ஷரஹின் (நாயகமவர்களின்) புறத்திலிருந்து ஆசை யூட்டுகிறதும் நேரத்தைக் குறிப்பிடுகிறதும் ருஜூவாகவில் லையோ அக்காரியம் வீணானதும் சுன்னத்துக்கு விரோதமானது மாகும். சுன்னத்துக்கு மாற்றம் செய்வது ஹறுமாவதால் இது ஒரு

போதும் நியாயமாகாது. நிட்சயமாக நாடினால் எந்த நாள் கூடுமோ இரகசியமாக கைறாத் (தர்மம்) செய்யவும் ஏனெனில் இது வெளிப் படையானதால் வழக்கமென்று ஏற்படாமலிருக்கவாம். (பதாவா அஸீஸீ வா. 1. ப. 236.)

(2) மௌலானா முஹம்மது இஸ்ஹாக் (ரஹ்) மௌலானா ஸஅதுதீன் (ரஹ்) விளம்புவதாவது:—

மூன்றும் நாள், பத்தாம் நாள் வகையறாக் குறிப்பிடுவது மக் ரூஹ் ஆகும். (ரிபாஹுல் முஸ்லிமீன் 85 ப.)

(3) ஹஸ்ரத் மௌலானா ரஷீத் அஹ்மத் கங்கூஹி (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:—

வருடந்தோறும் தனது உஸ்தாது குரு முதலியவர்கட்கு ஓர் தினத்தைக் குறிப்பிட்டு வருஷ பாத்திஹா ஓதுவதும் அதற்கு "உரூஸ்" என்று நாமமிடுவதும் அந்நாளில் ஏழைகட்கு அன்னமிடு வதும் ஷரீ அத்தில் ஆகுமா ஆகாதாவென்ற கேள்விக்கு விடை யிறுப்பதாவது:—

முன் பின் கொடுக்காமல் குறிப்பிட்ட தெய்தியின் பேரில் அன்னமிடுவது நன்மை சேர்ந்தாலும் பிது அத்தாகும். உரூஸ் என்று ஓர் தினம் குறிப்பிடுவது சுன்னத்துக்கு மாற்றமாகுமாத லின் பிது அத்தாகும். குறிப்பிடாமல் கொடுப்பது ஆகும்.(பதாவா ரஷீதிய்யா வா. 1. ப. 7.)

மூன்றும் நாள் மௌத்தானவர்கட்காகச் சேகரமாய் ஓதுவ தால் குற்றமுண்டா வென்ற வினாவுக்கு விடை:—

பெரும்பான்மை உலமாக்களிடம் நாளைக்குறிப்பிடாமல் கூடி குர்ஆனை கத்தம் செய்தாலும் கலிமா தைய்யிபாவை ஓதி அதன் நன்மையைச் சேர்ப்பித்தாலும் கூடும். ஸபரூஸ் ஸஆதத் என்ற கிரந்தத்தில் அல்லாமா முஜத்திதுத்தீன் பைரோஸ் ஆபாதி மைய் யித்துக்காகச் சேகரமாய் நன்மையைச் சேர்ப்பிப்பது பிது அத்து எனக் கூறினும் சரியே. (ஷ வா. 1. ப. 49.) .

மூன்றும் நாள், பத்தாம் நாள், நாற்பதாம் நாள் (செய்யப் படும்) சடங்குகள் அனைத்தும் ஹிந்துக்களுடையதாகும். இந்தக் குறிப்பிட்ட காலங்களில் செய்கிறது (அவர்கட்கு)ஒப்பாக ஆகிறது

இன்னும் தினங்களைக் குறிப்பிடுவது பித அத்தாகவுமிருக்கிறது. நன்மையைச் சேர்ப்பிக்க யாதொரு குறிப்பும் ஏற்படுத்தல் ஹராமும் தருஸ்தாகும். (ஷை வா. 1 ப. 138.)

இதே விதமாக மூன்று, பத்து, நாற்பது முதலிய நாட்களைக் குறிப்பிடுவது ஹிந்துக்களின் சடங்குகளுக்கொப்பாகுமென்றும் பித அத்தும் மக்றூஹ்தஹ்ரீமும் ஆகுமென்று பதாவா ரஷீதிய்யா வா. 1. ப. 141, 143, 146, 147, வா 2. ப. 16, 84, 87, 146 முதலிய இன்னும் பல பக்கங்களிலும் விபரமாகக் காணலாம்.

4. மௌலானா முஹம்மது அப்துல்ஹை லக்னவி (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:—

குறிப்பாக மூன்றும் நாள் முதலியன ஏற்படுத்துகிறதும் இன்னும் அதை அவசியமென்றெண்ணுவதும் ஷரீ அத்தெ முஹம்மதியாவில் ருஜூவாகவில்லை. (மஜ்மூஅய் பதாவா. வா. 3. ப. 68.)

(5) மௌலானா காரீ கலீல் அஹ்மத் ஸஹாரம்பூரி (ரஹ்) கூறுவதாவது:—

மூன்றும் நாள் பத்தாம் நாள் நாற்பதாம் நாள் முதலிய தினங்களை நன்மையைச் சேர்த்துவைக்க குறிப்பிடுவது பிதஅத்தும் மக்றூஹூம் ஹிந்துக்களுக்கொப்பான சடங்குமாகும். (பராஹீன காத்திஆ 99-ம் பக்கத்திலிருந்து 130-ம் பக்கம் வரையும் இன்னும் பல பக்கங்களிலும் காண்க.)

(6) ஸாஹிப் நிஸாபுல் இஹ்திஸாப் எழுதுவதாவது:—

மூன்றும் நாள் வகையறுக்கள் குறிப்பிடுவது மக்றூஹ் ஆகும். (மஜ்மூஅய பதாவா. வா. 3. ப. 68.)

(7) மௌலானா அஹ்மத் அலி ஸாகிப் அவர்கள் எழுதுவதாவது:—

தற்காலத்தில் வழங்கிவரும் சடங்குகளாகிய மூன்றும் நாள் நாற்பதாம் நாள் முதலியன நாயகம் அவர்கள் காலத்திலுள்ளதாக ருஜூவாகவில்லை. இன்னும் நேர்வழிபெற்ற கலீபாக்களின் காலங்களிலும் காணப்படவில்லை. இன்னும் நான்கு இமாம்களாகிய இமாம் அபூஹனீபா (ரஹ்) இமாம் மாலிக் (ரஹ்) இமாம் ஷாபியீ (ரஹ்) இமாம் அஹ்மதிபுனுஹன்பல் (ரஹ்) அவர்களின் மேன்மை பொருந்திய காலங்களிலும் இதற்குரிய யாதொரு ஆதாரமும்

கிட்டிற்றிலது...............இவ்வழக்கமான சடங்குகளுக்கு மாற்றமாய் நடப்போர்களே பக்கா முகல்லிதும் (மதுஹபையுடையானும்) இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களைத்துயர்ந்தவ்னென்றும் அறையப்படும். (அஸலீ ஹனபிய்யத் 13 ப.) இதில் பிரபல உலமாக்களும் ஆங்கில அரபி மேதாவிகளும் கையொப்பம் வைத்திருக்கின்றனர்.

(8) இது பார்த்துத்தௌஹீத் கிரந்தாசிரியர் கூறுவதாவது:-

ஹிந்துக்கள் மைய்யித்தின் மூன்றும் நாள் பத்தாம் நாள் நாற்பதாம் நாள் முதலியன ஏற்படுத்தி பல சடங்குகள் செய்வதுபோல ஹிந்து மதத்திலிருந்து இஸ்லாத்தில் வந்தவர்களும் சொற்ப மாறுதலுடன் செய்ய ஆரம்பித்தார்கள். நாற்பதாம் நாள், ஆறுமாதம் வருஷப் பாத்திஹாக்களில் தக்க வரும்படி கிடைப்பதைக் கண்ணுற்ற முல்லாக்கள் இதை ஆகுமாக்கிக்கொண்டார்கள். கைறல் குறூன் என்னும் நற்காலங்களிலும் நான்கு இமாம்கள் காலங்களிலும் இதற்காதாரவில்லை. (சுருக்கக் கருத்து 138 ப.)

(9) மௌலானா முஹம்மது பைரோஸுத்தீன் ஸாஹிப் அவர்கள் கூறுவதாவது:—

நாற்பதாம் நாள் (3—4—40 ஆறுமாதம் வருஷத்தினத்தின்) சடங்குகள் முதலிய அனைத்தும் பிதுஅத்தாகும். நாயகம் அவர் கட்குப்பின் முல்லாக்கள் தங்களது பிரயோஜனத்தைக் கருதி உண்டுபண்ணிக் கொண்டார்கள். அஸல்மதுஹபில் இதைப்பற்றிய குறிப்புங்கூட கிடைத்திலது. (பச்சாஸ் மதுஹபீ சுவாலாத்கே ஜவாப் 39 ப.)

(10) ஹஸ்ரத் மௌலானா அஷ்ரப் அலிதானவி (ரஹ்) அவர்கள் விளம்புவதாவது:—

மூன்றும் நாள் நாற்பதாம் நாள் முதலியன அவசியமில்லையென்று எண்ணிச் செய்தாலும் ஜாயிஸ் ஆகாது. (பிஹஷ்திஸேவர் வா. 1. ப. 52 கோட்)

இன்னும் யாதொரு தினத்தைக்குறிப்பிட்டு இந்த நாளில் அதிக நன்மைகிடைக்குமென்று எண்ணுவது பஹிரக்கமான பாவத்தின் விஸ்வாசமாகும். (ஷை வா. 6. ப. 77.)

சில குறிப்பிட்ட தெய்திகளின் பேரில் அல்லது அதற்குச் சற்று முன்பின்னாக சிறிது சாதம் முதலியன சமைத்து குடும்பஸ்தர்களில் பங்கிடப்படுகிறது. இன்னும் சற்று ஏழைகட்கும் கொடுக்கப்படுகிறது.

இதற்கு 3, 10, 40-ம் நாளென்று விள்ளுகிறார்கள். முதலாவதோ இதில் எண்ணம் நிபாயமாக இருக்கவில்லை. பெயருக்காக இந்த எல்லாக் காரியங்களும் செய்யப்படுகிறது. நிய்யத்து எப்போது இவ்வாறாகுமோ நன்மை எங்ஙனமாகும். மாற்றமாக பாவமும் கேடும் உண்டாகிறது. (ஷை கிதாபு வா. 6 ப-84.)

இன்னும் இவ்விஷயமாக இஸ்லாஹுர் ருஸூம் 40-ம் பக்கத்திலிருந்து 145-ம் பக்கம் வரை விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. பார்வையிடுக. மூன்றாம் நாள், பத்தாம் நாள், இருபதாம் நாள் நாற்பதாம் நாள் முதலிய சடங்குகள் செய்வதை விட்டுவிடவேண்டும். (அத்தக்கஷ்ஷுப் 8. ப.)

(11) ஒருகால் இவ்விடத்தில் இந்துக்கள் கீழே எழுதுகிறதுபோல் ஆக்ஷேபிக்கலாம். அதாவது, இஸ்லாமானவர்கள் ஸவாபுசெலுத்துகிறதிலும் இந்துக்களுடைய எல்லா வழக்கங்களையும் அனுசரிக்கிறார்கள். அதெப்படியென்றால் சில இஸ்லாமானவர்கள் நாள் குறிப்புச்செய்துகொண்டு மூன்றாம் ஸியாரத்தென்றும் நாற்பதாம் நாள் பாத்திஹா வென்றும் செய்து வருகிறார்கள். அந்த நாற்பதாம் நாள் பாத்திஹாவில் கட்டிலின் மேல் பல வகையான உணவுப் பதார்த்தங்களை வைத்து இறந்தவர்களுடைய றூஹ்(ஆன்மா) அவ்விடத்திற்கு வருகிறதென்று எண்ணுகிறார்கள். இன்னும் அந்த நாளில் றூஹ்வீட்டைவிட்டுப் புறப்படுகிறதாவும் சிலர் சொல்கிறார்கள். இன்னும் ஆறு மாசத்து பாத்திஹாவும், வருஷ பாத்திஹாவும் செய்துவருகிறார்கள். இதற்கு மறுமொழியாவது:— இந்தக் காரியங்களெல்லாம் எங்கள் மார்க்கப் புஸ்தகங்களால் ஸ்தாபிக்கப்பட்டவைகளல்ல. அறிவில்லாத ஜனங்கள் ஒருக்கால் இந்துக்களுடைய சடங்குகளைப் பார்த்து இவைகளை ஏற்படுத்தி யிருக்கலாம். (துஹ்பத்துல் ஹிந்து ப. 160—163)

(12) இரங்கூன் சூரத்தி மஸ்ஜித் முப்தியின் தீர்ப்பாவது:— கத்தம் (பாத்திஹா) ஓதுகிறதற்காக 3, 40, வருஷத் தினம் குறிப்

பிடுவது ஆகுமாவென்ற கேள்விக்கு விடை:— மூன்றும் நாள் நாற்பதாம் நாளைக்கு மட்டும் செய்யவேண்டுமென்று சொந்தப் படுத்துவதும் அதற்காக குறிப்பிட்ட நேரமும் (மார்க்கத்தில்) இல்லை(இஸ்மாயீலிபுனு முஹம்மத் சூரத்தி மஸ்ஜித் முப்தீ ரெங்கூன்)

(13) மஜ்லிசுல் உலமா காரியதரிசிமௌலானா சி. கா. ஷெய்கு இப்ராஹீம் ஸாஹிப் அவர்கள் தீர்ப்பாவது: —

நன்மையைச் சேர்த்து வைக்கும் விஷயமாக நாள் குறிப்பிடும் கேள்விக்கு ஜவாபாகக் கூறுகிறதாவது:— இது நாள் குறிப்பிடாமல் எந்தக் காலத்திலும் செய்யலாம். 3, 6, 7-ம் நாள் பாத்திஹா-கிழமை பாத்திஹா-40-ம் பாத்திஹா, வருஷப்பாத்திஹா என்று காலம் குறிப்பிட்டு சோறு வகையறாக்கள் ஆக்கி பாத்திஹாச் செய்கிறதும் இவ்விதம் குறிப்பிட்ட காலங்களில் செய்வது அவசியமென்று காணுவதும் (பிதுஅத்து) கெட்ட நூதனம் (மக்ரூம்) பழிக்கப்பட்டது என்றும் நாயகமவர்கள் காலத்திலாவது ஸஹாபாக்கள் இமாம்கள் காலத்திலாவது இவ்வழக்கங்கள் இருந்திருப்பதில்லை. அவர்கள் சொல்லியிருப்பதுமில்லை யென்றும் ஷைக் அப்துல் ஹக் முஹத்தித் திஹ்லவி அவர்கள் ஜாமிஉல் பரக்காத் என்ற கிதாபில் எழுதி யிருப்பதுடன் இவைகள் மக்றூஹ்தஹ்ரீமென்று நிஸாபுல் இஹ்திஸாப் – பத்ஹுல் அஸீஸ் – மாதபத பிஸ்ஸுன்னா – தப்ஸீர் மஜ்ஹர் என்ற கிதாபுகளில் எழுதுகிறார்கள். இப்படியே ஹனபி மதுஹபு, கிதாபுகளிலும் மௌலானா அப்துல் ஹைலக்னவி – மௌலானா அஷ்ரப் அலி தானவி முதலிய அநேக உலமாக்கள் பத்வாக்களிலும் வருகிறது. (மஜ்லிசுல் உலமா பத்வா ப. 146)

(14) மௌலானா அஹ்மத் ரஸாகான் ஸாஹிப் பரெலியவர்கள் கூறுவதாவது:—

மூன்று வயதுக் குழந்தைக்கு ........ இரண்டாம் நாள் பாத்திஹா ஓதுவதா, மூன்றும் நாள் ஓதுவதா என்ற கேள்விக்குவிடை

ஷரீ அத்தில் நன்மையைச் சேர்ப்பிப்பது இரண்டாம் நாளாயினும் மூன்றும் நாளாயினும் சரியே. தவிர இந்த நாள் குறிப்பிடல் வழக்கமாகும்.

நாடின போது செய்யலாம். இதே நாட்களின் எண்ணிக்கையை அவசியமெனக்கருதுவது மடமையும் பிதுஅத்துமாகும். (பதாவா. வா. 4. ப. 310. பதவா ரஷீதிய்யா வா. 1. ப. 141)

எனவே ஈண்டு எடுத்தோதிய நாலாதாரங்கள் மூலமாக இவ் வழக்கம் நாயகம் அவர்கள் காலத்திலேனும் கைறல்குறூன் என்ற நற்காலங்களிலேனும் அல்லது நான்கு இமாம்கள் காலங்களிலே னும் நடக்கவில்லை யென்றும் பிற்காலத்தில் ஜனங்களால் உண்டு பண்ணப்பட்டதென்றும் நன்கு தெரிந்துகொண்ட பின் அதைப் பற்றிய நிலைமைகளை மேற்கூறப் பெற்ற அதியுன்னத மேதாவி களின் கிரந்தங்களால் அறிந்து தினம் குறிப்பிடாமல் மற்றும் நன் மைக் காரியங்களுக்கும் பணம் நல்கிப் பலனடைவீர்களாக.

## 4. கப்ரின் பேரில் சப்தமிட்டோதுவது:—

மூன்றும் நாள் அல்லது நாற்பதாம் நாள் அல்லது ஓர் குறிப் பிட்ட தினத்தில் கபுரடியில் சென்று குழுமி கத்தம் வகையறு ஓதும் வழக்கம் பல பாகங்களில் நிகழ்கின்றன. இவ்வழக்கம் முற்காலங்களில் இல்லையென்றும் அறிவிற்றேர்ந்த அறிஞர் அறை கின்றனர்.

முஸீபத்துடையவர்கள் பேரில் கத்தத்துக்கு முந்தியேனும் சப்தமிட்டு குர்ஆன் ஓதுகிறது மக்றூஹ் ஆகும் ......... இன்னும் பதாவாவான சொற்படி இமாம் முஹம்மது (ரஹ்) அவர்களிடத் தில் மக்றூஹ் இல்லையாயினும் இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர் களிடத்தில் மக்றூஹ் ஆகும். இன்னும் ஸைருஷ்ஷஹீத் ஆகிற வர்கள் ஷைகுல் ஜலீல் அபூபக்கரிபுனு முஹம்மது புலைல் (ரஹ்) அவர்களைக் கொண்டு தெரிவிப்பதாவது:— சப்தமிட்டு கபுரஸ்தா னில் குர்ஆன் ஓதுகிறது மக்றூஹ் ஆகும். மெதுவாக ஓதுகிறதில் பாதகமில்லை. கூட்டத்தில் குர்ஆன் ஷரீபை சப்தமிட்டோதுவதை மக்றூஹ் எனப்பகரும். மஷாயிகுகள், குர்ஆன்ஷரீபை சப்தமிட் டோதுவதை மக்றூஹ் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள் என்ற நாயகமவர்கள் ஹதீதைக்கொண்டு அத்தாக்ஷி எடுத்திருக்கிறார் கள். (நிஸாபுல் இஹ்திஸாப் 49. ப.)

இன்னும் ஜனாஸாவின் பக்கத்திலும் சப்தமிடுகிறது. மக் றூஹ் ஆகும். (ஷை கிதாபு 144 ப.) இன்னும் ஜனாஸாவை எடுக் கிற நேரத்தில் திக்று செய்யும் நோக்கத்துடன் சப்தத்தை உயர்த் துவது மக்றூஹாகும் (ஷை கிதாபு 116 ப.)

கபுரஸ்தானில் சப்தமிட்டு குர்ஆன் ஓதுகிறதுமக்றூஹ் ஆகும். மெதுவாக ஓதுகிறது மக்றூஹ் அல்ல. (காயத்துல் அவ்தார் தர் ஜுமா துர்ருல் முஹ்தார் வா. 4. 242.)

ஜனாஸாவுடன் சப்தமிட்டு குர்ஆன் அல்லது திக்று ஓதுவது மக்றூஹாகும். (ஷை கிதாபு வா. 1 ப. 419).

இவ்விதம் சமாதியருகிலும் ஜனாஸாவுடனும் சப்தமிட்டு ஓதுவதை மக்றூஹ் அதாவது குற்றமென்று மார்க்கக்கிரந்தங்கள் முழக்கமிடும்போது மார்க்கமறியா மாந்தர்கள் இதிற் பெரிய நன்மை நல்குவதாக நினைத்து சப்தமிட்டோதுவது குறுகிய நோக்கமென்பது வெளிப்படை. அன்றி ஜனாஸாவை மிக அலங்கார ஆரவாரத்துடன் பைத்துகள் என்னும் கவிகள் பாடிக்கொண்டு செல்வது கொடிய பிதுஅத்தென நன்கு விளங்குகிறது. ஜனாஸாவைக் கொண்டு செல்லும்போது மார்க்கத்தில் அநுமதித்துள்ளவாறு மனதிற்குள் மெதுவாக திக்ரு, ஸலவாத்து குர்ஆன் முதலியன ஓதி பயபக்தியுடன் சென்று நன்மையை அடைவதே (பிதுஅத்தைச் செய்வதைவிட) நன்மக்களுக்குரிய முறையாம்.

## 5. மையித்து வீட்டார்கட்கு தேர்தல் கூறுவது.

மையித்து வீட்டார்களிடம் சென்று மரணமானவர்களைப் பற்றி அவர்கட்கு தேர்தல் கூறி அன்னாரின் சலிப்பை யகற்றுவதும் பொறுமையைக் கற்பிப்பதும் மையித்துக்கு மன்னிப்புத் தேடலும் முஸ்தஹப்பாகும். மையித்துடையவர்களிடம் சென்று அவர்களின் சலிப்பை யகற்றுவதைப்பற்றி பதாவா ஆலம் கீரியில் எழுதியிருக்கும் ஹதீதின் சுருக்கம் வருமாறு:— ஸர்வமும் இறைவனுக்கே உரியன. அவன் கொடுத்ததை வாங்கிக்கொண்டான். ஒவ்வொன்றுக்கும் அல்லா (ஹ்) விடம் குறிப்பிட்ட நேரமுண்டு. அதாவது விசனத்திலாழ்ந்திருப்போரிடம் இறைவன் உங்களது மையித்தின் குற்றங்களை மன்னித்து ரஹ்மத்தை யளிப்பானாக. இன்னும் உனக்கும் இம்முஸீபத்தின் பேரில் ஸபுரை ஈந்து நற்கூலி தருவானாகவெனக் கூறல் வேண்டும். இவ்விஷயம் ஆலம் கீரி—மல் மராத்—பதாவா ஹம்ஜஜத்—முதலிய கிரந்தங்களின் கருத்துமாகும். இவ்வாறான தேர்தற்களைகூறி அவனது விசனத்தை நிவர்த்திப்பதே மையித்துடையவர்களைக் காண்பதின் நோக்கமாகும். அன்றி ஒரு

விடுத்தம் தஅஸியத் செய்தபின் மறு விடுத்தமும் துக்கம் விஜாரிப்பது மக்றூஹ் எனக் கூறப்படுகிறது.

நம் தேயங்களில் இவ்வாறு மைய்யித்தையுடையவர்களிடம் தேர்தல் கூறுவது மிகச்சுருக்கமென்றே கூறுவோம். மைய்யித்துடையவர்களைச் சந்திப்பவர்கள் மென்மேலும் வருந்தி சஞ்சலிக்கத்தக்க விஷயங்களை விள்ளுகிறார்கள். மேலும், அடிக்கடி அவர்களைக் கண்டு விசனத்தை யதிகரிக்கவும் செய்கிறார்கள். நம்மார்க்கக் கிரந்தங்கள் ஒரு முறை தஅஸியத் (தேர்தல் கூறல் துக்கம் விஜாரித்தல்) செய்வதன்றி மறு முறையும் செய்வது உசிதமல்லவெனக் கற்பிக்கின்றன. இவ்வாறாக 3, 7, 11, 16, 17, 21, 30, 40 வருஷத்தினம் முதலிய நாட்களிலெல்லாம் மைய்யித்து வீட்டார்களின் சவிப்பை யாற்றச் செல்வதென்றால் அதன் உண்மை நோக்கத்தைக் கவனித்துக்கொள்வீர்களாக.

ஹதீது அல்லா (ஹ்)வின் பேரிலும் கியாமத் நாளின்பேரிலும் விசுவாசங்கொண்டுள்ள ஸ்திரீயானவளுக்கு மைய்யித்தின்பேரில் மூன்று நாளைவிட அதிக துக்கங் காக்கிறது ஹலால் ஆகாது. ஆயினும் தனது பர்த்தாவின் பேரில் நான்கு மாதம் பத்துநாள் துக்கங் காக்க வேண்டும். (புகாரி முஸ்லிம்)

மைய்யித்துடையவர்களிடம் ஒரு விடுத்தம் தஅஸியத் செய்துவிட்டபின் மறு விடுத்தமும் தஅஸியத்துக்காகச் செல்வது தகாது. தஅஸியத்தின் நேரமாகிறது மரணமான நேரத்திலிருந்து மூன்று நாள் வரையாகும். அதற்குப்பின் (தஅஸியத்துச் செய்வது) மக்றூஹ் ஆயினும் தஅஸியத்துச் செய்கிறவர்களும் அல்லது தஅஸியத்துக்குரியவர்களும் அங்கில்லாவிடின் குற்றமில்லை. (வந்தபின் தஅஸியத்துச் செய்யலாம்.) (ஆலம்கீரி)

தஅஸியத் செய்வது மூன்று நாள் வரை முஸ்தஹப்பாகும். ......... இன்னும் முஸீபத்தையுடையவர்கள் ஜனங்கள் வந்து தஅஸியத்துச் செய்யும்படி தானே வாசலில் உட்கார்ந்திருப்பது மக்றூஹ் மேலும், மைய்யித்தை தபன் செய்து முடிந்தவுடன் அதைவிட்டும் திரும்பி எல்லோரும் தங்கள் தங்கள் ஜோலிக்குச் சென்று விடவேண்டும். மைய்யித்து வீட்டார்களும் தங்கள்ஜோலியைப் பார்க்க வேண்டும். ......... இன்னும் சிலர் சொற்படி மூன்றும் நாள் வரை மைய்யித்துடையோர் மஸ்ஜீத் அல்லது வாசலின்

பேரில் உட்காருவது குற்றமில்லையென்றும் வருகிறது.........இக் காலத்திலுள்ளோர் வீண்டம்பரம் செய்கிறார்கள். உதாரணமாக மூன்றாம் நாள் விரிப்பு முதலியன விரிப்பதும் கூடாரங்களை நிறுத் துவதும் வாசனைத்திரவியங்களைப் பகிர்வதும் இதே விதமான வேறு வீண் விஷயங்கள் செய்கிறதெல்லாம் கெட்ட பிதுஅத்தும் விலக் கப்பட்ட செயற்களுமாகும். ஆண்டவன் அவர்களை மன்னித்து நேர்வழியில் நடக்க அருள்புரிவானாக. (ஜாமிஉல் பரக்காத் சுருக் கம் ஷைக் அப்துல் ஹக் முஹத்திதிஹ்லவி (ரஹ்)

மூன்று நாட்களுக்குப்பின் தஅஸியத்துச்செய்வது மக்றூஹ் ஆயினும் (அவடம் இல்லாமல் எங்கேனும் சென்றிருந்த)மறைவான வனுக்கு மக்றூஹ் இல்லை. (காயத்துல் அவ்தார் தர்ஜுமா துர் ருல்முக்தார்)

ஒரு விடுத்தம் தஅஸியத் செய்தபின் மறுமுறை தஅஸியத் செய்வது மக்றூஹ் ஆகும். (பிஹஷ்தீகௌஹர் 119–இஸ்லாஹுர் ருஸூம் 143. ப. மௌலானா அஷ்ரப் அலி (ரஹ்) (ரிபாஹுல் முஸ்லிமீன் முதலியன)

மேற் விபரிக்கப்பெற்றுள்ள ஒழுங்கின் பிரகாரம் அடிக்கடி தஅஸிய்யத்துச் செய்யாமல் ஒரு விடுத்தம் தஅஸியத்துச்செய் வதே மார்க்கவிதி என்பதை ஈண்டு நன்கு தெரிந்துகொள்கிறோம்.

## 6. மையித்துக்குமுன் உணவு பதார்த்தம் கொண்டு செல்வது.

ஒருவன் மரணித்தவுடன் அவனது வாரீஸ் அல்லது குடும்பஸ் தர் உடனே அதற்குரிய சில சடங்குகளுடன் புது நெல்லைக்குத்தி பச்சை மாவு ரொட்டியோ அல்லது பழவர்க்கமோ ஜனாஸாவுக்கு முன் கொண்டு செல்வதை நாம் பார்த்து வருகிறோம். இது எது வரை கண்டிப்பென்றால் அந்த மையித்தின் வாரீஸ்கள் இருக்கும் போது அன்னியர் அதை எடுக்கக்கூடாதாம். அவ்வஸ்துவை தலை யில் வைத்தவர்களாக மையித்துக்கு முன் கொண்டு செல்கிறார் கள். அப்படிப் போகும்போது திரும்பிப் பார்க்கக்கூடாதென்றும் வலமிடம் செல்லக்கூடாதென்றும் இவ்விதமான பல நிபந்தனைகளு டன் கொண்டு செல்கிறதை அவசியமென்றும் இதைத் தடுத்தவர் களை வஹ்ஹாபிகளென்றும் முன்னோர்கள் நடத்திவந்த வழக்கத் துக்கு விரோதமென்றும் கூறி தூஷிக்கிறதிலும் பின் வாங்குகிறார் களில்லை. எனவே; இவ்வழக்கமாகிறது இஸ்லாத்தில் இல்லாததும்

இந்துக்கள் தங்கள் பிரேதங்கட்கு முன் கொண்டு போவதில் நின்றும் இதைக் கற்றுக்கொண்டார்களென்றும் வேதியர் வழுத்துகின்றனர். ஒரு சிலர் இது ஸதக்காவெனக் கூறுகின்றனர். உண்மையில் இது ஸதக்காவானுல் ஸதக்காவுக்கு இத்தனை ஷரத்து எதற்கு? வெளிப்படையாகக் கொடுக்கவேண்டிய அவசியமென்ன? இரகசியமாய் தக்கவர்கட்கு ஈந்து அதன் நன்மையை மைய்யித்துக்குச் சேர்ப்பிக்கலாமன்றோ; இங்ஙனமின்றி சில ஷரத்துக்களை நியமித்து நடத்துவதைப் பார்த்தால் இதர மதஸ்தர்களிடமிருந்து கடன்வாங்கிச் செய்யும் நவீன வழக்கமென்பது தெற்றென விளங்குகிறது. ஆதலின் இதுசம்பந்தமான மார்க்க விதியைக் கவனிப்பாம்.

1. மதுகல் என்னும் கிதாபின் 2-வது பாகத்தில் இபுனுல் ஹாஜ் என்பார் கூறுகிறதாவது:—

ஜனுஸாவுக்கு முன்னுல் ரொட்டி ஆடு(முதலியவை)களைச் சுமந்து செல்வது கெட்ட துர்வழக்கமாகும் (இன்னும் அதை) கப்ருடைய போஜனமென நாமஞ்சூட்டுகிறுர்கள். கபுரஸ்வில் அவர்கள் சேர்ந்ததும் அடக்கம் செய்தபின் அதை அறுத்து ரொட்டியுடன் விநியோகித்து விடுகிறுர்கள். (மராக்கியல் பலாஹின் ஹாஷியா தஹ்தாவி)

(2) இன்னும் ஷரஹ் அர்பயீன் என்னும் கிதாபில் மஹாபிரீ என்பவர்கள் பின் வரும் ஹதீதை வியாக்கியானஞ் செய்யும்போது மேற்கூறியவாறே கூறியுள்ளார். (ஹதீதாவது) இந்த நமது தீனில் எவனேனும் அதிலில்லாத விஷயத்தைப் புதிதாக உண்டுபண்ணுவானுயின் அது மறுக்கப்பட்டதாகும். (இன்னும் அந்த) மஹாபிரீ கூறுகிறதாவது:— அதற்கு அவர்கள் கப்பாரா (பாபவிமோசனம்) எனக்கூறுகிறுர்கள். ஆனுல் அது பழிக்கப்பட்டதாகும்.

(3) இபுனு அமீர் ஹாஜ் (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:— இரகசியமாய் மேற்கூறிய வஸ்துக்களை இல்லத்தில் வைத்து அங்ஙனம் தர்மஞ் செய்தல் சாலச்சிறந்த கைங்கரியமாயிருக்கும். அது பித்அத்து என்று ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் சரி. அதாவது நமது முன்னோர்களின் (ஸஹாபாக்கள், தாபீயீன்கள், தபஹ்தாபீயீன்கள்) காலங்களில் அவைகளில்லாதிருப்பதினுல் பிதுஅத்தில் நின்றுமுள்ளதென்று ஸ்திரப்பட்டாலும் சரியே.

(5) மிஅராஜ் என்ற கிரந்தத்தில் இது சம்பந்தமாக நீடித்த வியாசம் எழுதி கடைசியாக இவ்விதமான நடத்தைகள் யாவும் முகஸ்துதி புகழாசைக்காகவே செய்பவையாது மாதலின் அல்லா(ஹ்) வின் பொருத்தத்தை இப்படா டோபங்களைக் கொண்டு கருதப்படாததால் அவற்றை விட்டும் முற்றும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனக் கூறப்படுகிறது. (ரத்துல் முஹ்தார்)

(6) அல்லாமா ரஷீத் அஹ்மத் கங்கூஹி (ரஹ்) அவர்கள் பத்வாவாவது:— ஜனாஸாவோடு தோஷா (உணவு பதார்த்தம்) கொண்டு செல்வது யூதர்கள் இன்னும் காபிராகிய ஹிந்துக்களின் வழக்கமாகும். எவன் எந்தக் கூட்டத்துக்கு ஒப்பானுனே அவன் அக்கூட்டத்தில் நின்றுமாகும். (ஹதீது) ஆதலின் எவனேனும் ஓர் காபிரின் சடங்கைக் கைக்கொள்வானுயின் அவன் காபிர்களில் எண்ணப்படுவான். எனவே தோஷா (உணவு பலகாரம் முதலியன)வை மைய்யித்துடன் (கொண்டு சென்றதாக) குரான தலாதாவென்னும் முக்காலங்களிலும் எங்கேனும் ஸ்தாபிக்கப்பட்டில்லை. மேலும் இது காபிர்களின் செயலாதுயாதலின் இதைப்புரிவது பிதுஅத்தும் பாவமும் ஆகும். ஒருக்காலும் நியாயமாகா. ரசூல் (ஸல்) அவர்கள் எதில் சற்றேனும் காபிர்களின் உவமையிருக்குமோ அதை விலக்கிவிட்டிருக்கிறார்கள். ஹதீதுகள் இவ்விஷயங்களால் நிரம்பியிருக்கின்றன. ஆதலின் இச்சடங்கை வெறுக்கப்பட்டதென்றும் பாவமென்றும் நினைத்துவிடுவது வாஜிபாகும். (பதாவா ரஷீதிய்யா வா. 3. ப. 28.)

இவ்வாறே கபுரடியில் தானியம் கொண்டு போவதும் கூடாது. (ஷைகிதாபு. வா. 2. ப. 46.)

7. இன்னும் ஜனாஸாவுடன் நெருப்புக்கொண்டு போகக்கூடாது. (நிஸாபுல் இஹ்திஸாப் ப. 118.)

(8) ஹஸ்ரத் அபீஹுறைரா (ரலி) அவர்கள்மைய்யித்துடன் நெருப்புக்கொண்டு போவதையும் வாசனைத்திரவியங்கள் எரிப்பதையும் விலக்குவார்கள் என்று ஸயீதிபுனு அபீ ஸயீதுமக்பரீ (ரஹ்) அவர்களால் அறிவிக்கப்படுகிறது. இமாம் முஹம்மது அவர்கள் கூறினதாவது இதுவே நமது அனுஷ்டானமாகும். இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களுடைய சொல்லும் இதுவே யாகும். (முவத்தா இமாம் முஹம்மத்(ரஹ்)மேற்குறித்த வாக்கியத்தில் மிஜ்மர் என்ற பதம் வந்திருக்கிறது. அப்பதத்திற்கு நெருப்பை எரிப்பதற்கும்

தூபமிடுவதற்காக வைத்திருக்கும் நெருப்புச்சட்டிகளுக்கும் கூறப் படும். (மஜ்மஉல் பிஹார்) (மூவத்தா) (சாம்பிராணி) முதலியன எரிப்பதும் இதில் சாரலாம்.)

(9) மௌலானா முஹம்மத் இஸ்ஹாக் முஹத்திஸ் கூறுவதாவது:— ரொட்டி தானியம் முதலிய உணவுப்பொருளை ஏழைகட்குப் பகிர்ந்து கொடுக்கும் நோக்கத்துடன் ஜனஸாவோடு கொண்டு செல்வது ஆகுமா வென்ற வினவுக்கு விடை:—

நாணயங்களையும் நவதானியங்களையும் மைய்யித்தின் சொத்தில் நின்றும் அந்த மைய்யித்தின் வாரீஸ்கள் வாலிபர்களாகவும் சம்மதித்தவர்களாகவுமிருந்து ஏழைகட்குப் பகிர்வதுநன்மையாகும். ஆனல் மைய்யித்தின் வாரீஸ்கள் (பாலிக் ஆகாச்) சிறுவர்களாயின் சொத்துக்களைப் பாகிக்காமல் தர்மம் புரிவது ஆகாது: இன்னும் இவ்வஸ்துக்களை ஜனஸாவுடன் கொண்டு செல்வது மடமைக்காலத்தின் சடங்காகும். ஷரீஅத்தில் நின்றும் ஸ்தாபகரமாகவில்லை. ஒரு வஸ்துவு அதற்கு உவமை ஷரீஅத்தில் காணப்படவில்லையாயின் அதைச் செய்வது மக்றூக் அல்லது ஹறாமாதும் (அர்பயீன் மஸாயில் 29.)

(10) ரிபாஹுல் முஸ்லிமீன் கிரந்தகர்த்தா கூறுவதாவது:— பணம் அல்லது சமைத்த சாதம் அல்லது தானியங்கள் ஜனஸாவுடன் வறுமையாளருக்கு உபசரிப்பதற்காக கொண்டு செல்வது ஆகுமா வென்ற வினவுக்கு விடை:—

இவ்வஸ்துக்களை மைய்யித்துடன் கபுரின் பேரில் கொண்டு செல்வது மடமைக்காலத்தின் சடங்காகும். மார்க்கத்தில் நின்றம் ருஜூவாகவில்லை. (ரிபாஹுல் முஸ்லிமீன் 19—வது விடை.)

(11) மௌலானா அஷ்ரப் அலி (ரஹ்) அவர்கள் கூறுவது:— சில ஜனங்கள் ஜனஸாவுடன் கொஞ்சம் பணம் அல்லது தானியம் முதலியவற்றைக் கொண்டுபோய் அவண் தானஞ் செய்து விடுகிறார்கள். இச்சடங்கு நிட்சயமாக பெயருக்காகவே செய்யப்படுவதால் ஷரீஅத்திற்கு விரோதமாகும். இஸ்லாஹுர் ருஸூம் 139. ப.

ஜனுஸாவுடன் சிறிது தானியம் பணம் முதலியவைகளை கபுரின் மேல் (வைத்து) தானஞ் செய்வதற்காக அனுப்புகிறார்கள். இதில் விசேஷமாக பெயர் பெறுவதின் எண்ணம் உண்டாயிருக்கிறது. (ஆதலின்) அதில் சற்றேனும் புண்ணியம் கிடைக்கா பிஹஷ்தீஸேவர் வா. 6. ப. 83.) *

மேற்காட்டப்பட்ட அத்தாக்ஷிகளால் ஜனுஸாவுடன் உணவுப் பொருள்களை தானஞ் செய்யக் கொண்டு செல்வது காபிர்களின் வழக்கமென்றும் பித அத்தென்றும் பெருமைச் சடங்குகளென்றும் தெரியவருவதால் அவ்வழக்கத்தை நிறுத்திவிட்டு மார்க்கத்தில் விதிக்கப்பட்ட ஒழுங்குப்படி தர்மஞ்செய்வதே முஸ்லிம்களுக்கு ஏற்ற முறையாம்.

7. உணவு பதார்த்தங்களை முன்னால் வைத்து பாத்திஹா ஓதுவது.

மைய்யித்துக்கு நன்மையைச் சேர்த்து வைக்கும் நோக்கத்துடன் நடத்தப்பெறும் பாத்திஹா முதலியவற்றிற்குசாப்பாட்டை லெப்பை முன்னால் வைத்து பாத்திஹா ஓதி அப்பால் புசிக்கும் வழக்கம், நம் இந்தியப் பாகங்களில் பெரும்பாலும் வழங்குகின்றன. சிலவிடங்களில் இதை எத்துணைப்பிடிவாதமாக அநுஷ்டிக்கப் பெறுகிறதென்றால் சாப்பாட்டை முன்னால் வைக்காமல் பாத்திஹா ஓதுகிறதே இல்லை. அவ்விதம் ஆகாரத்தை முன்னால் வைத்து பாத்திஹா ஓதி முடியும் வரை இதரர்கட்கு விசேஷமாக சிறுவர்கள் பசித்திருந்தாலும் கொடுப்பதில்லை. எச்சியாகிவிடுமாம். இதில் பிஸ்மில் கறி என்று ஒரு அகப்பை ஸால்னு விசேஷ உரிமையுடன் வைப்பதும் தவிர தண்ணீரும் ஒரு பாத்திரத்திலிருக்கவேண்டுமாம். எதுவரை லெப்பை எல்லோரும் புசிக்கலாமென்று பிஸ்மில்லா உறத்துக்கூறி அநுமதியளிக்கவில்லையோ அதுவரை எவருக்கும் புசிக்க உரிமை இல்லையாம். ஒருவர் இவ்வழக்கம் அவசியமற்றது புசித்துவிட்டு பாத்திஹா ஓதுங்கள். இன்றேல் ஆகாரத்தை முன்னுக்கு வையாமல் பாத்திஹா ஓதுங்கள் எனப் பகர்ந்தால் வந்தது கோபம் வழக்கமாக நடந்துவந்த பாத்திஹா காரியத்தைக் கெடுத்துப் போடப் பார்க்கிறார்கள். இவர்கள் வஹ்ஹாபி வழிகெட்டோர் மூர்த்தத்து, முனுபிக் என்று தூற்றி ஹிம்சிக்க ஆரம்பிக்கிறார்கள் இவ்விஷயம் மறைந்ததல்ல. யாவருக்கும் தெரிந்ததே:

---

* தானஞ் செய்வதற்காக ஓர் இடம் குறிப்பிட்டில்லை. பிறரிடம் புகழ்பெற வேண்டுமென்ற எண்ணம் இன்றேல் எவ்விடத்தில் விநியோகித்தாலும் ஆக்ஷேபமின்று.

வருவாயை விரும்பின சில மேதாவிகளும் இதைப்பிரியப்பட்டவர்களாக ஒரு அத்தாக்ஷியையும் அமைத்துக்கொண்டார்கள். நாயகமவர்கள் ரொட்டியை முன்னால் வைத்து அதன் பேரில் பரக்கத்துக்காக துஆ ஓதினார்கள். ஆதலின் நிகழ்காலம் சாப்பாட்டை முன்னால் வைத்து ஓதிவரும் பாத்திஹாவும் ஆகும். குற்றமில்லையென்பதே அவர்களின் மேற்கோளாகும.

நபிகள் நாயகம் அவர்களின் நோக்கத்தையும் தற்காலத்திய இம்மகான்களின் நோக்கத்தையும் சிறிது ஊன்றிக் கவனித்தால் பெரிய வித்தியாசத்தைப் பார்க்கலாம். நபிநாயகம் அவர்கள் உணவு அதிகப்பட்டு இதர ஜனங்களின் பசியைத் தீர்ப்பதன் பொருட்டு அதில் ஓதி ஊதினார்கள். ஆண்டவனது கிருபையால் அவ்வாறே உணவு அதிகப்பட்டு அநேகர் பசி தீர்ந்தது. தற்காலத்திய வருவாயை விரும்புவோர் மைய்யித்துக்கு நன்மை சேர்க்கும் நோக்கத்திற்காக ஓதுகிறார்களே யன்றி உணவு அதிகரிப்பதற்கல்ல. ஆதலின் நாயகமவர்களின் செயலை இந்தச் செயலுக்கு ஒப்பிடுவது பொருத்தமாகாது. மேலும் முஸ்லிம் (ரஹ்) உடைய ஹதீதில் சாப்பாடு முன்னால் வந்துவிட்டால் தொழக்கூடாதென்று காணப்படுகிறது. அதாவது புசித்து திருப்திகரமாய்த் தொழவேண்டுமென்பது கருத்து மேற்கூறின வருவாயை யுடையோர் இந்த ஹதீதை மறந்துவிட்டார்கள் போலும்? ஆதல் பற்றி சாப்பாட்டை முன்னால் வைத்து பாத்திஹா ஓதுவதற்குக் காட்டும் அத்தாக்ஷி நியாயமெனக் கண்டிலேம். தவிர இவ்விஷயத்தில் இவ்வளவு பிடிவாதம் பண்ணுவது! அதாவது:— சாப்பாட்டை முன்னால் வைக்கவில்லையாயின் பாத்திஹா ஓதாமலும் தடுத்தவர்களை ஏசுவதுமானால் இவ்விஷயம் பித்அத்தும பாவமுமென்பது எல்லா மேதாவிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதோர் விஷயமென்பது வெள்ளிடை. எனவே, மேற்கூறிய காரணங்களால் இது தவறென்பது விளங்கிவிட்டபின் இது சம்பந்தமான ஆதாரங்களை நம்மத நிபுணர்களின் உயர்தர நூற்களிலிருந்து ஸ்தாபிப்போமாக. (1)

(1) ரொட்டிக்கு சங்கை செய்வது சுன்னத்தாயிருக்கும். ஏனென்றால் அதனால் மனிதனுக்கு பலமுண்டாகிறதினாலேயாம். கறியை எதிர்பாராமலிருப்பதே ரொட்டிக்குப் பெரிய சங்கையாக யிருக்கும். மேலும் தொழுகைக்காகவும் அதைப் பிற்படுத்தாமல் அது ஹாஸிரான போதே முந்தி அதை உண்டு அதன் பிறகு தொழுதுகொள்வான். (கீமியாயெஸஆதத் 2. வா.)

(1) மௌலானா முஹம்மது அப்துல்ஹை (ரஹ்) அவர்கள் தீர்ப்பு:-

பாத்திஹா சூரத்து ஓதுவதனால் மௌத்தானவர்கட்கு புண்ணியம் உண்டுமெனக் கூறிவிட்டு பின் விளம்புவதாவது:- எனினும் பாத்திஹா ஓதுகிறதற்கு எந்தவிதம் வழக்கமாயிருக்கிறதோ அதாவது பலகார வஸ்துக்களை முன்னால் வைத்து நின்றுகொண்டு பாத்திஹா ஓதுகிற இதற்கு ஆதாரம் ஷரீஅத்தில் இல்லை. (மஜ்மூஅ பதாவா. வா. 2. ப. 20) இதற்குப்பின் நோட் குறிப்பிட்டு இந்தியாவைத்தவிர எந்த தேசங்களிலும் (இவ்வித) வழக்கமில்லை என வரையப்பட்டிருக்கிறது. (ஷை பதாவா)

இன்னும் உணவு பதார்த்தங்களை முன்னால் வைத்து ஓதலாமா வென்ற வினாவுக்கு விடை:— குறிப்பிடப்பட்ட இவ்விஷயம் நாயகம் அவர்கள் காலத்திலுமில்லை. கலீபாக்களின் காலங்களிலுமில்லை. அது (நடந்ததாக) அறிவிக்கப்படவுமில்லை. அன்றி இவ்வமயமும் ஹரமைன் ஷரீபைன் ஆகிய மக்கா மதீனா (வென்னும் புண்ணியபூமிகளிலும்) சொந்தமான வழக்கமில்லை. (ஷை பதாவா. வா. 3. ப. 68) இன்னும் 106-ம் பக்கத்திலும் இவ்விஷயம் சற்று மாறுதலுடன் காபிரீன்கள் வழக்கமென்று காணப்படுகிறது.

(2) பதாவா ரஷீதிய்யாவில் கூறப்படுகிறது:— சாப்பாடு பலகார வர்க்கங்களை முன்னால் வைத்து பாத்திஹா ஓதலாமா வென்ற வினாவுக்கு விடை:- (இந்த) வழக்கமான பாத்திஹா ஷரீஅத்தில் தருஸ்து இல்லை. மேலும் கெட்ட பித்அத்தாகும். (பதாவா ரஷீதிய்யா. வா. 1. ப. 140.)

(ஸஹாபா தாபியீன், தபஉத்தாபியீன் ஆகிய) மூன்று காலங்களிலும் புண்ணியத்தைச் சமர்ப்பிப்பதும் நடந்துகொண்டிருந்தன. எனினும் உணவை முன்னால் வைத்து பாத்திஹா ஓதப்பட்டில்லை. (ஆதலின் பித்அத்தாகும்.) (ஷை கிதாபு. ப. 146)

உணவு அல்லது பலகாரங்களின் பேரில் பாத்திஹா ஓதுவது வழிகெட்ட பித்அத்தாகும். ஒருபோதும் செய்யலாகாது. (பதாவா ரஷீதிய்யா. வா. 2. ப. 83.)

(3) மௌலானா கலீல் அஹ்மத் (ரஹ்) எழுதுவதாவது:— நாயகமவர்கள் ஆகாரத்தை முன்னால் வைத்து மையித்துக்கு நன்மையைச் சேர்ப்பிக்கும் நோக்கத்துடன் ஓதியிருப்பதில்லை. நாயக

மவர்கள் போஜனம் அதிகப்பட்டு அநேகருடைய பசியைத் தீர்க்க வேண்டுமென்ற கருத்துடன் பரக்கத்துக்காக ஓதியிருக்கிறார்கள். அப்படியே நடந்துமிருக்கிறது. அதை தற்காலம் வழங்கி வரும் பாத்திஹாவுக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டுகிறது அறிவீனமாகும். இன்னும் நாயகமவர்கள் சாப்பாடு ஆஜராயிருக்கும்போது தொழக் கூடாது. (முஸ்லிம்) என்று அருளியிருக்கிறார்கள். இன்னும் இஹ்யாவுல் உலூம் என்னும் கிரந்தத்தின் புசிப்பின் ஒழுக்கத்தில் நாயகமவர்களுடைய செயலைக்கொண்டு ரொட்டி முன்னால் வந்துவிடின் ஸால்னுவைக் கூட எதிர் பார்க்கக்கூடாது. (அதாவது ஸால்னுவரட்டும் என்று காத்துக்கொண்டிராமல் ஏதேனும் கொஞ்சமாவது எடுத்துப் புசிக்கவேண்டும்.) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆதலின், இவ்வாறு சாப்பாட்டை முன்னுக்கு வைத்து ஓதுவது வீணானதாகும்.

இந்த ஜனங்கள் இவ்வாறு செய்வதற்கு காரணமாவது:—

ஹிந்துக்கள் ஆகாரத்தின்பேரில்மட்டும் வேதம் ஓதுகிறார்களேயன்றி பிடவை பணம் முதலியவற்றில் ஓதுவதில்லை. இக்காரணத்தை யொட்டி அறிவற்ற பாமரர்களும் மற்ற வஸ்துக்களின் பேரில் ஓதாமல் உணவின் பேரில் பாத்திஹா ஓதுவதை ஏற்படுத்திக்கொண்டார்கள். இது மக்றூஹும் பிதுஅத்துமாகும். ஷாஹ் அப்துல் அஸீஸ் முஹத்திஸ் திஹ்லவியும் பாத்திஹா ஸலவாத்து ஓதுவதை ஞாபகமென்று கூறுகிறார்களேயன்றி சாப்பாட்டை முன்னால் வைத்து பாத்திஹா ஓதும்படி எழுதவில்லை. அவர்களது கருத்தைக்கொண்டும் இருதய அசுத்தமுள்ள இடத்தில் குர்ஆன் பாத்திஹா ஓதுவது பிதுஅத்தென்றே விளக்கத்தில் வருகின்றது. ஆதல் பற்றி இது பிதுஅத்தான வழக்கமாகும். (பராஹீன காத்திஆ என்ற விரிவான கிரந்தத்தில் இவ்விஷயத்தை மட்டும் 74-ம் பக்கத்திலிருந்து 86-ம் பக்கம் வரையும் விபரித்திருப்பதைப் பார்த்து உண்மையைத் தெளிந்திடுக.) *

---

* ஆகாரத்தை முன்னால் வைத்து மைய்யித்துக்கு நன்மையைச் சேர்ப்பிக்கும் கருத்துடன் சங்கை தங்கிய முக்காலங்களிலும் ஓதப்படவில்லை. அது பிதுஅத்தாகும் என்னும் மார்க்க உண்மையையறிந்த மேதாவிகள் தீர்மானிக்கும்போது மௌலவி ஷரபுத்தீன் ஸாஹிப் அவர்கள் தமது நூலில் அப்படி முன்னால் வைத்து ஓதுவது முஸ்தஹப்பென்று கூறுவது விந்தையினும் விந்தையே.

அன்னம் ஆஜராகிவிட்டால் புசிக்கவேண்டும். ஸால்னு முதலியவற்றை எதிர்பார்க்கலாகாது. ஏனெனில் இது சாப்பாட்டை அலக்ஷியஞ்செய்ததாகும். (நிஸாபுல் இஹ்திஸாப் 51. ப.)

5. ஷைக் அப்துல் ஹக் முஹத்திஸ் திஹ்லவி (ரஹ்) எழுதுவது:— சாப்பாடு ஆகியவைகளை முன்னால் வைத்து இருகரத்தையும் உயர்த்தி இந்த தேசத்தின் பிரகாரம் சூரா பாத்திஹா முதலியன ஓதும் இவ்வைபவமும் வழக்கமும் உலமாய ஸலப் (முற்காலத்திய உலமாக்) களில் நின்றும் அறிவிக்கப்பட்டிலேம். மேலும் மக்கா மதீனா வென்னும் புண்ணிய ஸ்தலங்களில் நாயகம் அவர்கள் சிறப்பான காலத்திலிருந்து நாளிதுவரை அத்தேயங்களில் வசித்து வந்திருக்கிற எந்த அறிவாளிகள் ஆராய்ச்சியுடையவர்களும் அன்னம் பலகாரங்களை புசிப்பதற்கு முன் மேற்கூறிய வழமைப் பாத்திஹாவின் நிலைமையைக் கூட அறிந்திருக்கவில்லை. ஆயினும் இந்தியாவிலிருந்து மக்கா மதீனாவுக்கேகி அவண் ஸ்திரமாய் வதிந்து விட்டவர்கள் நிட்சயமாக இந்தியாவின்வழமைச் சடங்கின் பிரகாரம் தங்கள் இல்லங்களில் இவ்வைபவத்தி லீடுபடுகிறார்களாதலின் அவர்களைப்பற்றி கவனிக்கத்தேவை இல்லை. மேலும் அவ்விடத்திய உலமாக்கள் இந்தியர்களின் இச்செயலைத் தெரிந்து அவர்களை விலக்கி கண்டித்து வருகிறார்கள். (ஜாமிஉல் பரக்காத் - ரிபாஹுல் முஸ்லிமீன்)

(6) புசிப்பதன் ஒழுக்கமாவது—ஆகாரத்தை சமர்ப்பிக்கப்பட்டால் உடனே பிஸ்மில்லா ஓதி புசிக்க ஆரம்பித்தல்வேண்டும். தாமதஞ் செய்யலாகாது. எதுவரையெனின் ஹேதுவாக அன்னம் ஆஜராகவும் தொழுகைக்காக காமத்து தக்பீர் ஆரம்பமானால் இவர்கள் புசித்து தங்களுடைய தொழுகையைப் பிற்படுத்தவேண்டும்

மிஷ்காத் ஷரீபில் அன்னை ஆயிஷா நாயகியவர்கள் நாயகம் அறிவித்ததாகக் கூறுவதாவது:— சாப்பாடு ஆஜராயிருந்தால் தொழுகையைப் பிற்படுத்த வேண்டும். நாயகம் அருளினதாக ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) கூறுவதாவது:— உங்களில் நின்றும் யார் முன்னேனும் ஆகாரம் வைக்கப்பட்ட அந்நேரம் தொழுகைக்காக காமத்தும் ஆரம்பிக்கப்பட்டால் அம்மனிதன் முதவில் புசிக்கத் தொடங்கி விடவேண்டும். ஏனெனின் அருந்துவதை முடித்துப் பின்னர் தொழ வேண்டியதற்காம். இன்னும் ஹஸரத் இப்னுஉமர்

(ரலி) அவர்களின் வழமையாதெனில் ஆகாரம் அவர்கள் முன்வைக்க கப்பட்டு அதே சமயம் ஹேதுவாக தொழுகைக்கென காமத்துச் சொல்லப்பட்டால் அருந்தி முடிவாகும் வரை தொழவரமாட்டார்கள். இமாமுடைய கிரஅத்தை (ஓதுவதை) க் கேட்டுக்கொண்டிருப்பார்கள். இன்னும் பதாவா பஸ்ஸா ஸியா, பதாவா தாத்தார் கானியா, ஆகிய கிரந்தங்களில் கூறப்பட்டிருப்பதாவது:— ஆகாரம் ரொட்டி முன்னால் வரும் பக்ஷம் புசிக்க ஆரம்பித்து விடவேண்டும். சால்னுவை எதிர்பார்க்கக்கூடாது. எனவே, மேற்கூறப்பெற்ற வழமைச் சடங்குகள் ஹதீதுகள் ரிவாயத்துகளுக்குப் பகிரங்கமான மாற்றமாகும். (ரிபாஹுல் முஸ்லிமீன் 87.)

7. மதராஸ் காலீ முஹம்மது ஸிப்கத்துல்லா (ரஹ்) கூறுவதாவது:– பாத்திஹாவுடைய நேரத்தில் ஆகார வஸ்துக்களை முன்னால் வைக்கிறதும் இன்னும் அதன் பேரிலிருந்து மூடியை எடுத்து விடுகிறதும் பாத்திஹா ஓதி ஏற்றுக்கொள்ளச் செய்கிறதும் பாத்திஹா முற்றுப்பெருகிறவரை அந்த போஜனத்தைப் புசியாமலிருக்கிறதுமாகிய இங்கு காணப்படும் வழமையெல்லாம் பிதுஅத்தாகும். இன்னும் சில அறிவிலிகள் பாத்திஹாவுக்குரிய போஜனத்தில் மரணித்தவன் புழங்கிக்கொண்டிருந்த கள், பங்கு, கஞ்சா போலொற்றவைகளையும் வைத்துக்கொள்ளுகிறார்கள். இது கடினமான ஹறாமாகும். இன்னும் இவடம் வழக்கத்திலிருக்கிறபடி சில விசேஷித்த பாத்திஹா உணவை வீட்டுக்கு வெளியில் போகவிடுகிறதில்லை. அல்லது புருஷரே புசிக்கவேண்டும். ஸ்திரீகள் புசிக்கலாகாது. அல்லது ஸ்திரீயே புசிக்கவேண்டும். புருஷர்கள் புசிக்கலாகாது. இன்னும் எஞ்சிய ஆகாராதிகளை புதைத்து விடுகிறதுமான இவையெல்லாம் கெட்டதும் பழிக்கப்பட்டதுமாகும். (குல்ஸார ஹிதாயத் 30. ப.)

8. மௌலானு அப்துஷ் ஷகூர் ஸாஹிப் அவர்கள் இயம்புவதாவது:— போஜனத்தை முன்னால் வைத்து பாத்திஹா ஓதுவது (ஷரீஅத்தில்) இல்லாத விஷயம் (பத்ஹ ஹக்கானீ 43-ம்பக்கமுதல் 49 வரை)

9. துஹ்பத்துல் ஹிந்துவில் எழுதியிருப்பதாவது:— இந்துக்கள் சுருதா என்ற போஜனத்தின் பேரில் அபிஷ்ரமன் என்னும் பண்டிதனைக் கூப்பிட்டு வேதம் ஓதச்செய்கிறது போல் இஸ்லா

மானவர்களும் முல்லாவைக் கூப்பிட்டு சோற்றின் மேல் கத்தம் ஓதச் செய்கிறார்கள். முல்லாவானவர் அந்தச் சோற்றின் மேல் கத்தம் ஓதாத வரையில் அந்தச் சோற்றில் கொஞ்சமாவது ஒரு வருக்கும் உண்கக் கொடுக்கிறார்களில்லை. இன்னும் இந்துக்கள் சங்கல்பம் செய்கிற வேளையில் வலது கையில் தண்ணீர் எடுத் துக்கொள்கிறது போல் இஸ்லாமானவர்களும் கத்தம் ஓதுகிற வேளையில் சோற்றுடன் தண்ணீர் வைக்கவேண்டிய தவசியமென் றெண்ணுகிறார்கள். இதற்கு மறுமொழியாவது: — இந்தக் காரி யங்களெல்லாம் எங்கள் மார்க்கப் புஸ்தகங்களால் ஸ்தாபிக்கப்பட்ட வைகளல்ல. அறிவில்லாத ஜனங்கள் ஒருக்கால் இந்துக்களுடைய சடங்குகளைப் பார்த்து இவைகளை ஏற்படுத்தியிருக்கலாம் (ஷை. புத் தகம் 163)

ஆகவே ஈண்டு வரையப்பெற்ற அத்தாக்ஷிகளால் உணவை முன் னால் வைத்து பாத்திஹா ஓதல் பித்அத்தும் இதர மதஸ்தர்களின் வழக்கமும் என ஸ்திரப்படுவதாலும் உணவு முன்னால் வந்துவிட்ட பின் தொழுகைக்காக தக்பீர் சொல்லப்பட்டால் உணவை காக்க வைத்துவிட்டு தொழுகைக்கேகுவதும் அழகல்லவெனக் கூறப்படுவ தாலும் நம் தேயங்களில் நடைபெறும் உணவை முன்னால்வைத்து ஓதப்பெறும் வழக்கத்தை அடியோடு நிறுத்திவிடுவது அறிஞர்மீது கடனாகும். உணவை வைத்துவிட்டு தொழுகைக்கேகுவதைக்கூட விலக்கப்படும்போது உணவை முன்னால் வைத்துக்கொண்டே பாத் திஹா ஓதிக்கொண்டிருப்பதைப் பற்றி அதிகம் சொல்லவேண்டிய தில்லை யாதலின் இப்படிப்பட்ட துராச்சாரங்களை முஸ்லிம்கள் விட் டொழித்து ஷரீஅத்து ஏற்கத்தக்க முறையில் புசித்தபின் பாத்தி ஹா முதலியன ஓதுவதை வழக்கப்படுத்துவார்களாக.

### 8. மரணச்சாதம் புசித்தல்.

தற்காலம் முஸ்லிம் உலகத்தில் விசேஷமாக இந்தியாவில் மௌத்தானவர்களின் வீட்டில் சீமான்கள் முதல் ஏழை வரை விருந்துண்ணப் போகும் வழமை நடைபெற்று வருகிறதை யாவரு மறியலாம். அதாவது இரண்டாம் நாள் ரொட்டி பாத்திஹா வென்றும் மூன்றும் நாள் கத்தம் என்றும் 7-ம் நாள் 11, 15, 21, 30, 40-ம் நாள் பாத்திஹா வென்றும் வருஷம் கடந்த பின் வரு ஷப்பாத்திஹா வென்றும் அப்பால் வருடங்கள் தோறும் வழமை

யாக நடத்துவதும் பிரபல்யமானதே. சீமான்கள் வீட்டில் விசேஷ ஆடம்பரத்துடன் செய்தாலும் ஏழைகள் வீட்டிலும்செய் யாமல் விடுவதில்லை.

இவ்வாறான விருந்து பாத்திஹாக்களுக்கு பிரத்தியேகமான பிரயத்தனஞ் செய்யப்பட்டு குறிப்பாக தனவந்தர்களையே அழைக் கப்படுகிறது. அந்தச் சீமான்கள் வரச் சற்று தாமதப்பட்டால் ஆள்விட்டு எல்லோரும் வந்துவிட்டார்கள். தங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வற்புறுத்தி அழைத்து வரப்படுகிறது. அன்றியும் ஏழைகள் பிரவேசித்து விடலாகாது என்று வீட்டு வாயலில் ஆள் பாரா வைக்கப்பட்டிருக்கிறது. அழைத்த சீமான் களைத் தவிர்த்து (இதில் சில ஏழைகள் இருந்தாலும் இருக்கலாம்) மற்ற ஏழைகள் கூட்டத்தோடு கூட்டமாக உள்ளே நுழையப் பார்த்தால் பாராக் கொடுக்கும் பயில்வான்கள் குறி பார்த்து ஒரே பிடியில் வெளியில் தள்ளி விடுகிறார்கள். அந்த ஏழைகள் வெளி யில் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறதை யறிந்த வீட்டார் கடைசி யில் உங்களுக்கு அன்னமளிக்கப்படும். சற்று பொறுமையோடு இருங்கள் எனச் சாற்றி தாளிட்டுச் சென்று மையயித்துச்சாதம் புசிக்க வந்திருக்கும் சீமான்களைச் சிறப்பித்து அனுப்பி விட்டு அவர் களால் மிஞ்சின எச்சில்களைத் திரட்டி வாசலில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஏழை மக்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாகத் துணிகளில் வீசி எறிகிறார்கள். அதுவு மின்றேல் அவ்வேழை மக் களை ஆள்விட்டு விரட்டச் செய்கிறார்கள். மௌத்தானவர்களின் நன்மையைக்கருதி யளிக்கப்படும் பாத்திஹா சாதம் இதுவே.

மௌத்தானவர்களின் நன்மையை உன்னியளிக்கப்படும் போஜனத்தை குறிப்பிட்ட நாள்களில் செய்யாமலோ அல்லது பிற்படுத்தியோ அல்லது அவ்வைபவங்களில் ஏற்படும் செலவுகளை வேறோர் நன்மைக் காரியங்களுக்கு கொடுக்கவோ நேரிட்டால் வந் தது துன்பம். நாலு பக்கங்களினின்றும் அவர்கள்மீது வசைமொழி என்னும் பாணம் தொடுக்கப் படுகின்றது. பாத்திஹாக்கூட ஓதி னார்களில்லை. லோபிகள் என்னென்ன ஆபத்துகள் வரப்போகின்ற னவோ வென மிக்க கொடூரம் காட்டுகிறார்கள். முல்லாக்களென் னும் தர்மாத்துமாக்களும் இவர்களை வஹ்ஹாபி வழிகெட்டோர்க ளெனச் சொல்லம்புகளால் தாக்கிக்கொண்டும் ஜனங்களை கிளப்பிக்

விட்டுக்கொண்டும் இருக்கிறுர்கள். வஹ்ஹாபி என்னும் குண்டு கள் சரசமாக இவர்கள் கைவசம் சிக்கிக்கொண்டதால் நினைத்தவிட மெல்லாம் வஹ்ஹாபி என்ற குண்டு மாரி பொழிய ஆரம்பிக்கிறுர் கள். மார்க்க விரோதியான வம்பனுயினும் பாத்திஹா ஓதி உண வளித்துவிட்டால் பக்கா சுன்னத்து வல்ஜமா அத்தாம். ஆனுல் அங்கு நிகழும் பித்அத்தைக் கண்டித்து ஒழுங்கான முறையை கற்பிப்போர் வஹ்ஹாபியாம்! என்னே அறிவின் கூற்று?

சீமான்கள் பேருக்கும் பெருமைக்கும் செலவழிக்கின்றனர். அந்தோ! ஏழைகள் என் செய்வர். அவர்களும் இவ்வைபவங்க ளைச் செய்து தீரவேண்டுமாம். ஏழைகட்கு பணமில்லாததால் ஸகாத்தும் இல்லை, ஹஜ்ஜும் விதி இல்லை என்று படைத்தாளும் ரப்பில் ஆலமீன் கூட மன்னித்திருக்க, இப்முல்லாஜிக்களின் வரி களுக்கு மாத்திரம் மன்னிப்பு கிடையாதாம்! எப்படிப்பட்ட ஐய மெடுத்தேனும் கடன் கொண்டேனும் உணவளித்து முல்லாஜிக் களின் கடமைகளைப் பூர்த்தி செய்து விடவேண்டுமாம். இந்த ஏழை மக்கள் பிச்சை எடுப்பதைப் பார்த்திருந்தும் அவர்களிடத்தி லும் ஒரு கைபாராமல் இந்த முல்லாஜிக்கள் விடுவதில்லை. என்னே! கொடுமை; இஸ்லாம் இப்படித்தானு விதிக்கிறது. மௌத்தை யுடையவர்களின் நிலைமையோ பரிதாபமானது. அவர்கள் தங் கள் சொந்த முக்கியஸ்தர்களை இழந்து கவலைப்பட்டு துக்க சாகர த்திலாழ்ந்திருக்கும்போது அவர்களிடத்தில் தானே கூட்டங் கூட்டமாக எல்லோரும் தங்கி இருந்து விருந்துண்ணலும் அதற் காக அவர்களை கஷ்டப்படுத்தலும் நியாயமா வென்பதை நேரான எண்ணத்துடன் யோசிக்கும்படி என் முஸ்லிம் சகோதரர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே முற்காலத்தில் ஒருவர் மரணமாய் விட்டால் அவ்வீட் டாரின் கவலையை நிவர்த்திப்பான் வேண்டி அக்கம் பக்கத்தார் போஜனம் தயார் செய்து அவர்கட்கு அனுப்பி பல வழிகளிலும் அவர்களின் சஞ்சலத்தை யகற்றுவார்கள். காலஞ் செல்லச்செல்ல அவ்வழக்கங்கள் மாறுதலடைந்து மையித்து வீட்டாரிடமே விருந்துண்ண ஆரம்பித்துவிட்டார்கள். ஆதலின் இவ்விருந்து எத் தகையது. இதை புசிப்பதற்குரியவர் யார் என்பதை இனி கவ னிப்போமாக.

1. ஹஸரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுவதாவது:— மைய்யித்தை அடக்கஞ் செய்தபின் ஜனங்கள் அம்மைய்யித்தின் சொந்தக்காரர்களிடம் சேகரமாவதும், அந்தச் சொந்தக்காரர்கள் அவர்கட்காக போஜனம் தயார் செய்வதையும் நாங்கள் நௌஹாவாக (ஒப்பாரி செய்வதற்குக் கூடுவது போல்) எண்ணிக்கொண்டிருந்தோம். (இமாம் அஹ்மத் இபுனுமாஜா) இதனால் இத்துக்கசுரமான விஷயத்திற்கென தயார் செய்யப்படும் போஜனம் வெறுக்கத்தக்கதென்பது வெளியாகிறது.

2. மைய்யித்துடையோர் விருந்துக்காக உணவு தயார்செய்வது மக்றூஹ் ஆகும். ஏனெனில் விருந்தாகிறது ஷரீஅத்தில் சுபமங்கலத்திற்காக ஏற்பட்டிருக்கிறதே யொழிய அமங்கலத்திற்காகவல்ல. ஆதலின் அது கெட்ட பித்அத்தாகும். (பத்ஹுல் கதீர் ஹாஷியா, ஹிதாயா.)

3. ஏழைகட்கு அன்னதானஞ் செய்து அதன் புண்ணியத்தை மைய்யித்துக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தின்மீது மாணித்தவனின் சார்பாக தயார் செய்யப்படும் சாதத்தை ஏழைகளே யன்றி சீமான்கள் புசிக்கலாகாது. ஏனெனில் தர்மம் ஏழைகளுக்கே உரியது. சீமான்களுக்காக ஹதியா (இனாம்)ஏற்பட்டிருக்கிறது. (ஜாமி உல் பரக்காத் ஷைய்கு அப்துல்ஹக் முஹத்திஸ் திஹ்லவி ரஹ்) (குல்ஸாரே ஹிதாயா)

4. மாணித்தவனுக்காகச் சமைக்கப்படும் சாதத்துக்கு மைய்யித்துச் சாதம் எனப்படும். வழக்கத்தைப் பின் பற்றிச்செய்தால் ஐயமின்றி மக்றூஹ் ஆகும். நேரத்தைக் குறிப்பிட்டு தர்மத்துக்காகச் செய்யப்பட்டால் (நேரத்தைக் குறிப்பிட்ட) மக்றூஹின் காரணத்தால் இதுவும் மக்றூஹ் ஆகும். (பராஹீன காத்திஆ) இன்னும் மைய்யித்து உணவின் மக்றூஹ்களை 133-ம் பக்கத்திலிருந்து பல பக்கங்களிலும் விபரிக்கப் பெற்றிருக்கிறது.

5. முஸீபத்தை யுடையோரிடம் விருந்துண்ணல் மக்றூஹ் ஆகும். ஏனெனில் விருந்துண்ணல் கலியாண காலங்களிலன்றி கஷ்ட காலங்களிலல்ல. ஆதலின் கெட்ட பித்அத்தாகும். (முஸ்தம் லீ ஷறஹ் முன்யத்துல் முஸல்லி)

6. மவுத்தானவர்கட்காக 3, 7, 40 அல்லது வருஷத்தினத்தன்று தயார் செய்யப்படும் போஜனத்தை உலமாக்களும் அறிவாளிகளும் புசிப்பது மக்றூஹ் ஆகும். (நவாதிருல் பதாவா)

7. மவுத்தானவர்களின் ஆன்மாவுக்காக தயாரிக்கப்படும் உணவை ஏற்றுக்கொள்வது மக்றூஹ் ஆகும். (நவாதிருஷ்ஷாப்-ரிபாஹுல் முஸ்லிமீன்) இதே விதம் பதாவா தாத்தார் கானியா-முதலிய எல்லாக் கிரந்தங்களிலும் கூறப்படுகின்றன.

8. (இவ்வித சாப்பாடு கொடுக்கும் வைபவம்) எல்லாம் வெளிக்குக் காட்டுகிறதற்காகச் செய்யப்படுகின்றன வாதலின் இதை விட்டும் தவிர்ந்துகொள்ளல் வேண்டும். ஏனெனில் அவ்வர்க்கத்தார் இக்காரியங்களில் அல்லா (ஹ்) வின் பொருத்தத்தை விரும்பவில்லை. (ரத்துல் முஹ்தாரில் பஸ்ஸாஸியாவிலிருந்து நகல் செய்யப்பட்டிருக்கிறது.) (அஸஸீ ஹனபிய்யத் – இதுபாத்துத் தௌஹீத்)

9. (மைய்யித்துச் சாப்பாடு முதலியன) தூய்மையான எண்ணத்துடன் பக்கீர்களுக்கு கொடுக்கும் அளவு புண்ணியம் சேரும் (வழக்கத்தை யனுசரித்துச் செய்தால்) வழக்கம் கலந்த குற்றமும் ஏற்படும் குடும்பஸ்தர்களுக்கு அளிக்கும் உணவைப் புசிப்பது மக்றூஹ் ஆகும். கல்பை மவுத்தாக்கிறதும் அதில் உண்டு, ஆதலின் சீமானாயினும் ஏழையாயினும் இப்படிப்பட்ட உணவைப் புசிக்கலாகாது. மக்றூஹ் ஆகும் (பதாவா ரஷீதிய்யா வா. 2. ப. 27.)

10. இன்னும் மௌலானா அப்துல் ஹை (ரஹ்) அவர்களின் பதாவாவிலும் ஷைக் அப்துல் அஸீஸ் முஹத்திஸ் திஹ்லவி (ரஹ்) அவர்களின் பதாவா அஸீஸீயிலும் இவ்விஷயத்தை தெளிவாக இவ்விதமே எழுதியிருக்கிறார்கள். (மஜ்மூஆ பதாவா. வா. 3. ப. 68, 69.)

11. மைய்யித்துப் போஜனத்தை யருந்துவது:- ஹதீது பிக்ஹு, ரிவாயத்துகளைக் கொண்டு மக்றூஹ் என்பது ருஜுவாகிறது. (இம்தாதுல் பதாவா. வா. 2, ப. 155.)

12. மைய்யித்தையுடையோர் மூன்றும் நாள் விருந்தளிப்பது ஜாயிஸ் ஆகாது. (ஆலம் கீரி)

13. மைய்யித்துச் சாப்பாடுகளில் பலவிதமான பிதுஅத்துகள் சேர்ந்திருப்பதினால் புசிப்பது கூடாது. (துஹ்பத்துஸ்ஸவ்ஜைன்)

14. ஹனபி மத்ஹபு பிக்ஹு கிதாபுகளில் மூன்று நாள் வரை மைய்யித்து வீட்டுக்காரர்கள் விருந்து வைப்பது கூடாது.

மக்றூஹ் தஹ்ரீம்) என்றும் பஸ்ஸாஸியா என்னும் பிக்ஹு கிதா பில் மைய்யித்தின் வீட்டுடையவர்கள் விருந்து வைப்பதும் பிறர் அதைச் சாப்பிடுவதும் மூன்று நாள்வரை கூடாது. (மக்றூஹ்தஹ் ரீம்) என்றும் எழுதியிருக்கிறார்கள். ஆதலின் கூடாது. (இதாஓர் கேள்விக்கு ஜவாபாகும்.) மஜ்லிசுல் உலமா பத்வா. ப. 139)

15. மைய்யித்து வீட்டுக்காரர் விருந்து வைப்பது ஷாபியீ மதுஹபின் கிதாபுகளிலும் ஹனபி மதுஹபின் மிகுந்த கிதாபு களிலும் ஜாயிஸ் அல்லவென்று வருகிறது. அந்த விருந்துக்கு ஜவாப் சொல்வதும் மக்றூஹ் (துஹ்பா)

இந்த நாடுகளில் மைய்யித்து வீட்டுக்காரர் தஹ்வத்து (விருந்து) சோறுக்குவதை பெரிய பர்லாகப் பாவித்து வாரீஸ்களில் சிறு குழந்தை வகையறு இருந்தாலும் நடத்துவார்கள். இதுவெல்லாம் ஜாயிஸ் அல்ல. (ஜவாஹிருல் மஸாயில் 263 ப.)

16. மைய்பித்து வீட்டார்களிடம் விருந்துண்ணல் (ஹனபி மதுஹபு கிரந்தங்களில் விபரித்துள்ளபடி) கூடாது. (இஸ்மாயீ லிபுனு முஹம்மது பிஸ்மில்லா, சூரத்தி ஜாமிஹ் மஸ்ஜித் முப்தீ இரங்கூன்)

17. மைய்பித்து வீட்டாரிடம் வந்து அன்னாரிடம் விருந்துண்ணலும் வெற்றிலை பாக்கு முதலியன தின்னலும் பழிக்கப்பட்ட ஓர் விஷயமாகும். பிக்ஹுடைய கிரந்தங்களில் அதை விபரிக்கப் பெற்றிருக்கிறது. தூரத்திலிருந்து தஅஸியத்துக்காக வந்திருக்கும் விருந்தினர்களுக்கு நிட்சயமாக ஆகும். துர்ருல் முஹ்தார் கிதாபுல் வஸிய்யத்தில் இவ்விஷயம் விளக்கப்பட்டிருக்கிறது. சுருங்கக் கூறின் மைய்யித்து வீட்டார்களுக்கு இவ்விதமான சுமை ஏற்றுவதும் கஷ்டத்தை உண்டுபண்ணுவதும் ஷரீஅத்துக்கு மாற்றமும் இரக்கமற்ற கடின சித்தமுமாகும். நமது பாகங்களில் நிகழும் துர் அநுஷ்டானங்களால் பல நாட்களாக மைய்யித்து வீட்டில் வண்டிகள் குவிந்து விடுகின்றன. கிரகஸ்தன் (அவைகட்கு) புல், காணம் முதலியவைகள் கொடுத்துக் கொடுத்து விருந்தினர் கட்கு உபசாரம் புரிந்து புரிந்து கஷ்டப்பட்டு விடுகிறான். விருந்து கொடுக்கிறவனை தொந்தரவு செய்தல் கூடாதென்று ஹதீதில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்லாஹுர் ருஸூம்

ப. 142. ஹஸரத் ஹகீமுல் உம்மத் மௌலானு அஷ்ரப் அலி தானவி (ரஹ்)

எனவே மேற்காட்டப்பட்ட கிரந்தங்களால் மைய்யித்து வீட்டாரை தொந்தரவு செய்வதும் அவர்களிடம் விருந்துண்ணலும் மக்றூஹும் பாவமும் என்பது அதி வியக்தமாகக் காணப்படுவதால் சகோதரர்கள் மைய்யித்து வீட்டாரிடம் விருந்துண்ணும் வழக்கத்தை நிறுத்திவிடுவார்களாக.

## 9. மைய்யித்து வீட்டாருக்கு உணவளித்தலும் அவர்களிடம் தங்குவதும்.

ஒரு வீட்டிலோ குடும்பத்திலோ மௌத்து ஸம்பவித்தால் அவ்வீட்டார் கவலைப்பட்டவர்களாகவும் அந்த மைய்யித்தை கபன் தபன் செய்வதில் கவனஞ் செலுத்தியவர்களாகவு மிருக்க நேரிடுவதால் அவர்கள் போஜன வேலையிலீடுபட்டு கஷ்டப்படாமலிருக்க பந்து சிநேகிதர் அயல்வீட்டார்கள் ஓரிரவு பகல் புசிக்கக் கூடிய போஜனத்தை தயார்செய்து அம்மைய்யித்து வீட்டாருக்கு அனுப்புவது மகா உத்தமமான காரியமாகும். இவ்வுணவை மைய்யித்து வீட்டார்களும் அம்மைய்யித்துக்குரிய வேலைகளிலீடுபட்டு தங்கள் இல்லங்களிற் சென்று புசிக்கமுடியாமல் தூரத்திலிருந்து வந்தவர்களும் புசிக்கலாம். மற்றவர்கள் அதில் பங்கெடுப்பது பெருந்தகைமைக்கேற்றதல்ல. இவ்வாறுன உணவை யனுப்புகிறவர்களும் பெறுகிறவர்களும் அல்லா(ஹ்) முகத்துக்காகச் செய்ய வேண்டுமேயன்றி பிறர் தாக்ஷண்யுத்துக்காகச் செய்தல் கூடாது. சாதம் அனுப்பாவிட்டால் பிறர் நிந்தனை ஏற்படுமென்றும் வழக்கத்திற்காகச் செய்து தீரவேண்டுமென்றும் பதிலுக்குப்பதில் கிடைக்குமென்ற நோக்கத்துடனும் செய்தால் பலன் கிட்டாது குற்றமும் ஏற்படும்.

1. ஹஸ்ரத் ஜஃபர் (றலி) அவர்கள் ஷஹீதான செய்தி நபிகள் நாதரவர்கட்குத் தெரிந்தபோது நாயகம் ஜனங்களிடத்தில் கூறினதாவது:- ஜஃபரின் வீட்டார்களுக்காக போஜனம் தயார் செய்யுங்கள். ஏனெனில் அவர்கட்கு இம்முஸீபத்தினுல் சமையல் செய்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படாது என்பதே (திர்மதி) *

---

* மைய்யித்து வீட்டார்கட்கு உணவளித்து அவர்களின் கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டுமென்று நாயகமவர்களும் அவர்களின் வாரீஸ்களான உலமாக்களும் விபரித்திருக்க அந்த சுன்னத்தைப் பின் பற்ற வேண்டு

2. ஜாமி உல் பரக்காத் என்னும் கிரந்த கர்த்தாவைக் அப்துல் ஹக் முஹத்திஸ் திஹ்லவி (ரஹ்) எழுதுவதாவது:- இந்த ஹதீதின் மூலமாக மைய்யித்தின் அண்டை அயலார், பந்து, மித்திரர் மைய்யித்து வீட்டுக்காக போஜனம் தயார்செய்வது முஸ்தஹப்பு எனத் தெரியவருகிறது என்பதே (ரிபாஹுல் முஸ்லிமீன்)

3. முஸீபத்துடைய நாளில் மைய்யித்து வீட்டாருக்காக போஜனம் அனுப்புவது சுன்னத்தாகும். (மாலாபுத்து மின்ஹு காலீதனு வுல்லா பானீபத்தீ (ரஹ்)

4. மைய்யித்துடையவர்கட்கு அவர்களுடைய குடல்வாய் ஜனங்கள் (பந்துக்கள் சோறுக்கிச் கொடுப்பது முஸ்தஹப்பு என்று ஷாபியீ ஹனபீ மதுஹபுகளின் கிதாபுகளில் வருகின்றன.) (ஜவாஹிருல் மஸாயில் 263 ப.)

5. மைய்யித்து வீட்டார்களுக்காக உணவு தயார் செய்வதில் தோஷமில்லை. (மேலும் முஸ்தஹப்பாகும்.) (பதாவா ஆலம் கீரி)

6. மைய்யித்து வீட்டாருக்காக ஆகாரம் தயார் செய்வது குற்றமில்லை. பத்ஹுல் கதீரில் கூறப்படுவதாவது:- மைய்யித்துடைய அடுத்த வீட்டாருக்கும் தூரமான குடும்பஸ்தருக்கும் மைய்யித்து வீட்டாருக்கு ஓரிரவு பகல் புசிக்கத்தக்க போஜனத்தைத் தயார் செய்வது முஸ்தஹப்பாகும். ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களைப் பற்றிய ஹதீதே இதற்கு ஆதாரமாகும். (காயத்துல் அவ்தார் தர்ஜுமா துர்ருல் முஹ்தார்)

இன்னும் மைய்யித்து வீட்டார்களிடம் இராத்தங்குவதும் ஸ்திரீகள் கூட்டமிட்டு அவர்களுக்கு உபத்திரவத்தைக் கொடுப்பதும் அழகல்ல. மேலும் இது பழிக்கப்பட்டதாகும்.

அஜ்ரீ என்பவர் அபீமூஸா ஸஹாபி (ரலி) அவர்களைக்கொண்டு ரிவாயத்துச் செய்வதாவது:- அபீமூஸா (ரலி) கூறுகிறார்கள். ஹஸ்ரத் அப்துல்லா ஹிபுனு உமர் (ரலி) அவர்களின் சகோதரி மரணமானபோது நான் என் மனைவியை நோக்கி நீ அவ்விடம் சென்று தஅஸியத்துச் செய்து இராத்தங்கி இரு ஏனெனில் நமக்கும் உமர் (ரலி) அவர்களின் குடும்பத்துக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு என்

---

மென ஜனங்களுக்கு உபதேசியாமல் மைய்யித்து வீட்டார்கள் போஜனம் தயார் செய்விக்கவும் மற்றோர் அதைப் புசிக்கவும் ஜனாப் மௌலவி ஷாபுத்தீன் ஸாஹிப் அவர்கள் பிரசாரம்புரிவது ஆச்சரியமே.

றேன். பின்னர் அம்மாது சென்று விட்டுத் திரும்பி வந்துவிட்ட னர். அப்போது நான் என் மனைவியை, அவர்களிடம் இராத்தங் கும்படி உனக்கு கட்டளை இடவில்லையா வென்க. அதற்கம்மாது கூறினதாவது:— நான் அவர்களிடம் இராத்தங்குவதற்கு நாடி யுள்ளேனெனினும் அப்துல்லா ஹிப்னு உமர் (ரலி) வந்து எங்களை வெளியேற்றி விட்டு இரவில் நீங்கள் சென்று விடுங்கள். எனது சகோதரியை வேதனைப்படுத்தாதீர்கள் என்றார்கள் என்பதே.

இபுனு பக்தரி கூறுவதாவது:— மையித்து வீட்டார் களிடம் இராத்தங்குவது ஜாஹிலிய்யத்தின் வழக்கமேயன்றி வேறன்று.

அஜ்ரீ(ரஹ்) கூறுவதாவது:— (மவுத்தானவர்களிடத்தில்தங்கு வதும் விருந்துண்ணலும் ஆகிய) இச்செயற்கையெல்லாம் ஜனங்க ளிடத்தில் சுன்னத்தாகவும் அதை விடுகிறதை பித்அத்தாகவும் சிந்திக்கிறார்கள். ஆதலின் நிலைமைகள் மாறி விபரீதமாய்விட்டது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) கூறுவதாவது—: பிரதி வருட மும் ஜனங்கள் சுன்னத்தைக்கொன்று பித்அத்தை உயிர்ப்பிக்கின் றார்கள். (துஹ்பத்துஸ் ஸய்ஜைன்)

எனவே மேற்காட்டப்பட்ட கிரந்தங்களின் ஆதரவால் மைய் யித்து வீட்டாருக்கு கஷ்டம் ஏற்படாவண்ணம் அல்லா(ஹ்) முகத் துக்காக உணவளிப்பதும் கஷ்டங்களை நிவர்த்திப்பதும் சுன்னத்தை உயிர்ப்பிப்பதாகுமாதலின் முஸ்லிம்கள் இந்நேர்வழியைக் கடைப் பிடித்து நன்மை பெறுவார்களாக.

## 10. மைய்யித்துக்காக துக்கம் பாராட்டல்.

சில உயர்தர குடும்பத்திலுள்ள மங்கையர்கள் தங்கள் வீட் டில் மரணம் நேரிட்டு விட்டால் சில நாட்களோ, மாதங்களோ, வருடங்களோ குறிப்பிட்டு அந்த குறிப்பிட்ட நாள் முடிவெய்து வதற்குள் வீட்டை விட்டு வெளிச்செல்வதை தங்கள் குலத்துக் கும், ஆசாரத்துக்கும் இழிவெனக் கருதுகிறார்கள். இதைப்பார்த்த இதர ஸ்திரீகளும் சற்றேறக்குறைய இவ்வழக்கத்தை யனுசரித்து நான் மைய்யித்தை யுடையவள். வீட்டை விட்டு வெளியேறுவ தில்லை யெனக்கழறும் இவ்வழக்கம் பல பாகங்களிலும் நடைபெறு வதாகத் தெரியவருகின்றன. கவனிக்கப் புகுமிடத்து இக்கொள்

கை கெட்ட ஜாஹிலிய்யத்தின் சடங்குகளாகுமென்பதே அறிஞ ரின் துணிபு.

நபிகள் திலகம் அருளியிருப்பதாவது:— அல்லா (ஹ்) வின் பேரிலும் ஆகிரத்தின் பேரிலும் ஈமான்கொண்ட ஸ்திரீயானவளுக் குத் தனது பர்த்தாவின் மரணத்துக்கு நான்கு மாதம் பத்துநாள் இத்தாவென்னும் துக்கம் பாராட்டுவதையன்றி இதர மைய்யித்துக் காக மூன்று இரவைவிட அதிக துக்கம் பாராட்டுவது கூடாது. (முத்தபிக் அலைஹி) ஆதலின் அல்லாவையும் அவனது ரசூலையும் நேஸித்த ஸ்திரீகள் தங்களது பர்த்தாவுக்கு நான்கு மாதம் பத்து நாட்களும் இதர குடும்பத்தினருக்கு கூடினது மூன்று நாட்களும் துக்கங் காக்கலாமே யன்றி அதிக துக்கம் பாராட்டுவதும் அதை தங்கள் குலாசாரம் நாட்டு வழக்கம் என்பதும் ஒரு போதும் கூடா து. அறிவீனத்தாலும் பக்தி இன்மையாலும் இவ்வித வழக்கம் ஏற் பட்டிருந்தால் உடனே அதை நிறுத்தி அன்று முதல் அவ்வழக்கத்தைத் தொலைத்து விடவேண்டும். இதை அறிந்த ஆலிம்களும் இதரர்களும் இவ்விஷயத்தை வெளிப்படுத்தவும் வேண்டும். சுன்னத்தான நபிகள் நாயகத்தின் நடப்பைக்கொண்டு குலாசாரமும் நல் வழக்கமும் ஏற்படுவதே யன்றி ஜாஹில்களின் அநுஷ்டானத்தைக் கொண்டல்ல. இந்த துர்வழக்கத்தை யநுசரித்து வந்ததினால் இவர்கள் தங்களைப் பெருமைக்குரியோ ரென மனப்பால் குடித்துக்கொண்டாலும் அல்லா (ஹ்) ரசூல் சமு கத்தில் அவர்கள் இழி குலத்தைச் சார்ந்த கீழ் மக்களே யாவர். எனவே இத்துர் வழக்கத்தை யொழித்து சுன்னத்தைப் பின்பற்று வதே இஸ்லாமிய பக்திவான்களின் கடமையாகும்.

## 11. மைய்யித்துச் சாதம் கல்பை மைய்யித்தாக்கும்.

மைய்யித்துச்சாதம் அருந்துவது மனதை மைய்யித்தாக்கி விடும் என்றர்த்தமுள்ள "தஆமுல் மைய்யித்தி யுமீத்துல்கல்பு" என்னும் ஓர் வாக்கியம் காணப்படுகிறது. இவ்வாக்கியம் நபிகள் நாயகம் அவர்கள் பொன் மொழி யெனச் சிலர் கூறினாலும் ஆராய் ச்சியுடையோர் அது ஹதீதல்ல, ஆன்றோர் அநுபவ வாக்கியமென முடிவுகட்டுகின்றனர். மைய்யித்துப் போஜனம் அருந்துவோரின் நிலைமையை இவ்வாக்கியம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. மைய் யித்துப் போஜனத்தைக் கண்ணுங் கருத்துமாய் நேசிப்பவர்களின்

இருதயம் எவ்வேளையிலும் அதையே எதிர் பார்த்துக்கொண்டிருப்பதினால் ஆன்றோர் அங்ஙனம் கூறினர்போலும்?

ஷாஹ் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:— மையித்துப் போஜனம் மனதை மைய்யித்தாக்கி விடுகிற தென்னும் வாக்கியம் ஹதீதல்ல. சில ஆன்றோர்களின் முதுமொழியாகும். அவர்கள் மொழிவதாவது:— மைய்யித்துச் சாப்பாட்டின் நோக்கம் நாற்பது நாள் வரை ஜனங்கள்கொடுக்கின்றதேயாகும். எனவே அந்த உணவு மனதை எவ்வாறு மைய்யித்தாக்குவதென்றால் பெரும்பாலும் மைய்யித்துக்கு மரணத்தின் குறி ஆரம்பிக்கிற நேரத்திலிருந்தும் அதற்குப் பின்னும் இந்த ஆகாரத்தைப் பூர்த்தி செய்து அதைப் பகிர்வதில் கவலை இருந்தே வருகிறது. இவ்வுணவை குடும்பஸ்தர்களில் அல்லது மஸ்ஜிதில் தரித்திருப்போருக்கு விளம்பும் போது எவர்கட்கு இவ்வுணவுகிடைக்கிறதோ அவர்கள் இந்தபோஜனத்தை ஆதரவு வைத்து எதிர் நோக்கின வண்ணமாயிருக்கிறார்கள் (பதாவா அஸீஸீ வா. 2. ப. 249.)

மவுத்தைக்கொண்டு தான் உணர்ச்சிபெற்று மறுமைக்குவேண்டிய தங்கரிப்புகளைத் தயார் பண்ணுமல் இப்படிப்பட்ட உணவு எப்போது கிட்டும் என எதிர் பார்த்துக் கொண்டிருப்பதினால் இந்தச் சாப்பாடு மனதை மைய்யித்தாக்கி விடுகிறதெனக் கூறநேரிட்டது.*

இதே விதமாக பதாவா ரஷீதிய்யா இரண்டாம் வால்யம் 51-ம் பக்கத்திலும் இம்தாதுல் பதாவா மூன்றும் வால்யம் 143-ம் பக்கத்திலும் விபரிக்கப்பட்டிருக்கின்றன வாதலின் மைய்யித்துச் சாப்பாட்டை ஆசிக்காமலிருப்பதே உத்தமமெனத் தெரியவருகிறது.

## 12. கப்ராளிகளிடம் உதவி தேடல்.

கப்ராளிகளிடம் உதவி தேடுவதைப் பற்றிய நீண்ட வியாசங்கள் மேதாவிகளின் கிரந்தங்களில் பார்வை இடுவதே சிறப்பாகும், இவ்விடம் "இதா தஹய்யர்த்தும் பில் உமூரி பஸ்தயீனூபி அஸ்

---

* இந்த சுன்னத் வல்ஜமா அத்து மேதாவிகளின் தீர்மானங்களை ஓர்ந்து ஜனுப் மௌலவி ஷரபுத்தீன் ஸாஹிப் அவர்களும் ஜனுப் பக்கீ ஸாஹிப் அவர்களும் உணர்ச்சைப் பெறுவார்களாக.

ஹாபில் குபூர்'' அதாவது நீங்கள் எப்போதேனும் ஓர் காரியத்தில் தயங்குவீர்களாயின் கப்ராளிகளிடம் உதவி தேடிக் கொள்ளுங்கள் என்ற இவ்விஷயத்தைப் பற்றியே நன்கு கவனிக்க விரும்புகிறோம்.

இவ்வசனத்தைச் சிலர் ஹதீது எனக் கூறுகிறார்கள். தக்க ஆராய்ச்சியுடையோர் இது ஹதீது என்பதற்குரிய ஆதாரம்காணப் படவில்லை யாதலின் ஒருவரின் வார்த்தையே யன்றி வேறன்று. எனத் தீர்மானித்துள்ளனர்.

1. ஹஸ்ரத் அப்துல் அஸீஸ் திஹ்லவி (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:— நீங்கள் எப்போதேனும் ஓர் காரியத்தைப் பற்றித் தயங்குவீர்களாயின் அக்காரியத்தில் கபுராளிகளிடம் உதவிதேடிக் கொள்ளுங்கள் என்ற இவ்வாக்கிய மாகிறது ஹதீது அன்று. ஓர் பெரியாரின் வார்த்தையாகக் காணப்படுகிறது இன்னும் இவ்வாக்கியத்துக்கும் பல நுண்ணிய அர்த்தங்கள் உள. அதில் ஒன்றாவது ஒரு வஸ்துவை ஹறாம், ஹலால் என்பதில் முரண்பட்ட தலீல்கள் உண்டாயிருந்து சில தலீல்களைக் கொண்டு அது ஹலாலென்றும் சிலதலீல்களைக்கொண்டு அது ஹறாமென்றும் ருஜூவாகி எந்த தலீலின் பேரில் அமல்செய்வோமென்று நீங்கள் தடுமாற்றமகொள்ளும் பக்ஷம் நீங்கள் தங்களது சுய இஜ்தி ஹாதை (தெண்டித்து அபிப்பிராயப்படி தீர்ப்புசெய்வதை) விட்டுவிட்டு "எவர்கள் சென்று போனார்களோ அவர்களைப் பின்பற்றுங்கள்" இந்த அர்த்தம் மிக்க விசேஷமாய் உண்மைக்கு ஒத்துமையாகக்காணப்படுகிறது. அன்றியும் ஹஸ்ரத் அப்துல்லா ஹிபுனு மஸ்ஊது (ரலி) ஹஸ்ரத் ஸூப்யான் தௌரீ (ரஹ்) ஆகியவர்களைக் கொண்டும் இந்த அர்த்தம் நகல் செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது அர்த்தமாவது "எப்போதேனும் நீங்கள் உலக விஷயங்களில் தடுமாறித் தயங்குவீர்களாயின் இன்னும் உங்களுடைய மனது கவலையிலாழ்ந்திருக்குமாயின் கப்ராளிகளின் புரம் பார்வையைச் செலுத்துங்கள். அவர்கள் எவ்வாறு துன்யாவை விட்டு ஆகிரத்தின் பக்கம் முகத்தைத் திருப்பினார்கள் என்று நோட்டமிடுங்கள். இன்னும் எங்கு அவர்கள் சென்றிருக்கின்றார்களோ அவ்விடத்திற்கே நாமும் செல்ல வேண்டியது நேரிடும். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையே சமீபத்தில் நமக்கு ஏற்படும் என்பதையும் சிந்தனை செய்யுங்கள். இவ்விதம் நோட்டமிட்டுப் பார்த்தால் துன்யாவின் துன்பங்களும்

சங்கடங்களும் உங்களுக்கு இலேசாகத் தோன்றும் என்பதே (பதாவா அஸீஸீ வா. 1. ப. 304.) *

2. அல்லாமா ரஷீத் அஹ்மது கங்கூஹி (ரஹ்) கூறுவதாவது:— அல்லா (ஹ்) வுடைய அடிமைகளிடத்தில் உதவி தேடுங்கள் என்று சில ரிவாயத்துக்களில் வந்ததின் உண்மையாகிறது. ஒரு மைய்யித்திடத்தில் உதவி தேடுவதல்ல. மேலும் வனங்களிலிருக்கும் அல்லா (ஹ்) வுடைய அடிமைகளிடத்தில் உதவி தேடுவது கருத்தாகும். ஏனெனில் அல்லாஹுத்த ஆலா அவர்களை இக்காரியத்துக்காகவே அங்கு நியமித்து வைத்திருக்கிறான். (ஆதலின்) அது (கப்ராளிகளிடம் உதவி தேடல் என்ற) இந்த விஷயத்தில் நின்றுமல்ல. இதைக்கொண்டு ஆகு மென்பதின் ஆதாரங்காட்டுவது ஹதீதின் அர்த்தத்தை யறியாத அறிவீனமாகும். (பதாவா ரஷீதிய்யா வா. 1. ப. 88.)

3. மௌலானா அப்துல் ஹைய்யில் லக்னவி (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:— "இதா தஹய்யர்த் தும் பில்உமூரி" என்னும் வாக்கியம் ஹதீது அன்று ஒருவரின் வாக்கியமாகும். (இன்னும் இதன் கருத்தை மேலே பதாவா அஸீஸியில் குறிப்பிட்டபடி விபரித்து விட்டு கடைசியில்) ஒரு காரியத்தைப்பற்றி ஆயாசங்கொண்டால் கப்ராளிகளிடம் வஸீலா அதாவது:— இவர்களது பொருட்டால் துஆ கபூலாக வேண்டுமென்று இறைவனிடம் கேட்பதும் கருத்தாகும் என்று கூறுகிறார்கள். (சுருக்கம்) (மஜ்முஆ பதாவா. வா. 3. ப. 21.)

4. இதா தஹய்யர்த்தும் என்ற ஹதீது உண்மையல்ல. (மஜ்லிசுல் உலமா பத்வா. ப. 16.)

எனவே மேதாவிகளின் ஆராய்ச்சியில் இந்த ஹதீது உண்மையல்லவென்பது புலனாய்விட்டபின் இதை ஆதாரமாகக் கொள்வது உபயோகமற்றதென்பது வெளிப்படை.

---

* மறுப்பு நூலில் நாயகம் அவர்கள் அருளினதாக வரையப்பட்டிருப்பதாவது:— தீனானவர்களே! உங்களுக்கொரு வருத்தம் சங்கடம் சம்பவிக்குமாகில் பெரியோர்களுடைய கப்று (ஸமாதி) களிடத்திற் போய் உங்களுடைய வருத்தங்களையும் சங்கடங்களையும் குறித்துக்கேளுங்கள். உங்களுடைய நாட்டம் நிறைவேறும் (94 ப.) என்று கூறுவது தவறென்பது ருஜுவாகிறது. மேதாவிகள் இவ்வசனம் ஹதீதல்ல. ஓர் அநுபோகஸ்தரின் வாக்கியமுமாகும் எனத் தீர்மானித்திருப்பதினாலென்க.

## 13. கத்னுச் செய்தல்.

முஸ்லிம்கள் கத்னுச் செய்தல் அவசியமென்பது ஸர்வமுஸ்லிம்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். ஹஸ்ரத் அபூஹுரைரு (ரலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட ஹதீதில் கத்னுச் செய்யும்படி ஏவப்பட்டதும் ஒன்றாகும். மேலும் நபிமார்களின் சுன்னத்துமாகும். *

கத்னுச் செய்யவேண்டியது பெற்றோரின் கடமையாகும். கத்னுச் செய்ய வேண்டிய வயதைப்பற்றி நிட்சயமாகக் கூறப்படவில்லையாயினும் பத்து வயதுக்குள் செய்துவிடுவதே காலச்சிறந்த முறையாகும்.

நம் தேயங்களில் கத்னுச் செய்வதைப் பிரஸ்தாபப் படுத்தி அதற்கென்று அநேக சடங்குகளெல்லாம் நிர்மாணிக்கப்படுகின்றன தூர தேசங்களுக்கெல்லாம் ஆளனுப்பியோ, லட்டர் அனுப்பியோ அழைக்கப்படுகிறது. அவர்கள் எப்படிப்பட்ட அவசர காரியமாயினும் அதை விட்டுவிட்டு இக்காரியத்துக்குவந்து சிறப்பாக நடத்துவதை முக்கிய கடமைகளில் ஒன்றாகக் கருதுகிறார்கள். எவரேனும் வராமலிருந்தால் அவர்களின் வீட்டில் சுபகாரியங்கட்கு இவர்கள் செல்வதில்லை. அதிலிருந்து விரோதமும், குரோதமும் ஆரம்பமாகிறது. அச்சமயம் கத்னுச் செய்யப்படும் சிசுக்களின் சகோதரிகள் மைத்துனர்கள் விசேஷ உரிமை பாராட்டி தங்களுக்கென்ற சடங்குப் பாகத்தைக் கைப்பற்றுகிறதில் பிடிவாதஞ் செய்கிறதுமுண்டு.

---

* கத்னுச் செய்வது நபிநாயகமவர்களின் சுன்னத்தென்றும் பிதுஅத்துகளும் துர்ச்சடங்குகளுமின்றி அதை நடத்தலே சிறந்ததென்றும்கூறி வரும்போது விஷயங்களைத் தலைகீழாக விளங்கும் மறுப்பு நூலாசிரியர் தமது நூல் 61, 62-ம் பக்கங்களில் முஸல்மான் ஆசிரியர் கத்னுச்செய்வதை முஷ்ரிக்கீன் (இணை வைக்கின்றவர்) களின் சடங்கு என்று கத்னுச்செய்வதைப் பழித்ததாக பெரும்பழி சாற்றுவது எத்துணை அபாண்டப் புழுகாக இருக்கிறது. கத்னுச் செய்வது சுன்னத்தான முறைப்படி இருக்கவேண்டுமென்பதே முஸல்மான் ஆசிரியரின் சித்தாந்தம் தவிர சென்ற ஹிஜ்ரி 1346 ஜமாதில் ஆகிர் சஞ்சிகையிலும் இவ்விஷயம் விபரிக்கப்பட்டிருக்கிறது. மார்க்கத்திலில்லாத பிதுஅத்துகளையும் நூதனச்சடங்குகளையும் விக்கிரகாராதனைக்காரரின் நடப்புகளையும் பின் பற்றவேண்டுமெனக் கருதுவோருக்கு முஸல்மான் ஆசிரியரின் மீது துவேஷம் ஏற்படுவது சகஜமே.

கத்னுவென்பது நபிமார்களின் விசேஷ சுன்னத்தாகும். நம் நபிகள் திலகமவர்கள் அதைச் செய்யும்படி நம்மை ஏவி இருக்கின்றார்கள். ஆனால் எவ்வாறு நபிகள் நாயகம் அவர்கள் காலத்தில் இவ்வைபவத்தைச் செய்து காட்டப்பட்டதோ அவ்விதமே செய்வது நம்மீது கடமையாகும். அதைவிட்டு வேறு விதமான சடங்குகளை ஏற்படுத்தினால் அது குற்றமாகும். நாயகம் அவர்கள் காலத்தில் கத்னுச் செய்வதற்கு ஜனங்களை அழைப்பதில்லை.

ஹஸன் (ரலி) அவர்களைக் கொண்டு அறிவிக்கப்படுவதாவது:- ஹஸ்ரத் உதுமா னிபுனு அபில், ஆஸ் (ரலி) அவர்களை ஒருவர் கத்னுவுக்காக அழைத்தார். அவர்கள் ஏக மறுத்துவிட்டார்கள். காரணம் கேட்டபோது நாங்கள் நாயகம் அவர்கள் காலத்தில் கத்னுக்களுக்குப் போகிறதுமில்லை. அதற்காக அழைக்கப்படுகிறதுமில்லை. என மொழிந்தார்கள். (இமாம் அஹ்மத்) இதனால் மார்க்கத்தில் ஏவப்படாத ஓர் காரியத்துக்காக ஜனங்களை அழைபபது சுன்னத்துக்கு மாற்றமாகுமென்பது விளக்கத்தில் வருகின்றது. சிலவிடங்களில் இதற்காக இராக சங்கீதம், மேளவாத்தியம் பலவித ஆபாஸ சித்திரங்களால் ஆலங்கரிக்கப் பெற்ற ஆடம்பரப்பந்தல் நிறுவுவது முதலியன நிகழ்கின்றது. இது பாவமென்பது வெளிப்படை. இன்னும் சில விடங்களில் கத்னுச் செய்யப்படும் குழந்தையை அலங்கரித்துப் பட்டணப்பிரவேசமென்று ஊர்வலம் சுற்றி அநேக சடங்குகளெல்லாம் செய்கிறார்கள். இது அனுவசியச் செலவும் பெருமையும் தற்புகழும் ஏற்படுவதால் பெரும்பாவமாகும். கத்னுச் செய்யும் சமயத்தில் "மொய்" என்று ஓர் சடங்கை ஏற்படுத்தி பணங்காசுகளைக் கொடுத்து பெயரைப் பதிவு செய்து கொள்கிறார்கள். இதரர்களும் இவ்வாறே செய்யவேண்டுமாம். இதுவும் துர்வழக்கமாகும். சில ஆலிம்கள் இதில் நடக்கும் சடங்குகளையும் வீண் கட்டுகளையும் விபரிக்காமல் கூடச் சேர்ந்து நடத்துவதால் இவ்வழக்கம் விசேஷ ஆடம்பரம் பெற்றுவிட்டது. * இவ்விஷயங்

* ஜனுப் மௌல்வி ஷாபுத்தீன் ஸாஹிபு அவர்கள் இவ்வனுஷ்டானத்தை வடகரையில் எவ்வாறு நடத்திவருகிறார்கள். தங்கள் வீட்டில் நிகழ்ந்த கத்னு விவாகம் ஆகியவைகளிலேனும் சுன்னத்தான அநுஷ்டானங்களை நடத்திக் காட்டினார்களா? அன்றி பொது மக்களின் சடங்கானுசாரங்களைப் பின் பற்றிக்கொண்டார்களா? என்பதை பொது ஜனங்கள் விஜாரித்துக் கொள்ளட்டும். இந்த கத்னு விவாக வைபவங்களில் துர் அனுஷ்டானங்

களெல்லாம் தெரிந்திருந்தும் உண்மையை விளக்காமல் மௌனஞ் சாதிப்போர் ஊமை ஷைத்தானென்ற பெயரேற்பட்டு பெரும் நஷ்டவாளி யாவர்.

### பின்னை எவ்வாறுதான் செய்வது?

குழந்தை கத்னுச் செய்வதற்குத் தகுதியாய் விட்டவுடன் நாவிதனை அழைத்து செய்துவிடவேண்டும். இதற்காக எவரையும் அழைக்க வேண்டுமென்பதில்லை. கத்னுச்செய்து முடிந்தவுடன் அல்லா (ஹ்) வின் நிஃமத்துக்கு ஷுக்று செய்தவனாகவிருந்துவைப் பதும் குற்றமில்லை மேலும் நன்மையைக் கருதி விருந்து உபசரித்தல் நன்மையென்பதும் வெளிப்படை. இவ்விதம் விருந்து செய்வதற்காக அளவுக்கதிகமாக சிரமத்தை எடுத்துக்கொள்வதும் கடன் வாங்குவதும் கட்டாயக்கடமை எனக்கருதுவதும் பிறர் புகழையோ இகழையோ கருதிச் செய்வதும் தகாது. மேலும் குற்றமுமாகும் எந்தக்காரியத்திலும் நபிகள் நாயகமவர்களின் சிறந்த நல்வழியைப் பின்பற்றலே முஸ்லிம்களுக்குரிய கடமையாம்.

## 14. ஷஃபான் பராத்து வணக்கம்.

ஷஃபான் மாதமாகிறது சிறந்த ஓர் மேன்மையான மாதமாயிருக்கிறது. இம்மாதத்தில் செய்யும் நன்மைக் காரியங்களையும், அதன் பலன்களையும் நமது நாயகமணி செவ்வையாய் விளக்கிக்காட்டியிருக்கிறார்கள். எனவே இப்பேர்ப்பட்ட மாதங்களில் விசேஷமாக ஒப்புக்கொள்ளப்பட்டதும் நன்மைகள் அதிகரிக்கும்படியானதுமான சமயங்களில் நற்செயற்களை அதிகமாகச் செய்து பலன் பெற நாம் முயற்சி செய்யவேண்டும். ஆண்டவன் தனது பரிசுத்த திருமறையில். "ஏ! நபியே அந்த ஜனங்கட்கு நற்சமாசாரத்தைத் தெரிவிப்பீராக; எவர்கள் ஈமான் கொண்டு நற்கருமஞ் செய்தார்களோ அவர்கட்காக நந்தவனங்களுமுண்டு. அதன் கீழ் நதிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன." என்று திருவுளமாயிருக்கிற இவ்வாயத்தை நாம் சிந்தித்துக்கொண்டு இம்மதியில் செய்வனவற்றை கவனிப்பாம்.

---

களை நிவர்த்தித்திருந்தால் எஞ்சிய பொருளைக் கொண்டு ஜனுப் மௌல்வி ஷாபுத்தீன் ஸாஹிப் அவர்கள் ஹஜ்ஜுக்குப்போய் வந்திருக்கலாம். தானும் ஹஜ்ஜுக்குச் செல்வதில்லை. ஹஜ்ஜுக்குச் சென்று வந்தவர்களையும் தூற்றாமல் விடுவதில்லையென்றால் இதற்கேதேனுமோர் மருந்து மாத்திரை உளதோ?

நமது நாயகம் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ரமலான் மாதத்தைத் தவிர உள்ள மற்றெல்லா மாதங்களைவிட இம்மாதத்தில் அதிக நோன்பு நோற்றுக்கொண்டிருந்தார்களென்றும், "இன்னும் இம்மாதம் 15-ம் தெய்தி பராத்" என்ற ஓர் சிறப்பான இரவு உண்டாயிருக்கிறதென்றும் அவ்விரவில் அநேகர்களின் பாவங்களை மன்னித்தருளுகிறுனென்றும் இன்னும் அவ்விரவில் நின்று வணங்குங்கள்; அதன் பகலில் நோன்பு வையுங்கள். ஏனெனில் நிட்சயமாக அவ்விரவில் அல்லாஹுத்த ஆலா, சூரியன் அஸ்தமித்ததிலிருந்து அடிமைகளை நோக்கி "என்னிடம் நாட்டங்களையும், தேவைகளையும், கஷ்டங்களையும் பற்றிக் கேட்கிறவன் உண்டுமானுல் நான் அவர்களுக்கு, அவர்கள் கோரியநாட்டங்களைக்கொடுத்தருளுவேன் என்று காலைவரை சப்தமிட்டுக்கொண் டிருப்பதாகவும்" நாயகமவர்கள் திருவுளம் பற்றியிருக்கிறுர்கள்.

இன்னும் இவ்வருஷத்தில் இறக்கப்போகிறவர்களையும் பிறக்கப்போகிறவர்களையும், இவ்விரவில் எழுதப்போகிறதாகவும் எல்லோரின் உணவுகளையும் அமல்களையும் இவ்விரவில் ஆஜராக்கப்படுவதாகவும் நாயகம் அருள் புரிந்திருப்பதாக மிஷ்காத் ஷரீபில் வருகிறது.

(ஹதீது) நாயகம் திருவுளமானுர்கள். ஷஃபான் மாதத்தின் பதினைந்தாம் இரவில் பரிசுத்த இறைவன் முதல் வானத்தின் பக்கம் இறங்குகிறுன். (அதாவது மிகுந்த கிருபை பாராட்டுகிறுன்.) பின்னர் பனீகல்பு ஜாதியாரின் ஆட்டுக்கிடைகளின் ரோமங்களை விட அதிகமாக ஜனங்களின் குற்றங்களைப் பொருத்தருளுகிறுன். (மிஷ்காத்) (ஹுவிஹஸ்ரத் ஆயிஷா (ரலி) பனீகல்பு கூட்டத்தாரிடம் ஆடுகள் அதிகமுண்டு. ஆதலின் அவர்களைக் கொண்டு உவமை காட்டப்பட்டது.

பதினைந்தாம் தெய்தியில் நோன்பு நோற்கிறதை விட ஒரு நோன்பைக் கூடச்சேர்த்து இரண்டு நோன்பாக நோற்கிறதே உத்தமமாகும். இவ்விரவில் ஸியாரத்துச் செய்கிறதில் மிகப்பலனுண்டு

சில ஜனங்கள் பதினைந்தாம் தெய்தி பகல் இரவில் செய்யும் காரியாதிகளை பதினன்காம் நாளில் செய்து திருப்திகரமாயிருந்து விடுகிறுர்கள். இது தவறு. ஏனெனில், எந்த நாளை நாயகம் அவர்கள் விசேஷமாகக் கூறியிருக்கிறுர்களோ அந்நாள் பதினைந்தாம் தெய்தி

பகலிரவே யாகும். சிலர் அந்நாளையில் செய்யவேண்டிய வணக்கங்களை விட்டு விட்டு ஹல்வா, பாச்சோறு முதலியன செய்து வீடு வீடாய்ப் பரிமாறவும், புது மாப்பிள்ளைகளை அந்நாளில் அழைத்துச் சடங்குகளை நிறைவேற்றவும், சிலர் விளையாட்டுச் சாமான்களை குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுத்து விளையாடச் செய்யவும்; தாங்களும் வெடி வாண வேடிக்கை, சொக்கட்டான், சதுரங்க முதலியன விளையாடலுமாக விருந்து அந்நாளை வீணாகக் கழித்துவிடுகிறார்கள். இவ்வாறு வீண் செலவு செய்கிறவர்களை இறைவன் தனது வேதத்தில் ஷைத்தானின் சகோதரனென்று கூறுகிறான். வழக்கமென்னும் திரையாகிறது; உண்மையை பார்க்கிறதை விட்டும் கண்களை மறைத்து விடுகிறது. சிலர் தாங்கள் விளையாடா விட்டாலும் சிறுவர்கட்கு விளையாட உத்திரவு கொடுத்துப்பார்த்து சந்தோஷித்துக்கொண்டிருக்கிறார்கள். இது குற்றமில்லையாம். ஸுபுஹானல்லாஹ்! பாவங்களைக்கண்ட விடத்து தன்னாலியன்றவரை அதைத் தடுக்க வேண்டுமென்ற நாயக வாக்கியம் இன்னாருக்கு மறந்துவிட்டது போலும்? இவ்வாறு வீண்விளையாட்டுகளுக்குப் பணம்கொடுப்பது ஜஹன்னத்தை விலைக்கு வாங்குவதாகும். எனவே இவ்விரவு பகலில் நோன்பு வைத்து தொழுது நமது பாவங்களைப் பற்றி மன்னிப்புக் கேட்டு தருமங்கள் செய்து இவ்விரவின் பாக்கியங்களையடையுமாறு ஆண்டவனருள் புரிவானாக. ஆமீன்!

முஸ்லிம்களே! மேலெழுதப்பட்ட ஷஃபான்மாதத்திய பராத்து வணக்கத்தை ஹதீதின்படி முஸல்மான் ஆசிரியர்ஆதரித்து 1344 ஷஅபான் 217-ம் பக்கத்தில் வரைந்திருப்பதைப் பார்த்திருக்கிறீர்களன்றோ? இப்படி இருக்க பொய்யையே தமக்கு அஸ்திவாரமாக வைத்தெழுதிய மறுப்பு நூலாசிரியரும் மௌலவி ஷரபுத்தீன் ஸாஹிபும் முஸல்மான் ஆசிரியர் பராத்து வணக்கத்தை முஷ்ரிக்கீன் (காபிர்கள்) சடங்கு என்று எழுதிப் பிரசாரஞ் செய்கிறார்கள் என்று எழுதியிருக்கும் அபாண்டப் பழிமொழியைச் சற்று கவனிப்பீர்களாக. மக்கீ ஸாஹிப் எழுதுகிறார்:

முஸல்மான் தொகுதி 3. பகுதி 10. பக்கம் 284-ல்முஸல்மான் ஆசிரியராகிய தாங்களே வெளியிட்டுள்ள குறிப்பில் பல சடங்குகளைப்பற்றி விவரிப்பதினூடே அகீக்காச்சடங்கு, பராத்துச்சடங்கு மரணத்தில் நடக்கும் சடங்கு மூன்றாம் நாள் 7, 15, 21, 40 முதலிய நாட்களின் சடங்கு வருஷப் பாத்திஹாச் சடங்கு மௌலிதுச்

சடங்கு எனக் குறிப்பிட்டு தலைவர்கள், சீமான்கள், ஆலிம்கள் நன்கு கவனித்து இஸ்லாமிய ஆசாரத்தைப் போதித்து முஷ்ரிக்கீன் சடங்குகளை நிவிர்த்திப்பார்களென நம்புகிறோம்; என்றும் எழுதி யிருப்பதால் முஸல்மான் ஆசிரியராகிய தாங்கள் முழுதும் வழி கெட்ட வஹ்ஹாபியா யில்லாமலா இவ்வாறு அக்கீகா கொடுத்தலையும் பராத்தின் வணக்கம் முதலியதுகளையும் மௌலிது கத்தம் பாத்திஹா ஓதுவதையும் முஷ்ரிக்கீன் சடங்கு என்றும் தலைவர்கள் சீமான்கள் ஆலிம்கள் நன்கு கவனித்து இஸ்லாமிய ஆசாரத்தைப் போதித்து நிவர்த்திக்கும்படியாக கூறுகின்றீர்கள். இஸ்லாம் மதஸ்தாபகரான எம்பெருமானாரவர்களின் அநுஷ்டானங்களுக்கும், ஆக்ஞைகளுக்கும் மாறு செய்வதுதான் முஸல்மான் கோஷ்டியாரின் இஸ்லாமிய ஆசாரமா? நிவர்த்திப்பார்களென நம்புகிறோமென்பதும் தடைபுரிகிறதென்பதும் விலக்குவதும் முஸல்மான் ஆசிரியராகிய தங்கள் அகராதியில் ஆதரிப்பதென்றேனும் அநுஷ்டிப்பதென்றேனும் அர்த்தம் ஏற்பட்டிருக்கின்றதா? அகீக்கா பராத்து, மௌலிது ஷரீப் கத்தம் பாத்திஹா இவைகளைத் தாங்கள் வெறுக்கவில்லையாயின் அவைகளை விலக்கிப் பிரசாரம் செய்யவேண்டியதும் மற்றவர்கள் செய்யாமல் நிவர்த்திக்கவேண்டியதென்றும் வேண்டுவதின் காரணமென்ன? முஷ்ரிக்கீன் என்பதற்கு இணைவைத்து வணங்குகிறவன் என்பது பொருள். இணை வைத்து வணங்குபவர்கள் காபிர்கள் என்பது எல்லோர்களுமறிந்ததே. அகீகாக் கொடுப்பதும் பராத்து வணக்கமும் மௌலிது ஷரீப் கத்தம் பாத்திஹா ஓதுவதும் கப்ருகளை ஸியாரத்துச் செய்வதும் அவ்லியாக்களிடம் வஸீலாத்தேடுவதும் முஸல்மான் ஆசிரியராகிய தங்களிடத்தில் குப்ரியத்தான செய்கையா யிருக்கின்றதென்பதற்கு இதைத் தவிர வேறு சான்று காட்டி ருஜூப்பிக்கவும் வேண்டுமோ? அகீகாக் கொடுப்பதும் பராத்து வணக்கமும் மௌலிது ஷரீப் கத்தம் பாத்திஹா ஓதுவதுகளெல்லாம் தாங்கள் கூறியபடி தங்களிடத்தில் நிவர்த்திக்கவேண்டிய முஷ்ரிக்கீன் சடங்காயிருப்பின் அகீக்கா கொடுப்பது ஹனபி மதுஹபில் முஸ்தஹப்பு என்றும்: ஷாபிமதுஹபில் சுன்னத்தென்றும் ஹம்பலி மதுஹபில் வாஜிபென்றும் சட்டம் ஏற்பட்டிருந்தும் முஷ்ரிக்கீன் சடங்கு எனக் கூறும் தாங்கள் நான்கு மதுஹபில் எந்த மதுஹபையேனும் ஒப்புக்கொண்டிருந்தால் இவ்வாறு எழுதத் துணிவீர்களா? இதிலிருந்து நான்கு மதுஹபிலுஞ் சேராத லா மத்ஹபி என்பதற்கும் சுன்னத்வல் ஜமா அத்திற்கு

முரணான வழிகெட்ட கொள்கையினர் என்பதற்கும் வேறு சான்று வேண்டியதில்லையே. சுன்னத் வல்ஜமா அத்தின் கொள்கைகளை காபிர்களாகிய முஷ்ரிக்கீன் சடங்கு எனக் கூறுகிறவன் காபிரா இல்லையா? (மறுப்பு நூல் 19-21).

எனவே முஸல்மான் ஆசிரியர் "முஸல்மான்" தொகுதி 3 பகுதி 10 பக்கம் 284ல் எழுதியிருப்பதை அப்படியே இவண் நகல் செய்து அப்பால் நம் ஆராய்ச்சியைத் தருவோம்.

முஸல்மான் சஞ்சிகையில் ஸைபுல் இஸ்லாத்திலிருந்து எழுதியிருப்பதாவது:— துருக்கியில் சில அவசியமற்றதும் ஆடம்பரமுமான செலவுகளை நிவர்த்திப்பதற்கு சட்டமியற்றியிருக்கிறார்கள் என்ற விஷயத்துக்குப்பின் எழுதுவதாவது:—

டாம்பீகச் செலவுகளை ஒழிக்க துருக்கி அரசாங்க முயற்சி.

விவாக காலங்களிலும் வேறு சடங்கு காலங்களிலும் நடக்கும் டாம்பீக ஆடம்பர வீண் செலவுகளால் தேசத்திற்கும் சமூகத்திற்கும் ஏற்படும் நஷ்டத்தை உணர்ந்த துருக்கி அரசாங்கம் அச்செலவை ஒழிப்பதற்காகச் சிலசட்டங்களை இயற்றி அவைகளைத் துருக்கி தேசிய பார்லிமெண்டு சபையில் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறது. அச் சட்டதிட்டங்கள் இன்றையப் பத்திரிகையில் மற்றொரு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை நேயர்கள் கவனத்துடன் படித்துப் பார்த்து நன்குணர்ந்து அச்சட்டங்களை இந்தியச் சகோதரர்களும் அனுஷ்டானத்தில் கொண்டுவர முயற்சி எடுத்துக்கொள்வார்களென்று நம்புகிறோம். டாம்பீக வீண் செலவுகளினால் தேசத்திற்கும் குடும்பத்திற்கும் பெரும் நஷ்டமேற்படுவதாக இருப்பதோடு நமது இஸ்லாம் மார்க்கக் கட்டளைகளுக்கும் முற்றும் மாறான பெரும் பாவகாரியமாயிருக்கிறதென்பதை முஸ்லிம் சகோதரர்கள் கவனியாதிருப்பதற்கும் துர்மார்க்கமான அதிகச் செலவுகள் செய்வதில் மௌலானாக்கள், மௌலவிகள், ஆலிம்கள், மஷாயிக்கள் என்ற உன்னதப் பட்டம் புனைந்த மேதாவிகளும் சம்பந்தப்பட்டிருப்பதற்கும் நாம் மிகவும் வருந்துகிறோம். அம்மகான்கள் அவைகளை விலக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்க அவர்களே இதில் தலைமைவகித்துச் செய்கிறார்களென்றால் அதைப்பார்க்கிலும் மானக்கேடான காரியம் வேறெதுவுமில்லையென்றே கூறலாம். ஆகையால் நமது முஸ்லிம் சகோதரர்களும்

இதரர்களும் வீண் செலவுகளை ஒழிக்க முயற்சி செய்வார்களாக. (ஸைபுல் இஸ்லாம்.)

"முஸல்மான்" நம் முஸ்லிம் சமூகம் சீர்குலைந்து கெட்டுப்போவதற்கு வீண் டாம்பீகச் செலவுகளே முக்கிய காரணமென்பதை மறந்துவிடமுடியாது. பிள்ளை பிறப்புச் சடங்கு, பெயர் வைக்கும் சடங்கு, முடியெடுக்கும் சடங்கு, அகிக்காகச் சடங்கு, நேர்ச்சை சடங்கு, காது குத்துச் சடங்கு, கத்னு, புத்தியறிதல் சடங்கு, விவாஹ நிச்சயச் சடங்கு, நகைச்சடங்கு, விவாஹச் சடங்கு, ஸ்ரீதனச் சடங்கு, மறுவீடு அழைக்கும் சடங்கு, பராத்துச் சடங்கு, தலைப்பேற்றுக்கழைக்கும் சடங்கு, கூட்டியனுப்பும் சடங்கு, தலைப்பெருநாள் சடங்கு, மணமக்களை உறவினர் தங்கள் இல்லத்தில் அழைக்கும் சடங்கு, மரணத்தில் நடக்கும் சடங்கு, மூன்றும் நாள் 7, 15, 21, 40 முதலிய நாட்களின் சடங்கு, வருஷப் பாத்திஹா சடங்கு, கந்தூரிச் சடங்கு, மௌலூதுச் சடங்கு, வீடு கட்டும் சடங்கு, கிரகப்பிரவேசச் சடங்கு, கொடி, சந்தனக்கூடு வைபவம், உத்தியோகத்திற்காக ஓட எடுக்கும் செலவு, முரீதுச் சடங்கு முதலிய இன்னும் அநேக சடங்குகள் நம்மில் காணப்படுகின்றன. இதுவும் போதாதென்று சில மகான்கள் ஜட்கா வண்டி, மாட்டு வண்டி, பீட்டன், மோட்டார் முதலியவற்றால் தங்களின் கீர்த்தியை நாடுகிறார்கள். *

ஆகவே இச்சடங்கு ஆடம்பரங்களில் எது அவசியம் எது அவசியமல்லவென்ற விஷயத்தை தாங்களும் உணர்வதில்லை. சில குருக்களும் தங்களது வருவாய்க்கு மோசமுண்டாகுமெனக் கருதி உணர்த்துவதுமில்லை. ¶ மேலும் சிலர் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான ஒவ்வோர் பாத்திஹாவை இயற்றிக்கொண்டு அதை நடத்தி ஊர்ஜிதப்படுத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்கள். சில பிரசங்கிகள் முஸ்லிம்கள் முன்னேற்றமுறவேண்டுமென பல அரிய உபந்நியாசங்கள் புரிகின்றனர். அதைப் பார்த்தால் முஸ்லிம்களிடம் புகுந்திருக்கும் கொடிய அனாசாரங்களை அடியோடு களைந்துவிடுவார்களென்றே நினைப்பில் வருகிறது. ஆயினும் அம்மகான்கள் பிரசங்க மேடையை விட்டு இருப்பிடத்திற்கு வருவார்களேல் அங்கு நிகழ்த்திய அரிய உபந்நியாசங்களை எல்லாம்

* நேயர்கள் கோடிட்டிருக்கும் பாகத்தை ஊன்றிக் கவனிக்கவும்.

¶ மறுப்பு நூலாசிரியர்களே இதற்குச் சான்றாகலாம்.

வீட்டுத் தாய்மார்களின் பாதகமலங்களில் காணிக்கைவைத்து நான் புரிந்த உபந்நியாசங்களெல்லாம் பிறர்களுக்காகும். தாங்கள் தங்களிஷ்டம்போல் செய்யுங்களெனச் சிரம் பணிந்து விடுகின்றனர். இக்கொடிய டாம்பீக ஆடம்பரச் சடங்குகள் உற்றார் உறவினரைப் பிரித்து பகையை உண்டாக்கிவிடுகிறது. இதனால்தான் அநேகர் இன்ஸால்வெண்டு கொடுத்துவிடுகிறார்கள். ஆதலின் முஸ்லிம்களின் இப்பரிதாப நிலைமையை தலைவர்கள், சீமான்கள், ஆலிம்கள் நன்கு கவனித்து இஸ்லாமிய ஆசாரத்தைப் போதித்து * முஷ்ரிக்கீன் சடங்குகளை நிவர்த்திப்பார்களென நம்புகிறோம் ("முஸல்மான்" தொகுதி 3 பகுதி 10. பக்கம் 283, 284) (ஹிஜ்ரி 1344. ஷவ்வால் 283, 284.)

இதை வாசிக்கும் நேயர்காள்! மேற்கூறிய நமது முஸல்மான் சஞ்சிகையில் அக்கீகா சடங்கு, பராத்துச் சடங்கு, மரணத்தில் நடக்கும் சடங்குகளை முஷ்ரிக்கீன் சடங்குகள் என்று கூறப்பட்டிருக்கிறதா அல்லது அதில் நுழைந்திருக்கும் முஷ்ரிக்கீன் சடங்குகளை நிவர்த்தித்து இஸ்லாமிய ஆசாரப்படி செய்யவேண்டுமென்று வேண்டப்பட்டிருக்கிறதா வென்பதை ஆராய்ந்து மக்கீ ஸாஹிப் மௌல்வி ஸாஹிபின் ஆராய்ச்சித் திறமையை உணர்வீர்களாக. ஆனால் மக்கீ ஸாஹிப் விவாஹச் சடங்கு வீடு கட்டும் சடங்குகளையும் முஷரிக்கீன் சடங்குகள் என்று எழுதாமல் விட்டுவிட்டதேனோ விளங்கவில்லை. இவற்றையெல்லாம் விபரித்தால் பொது ஜனங்கள் நம்பமாட்டார்களென்றெண்ணினார்கள் போலும்? எனவே, இவ்விதச் சடங்குகளில் ஜனங்கள் விபரம் தெரியாமல் பணத்தை வீண் விரயஞ்செய்து பாவத்திற்குட்படாதபடி சுன்னத்தான வழக்கங்களைப் போதித்து அதில் கலந்திருக்கும் பிதுஅத்து குபிர்ச்சடங்கு

---

* இஸ்லாமிய ஆசாரத்தைப் போதித்து முஷ்ரிக்கீன் சடங்குகளையகற்றவேண்டுமென வரையப்பட்டிருக்கிறதேயன்றி இஸ்லாமிய ஆசாரத்தையும் விட்டுவிடவேண்டுமென்றும் முஷ்ரிக்கீன் சடங்கு என்றும் கூறவில்லையே; இதை விளங்கிக்கொள்ளாவிடின் வேறு மார்க்கச் சட்டங்களை இம்மகான்கள் எப்படித்தான் விளங்குவார்கள் என்பதை இதை வாசிக்கும் நேயர்களே சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த லக்ஷணத்தில் மௌலானா, மௌலவி, செய்யிது முஹம்மத் ஷாபுத்தீன் ஹஜரத்தவர்கள் மதரஸாக்களுக்குத் தலைமைப் பதவி வகிக்கப்பார்க்கிறார்களாம்; என்னே மக்கீ ஸாஹிபின் அந்தகாரக் கூற்று?

களை நிவர்த்திக்கவேண்டுமென வரைந்திருக்க இவற்றை யுணராமல் எல்லாவற்றையும் முஷ்ரிக்கின் சடங்குகள் எனக் கூறிவிட்டாரென்று "முஸல்மான்" ஆசிரியர்மீது பழிசாற்றி வீண் வியாசங்களை நீட்டிக்கொண்டுபோவது அறிவீனத்திலும் பெரும் அறிவீனம் என்பதை சாதாரணப் பகுத்தறிவாளனும் அறியத்தக்கதாம். இச்சிறு வியாசத்தின் கருத்தை யுணரத்திறனற்ற மௌலவி ஸாஹிப் வாணியம்பாடியிலும் பேட்டையிலும் மார்க்கக் கிரந்தங்களை எவ்வாறு கற்பித்தார்கள் என்பதும் எமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. முஸ்லிம்காள்! இதை நன்காராய்ந்து இவ்விருவரின் பொறுமை முற்றிய விஷமக்கூற்றை இனியேனும் விளங்கிக்கொள்வீர்களாக.

## 15. கப்ரிலிருந்து அர்வாஹ்கள் வெளிப்புறப்படல்.

பராத்து, வெள்ளிக்கிழமை இரவு, இரண்டு ஈதுப்பெருநாட்களின் இரவு, முஹர்ரம் இரவு, ஆகியவற்றில் இறந்துபோன அர்வாஹ்கள் கப்ரிலிருந்து புறப்பட்டு தங்கள் தங்கள் இல்லங்களில் புகுந்து தன் உறவினரால் ஏதும் ஸதக்கா, பாத்திஹா முதலியன ஓதி ஹதியாச் செய்யப்படுகிறதா அன்றாவெனப் பார்க்கிறதாகவும் அவ்வாறு ஸதக்கா பாத்திஹா ஓதப்பெற்றால் ஆனந்தமெய்தி தங்கள் கப்ருகளுக்குச் செல்கிறதென்றும் இன்றேல் சஞ்சல சாகரத்திலாழ்ந்ததாக அவர்களைத் திட்டிக்கொண்டும் சபித்துக்கொண்டும் செல்வதாகவும் பல ரிவாயத்துக்களில் காணப்படுகின்றன. இதை ஆத்தாரூபாகக்கொண்டு பிதுஅத்து வியாபாரிகள் இன்னும் பல சடங்குகளை இதோடு இணைத்து நடத்திவருகிறார்கள்.

ரிவாயத்துக்களை மேதாவிகளான ஆராய்ச்சிக்காரர்களின் ஆதரவால் பரிசீலனை செய்யுங்கால் உண்மையெனக் காணப்படவில்லை. அஷிஹ்ஹத்துல்லம் ஆத், கஸானத்துர் ரிவாயாத், தஸ்தூருல் கலாத் ஆகிய கிரந்தங்களில் சிலர் சொன்னார்களென்றும், சொல்லப்பட்டிருக்கிறதென்றும் கூறப்பட்டுள்ளதேயன்றி குர்ஆன் ஹதீதில் நின்றும் தக்க ஆதாரம் காட்டப்படவில்லை. அக்கிரந்த ஆசிரியர்களேனும் அந்த ரிவாயத்துக்கள் உறுதியுடையனவென நிச்சயிக்கவுமில்லை. மேலும், அந்த அர்வாஹ்கள் ஸதக்காக் கொடுக்காதவர்மீது திட்டி, சாபமிட்டுப்போவதாகவும் கூறுவதிலிருந்து அந்த ரிவாயத்துக்கள் நம்பத்தக்கதல்லவென்பது இன்னும் அதிக உறுதியடைகிறது. ஏனெனில் மௌத்தானவர்கட்கு ஸதக்கா முதலியன

செய்துவருவது உயிருடையோர்மீது வாஜிபுமல்ல. பர்ளுமல்ல. ஆயினும் அஃதோர் நன்றியாகும். நன்றி செய்யாத ஒருவனைத் திட்டுகிறதும் சபிக்கிறதுமானால் இது ஹறாமாகும். அர்வாஹ்களோ இவ்வுலகை நீத்து அவ்வுலகம் சென்றவை. அவைகளுக்கு இவ் விஷயம் தெரியாமல் மீண்டும் பாவத்தைச் சம்பாதிக்கிறதென்பதனால் இந்த ரிவாயத்துக்கள் உண்மையுடையவைகளல்லவென்பதை ஈண்டு செவ்வனே விளங்கிக்கொள்கிறோம். அன்றியும் இந்த ரிவாயத்துக்கள் ஸஹீஹான ஹதீதுக்கு முரணாகவும் காணப்படுகின்றது.

மிஷ்காத் ஷரீபில் இமாம் அஹ்மது, நஸயீ (ரஹ்) ஆகியவர்களைக் கொண்டுவந்திருக்கும் ரிவாயத்தாவது. மைய்யித்தின் றூஹ் பர்ஸகி (உலகத்துக்கும் ஆகிரத்துக்கும் மத்தியிலிருக்கும் கப்ருடைய ஆலத்தி)ல் போகும்போது மற்ற அர்வாஹ்கள் சேர்ந்து தங்கள் குடும்பத்தார்களின் நிலைமைகளை விஜாரிக்கின்றனவென்பதே.

இந்த ரிவாயத்தின்படி ஒவ்வொரு ஜும்ஆ ஆவிலும் தன் வீட்டில் சென்று நிலைமைகளைத் தெரிந்துகொண்டிருக்கும் றூஹ்கள் மறுபடி விஜாரிக்கவேண்டிய அவசியமில்லையாதலின் அர்வாஹ்கள் ஒவ்வோர் வாரங்களிலும் வீட்டுக்கு வருகின்றனவெனக் கூறும் ரிவாயத்து உண்மையற்றதெனா வியக்தமாய் அறிந்துகொள்கிறோம். (1)

---

(1) மக்கீ ஸாஹிப் கூறுவதாவது:— முமின்களுடைய ரூஹூகள் வெள்ளிக்கிழமை இரவில் விடப்படுகிறது. அந்த ரூஹூகள் முதலாவது தங்கள் கப்றுகளுக்கு வந்து பிறகுதான் வீட்டிற்கும் வருகின்றன. அப்பொழுது மெதுவான சப்தத்துடன் தங்களின் பந்துக்களைப் பார்த்து, எங்களுக்காக தான தருமங்களைச் செய்யுங்கள் என்று வேண்டிக்கொள்கின்றன. அவ்வாறு அவர்கள் ஸதக்காச் செய்தால் ஸதக்காச் செய்தவர்கட்கு அந்த ரூஹ்கள் துஆச் செய்கின்றன. ஸதக்கா வகையறாச் செய்யாவிட்டால் அந்த ரூஹ்கள் மகிழ்ச்சி இல்லாமல் மனவருத்தமாகப் போய்விடுகின்றன. இவ்வாறே இரண்டு ஈதுப்பெருநாள்களிலும், முஹர்ரம் இரவிலும் ஷஅபான்மீ பராத்து இரவிலும் அந்த ரூஹ் வீட்டுக்கு வருகின்றனவென்று யஹ்யாவிலும் மற்ற கிதாபுகளிலும் சொல்லப்படுகின்றன. (மறுப்பு நூல் 61 ப.)

எந்தக் கிரந்தத்திலேனும் எழுதியிருந்தால் மட்டும் போதும். அதன் ரிவாயத்து எம்மட்டு உண்மையெனத் தெரியவேண்டியதில்லையென மௌலவி ஸாஹிபும் மக்கீஸாஹிபும் கருதிக்கொண்டார்கள் போலும்; அப்படியானால் பொய் ரிவாயத்து, பலஹீனமான ரிவாயத்து, பலமான ரிவாயத்து, என்று நம் இமாம்களானமேதாவிகள் ஆராய்ச்சிசெய்வது அவசியமில்லையே;

தவிர இது சம்பந்தமான ரிவாயத்துக்கள் உண்மையற்றவெதன கீழ்க்காணப்படும் மேதாவிகளின் ஆராய்ச்சிகள் நன்கு விளக்கும்.

(1) ஷைய்கு மௌலானா கலீல் அஹ்மது (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:— அர்வாஹ்கள் ஜும்ஆ, பராத்து முதலிய இரவுகளில் தங்கள் கிரகங்களுக்கு வருகின்றனவெனக் கூறும் ரிவாயத்து உண்மையானதல்ல. (பராஹீன காத்திஆ 87-ம் பக்கத்திலிருந்து 95-ம் பக்கம் வரை பார்க்க.)

(2) அல்லாமா ரஷீத் அஹ்மத் கங்கூஹீ (ரஹ்) மைய்யித்தின் ரூஹ் மறைவாக ஜும்ஆவின் இரவு தனது வீட்டுக்கு வந்து தருமங்களையும் நன்மைகளையும் ஆசிக்கிறது என்ற ரிவாயத்து யதார்த்தம் அன்று. (பதாவா ரஷீதிய்யா வா. 1. ப. 86.)

மரணித்தவர்களின் ஆன்மாக்கள் ஜும்ஆவின் இரவு தன்னுடைய வீட்டுக்கு வருவதில்லை (சில கிதாபுகளில் வரும் ரிவாயத்து தவறாகும். (ஷை ரஷீதிய்யா வா. 2. ப. 98.)

மூமீன்களின் ஆன்மாக்கள் வெள்ளிக்கிழமை இரவு முதலியவைகளில் தன் வீட்டுக்கு வருவது எங்கேனும் ஸ்தாபிக்கப்படவில்லை. இது வீணான ரிவாயத்தாகும். இதன்பேரில் உண்மை கொள்வது ஒருபோதும் தகாது. (ஷை ரஷீதிய்யா வா. 3. ப. 8).

(3) மௌலானா ஷாஹ் முகம்மது இஸ்ஹாக் (ரஹ்) கூறுவது வெள்ளிக்கிழமை இரவு, பராத், ஆஷூரா, லைலத்துல் கத்ர் ஆகிய இரவுகளில் புசிக்கிற வஸ்துக்களில்நின்றும் இனிப்பு பதார்த்தங்களின்பேரில் பாத்திஹா ஓதக் குறிப்பிடுவதும் இன்னும் அவ்விரவுகளில் அர்வாஹ்கள் ஆஜராகிறதுமாகிய விஷயங்களின் உண்மை எப்படி என்ற கேள்விக்கு ஜவாபு.

இவ்விரவுகளில் சாப்பாடு முதலிய இனிப்பு பதார்த்தங்களில் பாத்திஹா ஓதக் குறிப்பிடுவது ஹதீதுகளின் உறுதியான கிரந்தங்களில்நின்றும் ருஜூவாகவில்லை. அன்றி இவ்விரவுகளில் அர்வாஹ்கள் வருகிறது ஸனது ஒற்றுமையான மர்பூஆன ஸஹீஹான ஹதீதைக்கொண்டு ஸ்தாபகரமாகவில்லை. (மிஅத்து மஸாயில் 114 ப.)

---

இவ்விஷயங்களைக் கவனித்தால் இவ்விருவரும் ஆராய்ச்சித் திறனற்றவர்களென்பது வெள்ளிடைமலை. மறுப்பு நூல் புத்தகத்தில் அடிக்கடி மாற்றி மாற்றி பொது மக்களுக்கு விஷமம் ஏற்படுமாறு எழுதியிருப்பது பொருமையும் அறியாமையும் என்பதை இப்போது யாவரும் அறிந்துகொள்வர்.

(4) அல்லாமா முல்லா அலீகாரீ (ரஹ்)கூறுவது மைய்யித்து தனது வீட்டில் ஏழுநாள் வரை (வந்து அல்லது இருந்து) ஜனங்களைப் பார்க்கிறது என்ற ஹதீதும் பொய்யானதாகும்.(மௌலூ ஆத்தெ கபீர் 47 ப.)

இன்னும் அல்லாமா முல்லா அலிகாரி ஷைகுல் இஸ்லாம் முதலியோர் இந்த (வெள்ளிக்கிழமை இரவு பராத் இரவு அரபா இரவு ஆன்மாக்கள் வீட்டுக்கு வருகிறது என்ற) ரிவாயத்துக்களை பலமற்றது எனக் கூறுகிறார்கள். (ரிபாஹுல் முஸ்லிமீன்.)

(5) ஆன்மாக்கள் வீட்டுக்கு வருகிற மேற்கூறிய விஷயத்தை சிலர் தங்களது நூற்களில் எழுதி இருந்தாலும், ஸஹ்ஹாஹ் ஸித்தாவில் இல்லாததாலும் ஸஹீஹான மர்பூ ஆன ஸனது ஒற்றுமையானதாக இல்லாததாலும் நம்பிக்கையை விட்டும் வீழ்ந்ததாகும். (ரிபாஹுல் முஸ்லிமீன்.)

(6) ஹகீமுல் உம்மத் மௌலானா அஷ்ரப்அலி தானவி(ரஹ்) மைய்யித்தின் ஆன்மாக்கள் வெள்ளிக்கிழமை இரவில் தங்களது இல்லங்கட்கு விஜயம் செய்கிறதென்றும் ஏதாவது புண்ணியம் கிடைத்தால் சந்தோஷமாகவும் இன்றேல் துக்கமாகவும் சென்று விடுகின்றனவென்றும் நினைப்பது முழுத்தவறான நம்பிக்கையாகும். ஆதாரவின்றி இப்படிப்பட்ட நம்பிக்கை வைப்பது குற்றமாம். (பிஹஷ்தீ ஸேவர் வா. 6. ப. 77.)

விபாழக்கிழமை, பராத் இரவு, ஆகிய இத்தேதிகளில் மரணமானவர்களின் றூஹ்கள் வீடுகளுக்கு வருகின்றனவென்று சிலர் நம்புகிறார்கள். ஆனால் இந்த நம்பிக்கைக்கு ஷரீஅத்தில் யாதும் ஆதாரமில்லை.

மைய்யித்துக்கு அனுப்பப்படும் புண்ணியங்கள் தானாகவே அதன் ஸ்தானத்தில் சேர்ந்துவிடுகின்றன. பின்னர் வீடு வீடாய் அலைந்து திரிவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டுளது.............. மரணித்தவன் சன்மார்க்கனாகவும், சொர்க்கவாதியுமானால் அப்படிப்பட்ட வளம்பொருந்திய இடத்தை விட்டுவிட்டு ஏன் வரவேண்டும்? ஒரு சமயம் துன்மார்க்க நீசனாகவும் நரகவாதியாகவுமிருந்தால் வேதனையைவிட்டும் நீங்கி சுற்றித்திரிவதற்கு அமரர்கள் எங்ஙனம் அநுமதியளிப்பார்கள்? சுருங்கக்கூறின் இவ்விஷயம் பொருத்தமற்றதாகக் காணப்படுகிறது. பல நூல்களில் எழுதப்பட்டிருப்ப

தாகப் பார்த்தாலும் இப்படிப்பட்ட நம்பிக்கை வைக்கலாகாது. எந்தக் கிதாபுகளை அறிவாளிகள் ஆதரவாகக் கொள்ளவில்லையோ அது நம்பிக்கைக்குரியதன்று. (பிஹஷ்திஸேவர் வா. 6. ப. 85).

பராத்து இரவு ஆகியவைகளில் மரணித்தவர்களின் ஆன்மாக்கள் வீடுகளுக்கு வந்து யாரேனும் ஏதும் சமைத்திருக்கிறார்களா இல்லையாவெனப் பார்க்கிறதாகச் சிலர் நம்புகிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட மறைவான விஷயம் ஆதாரமில்லாமல் எவ்விதத்திலும் ருஜுவாகமாட்டாது என்பது வெளிப்படை. அவ்வித ஆதாரமோ இங்கு பூச்சியம்.

இன்னும் பராத்து இரவுக்குமுன் ஒருவன் இறந்துபோனால் பராத்து பாத்திஹா ஓதாதவரை அவன் மைய்யித்துக்களில் சேரமாட்டான் என்றும் சிலர் நம்புகிறார்கள். இதெல்லாம் சுத்தக் கட்டுக்கதையாம். (இஸ்லாஹுர் ருஸூம் ப. 130.)

(7) இன்னும் இந்த ஸவாபு செலுத்துகிறது உண்மையில் இறந்தவர்களின் பேரிலிருக்கிற ஓர் பிரியமேயொழிய மற்றப்படி அவர்களுக்குப் பயந்தாவது அல்லது அவர்களால் நமது எண்ணங்கள் நிறைவேறுமென்று ஆசைவைத்தாவது செலுத்துகிறதல்ல. இன்னும், இறந்தவர்கள் கைபென்ற மறைவான சங்கதிகளை அறிவார்களென்பதும் ஸவாபு செலுத்துகிற வேளையில் அவர்களுடைய அர்வாஹ்(ஆன்மாக்கள்) அவ்விடத்தில் ஹாஜிராகுமென்பதும் கிடையாது. மேலும் அவர்களின் ரூஹு (ஆன்மா) எங்கேயிருந்தாலும் அங்கே ஸவாபு சேர்ந்துவிடும்.(துஹ்பத்துல் ஹிந்து 156-160)

மேற்காட்டப்பெற்ற தக்க மேதாவிகளின் ஆராய்ச்சியில் அர்வாஹ்கள் இல்லந்தோறும் புகுந்து பார்த்துவிட்டுச் செல்கிறதென்பது உண்மையும் உறுதியுமிழந்ததென்பதை தெள்ளிதில் விளங்கிக் கொள்கிறோம்.

## 16. மௌலூத் ஷரீப்.

எம் நபிகள் நாதர் ரசூல அக்ரம் (ஸல்) அலைஹிவசல்லம் அவர்களின் அவதாரச் சிறப்பை விபரிக்கும் மௌலிது ஷரீப் நாடெங்கும் நடத்துவது உத்தமமான காரியமாகும். இதைப்பற்றி "முஸல்மான்" ஆசிரியர் விபரித்திருப்பதை நேயர்களின் பார்வையில் தர விரும்புகிறேன்.

நபியே சொல்வீராக: நீங்கள் அல்லா(ஹ்)வின்மீது பிரியம் வைத்திருப்பீர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (எனது பாதையின்பேரில் நடவுங்கள். அப்போது) அல்லா(ஹ்)வும் உங்கள்மீது அன்பு பாராட்டுவான். இன்னும் உங்களது குற்றத்தைப் பொறுத்துவிடுவான். அன்றி அல்லா(ஹ்) மன்னிக்கிறவனும் கிருபையாளனுமாயிருக்கிறான். (ஆலஇம்றான்.) நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களை நோக்கி கூறினதாவது:-எனது குழந்தையே! நீ காலையும் மாலையும் உனது இருதயத்தில் யாரைப்பற்றியாவது கெட்ட எண்ணமின்றி கழிக்கக்கூடிய திறமை வாய்ந்திருப்பாயானால், கட்டாயம் அப்படியே செய். பின்னரும் நாயகம் அருளினார்கள்: என் குழந்தையே! இது எனது சுன்னத்தாயிருக்கிறது. எவன் எனது சுன்னத்தை நேசிப்பானோ, அவன் என்னை நேசித்தவனாவான். எவன் என்மீது அன்பு வைத்தானோ சுவனத்தில் அவன் என்னோடிருப்பான். (மிஷ்காத்.)

சங்கை வாய்ந்த இம்மதியில் நம் நாயகதிலகம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் உதயமாய் உலகில் சன்மார்க்கத்தைப் பரப்பினார்களென்பதை நாம் நன்கறிகிறோம். அதன் ஞாபகார்த்தமாகவும், அந்நாயகம் அவர்கள்மீது நமது உள்ளன்பைப்பெருக்குவதற்காகவும் அவர்களின் தூய்மையான குணலட்சணங்களையும் நடவடிக்கைகளையும் செவ்வனே உணர்ந்துகொள்வதற்காகவும் ஏறத்தாழ எல்லாப்பாகங்களிலும் மௌலிதுஷரீப் ஓதப்பெற்றுவருகிறதை அறிந்த யாம் மகிழ்வுறாதிருக்கமுடியவில்லை. எம் பரிசுத்த நம் பெருமானவர்கள் 23 வருஷகாலம் அந்த அஞ்ஞானிகளிடையே வாசம்செய்ததும் அதன்பொருட்டால் அவர்கள் மெஞ்ஞானிகளாகவும் சற்குண சொரூபராகவும் உலகத்திற்கே ஓர் மாதிரியாகவும் ஆய்விட்ட அதிசயத்தை நோக்குமிடத்து அந்த நாயகமவர்களின் அதிசய சக்தியையும் ஆச்சரியத்திற்குரிய திவ்விய ஒழுக்கங்களையும் எங்ஙனம் வகுத்துரைக்கக் கூடும்? அங்ஙனமாயின் பல நூற்றாண்டுகளாக நடைபெற்றுவரும் மௌலிது ஷரீபின் நோக்கத்தால் நாம் எத்தன்மையடைய வேண்டுமென்பதை எடுத்துக் கூறவும் வேண்டுமோ?

இம்மகா சபையில் நம்முஸ்லிம்கள் அடையவேண்டிய லட்சியம் யாது? இது எதற்காக ஏற்பட்டது? இதன் பலன்தானென்ன? என்ற விஷயங்களை யாம் அறிந்துகொள்ளாததே இதன் பயனை

அண்டயித் தடையாய்விட்டதெனப் பகரல் சால்வும் பொருந்தும். உலக இலட்சியத்தைக் கோரி எத்தனையோ சபைகள் நடத்தப்படுகின்றன. அச்சபையால் அநேக நாகரீகங்களும், தேசிய ராஜ்ய முன்னேற்றங்களும் நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்துகொண்டிருப்பதற்குச் சாக்ஷியும் வேண்டுமோ? வியாபாரம், கைத்தொழில் ஆகிய சபைகளால் எத்தனையோ இலாபங்கள் ஏற்படுகின்றன. தேச முன்னேற்றத்திற்காகவும், சுயேச்சைக்காகவும் பல சபைகள் நடத்தப்படுகின்றன. அதன் நோக்கத்தை யுணர்ந்தோர், எத்துணை அரும் கஷ்டமெய்தினும் அவற்றை அணுத்துணையும் பொருட்படுத்தாது தங்களது உயர்ந்த நோக்கமே சித்திபெறவேண்டுமென்ற அவாவினால் நூற்றுக்கணக்கான இன்னல்களைச் சகிக்கின்றனர். கடைசி தங்களது விடாமுயற்சியால் ஏற்பட்ட பயனையும் அறிந்து மகிழ்கின்றனர். இதன் காரணமென்னவென்று ஊன்றிக் கவனிக்குமிடத்து அச்சபையின் நோக்கத்தை அவர்கள் நன்கு விளங்கியறிந்து அதன்படி ஒழுகி நடந்ததால் நிட்சயமாய் நம் நோக்கம் நிறைவேறிப் பூர்த்தியடையும் என்ற நம்பிக்கையே இங்ஙனம் அவர்களைத் தூண்டிற்று என்பதை நன்கறிந்துகொள்கிறோம்.

இப்போது, மௌலிது ஷரீப் ஓதிவரும் மகாசபையைக் கவனிப்போம். இச்சபை ஏனைய சபைகளைவிட விசேஷ மதிப்பும், மறுமைப் பாக்கியத்திற்கு முதற்காரணமாகவு மிருக்கிறதென்பதை சாமான்யர்முதல் சகலரும் அறிகிறோம். அதன் பயனாக அச்சபையைச் சிறப்பித்து முடிப்பதற்கு ஏராளமான திரவியம் செலவிடப்படுகிறது. அங்கு விஜயம் செய்யும் மகான்கள் அங்கசுத்தியுடன் பயபக்தியாகவும் ஒழுக்கத்தோடு கைகட்டி வாய்பொத்தி வீண் வார்த்தை உச்சரிக்காமலும் பரிமள வாசனை கமழ நடந்துகொள்வதை நோட்டமிட்டால் மற்ற உலகாதாயத்தைக் கோரி ஏற்படும் சபைகளெல்லாம் இதற்கு ஓர் அணுத்துணையும் நிகர் நிற்காதென்பது தெள்ளிதில் விளங்கும். இங்ஙனம் சீரும், சிறப்பும் வாய்ந்த இத்திருச்சபையால் நம்முஸ்லிம் சகோதரர்கள் அடைந்தசீர்திருத்தமென்ன? எத்தனை பேர் நாயகமவர்களின் சரித்திரச் சிறப்பைச் செவியுற்று மகிழ்ந்தனர். எத்தனை பேர் தொழுகை, நோன்பு, ஸகாத் ஹஜ் முதலிய வணக்கங்களிலீடுபட்டனர். எத்தனை பேர், குபுர்ஷிர்க்கு, அனாசாரம், பித்அத்து, வீண்சடங்கு, பெருமைச் செலவு, ஆடம்பர வாழ்க்கைகளைத் தவிர்த்தனர். எத்தனை பேர்

தாடிவைத்து மீசையைக் குறுக்கி நெற்றிமுடியை வெட்டி, நடையுடை பாவனைகளில் நஸாறாக்களின் வழக்கானுசாரங்களைப் புறக்கணித்து நாயகமவர்களின் சுன்னத்தைப் பின்பற்றினார்கள்; எத்தனை பேர் இருதயக் கசடுகளை நீக்கி, தாழ்மை, பொறுமை, எளிமை, சாந்தம் அல்லா(ஹ்) ரசூலின் அச்சத்தை ஹிருதயத்தில் அமைத்தல் அவர்களை மெய்யாக நேசித்தல் ஆகிய நல்லொழுக்கங்களைக் கைக்கொண்டனர். இன்னும் வட்டி வாங்கல், பொய்கூறல், ஏமாற்றுச்செய்தல், அடுத்தோரை வஞ்சித்தல், திருடல், வாக்கைமறுத்தல், வியாபாரங்களில் சூது வாது செய்தல், ஒருவருக்கொருவர் பகைமூட்டல், கோள் சொல்லல் முதலிய துர்க்குணங்களை அகற்றினவர் எத்தனை பேர்? என்ற இவ்விஷயங்களைச்சிறிதுநேரம் தெளிந்த மனதின்கண் சிந்தனைசெய்தால் ஓர் பெருத்த ஏக்கமும் திகிலும் உண்டாய்விடுகின்றது. கிறிஸ்தவர், ஆரியர் சிறிய சபைகளை அமைத்து அதனாலடைந்த பயனை உணரவேண்டாமா? குக்கிராமம், பட்டணம் முதல் கிறிஸ்தவமயமாகச் செய்துவிட்டார்கள். முஸ்லிம்களை இந்து மதத்தில் சேர்க்க ஆரியர் புரியும் சூழ்ச்சிகளை மறந்துவிடமுடியுமா? தேச சபைகளால் சாமான்யர்முதல் என்ன உயர்நிலை அடைந்து வருகிறார்களென்பதை உணரவேண்டாமா? இவ்வாறாக முஸ்லிம்களாகிய யாம் அநேக நூற்றாண்டுகளாக எப்பாகங்களிலும் குறைவின்றி நிகழ்த்திவரும் இம்மாபெரும் சபையால், அடையவிருந்த லட்சியத்தை அடையாதுபோனது பெருத்த ஏமாற்றமாய்விட்டது. நாம் இம்மண்ணுலகத்தில் நிகழும் மகா பெரும் சபையின் லட்சியத்தைக் கவனியாததுபோல் வேறெவ்வகுப்பாரும் கவனியாமலிருந்தார்களெனப் பகர்வதற்கில்லை. இதற்காக நாம் எவ்வளவு தூரம் விசனித்தாலும் உண்மையில் அது குறைவேயாகும்.

இம்மகா சபையின் நோக்கமென்ன? நமது நபிகள் திலகம் அவர்களின் ஜீவிய வாழ்நாட்களின் நிகழ்ச்சிக்குறிப்புகளை உணர்ந்து நாமும் அவ்வாறு நடந்து சத்திய மதக்கொள்கைகளையும் நடப்பு ஆசாரங்களையும் எங்கணும் பரப்பி உண்மையை விளங்கச்செய்வதும் அவர்களின்மீது என்றென்றும் மறவா அன்பும் பாசமும் ஏற்படக்கூடிய ஓர் சம்பந்தத்தை உண்டுபண்ணிக்கொள்வதுமல்லவோ இதன் கருத்து. இக்கருத்து இம்மகா சபையினால் உற்பத்தியாகாதபட்சம் இச்சபையை என்னென்றுதான் நினைத்திருக்கின்றார்களென்பது விளங்கவில்லை. பயன் தரக்கூடியதும் மானிடவர்க்கங்

களை நிமையினின்றும் அகற்றி இகபரமிரண்டினும் மகோன்னதப் பதவியை அடையச்செய்யும் இம்மௌலிது ஷரீபின் சபையின் உண்மைக் கருத்தை இவர்கள் உணர்ந்தவர்களெனக் கூறமுடியுமா? இதனாலன்றோ, ஒரு இந்து நண்பர் இது என்ன சபை என்று ஓர் முஸ்லிமிடம் வினவ, இது வழக்கமாக ஓதிவரும் ஓர் பாத்திஹா வென விடையளிக்கும்படி நேர்ந்தது.

நாயகம் அவர்கள்மீது கொண்டுள்ள அன்பினால் இவ்வைபவத்தை நடத்திவைக்கும் மேதாவிகளே! முஸ்லிம்களின் நிலையை உணர்ந்து அவர்கள் நேர்வழியைப் பெறத்தக்க வழியில் அதை நடத்திவைத்தால் அதன் உண்மையான நோக்கங்கள் அதிவிரைவில் சாமான்யர்களின் இருதயங்களில் புகுந்து ஏனையோருக்கும் ஓர் மாதிரியாக யிருப்பார்களென்பதில் ஐயமுண்டோ? நாயகமவர்கள் ஜனனமானது முதல் இறுதிவரையில் மதப்பிரசாரத்தை பிரதம சேவையாகக்கொண்டு என்னென்ன இன்னல்களைத் தாங்கினார்கள். அவர்களின் வாழ்நாட்களின் லட்சியம் யாது? அவர்களின் தூய்மையான நடத்தையும் குணலட்சணங்களும் எவ்வாறு அமையப் பெற்றிருந்தது. மெய்யாக, இதே நோக்கத்தை நாமும் பின்பற்றி யிருந்தால் நாம் எத்தனைபேர்கள் உத்தம பாதையில் பழகினோம்? எத்தனை இதர மதஸ்தர்களுக்கு சன்மார்க்கத்தைப் புகட்டி நேர் வழியில் திருப்பினோம் என்பதை நமது இருதயத்தில் நோட்டமிட்டால் நமது நிலைமையை நாமே நன்குணரலாம். உண்மையில் நாயகமவர்களின் நோக்கத்தை யொட்டி இம்மகா சபையை அமைப்பதே உண்மை லட்சியமாகும்.

அர்த்தம் தெரியாமல் ஓதினாலும் நன்மைதானே என்று சிலர் வாதிக்கலாம். சகோதர சிகாமணிகளே! எமது நபிக திலகம் அவர்களைப் புகழ்கிறதும் சரித்திரங்களை ஓதுவதும் தெரியாத பாஷையில் நடை பெற்றால் அதன் கருத்தை விளங்குவது யார்? நன்மைதானென வைத்துக்கொண்டாலும் அவர்களின் சொற், செயல், நடை பாவனை முதலியவற்றைத் தெரிந்து கொள்வதெப்படி? தெரிந்தாலல்லாது, அதன்படி நடக்கமுடியுமா? நாயகமவர்களின் புகழை எடுத்துரைப்பது நன்மைதான். ஆயினும், அந்த நாயகமவர்களின் நடப்பைப் பின் பற்றினால் தானே அந்தப் புகழும் பூர்த்தி யடையும்? இதைவிட்டு வெறும் புகழாகவே புகழ்ந்துகொண்டிருந்தால் மட்டும் போதுமா? அந்தப் புகழோடு நமது நடப்பும் சேர்ந்

திருந்தால் அது உண்மையான புகழாகும். நமது இறைவனால் அருளப் பெற்ற திருக் குர்ஆனிலும் பரிசுத்த திரு நபியவர்களின் ஹதீதுகளிலும் நாயகம் அவர்களை அன்பு வைப்பது அவர்களின் நடத்தையைத் துயர்வதாகும் என்று அருளப்பட்டிருப்பதை நோட்டமிட வேண்டும். இந்நோக்கம் நிறை வேற வேண்டுமாயின் அச்சபையின் கண் ஓதப்பெற்ற அரபி வாக்கியங்களை தமிழில் மொழி பெயர்த்து எல்லோருக்கும் விளங்குமாறு தெளிவாக விளக்கம் செய்யவேண்டும். தற்சமயம் தமிழில் வெளி வந்துலாவும் திரு நபி சரித்திரம் என்னும் நூல் இக்கருத்துக்கு போதிய பலனளிக்கும் என்பது நிக்ஷயம். இவ்வாறு இச்சபை நிகழ்ந்து வருமாயின் அல்லா (ஹ்) ரசூலின் பொருத்த மேற்பட்டு இகபர மிரண்டிலும் பலனெய்துவதில் சந்தேகமின்று. எனவே, இவ்வித உண்மை யான லட்சியத்துடன் இச்சபைகளை நடத்திவர எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பானாக. நபிகள் நாதரவர்கள் அவதார மகிமையையும் மற்றும் உயர்மிக்க சிறப்புக்களையும் முற்காலங்களில் பற்பல சந்தர்ப்பங்களிலும் கூறப்பட்டு வந்த போதிலும் ரபீஉல் அவ்வல் மதியில் குறிப்பாக ஓதிவரும் இவ்வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டதென்பதற்கு கீழ்க்கண்ட ஆதாரங்கள் தக்கசான்றாகும்.*

1 இராக் என்ற தேசத்தைச் சேர்ந்த மோசூல் என்ற நகரில் ஷைக் உமர் (ரஹ்) என்றவரால் (மௌலித்ஷரீப்) ஏற்படுத்தப் பெற்று 700 வருடங்களாக நடந்துவருகிறது. அபூஸயீத் முஸபர், என்ற அரசர் இதைப் பின்பற்றி ரபீஉல் அவ்வல் மாதத்தில் குறிப்பாக்கி வைத்தார். (சுருக்கம்) (அன்வாருஸ்ஸாதிஆ, பராஹீன காத்தி ஆ 160)

2. ஹிஜிரி 604-ம் வருஷத்தில் மௌலிது சபை ஏற்பட்டது: (அஸலீ ஹனபிய்யத் 8. ப.)

---

* மறுப்பு நூல் 7, 8, 19, 26, 29, 30, 38, 39, 42, 43, 45, 48, 50, 51, 52, 54, 87, 96 ஆகிய இன்னும் பல பக்கங்களில் முஸல்மான் கோஷ்டியார் மௌலிது ஓதப்படாதெனக் கூறுகிறார்கள் என்று பொய்யான அபவாதங் கூறி மூர்க்கத்தனமான முரட்டு வார்த்தைகளால் திட்டிக் குவிக்கப் பட்டிருப்பதை முஸ்லிம்கள் உணர்ந்து இன்னோரின் துர்ப்பிரசாரத்தை ஒதுக்கித் தள்ளுவார்களாக.

3. ஹிஜ்ரி 604-ம் வருஷத்தில் அர்பல் தேசத்தின் முஸப்பருத்தீன் பாதுஷா இம்மௌலிது ஷரீபை ஏற்படுத்தினர். (பத்ஹ் ஹக்கானி 41, 66. ப.)

4. ஹிஜ்ரி 604-ம் வருடத்தில் ஷைக் உமரிபுனு முஹம்மத் என்பவர் மோசுல் நகரில் ஏற்படுத்தினர். (பதாவா மீலாத் ஷரீப் 14.)

5. ஹிஜ்ரி 600 வருஷங்களுக்குப்பின் ஒரு அரசர் இந்த (மௌலிது ஷரீபை) ஏற்படுத்தினர். (பதாவா ரஷீதிய்யா வா. 2. ப. 77.)

6. தாரீக் இபுனு குல்லக்கானிலும் இவ்வாறே எழுதப்பட்டிருக்கிறது. (ஷை ப.)

7. அது (மௌலிது ஷரீப்) குறூனுஸ் ஸலாதாவுக்கு (முக்காலங்கட்கு)ப்பின் மலிக்குல் மூலப்பர் அபூஸயீத் பாதுஷாவுடைய காலத்தில் உண்டாயிற்று. (ஜவாஹிருல் மஸாயில் 131. ப.)

8. மௌலூத் ஷரீப் சபை—பெரியார்களான அஸ்ஹாபுகள் காலத்தில் ஸ்தாபகாமில்லையாயினும், மார்க்கமறிந்த பெரியோர்கள் அழகாக நினைத்து அதை ஆகுமாக்கி யிருக்கிறார்கள். எவ்விதத்திலும் நபிநாயகமவர்களின் உண்மைச் சரித்திரங்களை விபரிப்பதும் அவர்களின் பேரில் ஸலவாத்து ஓதுவதும் எப்போதும் நன்மைக்குக் காரணமாகுமே யன்றி வேதனைக்குரியதன்று. ஆயினும் ஒரே தெய்தியைக் குறிப்பிடுவதும் சடங்கைப்போலாக்கிக் கொள்வதும் அவசியமல்ல. (பச்சாஸ் மத்ஹபி சுவாலாத்கே ஜவாபாத் 33:)

மேற்கூறப் பெற்ற சான்றுகள் மூலமாக நம் தேயங்களில் நிகழ்வுற்று வரும் மௌலூத் சபைகள் நபிகணாயகம் அவர்கள் காலத்தில் நிகழவில்லை யென்றும் அக்காலத்தில் மாதம் தெய்தி குறிப்பு அன்னியில் உபதேசம்போல் பற்பல சந்தர்ப்பங்களிலும் நடைபெற்று வந்ததென்றும் பிற்காலத்திய மேதாவிகள் நபிகள் நாயகம் அவர்களைப் புகழ்ந்து ஸலவாத்து ஓதி அவர்களின் சரித்திரங்களைப் பொது ஜனங்களுக்கு விளங்க வைக்க சபை ஏற்படுத்தினார்கள் என்றும், இப்போது அறிந்து கொள்கிறோம். இப்படிப்பட்ட கீர்த்தி பெற்ற மௌலூத் ஷரீபை ஓதி நபிகணாயகம் அவர்கள் அவதார மகிமையையும் இதர சரிதைகளையும் விபரிப்பதும்,

ஸலவாத்து ஓதுவதும், பெரும் புண்ணிய மாதலின் அதற்குக்கூலி கொடுப்பதும் வாங்குவதும் நியாயமல்லவென அதே மேதாவிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

1. மௌலிது ஓதி கூலி வாங்குவது ஆகுமா ஆகாதா என்பதில் ஹனபி மத்ஹபின் ரத்துல் முஹ்தாரில் இஜாராவுடையபாடத்தில் இமாமத்து அதான், வஹஸ், குர்ஆன் ஓதிகொடுக்கிறதுபோல் கொத்த விடுவதினால் தீனுக்கு பழுதுநேரிடும்படியான காரியங்களைத் தவிர மற்றும் குர்ஆன் ஓதுகிறது ஸலவாத்து, தஸ்பீஹ் தஹ்லீல் வகையறு ஓதுவதற்கு கூலி வாங்குவதும் கொடுப்பதும் ஹறாமென்று வருகிறதின்படி மௌலூது ஓதக் கூலி பேசுவதும் கூலி கொடுப்பதும் ஜாயிஸ் அல்லவென்று தெரிய வருகிறது. வல்லாஹு அஹ்லம் (ஜவாஹிருல் மஸாயில் 132)

2. குர்ஆன் ஷரீப் ஓதி ஹதியாச் செய்வதற்கும் துஆ ஓதுவதற்கும் மௌலிது ஷரீப் ஓதுவதற்கும் கூலி கொடுப்பது ஆகாதென்றும் கெட்டபிறு அத்தென்றும் (அக்கூலி கொடுத்தவர்களுக்கும் வாங்கினவர்களுக்கும்) மக்ரூஹ் தஹ்ரீமுடைய குற்றமேற்படுவதோடு யாதொரு தவாபும் கிடையாதென்றும் ஹனபீ மத்ஹபில் சிறந்த நூல்களாகிய ரத்துல் முஹ்தார், தரீக்கத்துல் முஹம்மதியாவின் ஷரஹுகள், ஹிதாயா, ஷரஹ்ஹிதாயா முதலிய கிதாபுகளில் வருவதால் மேற்சொன்னவைகளுக்கு கூலிகொடுக்கவும் வாங்கவும் கூடாது. (மஜ்லிசுல் உலமா மௌலிது நோட்டீஸ்)

மௌலிது ஷரீப் ஓதுவதற்கென்று சிலர் நேர்ச்சை செய்கிறார்கள். அது செல்லத்தக்கதன்று. நிறைவேற்றுவதும் அவசியமன்று.) *

இன்னும் அளவுக்கதிக தீபாலங்காரங்களோடு கூடி வேறு பல ஆடம்பரங்கள் செய்வதும் இப்புனித சபைக்கு லாயக்காகாது. நாயகதிலகம் அவர்களின் அன்பைப் பெறுவதற்குரியதும் மறுமையை ஞாபகர்தரத்தக்கதுமான காரியாதிகளே பரிசுத்தமான இச்சபைக்குப் பொருத்தமாகும்.

---

* ஜவாஹிருல் மஸாயில் 137-ம் பக்கத்தில் ரத்துல் முஹ்தாரில் நின்றும் ஆதாரங் காட்டப்படுகின்றது. மஜ்லிசுல் உலமா பத்வா 15-ம் பக்கத்திலும் பதாவா இம்தாதிய்யா வா. 2. ப. 83 லும் இவ்விஷயத்தின் உண்மை காண்க.

மௌலிது ஓதுகிற மஜ்லிசை பிடவைகளால் ஸீனத்துச்செய் வது வழமையாக்கப் பட்டிருக்கிறது. அது ஹனபி மதுஹபின் படிக்கும் ஷாபியீ மதுஹபின் படிக்கும் மக்ரூஹ் என்று விபரமாய் உடுப்பணிவதின் பாடத்தில் எழுதியிருக்கிறது பார்த்துக்கொள்ள வும். நிற்க நிஸாபுல் இஹ்திஸாபில் நிகாஹுடைய மஜ்லிசில் நடக் கும் பிதுஅத்துக்களை விபரிக்குமிடத்தில் இதையும் ஒரு கெட்ட பிது அத்தாக்கி இபாதத்துக்களில் ஸீனத்துச்செய்வது பாவமா யிருக்குமென்று வருகின்றது. மௌலிது ஓதும் மஜ்லிசில் தேவை க்கு அதிகமாக வீணில் விளக்குகளை யேற்றுவது இஸ்ருபும் மஜூ ஸிகளுக்கு ஒப்பாக்குதலுமாயிருக்கும். ஆனதால் இரண்டு மதுஹ பின் படிக்கு ஹறாமென கெட்ட பிது அத்தாயிருக்கும். (ஜவாஹி ருல் மஸாயில் ப. 132.)

இன்னும் நபிகள் நாயகமவர்கள் மகிமைப் பிரதாபங்களையும் சரித்திரச்சிறப்புக்களையும் விபரிக்கும் சிறப்புற்ற சபையில் வேடிக் கை விளையாட்டுப் போல் நாடக மெட்டுகளில் இராக சங்கீதமாகப் பாடுகிறதும், பாட்டுப் போட்டிகள் நடத்துகிறதும் அளவு கடந்த சப்தமிடுகிறதும் பஜ்ருடைய ஜமா அத்துப் பிந்தும்படி இரவில் வெகு நேரம் விழிக்கிறதும் மௌலிது சபையின் சங்கைக்கு ஏற்ற தல்ல. அச்சபையை பரிகசிக்கிறதற்கொப்பாகும். இன்னும் ஆதர மற்ற சரித்திரங்களை விபரிப்பதும் நியாயமாகாது.

நமது தேசங்களில் மௌலிது ஓதும்போது "யாசைய்யிதீயா ரசூலல்லாஹி குத்பீயதீ, மாலீ சிவாக்கவலா அல்பீ இலா அஹதீ" என்ற பைத்தை ஓதும் வழக்கம் நாடெங்கும் நிகழ்கின்றன. இந்த பைத்தை ஜிப்ரீல் (அலை) அவர்கள் நாயகமவர்கள் மீது சொன்ன தாக உரையாசிரியர் கூறுகின்றனர். உ-தாரணமாக:-

தனதாகக் கண் காஙூ தாத்தொழிலைக் கண்டு வந்த- இனிய மொழி நபிபேரில் இறையே ஸலவாத்துரைப்பாய் - மலக்கானஜிப் ரீலு மகிமை நாவுரைத்த புகழ் - துலக்கமாய்ப் படிப்பவர்க்கும் துய் யோன் ரஹ்மத்துண்டாம். என்பதாம்.

இந்த கவியை ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபிகள் நாயகம் அவர்கள் சமுகத்தில் சமர்ப்பிக்கப் பட்டதாகத் தெரிகிறது. அப் படியானல் ஹதீதுடைய கிதாபுகளில் சொல்லப்பட்டிருக்க வேண் டுமன்றோ? பல ஆலிம்களிடத்தில் அதைப்பற்றி விஜாரிக்கும்போது

அவ்வாறில்லை யெனக் கூறுகிறார்கள். ஆதலின் இதன் உண்மையை ஆராய்ந்து ஓதுவதே நன்முறையாகும்.

நபிகள் நாயகம் அவர்கள் மீதில் ஹதீதுகளை பொய்யாக உண்டு பண்ணுவதும் அதைப் பிரசங்கிப்பதும் அதைக் கேட்பதும் பெரும் பாவமும் மகா துரோகமுமாகும். அறிந்துகொண்டு என்பேரில் பொய்ஹதீதை உண்டு பண்ணுகிறவன் ஒதுங்கும் ஸ்தலம் நிட்சய மாக நரகமாகும்: (மிஷ்காத்) இன்னும் இப்பொய் கூறும் இவ்விஷ யங்களை விரிவாக ஜவாஹிருல் மஸாயில் 35, 36-ம் பக்கங்களிலும் பதாவா ரஷிதிய்யா வா. 2. 80, 81 பதாவா இம்தாதிய்யா வா. 3. 143 பக்கங்களிலும் காணலாம். ஆதலின் இப்படிப்பட்ட பொய் யான ரிவாயத்துக்களை விட்டும் பேணுவது வாஜிபாகும்.

எனவே, சகோதரர்களே! மௌலிது ஷரீப் சபைகளை அதற் குரிய அதபு ஒழுக்கத்தோடும் நிறைவேற்றி இகபரமிரண்டினும் இணையில்லான் அருள் பெற்றுனந்திப்பீர்களாக.

## குழந்தைகட்குப் பாலூட்டல்.

குழந்தைகட்கு அன்னை பாலூட்டுவது உத்தமம். இதர நன் னடக்கையுடைய ஸ்திரீகள் இவ்வேலையில் ஈடுபட்டால் அதுவும் மெத்த விசேஷமே. குழந்தைப் பருவத்திலூட்டும் பாலாகிறது அச்சிசுவின் இயற்கையில் அமைந்துவிடுவதால் குழந்தைகளுக்குப் பாலூட்டும் ஸ்திரீகள் முஸ்லிமாகவும் சாலிஹானவளாகவும், நற் குணமுள்ளவளாகவும் இருத்தல் அவசியமாகும். தூர்க்குணமும் நன்னடைத்தையு மில்லாத ஸ்திரீகளாயின் அவர்களின் குணங்க ளும் அச்சிசுவின் இயற்கையில் சார்ந்து விடுமாதலின் பாலூட்டச் செய்வோர் இவ்விஷத்தில் அதி ஜாக்கிறதையாக இருந்து கொள் ளல் வேண்டும்.

குழந்தைகளுக்கு பாலூட்டும் வயதாகிறது பலமான தீர்ப்புப் படி இரண்டு வருஷமாகும். ஓர் குழந்தை ஆணாயினும் பெண்ணா யினும் அக்குழந்தைக்குப் பாலூட்டியவள் அக்குழவிக்குத் தாயாக வும் அவளுடைய பர்த்தா அக்குழந்தைக்கு தந்தையாகவும் அவ ளது மக்கள், அக்குழந்தைக்கு சகோதர சகோதரிகளாகவும் ஆய் விடுகிறார்கள். பிற்காலத்தில் இவர்களுக்குள் எவ்விதத்திலும் விவாக சம்பந்தம் ஏற்பட வழி இல்லை. ஆதலின் அமுதூட்டும் அன்னை

யும் பாலுண்ணும் குழந்தையும் இவ்விஷயங்களை நன்கு ஞாபகம் வைத்துக் கொள்ளல் வேண்டும். ஒரு சமயம் இவ்விஷயம் ஞாபகமில்லாமல் இவர்களுக்குள் விவாகம் நடந்துவிட்டால் சகோதரனும் சகோதரியும் விவாகம் செய்து கொண்டது போல் பெருங் குற்றமும் மஹா தோஷமும் அதிற் பிறக்கும் குழந்தைகள் ஹராமிற் பிறந்த குழந்தைகளுமாக ஏற்பட்டுவிடக் கூடும். (நவூது பில்லாஹ்) ஆதலின் பாலூட்டும்போதே இதர மனிதர்களை இதற்கு சாக்ஷி வைத்துக்கொள்வது சாலச்சிறந்தது.

குர்ஆன் ஷரீபிலும் ஹதீது ஷரீபிலும் பாலூட்டியவள் குழந்தைகளுக்குத் தாயாகவும், அல்லது குழந்தைகள் சகோதர சகோதரிகளாகவும் ஆய்விடுகிறார்களென்று கூறப்பட்டிருக்கிறது.

சிற்றூர்களிலுள்ள சில மடவார்களுக்கு இவ்விஷயம் தெரியாமல் நீண்ட காலம் ஹராமான பாவத்திற்குட்பட நேரிடுமாதலின் இவ்விஷயத்தை யாவருக்கும் தெரியும்படி விளக்கமாகப் போதித்தல் அறிஞர் மீது ஏற்பட்ட விதியாம்

## 18. அகீக்காவின் விபரம்.

குழந்தைகளுக்காக அகீகா கொடுப்பது ஓர் முக்கிய நன்மைகளிலொன்றாகிய முஸ்தஹப்பாகும். நாயகம் திருவுளமானார்கள். குழந்தை தனது அகீகாவுக்கு ஈடு வைக்கப்பட்டிருக்கிறது. ஏழாம் நாள் அக்குழந்தைக்காக உயிரினம் அறுக்கவேண்டும்: இன்னும் பெயர் வைத்து தலைமுடி களையவேண்டும்.

ஏழாம் நாள் அகீகா சடங்கை நிறைவேற்ற வியலாவிடின் பதினான்காம் நாள் செய்யவேண்டும் கஷ்டத்தினால் அப்போதும் செய்ய முடியாவிடின் சக்தி வாய்ந்த போது செய்யலாம். நாயகமவர்கள் தங்களது அகீகாவை 50-ம் வருஷத்தில் நிறைவேற்றியிருக்கிறார்கள். அவ்வாறும் செய்ய முடியாவிட்டால் கடன் வாங்கி கஷ்டப்பட்டுச் செய்யவேண்டுமென்ற விதி இல்லை. அகீகா ஏழாம் நாளைக்குமுன் செய்தல் கூடாது. *

---

* ஜனாப் மௌல்வி ஷரபுத்தீன் ஸாஹிப் அவர்களின் முயற்சியின் மீது மக்கீ ஸாஹிப் அவர்களால் வரையப்பெற்ற மறுப்புநூல் 19-ம் பக்கத்தில் மௌத்தானவர்களின் கப்ருகளை வலியாத்துச் செய்வதையும், அவ்லியாக்களிடம் வஸீலாத் தேடுவதையும், அகீகா கொடுப்பதையும், பராத்து

(ஹதீது) [சக்தி வாய்ந்தவர்கள்] ஆண் குழந்தைக்காக இரண்டு ஆடும் பெண் குழந்தைக்காக ஒரு ஆடும் அறுக்கவேண்டும். இரண்டு ஆடு கொடுக்க இயலாதவர்கள் ஆண் குழந்தைக்கு ஒரு ஆட்டைக் கொண்டும் அகீகாச் செய்யலாம். நாயகமவர்கள் ஹஸ்ரத் பாத்திமா (ரலி) அவர்களை நோக்கி "குழந்தையின் தலை முடியைக் களைந்து அந்த ரோமங்களுக்குச் சமமாக வெள்ளியை தானம் செய்யவேண்டும்" என மொழிந்தார்கள். இந்த தர்மத்தை கூலியின் நோக்கத்துடன் செய்யலாகாது. அப்படிச் செய்தால் தர்மமாகாது. சக்தி வாய்ந்தவர்கள் தங்கத்தினாலும் தர்மம் செய்யலாம். களைந்த உரோமங்களைப் பூமியில் புதைத்து விடவேண்டும்.

---

வணக்கத்தையும்; மௌலிது ஷரீப், கத்தம், பாத்திஹா, ஓதுவதையும் விலக்கி இவைகள் முஷ்ரிக்கீன் சடங்கு என்றும் இவைகளை ஒருவரும் அனுஷ்டிக்க லாகாதென்றும் முஸ்லிம்களில் இத்தகைய காரியங்களை விலக்கி சீர்திருத்த மடைந்தோர்களே முஸல்மான் "வகுப்பார் என்றும் ஆகவே எல்லோர்களும் அவைகளை அநுஷ்டிக்காமல் இச்சீர்திருத்தங்களைக் கைக்கொள்ளவேண்டுமென்றும் தாங்கள் சில சிற்றூர்களுக்குப்போய்ப் பிரசாரஞ்செய்து வந்ததாக இவ்விஷயம் வெளிவந்திருக்கின்றனவே என்றும் இன்னும் அகீகாச்சடங்கை முஸல்மான் தொகுதி 3 பகுதி 10 பக்கம் 284-ல் முஷ்ரிக்கீன் சடங்கு என்று "முஸல்மான் ஆசிரியருடைய குறிப்பில் வரைந்திருப்பதாகவும் இன்னும் ஷெடி நூலில் 21, 26, 61, 66, 77, முதலிய பக்கங்களில் பிரஸ்தாப விஷயங்களை மறுப்பதாக முஸல்மான் ஆசிரியர் மீது பழி சாற்றுவது அபாண்டமான படுதூறல்லவா? ஜனாப் மௌலவி ஸாஹிப் அவர்களே! மக்கீ ஸாஹிப் அவர்களே! ஒரு மனிதன் பேரில் பொறாமை யேற்பட்டால் இப்படிப்பட்ட கட்டுரை செய்து பழி வாங்க வேண்டுமென்று எந்தக் கிரந்தங்களிலேனும் படித்திருக்கின்றீர்களா? அல்லது முஸல்மான் சஞ்சிகையை இதுவரை பாராமல் விரோதிகளின் கேள்வியை ஆதாரமாகக்கொண்டு, ஆசிரியரை இப்லீஸென்றும் வஹ்ஹாபியென்றும் கூறிவிட்டீர்களா? எவ்வாறாயினும நீங்களிருவரும் கற்றுக்கொண்ட இல்முகளை புறத்தே வீசி எறிந்துவிட்டு முஸ்லிமான் கோஷ்டியார்களைத் துன்புறுத்துவான்வேண்டி அஞ்ஞான முரட்டுக்கூற்றில் இறங்கி விட்டீர்களென்பதை தங்களது மறுப்பு நூலையும் முஸல்மான் சஞ்சிகையையும் ஒன்றாய் வைத்துப்பார்த்தவர்களுக்குப் புலனாகாதிராதென்பது எனது திடமான நம்பிக்கை சுருங்கக்கூறின் பொய்கூறுவோன் மல்ஊன் என்பது எல்லோருக்கும் ஏற்கத்தக்கதே. ஆதலின் முஸல்மான் சஞ்சிகையையும் தங்களது மறுப்புநூலையும் நேர் நேராக வைத்து ஆராய்ச்சி செய்தவர்கட்கு யார் மல்ஊன் என்பது சந்தேகமற விளங்கி விடுமென்பது உண்மை.

அகீகாவுக்கு ஆடு, மாடு, ஒட்டகை முதலியன கொடுக்கலாம். அகீகாவும் குர்பானியும் ஒன்று போலிருப்பதால் குர்பானிக்கு உள்ள சட்டமே அகீகாவுக்கு மாகும். அகீகாவின் மாமிசத்தை மூன்று பங்கு வைத்து ஒரு பங்கை ஏழைகட்கும் ஒரு பங்கை உற்ருர் உறவினர்கட்கும் மற்ருெரு பங்கை தனக்கும் உபயோகித்துக் கொள்ளலாம். அகீகாவின் மாமிசத்தை குர்பானியின் மாமிசத்தைப்போல் குழந்தையின் தாய் தந்தை பாட்டன் பாட்டி முதலிய யாவரும் அருந்தலாம்.

குழந்தையின் தாய் தந்தை பாட்டன் பாட்டி அகீகாவின் மாமிசத்தைப் புசிக்கக் கூடாதென்பதும் குழந்தையின் சிரசில் அகீகாச் செய்த உதிரத்தை ஆபத்து நீங்குமெனக் கருதி தேய்ப்பதும் அறுக்கப்பட்ட உயிரினத்தின் இரத்தத்தை வீட்டுவாயலுக்கு நேராகஓட்டவேண்டுமெனக் கருதிச் செய்வதும் இன்னும் அவ்வமயம் தலை முடி இறக்கி வெள்ளியின் எடைக்குச்சமமாக நிறுத்து தானம் செய்யும்போது மொய் எழுதுவதும் போடுவதும் வேறு பல கிச்சிடிச் சடங்குகள் நடத்துவதும் ஆகிய இவ்விஷயங்களெல்லாம் மடமைத்தனத்தையுடைய ஜாஹிலீன்களின் செயற்களாகும்.

மிஷ்காத்துல் மஸாபீஹ் என்னும் நூலில் புரைதா அஸ்லமீ (ரலி) அவர்களைக்கொண்டு வந்திருக்கும் சமாச்சாரமாவது:-

நாங்கள் ஜாஹில்களாயிருந்த காலத்தில் எங்களுக்குள் எவர்க்கேனும் குழந்தை பிறந்தால் ஒரு ஆட்டை அறுத்து அதன் உதிரத்தை குழந்தையின் சிரசில் தேய்ப்போம். பின்னர் இஸ்லாமானதற்குப் பின் நாங்கள் குழந்தை பிறந்த ஏழாம் நாள் ஒரு ஆட்டை அறுப்போம். குழந்தையின் தலைமுடியைக் களைந்துவிட்டு தலையில் குங்குமப்பூ தேய்ப்போம் என்பதே. ஆதலின் அறிவுள்ள முஸ்லிம்கள் அஞ்ஞான மடமைச் சடங்குகளை யகற்றி நாயகமவர்களால் காட்டப்பட்ட மெஞ்ஞானச் சடங்குகளை நடத்துவீர்களாக.

## 19. கப்ருகளை ஸியாரத் செய்வது.

கப்ருகளை ஸியாரத்துச் செய்வது மேன்மையும் முஸ்தஹப்பும் ஆகும். கப்ருகளை ஸியாரத்துச் செய்வதனுல் பல நன்மைகளிருக்கின்றன. கப்ராளிகளைத் தெரிசிக்கிறதும் நாமும் இப்படியே ஒரு நாள் மண்ணில் புதைக்கப்படுவோம், தாணியில் தேடி வைத்த

ஆஸ்தி பூஸ்தி உற்றார் உறவினர் எல்லோரும் நம்மை விட்டுப் பிரிந்துவிடுவர். நமக்கு அவர்களால் எத்தகைய ஒத்தாசையும் ஏற்பட வழி இல்லை. ஆதலின் ஆகிரத்துக்கு வேண்டிய நற்செயல்களைச் செய்து இவடமிருந்தே புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்ளல் வேண்டும் என்ற எண்ணங்கள் உதயமாகின்றன. இன்னும் கப்ராளிகளைத் தெரிசிக்கும்போது அவர்களுக்கு குர்ஆன் ஸலவாத்து முதலியன ஓதி ஹதியாச்செய்தால் கப்ராளிகளுக்குத் தகுந்த பலனேற்படுவதுமன்றி இவனுக்கும் தக்க புண்ணியமும் கிடைத்துக்கொள்கிறது. இவ்வித ஸியாரத்தால் மறுமை நாட்டம் அடிக்கடி உதித்து உலகமாயையில் மயங்கித் தட்டளியாமலிருக்கும் ஞாபகத்தைக் கொடுக்கிறது. ஆதலின் கப்ரை ஸியாரத்துச் செய்வதில் பிரயோஜனமென்பதில் ஐயமில்லை. இதுவே ஹதீது ஷரீபின் கருத்துமாகும்.

விசேஷமாக நபிகள் நாதர் (ஸல்) அவர்களின் கபுரை ஸியாரத்துச் செய்வதிலோ அளவு கடந்த நன்மை யுண்டு. தூய்மையான எண்ணத்துடன் என்னை ஸியாரத்துச் செய்தவனுக்கு எனது ஷபாஅத்து வாஜிபாய்விட்டதென்றும் என்னை எனது ஜீவிப்பில் ஸியாரத்துச் செய்தது போலென்றும், எம் நபிகட்கரசர் அருளியுள்ள திருவாக்கியத்தில் காணப்படுகின்றது.

இன்னும் பிரதி ஜும்ம் ஆதோறும் தாய் தந்தையர்களை ஸியாரத்துச் செய்தால் அவர்களது பிழைகள் மன்னிக்கப்படுகிறதென்றும் இன்னும் கபுரஸ்தான் பக்கமாகச் சென்றவர் சூரா இக்லாஸை 11 விடுத்தம் ஓதி கபுராளிகளுக்கு நன்கொடை செய்தால் அந்த மைய்யித்துக்களின் எண்ணிக்கைக்குத்தக்க அளவு நன்மை கொடுக்கப்படுவானென்றும் இன்னும் யாசீன் முதலிய சூரத்துக்களை ஓதி பக்ஷ் செய்தால் பெரும்பயன் ஏற்படுமென்றும் நாயக வாக்கியத்தில் காணப்படுகின்றது. *

* பொய்யே நிறையப்பெற்ற மறுப்பு நூல் 19, 98, முதலிய பக்கங்களில் முஸல்மான் கோஷ்டியினரும் ஆசிரியரும் கபுர்களை ஸியாரத்துச் செய்யப்படாதென்று கூறி வருகிறார்கள் என வாய்கொண்டமட்டும் நீசத்தனமாக திட்டிக்கொட்டப்பட்டிருக்கிறது. இதிலிருந்து மக்கீ ஸாஹிபுக்கும் மௌல்வீ ஷரபுத்தீன் ஸாஹிபுக்கும் யார் மீதேனும் கோபம் பொங்கிவிட்டால் பொய் அல்லது நொண்டிக்காரணங்களைக் காட்டி ஏசத்தொடுத்துவிடுவார்களென்பதை நன்கறிந்து கொள்கிறோம். பலகாலமாக மதரஸா

ஸியாரத்துச் செய்யும் முறையாவது:— ஜீவிப்பில் அந்த மைய்யித்துடன் நடந்துகொண்டது போல மௌத்துக்குப் பின்னும் ஒழுக்கமாக நடந்து கொள்ளவேண்டும். கபுரின் சமீபம் சென்றதும் கிபுலாவின் பக்கம் முதுகைத்திருப்பி மைய்யித்து முன்னோக்கி சலாம் சொல்லவேண்டும். அதன் கருத்தாவது:— எங்களுக்கு முன் சமாதி யடைந்தவர்களே. உங்கள் மீது அல்லா (ஹ்) வின் ரஹ்மத்துண்டாவதாக. நீங்கள் எங்களுக்கு முந்திவிட்டீர்கள். நாங்களும் உங்களோடு வருகிறவர்களாயிருக்கிறோம் என்பதாம்.

ஷரஹில் சொல்லப்பட்ட இவ்வொழுங்கின்படி ஸியாரத்துச் செய்தால் சொல்லப்பட்ட நன்மைகளெல்லாம் கிட்டுமென்பதிற் சந்தேகமின்று. தற்காலத்திய மக்கள் தங்களிஷ்டப் போல் அநேக கிரியைகளை உற்பத்தி செய்துகொண்டு இது ஷரஹில் உள்ளதா அல்லாததா எனப்பாகுபாடு செய்யவும் திறனற்று கண்டபடியெல்லாம் செய்துகொண்டு இதில் புண்ணிய முண்டென நம்புகிறார்கள். இவர்கள் எவ்வாறு நம்பிக்கை கொண்டாலும் இல்லாத விஷயங்களை உண்டுபண்ணிச் செய்த குற்றம் இவர்களை விடாதென்பது திண்ணம். சிலர் வலிமார்களின் கப்ருகளின் பேரில் கொடி சந்தனக்கூடு என்று வெகு விமரிசையாக நடத்துகிறார்கள். சிலர் கப்ரைச் சுற்றி வலம் வருகிறார்கள். முத்தமிடுகிறார்கள். சஜிதாச்செய்கிறார்கள். உங்களை யன்றி எங்களைக் காப்பாற்றுவது யார் என்கிறார்கள். அவசியமின்றி விளக்குகளை சரமாகக்கொளுத்தி எரிக்கிறார்கள். நேர்ச்சை செய்கிறார்கள். பெண்களும் ஆண்களும் கூட்டமிடுகிறார்கள். கப்ரில் சென்று குழந்தைகளுக்கு க்ஷவரம் செய்விக்கிறார்கள். இன்னும் இதுபோன்ற அநேக விஷயங்களையும்செய்து வருகிறார்கள். இதிற் சில பிதுஅத்தும் சில குப்ரும் பாவமும் ஆகின்றன. ஆதலின் ஸியாரத்துக்குச் செல்வோர் இந்த நாட்டத்துடன் செல்லல் தகாது.

ஸ்திரீகள் கப்ரு ஸியாரத்துக்குச் செல்லலாமா வென்பதில் பலத்த அபிப்பிராய வேற்றுமை காணப்படுகின்றன. சிலர் ஆகு

---

வில் தலைமை ஆசிரியராக விருந்த மௌல்வி ஸாஹிபுக்கும் இத்துர்க்குணம் இன்னும் அகலவில்லையாயின் பாவம்! மக்கீ ஸாஹிபைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ; எனவே, இல்லாததையும் பொல்லாததையும் கட்டுரை செய்யும் மலைப்புழுகர்களென மட்டும் பொது ஜனங்கள் அறிந்துகொள்ளல் போதுமானது.

மெனக் கூறினும் அநேகர் ஸ்திரீகள் மஸ்ஜிதுக்கே செல்ல அனுமதி இல்லாதிருக்கும்போது ஸியாரத்துக்குச் செல்வதை எங்ஙனம் அநுமதியளிக்க கூடும் என்கிறார்கள். ஸ்திரீகள் இவ்வாறான விஷயங்கட்கு வெளிச்செல்வதில் ஏராளமான பஸாதுகள் ஏற்படக் காரணமிருப்பதால் போகாதிருப்பதே விசேஷ நன்மையாகக் காணப்படுகின்றன. விரும்பினால் இவர்கள் இல்லத்திலிருந்து கொண்டே தங்களாலியன்ற புண்ணியத்தைச் செய்து நன்மையைச் செலுத்திக் கொள்ளலாம், இதுவே சிறந்த முறையாகும்.

## 20. வஸீலாத்தேடல்.

தன்னுடைய நாட்டத்தை இறைவனிடம் கேட்கும்போது நபிமார்கள் ஸித்திக்கீன்கள் ஸாலிஹீன்கள் அவ்லியாக்களின்பொருட்டால் இறைவனே எனது நோக்கத்தைப் பூர்த்தி செய்தருள்வாயாக என்று கேட்பதற்கு வஸீலாவெனப் பகரப்படும். இவ்விதமான வஸீலா உயிரோடிருக்கிறவர்களைக் கொண்டும் மௌத்தானவர்களைக் கொண்டும் தேடுவது ஆகுமென்று நமது கிரந்தங்களில் மேதாவிகளால் ஸ்திரப்படுத்தப் பட்டிருக்கின்றன. *

## 21. வஸிய்யத்தும் எதீம்களின் பொருளைப்புசிப்பதும்.

தந்தை இறந்துபோன சிசுக்களுக்கு எதீம் எனக்கூறப்படும். அவ்விதம் தந்தை பொருளை வைத்து விட்டு இறந்துபோனால் இஸ்லாமிய சட்டப்படி அப்பொருளை நான்கு பங்கு வைத்து ஒழுங்குபோல் செலவு செய்யவேண்டும்.

1. முதலாவதாக மைய்யித்துக்கு சுன்னத்தான ஒழுங்கின் பிரகாரம் கபன் தபன் முதலிய சகல ஏற்பாடும் செய்து முடிக்க வேண்டும். இவ்வாறு செலவு செய்வதில் வழக்கத்தைப் பின் பற்றியோ ஆடம்பரமாகவோ ஏதும் செய்யலாகாது.

2. இரண்டாவது கடன் கொடுக்க வேண்டியதிருந்தால் அந்த மைய்யித்தின் பொருளில் நின்றும் அதை நிறைவேற்றல்

---

* பொய்யை பூஷணமாகக்கொண்ட மறுப்பு நூலின் 19; 78, 97, 98 முதலிய பக்கங்களில் "முஸல்மான்" ஆசிரியர் வஸீலாத் தேடுவதை நிராகரித்திருக்கிறாரென வரைந்து இதை எச்சுகளுக்கு காரணமாக வைத்துக்கொண்டது இவ்விருவர்களின் யோக்கியதைகளையும் சற்குணங்களையும் தாராளமாய்க் காட்டிக்கொண்டிருக்கிறது. முஸ்லிம்கள் இனி கவனித்துக் கொள்வார்களாக.

வேண்டும். இதில் மனைவியின் மஹரும் கடனாகப்பாவித்து அதையும் இறுக்கவேண்டும். சிலர் மைய்யித்தின் பேரிலுள்ள கடன்களை இறுக்காமல் பாத்திஹா முதலிய காரியங்களில் பொருளைச் செலவு செய்து விட்டு கடனாளி வாயில் மண்ணைப்போடவோ தந்திரஞ் செய்யவோ முயலுகிறார்கள். சிலர் கண்டபடி செலவுசெய்து மைய்யித்தின் வாரீஸ்கள் மேல் கடனென்னும் சுமையை ஏற்றிவிடுகிறார்கள். உண்மையில் இவர்கள் நெருப்புக் கங்கை விழுங்குகிறவர்களாகும்.

3. மூன்றாவது மைய்யித்தானவன் தனது பொருளில் நின்றும் யாருக்கும் ஏதேனும் கொடுக்கும்படி வஸிய்யத்துச் செய்திருந்தால் அதை நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறைவேற்றுவதில் மூன்றில் ஒருபங்குக்கு அதிகம் வஸிய்யத்துச்செய்திருந்தால் அப்படி அதிகப்பட்டதை நிறைவேற்றுவது அவசியமல்ல. மைய்யித்தானவன் பாவகாரியங்களான கொடி கூடு எடுக்க வேண்டும் என்றும் எனது கபுரில் கட்டிடங்கட்டி விளக்கேற்றி உற்சவம்நடத்தவேண்டுமென்றும் கபுரின் பேரில் ஹாபீஸ்களை ஏற்படுத்தி ஓதச் செய்யவேண்டுமென்றும் வஸிய்யத்துச் செய்திருந்தால் அதை நிறை வேற்றல் கூடாது. மேலும் குற்றமாகும். ஆனால் இன்னவிடத்தில் அடக்கவேண்டும், இன்னவிதமாக கபன் செய்யவேண்டும், இன்னார் தொழுவிக்க வேண்டுமென்று வஸிய்யத்துச் செய்தால் அதை நிறைவேற்றல் அவசியமல்ல. நிறைவேற்றினால் பாதகமாகாது.

4. நான்காவது மேற்சொன்ன மூன்று விஷயத்தையும் பூர்த்திசெய்த பின் எஞ்சி யிருக்கும் பொருளை சட்டப்படி வாரீஸ் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் பாகித்துக் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு விஷயங்களைப் பூர்த்தி செய்ததற்குப் பின் ஒவ்வொருவரும் தங்களாலியன்ற அளவு மைய்யித்தின் பேரால் தான தருமஞ் செய்யலாம். மேற்சொன்ன முறைப்படி பங்கிட்டுக்கொள்ளாத வரை பொதுச்சொத்திலிருந்து தான தருமஞ்செய்வதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அப்படிச் செய்வார்களாயின் அதிலேற்பட்ட செலவுகளுக்கு அவர்களே கடமைப்படுவர். அன்றி குற்றமும் ஏற்படும். இன்னும் அந்த வாரீஸ்களில் பருவமெய்தாத(பாலிக் ஆகாத) சிறுவர் சிறுமி யிருந்தால் அவர்களுடைய பொருளைக்

கொண்டேனும் அல்லது பாகிக்கப்படுவதற்கு முன் தமதிஷ்டம் போல் பொதுச்சொத்திலிருந்தேனும் தான தருமஞ்செய்யலாகாது. அப்படிச் செய்தால் அதை வாங்குவதும் புசிப்பதும் ஹறாமாகும். நம்மார்க்கம் இவ்வாறான விஷயத்தைப் பலமாகக் கண்டிக்கிறது.

எவர்கள் எதீம்களின் பொருளை அநீதமாகப் புசிக்கிறார்களோ அவர்கள் தங்களது வயிற்றில் நெருப்பை நிறப்புகிறார்கள். (ஆகிரத்தில்) அவர்கள் நரகத்துக்குப் போகிறவர்களே. (குர்ஆன்)

கியாமத்தில் சில ஜனங்கள் அவர்களுடைய வாய், கண், மூக்கு செவிகளிலிருந்து நெருப்புச்சுவாலை கிளம்பினவர்களாக கபுரிலிருந்து எழும்புவார்களென்று நாயகம் அருளினபோது, ஸஹாபாக்கள் நாயகமே அவர்கள் யார் என்று கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் எதீம்களின் முதலைப் புசிப்பவர்களென்று அருளினார்கள். (ஹதீது திர்மதீ அபூதாவூது)

இவ்விதம் சொத்துக்களைப் பாகிக்க வேண்டிய முறைகளையும் செலவு செய்யவேண்டிய ஒழுங்குகளையும் அல்லாவும் ரசூலும் கற்பித்திருக்க தற்காலத்திய மாந்தர்கள் சற்றேனும் சிந்திக்காமல் தங்களது பெயரும் பெருமையும் ஓங்க வேண்டுமென்ற உட்கருத்துடன் பொதுச்சொத்து எதீம்களின் பொருளை அவசியமற்ற விஷயங்களிலும் உபயோகமற்ற சடங்குகளிலும் விருந்து பாத்திஹா முதலிய காரியங்களிலும் ஏராளமாகச் செலவு செய்து விடுகின்றனர். சிலர் மௌத்தானவர் சொத்து வைத்து விட்டுப்போகவில்லையா? ஏன் பகீல் தனம் பண்ணுகிறீர்களென்று குறை கூறி தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளப் பார்க்கின்றனர். நன்மையான பாத்திஹா தான தர்மம் முதலியவைகளில் செலவிட விருப்பமுள்ளோர் தங்கள் சொந்தப்பொருளிலிருந்து இயன்றமட்டிலும் செய்யலாம். எதீம்களின் பொருளிலிருந்து இவ்விஷயங்கள் செய்ய அதிகாரமில்லை. ஒரு சமயம் அந்த எதீம் சிறுவர்கள் சம்மதித்தாலும் சரியே. மார்க்கம் தெரியாமல் பாத்திஹாவென்றும் கந்தூரி என்றும் எதீம்களின் முதலைச் செலவு செய்வோர் சொற்ப காலத்துக்குச் சுகமனுபவித்தாலும் நாளை மறுமையில் அடையும் கதியை நினைத்துப் பார்க்க வேண்டும். மறுமையின் அதாபையும் சிறுமையையும் விட்டகல விருப்பமுடையோர் தக்க

ஆலிம்களிடம் செலவு செய்யவேண்டிய முறைகளைக்கேட்டுக்கொள்வதே சாலச்சிறந்த சிலர்களின் குணமாம். ஆலிம்களும் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தங்களாலியன்ற வளவு இஸ்லாமிய சட்டங்களைக் கற்பித்து ஏவல் விலக்கல் புரிதல் வேண்டும். இன்றேல் இன்னோரும் அக்குற்றத்தில் ஈடுபடுவார்களென்பதி லையமில்லை. சொர்ப்ப வரும்படியை இச்சித்து பெரிய தண்டனையைப் பெற்றுக்கொள்ள விரும்புவது நன் மக்களுக்குத் தகாதாதலின் இவ்விஷயத்தில் எச்சரிக்கையாக இருந்து ஜெயம் பெற்றுக்கொள்வார்களாக. இறைவா! இப்படிப்பட்ட பாதகங்களை விட்டும் எங்களைக் காப்பாற்றுவாயாக. ஆமீன்.

## 22. சுன்னத்தும் பிது அத்தும்.

லோக சற்குரு நபிகள்நாதர் ஹஸ்ரத் முஹம்மதுர் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களே இத்தரணியிலுள்ள முஸ்லிம்களனைவோருக்கும் முன் மாதிரியாகவும் வழிகாட்டியாகவுமிருக்கிறார்களென்பது யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதே. அப்படிப்பட்ட முன் மாதிரியும் வழிகாட்டியுமான நபிகள் திலகம் அவர்களைப் பின்பற்றியே ஸர்வதுறைகளிலும் ஸஹாபாக்கள் இமாம்கள் ஆகியவர்களும் மோக்ஷத்தைப் பெற்றுக்கொண்டார்கள். பிற்காலத்தில் பற்பல அபிப்பிராயப் பேதங்களும் பித்அத்துகளும் துராசாரங்களும் மலிந்துவிட்டதினால் சகல சுக துக்கங்களிலும் நபிகள் நாயகம் அவர்களின் பரிசுத்த நடத்தைகள் இன்னின்னவையென அறிந்துகொள்ளக்கூடாமற் றத்தம் மனம்போல பற்பல பிது அத்துகளையும் துர் வழக்கங்களையும் ஆசாரமாக்கிக் கொண்டார்கள். சுன்னத்து பிதுஅத்து இன்னதென்றறிந்து நடந்துகொள்ளும் விருப்பம் குன்றிவிட்டது. விசேஷமாக நம் இந்தியாவில் அதன் நிலைமையைச் சொல்லவேண்டுவதில்லை. பிறப்புமுதல் இறப்பு வரையுள்ள ஸர்வ சுக துக்கங்களிலும் அதற்கென பல சடங்குகளையும் சட்டங்களையும் நிருமாணித்து வைத்திருக்கின்றார்கள். அந்தச் சடங்குகளிலேதேனும் தவறிவிடும் பக்ஷம் அக்கிரியை நிறைவேறாது. பர்லு வாஜிபு சுன்னத்து தவறிவிட்டாலும் சற்றேனும் வியாகூலமில்லை. அதைக் கவனிப்பதுமில்லை. ஆயினும், வழக்கானுஷ்டானங்களில் ஏதேனும் தவறிவிட்டால் மிகக்கிலேசப்படுகிறார்கள். அல்லாஹ்வும் ரசூலும் ஏற்படுத்திய சட்டங்களைவிட மனிதர்களால்

ஏற்படுத்தப்பட்ட சடங்கு விசேஷ மதிப்புடைய தெனக்கருது கிருர்கள் போலும்? என்னே அறியாமை.

நமது நபிகள் நாதரவர்கள் காலத்தில் சுக துக்கங்கள் ஏற்பட வில்லையா? கலியாணம் நடக்கவில்லையா? கத்னு நடக்கவில்லையா? விவாஹம் புரியவில்லையா? மரணம் சம்பவிக்கவில்லையா? ஸஹாபாக் கள் இமாம்கள் காலங்களிலும் இவ்வாருன லாப நஷ்டங்கள் சம்ப விக்கவில்லையா? அவர்களெல்லாம் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் எவ்வாறு நடந்துகொண்டார்கள்? அவர்களெல்லாம் நமக்கு வழி காட்டிகளும் பக்தர்களும் என்பதை நாம் அங்கீகாரஞ் செய்துக் கொண்டே புதிய திய வழக்கங்களையும் பிதுஅத்துகளையும் சிருஷ் டிப்பது முஸ்லிம்களாகிய நமக்கு ஒரு சிறிதும் தருமமென்பதை உணராமலிருப்பதன் காரணம் விளங்க வில்லை. உண்மையை ஆரா யப்புகின் இந்தியாவிலுள்ளோர் தங்கள் அசல்வாசிகளாகிய முஷ் ரிக்குகளென்னும் இந்துக்களைப் பார்த்தே ஒவ்வோர் விஷயங்களி லும் பல சடங்குகளைத் தெரிந்துகொண்டார்களென்பது உள்ளங் கை நெல்லிக்கனிபோல் தெரிய வருகிறது. காலஞ் செல்லச்செல்ல நஸாருக்கள் நாஸ்திகர்களைப் பார்த்தும் பல நியாய விரோதமான பழக்க வழக்கங்களை கைக்கொண்டு விட்டார்களென்பதும் தெரிய வருகின்றது. இவ்விஷயமாக தமிழ் துஹ்பத்துல் ஹிந்து 90-ம் பக்கமுதல் பல பக்கங்களிலும் விரிவாகக் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். சுருங்கக் கூறின் ஹிந்துக்களின் சடங்குகளைப் பார்த் துப் பார்த்து அதற்குப் பதிலுக்குப் பதிலாக தாங்களும் ஓர் வழக்கத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள். இது இஸ்லாமிய ஆசாரமா அல்லவா? என்று பாகுபாடு செய்ய அவர்களுக்குத் திற னில்லாது போனதைப் பற்றி வருந்த வேண்டி நேரிடுகின்றது.

ஒவ்வொரு விஷயங்களிலும் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறையை லோக சர்தாரான நம் நபிகள் திலகம் நமக்குக்கற்பித் துச் சென்றிருக்கிற போது அவற்றை அலக்ஷியமாகக் கருதி புதிய நவீனச் சடங்குகளை உண்டுபண்ணுவது ஓர் முஸ்லிமானவனுக்குச் சிறிதும் நியாயமாகாது. உண்மை முஸ்லிமானுல் அவன் தனது மதச் சடங்குகளைத் தானும் நடத்தி இதரர்களையும் அவ்வாறு நடத் தப் பிரயத்தனப் படுவதே அவன் கடமையாகும். அன்றி வேறு

விதமான சடங்குகளை உற்பத்தி செய்யவும் அதன்படி நடக்கவும் துணிவானாயின் அல்லாவும் அவனது ரசூலும் வழி காட்டிய சட்டங்கள் போதாதென்று ஓர் புதிய ஷரீ அத்தை உண்டுபண்ணுவதாக கருத நேரிடும். (நவூது பில்லாஹ்) இது எப்படிப்பட்ட மாபெரும் பாதகச் செயலென்பதை ஓர் முஸ்லிம் அறிவது கடமையாகும். அன்றி ரசூல் நாயகமவர்கள் சர்வ விஷயங்களிலும் என்னையே பின் பற்ற வேண்டும். எனது நடப்புகளையே பரத்த முயல வேண்டுமென்று அருளியிருக்க அதைக் கவனியாமல் முஷ்ரிக்குகளின் சடங்கைப் பின் பற்றி அதை அமுலுக்குக் கொடுவருபவன் உண்மையில் தன்னை யோர் முஸ்லிமாக அவன் கருதிக்கொண்டாலும் அவன் ஒரு ஜாஹி லென்பதில் சிறிதேனும் சந்தேகிக்க வழியுண்டோ? எனவே பிறப்பிலிருந்து இறப்புவரையும் அதற்குப் பின்னும் நிகழும் விசேஷ வைபவங்கள் ஒவ்வொன்றிலும் நம் லோக ஸர்தார் நபிகள் நாதர் அவர்கள் எவ்வாறு இவ்வைபவத்தை நடத்திக்காட்டியிருக்கிறார்களென முன்னதாக அறிந்து அதன்படி நடப்பதுதான் பக்தியுள்ள முஸ்லிம் வீரனுக்குரியதாகும். ஆதலின் அதையொட்டிய நபிகள் வாக்கியங்களை ஈண்டு தருகிறோம். ஊன்றி கவனிப்பீர்களாக.

இறைவன் திருமறையில் நபிகள் நாயகத்தை உலகோர்களுக்கு ஓர் முன் மாதிரி யென அருளியுள்ளான். நபிகள் நாயகம் அவர்கள் அருளியிருப்பதாவது:—

எல்லாவற்றையும் விடச்சிறந்தது இறைவனின் வேதமாகும். எல்லா வழிகளிலும் சிறந்தது முஹம்மது (ஸல்) அவர்களின் வழியாகும். ஆதலின் (மார்க்கத்தில்) புதிய நூதனங்களை (பிதுஅத்து, துராச்சாரம்) கிளப்புவது எல்லா தீமைகளிலும் கொடியதாகும். இன்னும் எது நூதனமோ அது வழி கேடாகும். (மிஷ்காத்.)

(ஹதீது) எவன் நமது இந்த விஷய (மார்க்க) த்தில் தீனில் இல்லாத நூதனத்தைக் கிளப்புவானோ அது அங்கீகரிக்கப் படமாட்டாது.

(ஹதீது) எனக்குப்பின் ஜீவித்திருப்பவன் எனக்குப் பின் அநேக வேற்றுமைக் கூற்றுக்களைக் கண்ணுறுவானாதலின் நீங்கள் என்னுடையவும் எனது நேர்வழி பெற்ற கலீபாக்களின் நடப்புகளை

யுந் தெரிந்து அதைக்கெட்டியாய்ப் பற்றிக்கொள்ளுங்கள். அன்றியும் பற்களால் பிடித்துக்கொள்ளுங்கள். இன்னும் தங்களை புதிய நவீனங்களை உண்டுபண்ணுவதை விட்டும் பேணிக்கொள்ளவேண்டும். ஏனெனில் எது நவீனமோ அது பிது அத்தாகும். ஒவ்வொரு பிது அத்தும் வழி கேடாகும்.

(ஹதீது) நாயகமவர்கள் எங்களுக்கு விளக்கிக் காட்டுவதற்காக ஓர் (நேர்) கோடு கிழித்து, இந்த (நேர் கோடு) அல்லாவின் பாதையாகும் என நவின்று விட்டு இதன் வலமிடமும் கோடு இழுத்து இதுவும் பாதைகளே. ஒவ்வொரு பாதையிலும் ஷைத்தான் உட்கார்ந்து தன் பக்கம் அழைத்துக் கொண்டிருக்கிறான் என அருளி நாயகம் இது எனது 'நேர் பாதையாகும். இதை நீங்கள் பின் பற்றுங்கள் என்ற ஆயத்தை கடைசி வரை ஓதினார்கள்.

இன்னும் எதுவரை நீங்கள் உங்களது விரும்பங்களை நான் கொண்டுவந்த மார்க்கம் இன்னும் ஷரீ அத்துக் குக் கீழ்ப்படுத்தவில்லையோ ஈமானுடையவர்களாக மாட்டீர்கள்.

பனீ இஸ்ரயீல் (நஸாறுக்) களில் நின்றும் என்னென்ன செயற்கள் தோன்றி யிருக்கின்றனவோ அதுவே எனது உம்மத்தில் தோன்றும். ஒரு ஜூத்தா மற்ற ஜூத்தாவுக்கு முழுதும் ஒத்திருப்பது போல் (அவர்கள் போன்றே நடிக்க ஆரம்பிப்பார்கள்)... ... ... ... எனது உம்மத்தில் 73 கூட்டமாகப் பிரிவார்கள். அதில் ஒரு குழாத்தினரைத் தவிர்த்து ஏனையோர் நரகவாதியாகும் (என்ற போது) ஜனங்கள் யாரசூலல்லாஹ்! சுவர்க்கத்தின் கூட்டம் யார் என்று கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் 'எவர்கள் என்னுடையவும் எனது ஸஹாபாக்களுடையவும் நடப்பைத்துயர்ந்தவர்களோ அவர்களாகும் எனப் பதிலிறுத்தார்கள்.

இன்னும் நான் உங்களில் இரண்டு வஸ்துவை விட்டுப் போகிறேன். நீங்கள் அவைகளைக் கடைப் பிடித்து (பின் துயர்ந்து) க் கொண்டிருக்கும் வரை ஒரு காலும் வழி விலகிப்போக மாட்டீர்கள். அந்த இரண்டுமாகிறது அல்லாவின் வேதமும் எனது சுன்னத்துமாகும். ஒரு கூட்டத்தார் ஒரு பிது அத்தை உற்பத்தி செய்தால் அதற்கொப்பான சுன்னத்து கட்டாயம் எடுபட்டுவிடும். சிறிய சுன்னத்தின் பேரில் அமல் செய்வது பிது அத்தை உற்பத்தி

செய்வதை விட மேன்மையாகும். எவன் எனது நடப்பைவிட்டும் மாறுவானோ அவன் எனது கூட்டத்தில் நின்றுமிருக்க மாட்டான் அல்லாஹுத்த ஆலா மூன்று மனிதர் மீது அதிகக் கோபமடைகிறான். அதில் ஒருவன் இஸ்லாமான பின் ஜாஹில்களுடைய (காபிர்கள்) வழக்காசாரத்தைத் தெரிந்து கொள்கிறவனாகுமென நவின்றார்கள். இன்னும்எனது உம்மத்தில் பித்அக்கள் பரவும் காலத்தில் எவன் எனது சுன்னத்தின் பேரில் அமல் செய்வானோ அவனுக்கு நூறு ஷஹீத் (பிராணத்தியாகி – அல்லா (ஹ்) வுக்காக யுத்தத்தில் மாண்டவன்) உடைய நன்மை கிடைக்கும் – இன்னும் நன்மையைக் கற்று தானும் நடந்து பிறரையும் நடக்கச் செய்கிறவனுக்கு தன்னுடைய நன்மையும் போக பிறருக்கு கிட்டும் நன்மையைப்போன்று ஒரு பாகமும் கிட்டுமென்றும் இன்னும் தீமையை (பிதுஅத்து வழிகேடு துராசாரங்களை) கற்பித்து அதன்படி நடப்பிக்கிறவனுக்கு தனக்கு கிடைக்கும் பாவமும் போக பிறருக்கு கிடைக்கும் பாவத்தைப் போல ஒரு பங்கு சதாவும் இவனுக்குக் கிடைத்துக் கொண்டிருக்குமென்றும் நாயகம் அருளியுள்ளார்கள்:–

பிது அத்துக்காரனை ஆதரிப்பதைப் பற்றிய விபரம்:– உண்மையின் பேரிலில்லாத ஒருவனுக்கு உதவி புரிபவன் நம்மில் நின்றுமில்லை. இன்னும் எவன் அநீதக்காரன் பக்கமாக சண்டை யுத்தம் செய்வானோ அவன் நம்மில் நின்றுமில்லை. எவன் உண்மை யற்றவனை ஆதரிப்பதில் மரணமாய் விடுவானோ அவன் நம்மில் நின்றும் உள்ளவனல்ல.

நான் உங்களது ஹௌலி (கௌதரி) ன் பேரில் முன்னிலையானவனாயிருக்கிறேன். எவன் என் பக்கத்தில் வருவானோ அவன் (அந்த ஹௌல் தண்ணீரை) பருகுவான். எவன் பருகுவானோ அவன் ஒரு போதும் தாகிக்க மாட்டான். நிக்ஷயமாக சில கூட்டத்தார் என் பக்கம் வருவார்கள் அவர்களை நான் அறிவேன். அவர்களும் என்னை யறிவார்கள். பிறகு எனக்கும் அவர்களுக்கும் இடையில் பர்தா உண்டாய் விடும். (அதாவது அவர்கள் என் சமீபத்தில் வந்துவிட முடியாது) பின்னர் அவர்கள் நிட்சயமாக என்னையுடையவர்களே என்று நான் கூறுவேன். அப்போது (எனக்கு) சொல்லப்படும் நிட்சயமாக எதை அவர்கள் தங்களுக்குப் பின் நவி

னமாக உண்டு பண்ணியுள்ளனரோ அதை தாங்கள் அறியமாட்டீர்கள். அப்போது நான் மொழிவேன். எவன் எனக்குப் பின் மார்க்கத்தில் விபரீதப் புரட்டுகள் செய்தானோ அவனை விரட்டி விடுங்கள். என்பதே.

அல்லாஹ் பிதுஅத்துக்காரனுடைய அமலை அவன் தனது பிதுஅத்தை விட்டுவிடுகிற வரையிலும் அங்கீகரிக்கமாட்டான். அல்லாஹ் பிதுஅத்துக்காரரின் நோன்பு, ஹஜ், உம்ரு, யுத்தம் இன்னும் (மற்ற) வணக்கங்களையும் ஏற்றுக்கொள்ளமாட்டான். குழைத்த மாவில்நின்றும் உரோமம் வெளியாவதுபோல் பிதுஅத்தையுடையவன் இஸ்லாத்தை விட்டும் நீங்கிவிடுகிறான்.

எவன் பிதுஅத்துக்காரனை கௌரவப்படுத்துகிறானோ அவன் இஸ்லாத்தை இடிப்பதற்கு உதவிபுரிந்தது போலாம் என்று நபிகள் நாயகம் அருள் புரிந்திருக்கிறார்கள்.

எனவே, இவ்விஷயங்களை யாராய்ந்து நபிகள் நாயகமவர்களின் அன்புக்குரிய சுன்னத்தின்படி நடந்து அவர்களின் ஸஹாபாக்களையும் பின்பற்றி மோக்ஷமடைவீர்களாக. தற்காலத்திலுள்ள நவீன வர்க்கத்தாரைப் பின்பற்றுவது நரகவழியே யன்றி வேறன்றென்பதை மிக்க உறுதியுடன் உணர்ந்துக் கொள்வீர்களாக. ஆண்டவன் இப்படிப்பட்ட பிதுஅத்துக்களை விட்டும் நம்மைக் காப்பானாகை.

## 23. முஸ்தஹப்பு மக்ரூஹாய்விடும் விபரம்.

நமது மார்க்கத்திலுள்ள பர்லு, வாஜிபு, சுன்னத்து, முஸ்தஹப்பு, முபாஹ் மக்ரூஹ், ஹறாம் முதலியவைகளை அதனதன் ஸ்தானத்தில் வைக்கவேண்டுமே யன்றி மக்ரூஹை ஹறாமென்றும் முஸ்தஹப்பை பர்லென்றும் அதன் ஸ்தானங்களைவிட்டுப் பெயர்த்து மாறுபாடு செய்துவிடக்கூடாது. உதாரணமாக, ஒருவன் முஸ்தஹப்பான ஓர் காரியத்தை நிறைவேற்றுவதில் தன் விஸ்வாசங்களிலும் செயற்களிலும் இதர பொது ஜனங்களுடைய நோக்கத்திலும் பர்லுக்கொப்பாக ஆய்விடுமென்று தெரிந்தால் அந்த முஸ்தஹப்பை விட்டு அதற்கு மாற்றமாக நடப்பதும் சுன்னத்தாகும். நமது காலங்களிலுள்ள சில ஆலிம்களும் லெப்பைமார்களும் இவ்விஷயத்தைப் பிரித்துக் காட்டாததினால் பொது ஜனங்கள் முஸ்தஹப்பை

பர்லுக்கொப்பாகவோ சில சமயம் அதைவிடக் கடமையிற் சிறந்ததாகவோ கருதி தங்கள் விஸ்வாசத்தைப் பேதகப்படுத்திக் கொள்கிறார்கள்.

அல்லா(ஹ்)வின் எல்லைகளை விட்டும் கடப்பவர்களே அநீதக்காரர்களாகும். (குர்ஆன்).

ஹஸரத் அப்துல்லாஹிபுனு மஸ்கூது (ரலி) கூறுவதாவது:— உங்களிலொருவரும் தங்கள் தொழுகைகளில் ஷைத்தானின் பாகத்தை ஏற்படுத்தாதிருப்பது அவசியமாகும். அதாவது தொழுகைக்குப் பின் வலப்புறமாக திரும்பி இருப்பதையே அவசியமாய் எண்ணிவிடக் கூடாது. நான் நாயகமவர்களை அநேக நேரங்களில் இடது பக்கத்தின் புறம் திரும்பி இருப்பதையும் பார்த்திருக்கிறேன். (புகாரீ முஸ்லிம்).

மஜ்மஹுல் பிஹார் ஆசிரியர் இதைக் குறித்துக் கூறுகிறார்கள். இந்த ஹதீதினால் "முஸ்தஹப்பு தன்னுடைய தானத்தை விட்டும் உயர்ந்துவிடும் என்ற பயமேற்படும்போது முஸ்தஹப்பும் மக்ருஹ் ஆய்விடுமென்பது" தெரியவருகிறது.

ஷாரிஹ் மிஸ்காத் தையிபீ (ரஹ்) கூறுவதாவது:— இந்த ஹதீதில்நின்றும் தெரியவருகிறதாவது: ஒருவன் ஒரு முஸ்தஹப்பான காரியத்தின் பேரில் விடாமுயற்சியாகச் செய்துவந்தாலும் இன்னும் அதை அவசியமென்று எண்ணிக்கொண்டாலும் இன்னும் விடாமலிருந்தாலும் இப்படிப்பட்டவனில் நின்றும் ஷைத்தான் தனது வழி கெடுக்கும் பாகத்தைப் பெற்றுக்கொள்கிறான்— முஸ்தஹபுக்கே இப்படியானால் ஒரு பிதுஅத்து அல்லது மறுக்கப்பட்ட விஷயத்தின் பேரில் பிடிவாதம் பண்ணுகிறவனின் கதியைக் கேட்பானேன்?

(ஹதீது.) வெள்ளிக்கிழமை இரவை மற்ற இரவுகளில் நின்றும் இபாதத்துக்கென சொந்தப்படுத்திக் கொள்ளாதீர்கள். இன்னும் மற்றக் காலங்களை விட வெள்ளிக்கிழமையை நோன்புக்கென உரிமை பாராட்டிக்கொள்ளாதீர்கள். (முஸ்லிம்.)

சுன்னத்தை வாஜிபெனக் கருதுவதின் பொருட்டு ஷரஹ் உடைய சட்டங்கள் பேதகமாவதால் அதுவும் பிதுஅத்தாகும். (பராஹீன காத்திஆ 110.)

முஸ்தஹப்பும் பொது ஜனங்கள் அதை வாஜிபு சுன்னத்து பர்லு என்று எண்ணும் விதத்தில் பிடிவாதமாய்ச் செய்வதினால் மக்றூஹ் ஆய்விடுகிறது. (பராஹீன் 79.)

எல்லா ஆகுமான காரியங்களிலும் முஸ்தஹப்புகளிலும் வழக்கத்தைப் பின்பற்றி அவசியமென் றெண்ணினால் மக்றூஹ் ஆகும். (மஜ் முஆ. பதாவா. வா. 2. ப. 85.)

இன்னும் அல்லாமா ஷாமி—துர்ருல் முக்தாரின் இது சம்பந்தமான வியாக்கியானத்தில் தங்களது சரித்திரத்தை குறிப்பிடுகிறதாவது:—நான் சில ஜனங்களை வித்ருத் தொழுகைக்குப் பின் ஸஜ்தாச் செய்துகொண்டிருக்கப் பார்த்தேன். இன்னும் அவர்கள் இவ்விஷயத்திற்கு மூலாதாரமும் அத்தாக்ஷியும் உண்டு என்றும் மொழிந்து கொண்டிருந்தார்கள். நான் அவர்கட்கு பிக்ஹூ உடைய கிதாபுகளில் (மேற்சொல்லப்பட்ட) மஸ்அலாவைக் காட்டினேன். பின்னர் அவர்கள் வித்ருத் தொழுகைக்குப் பின் ஸஜ்தாச் செய்வதை விட்டுவிட்டார்கள். (பத்ஹு-ஹக் கானீ ப. 29.)

தொழுகையில் நின்றும் எந்தத் தொழுகைக்கும் குர்ஆனில் நின்றும் எந்தப் பாகத்தைக் கொண்டும் குறிப்பிடுவது மக்றூஹ் (ஹிதாயா)

பொதுவாக ஒரு சூரத்தை நேமமாக்கிறது மக்றூஹ்(பத்ஹு) சூரய ஸஜ்தா, ஹல்அத்தா, வல்பஜ்ரி ஒவ்வொரு ஜும்ம ஆவிலும் குறிப்பிடுவதும் மக்றூஹ் ஆகும். சமயா சமயங்களில் ஓதிவருவது முஸ்தஹப்பு. (துர்ருல் முக்தார்)

நாயகம் ஒரு வஸ்துவை சூரத்தில் நின்றும் இலேசுக்காகக் குறிப்பாக்கி வைக்கவில்லையோ அதைக் குறிப்பிடுவது மக்றூஹ் ஆகும். (ஷாமீ)

நன்றிக்காக சஜ்தாச் செய்வது முஸ்தஹப்பாகும். ஆயினும் தொழுகைக்குப் பின் அதை நிறைவேற்றுவது மக்றூஹ் ஆகும். காரணமாவது பொது ஜனங்கள் அந்த சுன்னத்தை வாஜிபென்று எண்ணிவிடக்கூடாது "இன்னும் ஒரு பொதுச் சட்டமும் இதன் கீழ் எழுதிவிட்டார்கள்" அதாவது எந்த ஆகுமான காரியம் இவ்

விதமான கெடுதலளவில் இழுக்கக்கூடியதாயிருக்கிறதோ அதுவும் மக்றூஹ் ஆகும். (துர்ருல் முக்தார் வா 1. ப. 547)

அல்லாமா ஷாமீ மக்றூஹின் விரிவுரையில் வரைவதாவது:— (இவ்விதமான மக்றூஹ்) மக்றூஹ் தஹ்ரீமாகும். ஏனெனில் தீனில் இல்லாத செயல் தீனில் புகுந்து விடுகிறது.

உலமாக்கள் இவ்விஷயமாக விளக்கி யிருப்பது யாதெனில் எந்த முஸ்தஹப்பின் பேரிலும் பர்லு வாஜிபுகளைப் போல் பிடிவாதமாய் நடத்தி வருவதும் அதை விட்டவர்களைப் பழிப்பதுமான இவ் விஷயம் மக்றூஹ் ஆகும். முல்லா அலிகாரி (ரஹ்) ஷரஹ் மிஷ்காத்தில் எழுதியிருப்பதுபோல் (பத்ஹு ஹக்கானி ப. 68)

மௌலானா அஷ்ரப் அலி (ரஹ்) எழுதுவதாவது:— இதே காரணமாக (அவசியமற்ற விஷயங்களை பர்லுவாஜிபைப்போல் நடத்தி வருவதை) ஹனபி உலமாக்கள் தொழுகையில் சூரத்து குறிப்பிடுவதை மக்றூஹ் என மொழிந்துள்ளார்கள். விஸ்வாசத்திலாயினும் நடப்பிலாயினும் சரியே. பத்ஹுல் கதீரில் இவ்விஷயத்தை தெளிவு படுத்தியிருக்கிறார்கள்.

இன்னும் ஆகுமான காரியத்திலும் அல்லது முஸ்தஹப்பிலும் மார்க்கத்திலில்லாத செயல் கலந்து விட்டால் மார்க்கத்துக்கு மாற்றமாகவும் விலக்கலாகவும் ஆய்விடுகிறது. (இஸ்லாஹுர் ருஸூம் 110) ஷை கிதாபில் இது சம்பந்தமான விஷயங்களை மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. தேவையுடையோர் பார்த்துப் பலன் பெறலாம். சில நேரங்களில் சில முஸ்தஹப்புகளை எவ்வளவு அவசியமாக்கப்படுகிறதென்றால் அமலின் பலனைப் பார்த்தால் வாஜிபென்று கருத நேரிடுகிறது. அதைச் செய்கிறவன் வாஜிபென்று அதை விஸ்வாஸியாய் விட்டால் அவன் விஷயத்தில் அதுபித்அத்தாகாது. எனினும் இதே முஸ்தஹப்பை விடாமல் செய்வதனால் பாமரர்களின் விஸ்வாசத்தில் அவசியமென்றும் வாஜிபென்றும் ஆய்விடுமென்றும் பொது ஜனங்கள் அதை வாஜிபென்று நினைத்து விடக்கூடுமென்றும் ஆதலின் அந்நேரம் இப்படிப்பட்ட முஸ்தஹப்பை விடுகிறதும் முஸ்தஹப்பாய்விடுகிறது ... ... முஸ்தஹப்பான செயலை வாஜிபென்று என்னுவது கெட்டபித்அத்தாகும். (பதாவா மீலாத் ஷரீப் 7.)

எனவே பிறப்பிறப்புவரை நடத்திவரும் சடங்குகளைத் தவிர்த்து வேறு முஸ்தஹப்பென்றும் நன்மை யென்றும் நடத்திவரும் வணக்கங்களையும் விசேஷமாக மைய்யித்து ஆசாரம் விவாகச் சடங்குகளில் கவனத்தைச்செலுத்தி பர்லு வாஜிபு முஸ்தஹப்பு முபாஹ் ஆகியவைகளில் பாகு பாடு செய்து பலன் பெறுவீர்களாக.

## 24. வஹ்ஹாபியர்களின் விபரம்.

நமது நபிகள் நாயகம் அவர்களுடையவும் அவர்களின் அடிச்சுவட்டைப் பின் பற்றி நன்மதிப்புப் பெற்ற ஸஹாபாக்கள் அவர்களுடையவும் வழியைப் பின் பற்றும்படியே நாம் விதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் இதற்கு மாறாக பற்பல சடங்குகளையும் வணக்கங்களையும் சிருஷ்டித்து அஸல் மார்க்கத்தை மறக்கச்செய்யும் காரியங்களைப் பற்றிக் கண்டித்து நரகத்தைக்குறித்து அச்சமூட்டப் பட்டிருக்கிறதென்பதையும் முந்தின வியாசங்களில் விபரிக்கப் பெற்றிருப்பதை இப்புத்தகம் வாசித்தோர் நன்கறிவர். காலஞ் செல்லச் செல்ல மார்க்கத்தில் நூதனங்களும் இஸ்லாமிய ஆசாரங்களில் துர் வழக்கம் விக்கிரக வணக்கஸ்தரின் துராசாரங்களும் கலந்து தூய்மைபெற்ற இஸ்லாமிய ஆசாரம் மறைந்துபோய் விட்டதென்பதை நன்கறிந்த எவர்தான் இரத்தக்கண்ணீர் வடியாதிரார். இப்படிப்பட்ட வழக்கத்தையும் துராசாரத்தையும் பின் பற்றினவர்களும் இவ்வாறான வருவாயையே பெரிதெனக்கருதின சில ஆலிம்களும் இத்துர் சடங்குகளையகற்றி இஸ்லாமிய சன்மார்க்கப் போதனை புரிவோரை வஹ்ஹாபி வழிகெட்டவர் அப்படி இப்படி யென்று தூற்ற முன் வந்து விடுகின்றனர். இவ்வாறு தூற்ற முன் வருவோர் தாங்கள் வேதம் ஓதிய ஆலிம்களென்றும் மேதாவிகளென்றும் நினைத்துக்கொண்டாலும் உண்மையில் அவர்களை அங்ஙனம் கருதவழியில்லை. இவர்கள் தங்கள் அறியாத்தனத்தால் சு. ஜ. மதுஹபையுடைய மேதாவிகளையும் ஆராய்ச்சித்திறன் மிக்கஅறிஞர்களையும் வஹ்ஹாபிஎனக்கூறிவிடுவதால் இவர்களை சு.ஜ விசேஷமாக ஹனபிமதுஹபின்கோடரிக்காம்புகளென்றுகூறலேபொருந்துமெனக் கருதுகிறோம். * வருவாயைக் கருதி உண்மையை மறைத்து

* மறுப்பு நூல் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையும் வஹ்ஹாபிக் கொள்கைகளென்று சுன்னத்து ஜமாஅத்துகளையே குறைகூறி நிந்திக்கும் விந்தை குறிப்பிடத்தக்கது. உயர்தர உலமாக்களில் ஒருவரொன்னும் மஹோன்னதப்பதவி வாய்ந்த மௌலவி ஸாஹிபும் அதிற் கலந்திருப்பது அதினும்

பொய்யைக் கூறி பொது ஜனங்களைக் கிளப்பிவிடலாமெனப் பார்க்கிறார்கள். ஆயினும் உண்மையை உணரவேண்டுமென்ற வகுப்பாரும் இருக்கிறார்களென்பதை இவர்கள் அறியவில்லை போலும்! மௌலிது ஷரீப், கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்றும் கப்ருகளை ஸியாரத்துச் செய்யப்படாதென்றும் பராத்து வணக்கம், குர்ஆன் ஓதல் அகீகாச் செய்தல், கத்னுச் செய்தல் முதலியவைகளை செய்யக்கூடாதென முஸ்லிம்கள் மறுக்கிறார்களென்றும் பழிமொழி சாற்றி வஹ்ஹாபிகளெனக் கூறுவது அருவருக்கத்தக்க பொய்க் கூற்றாகும். பொதுவாக பார்க்கும்போது பிதுஅத்துகளை யகற்றி சுன்னத்துகளை போதிப்பவர்கட்கே விஷமிகளால் இவ்வாறான பட்டங்கள் அளிக்கப்படுகின்றன. இது வருவாயைக் கருதின சுயநலப் புலிகளின் சம்பிரதாயமாகும். இபுனு அப்துல்வஹ்ஹாப் நஜ்தி என்பவருக்கும் எங்களுக்கும் யாதும் சம்பந்தமில்லை. மதுஹபிலும் பிக்குஹிலும் ஸுலூக்கிலும் எவ்வித தொடருமில்லாமலிருக்க பிதுஅத்துகளைக் கண்டிப்போர்களை வஹ்ஹாபி எனச் சாற்றுவது விஷமத்தனமென்பதை யாவரும் அறிந்துகொள்ள வேண்டியதே.

---

விந்தையே. இந்த ஜனங்கள் தாங்கள் மார்க்கக் கலைகளை கற்கவேண்டும். இன்றேல் கற்றவர்களிடம் விஷயாலோசனை புரியவேண்டும். இரண்டுமின்றி கண்டதெல்லாம் உளர்வதாயின் பழம்பதர்களென்றே அறிஞர் எள்ளி நகையாடிவிடுவர். வஹ்ஹாபி யார் என்பது இன்னும் அவ்விருமகான்களும் விளங்கவில்லை. நாயகம் அவர்களின் காலத்துக்கு 600 வருஷத்துக்குப் பின் தோன்றின மௌலிது ஷரீபின் வழக்கத்தை அடியோடு கூடாதென மறுத்து பிதுஅத்து எனக் கண்டித்துவரும் இபுனு அமீருல் ஹாஜ் மாலிக்கீ என்பாரை ஷைக் அப்துல் ஹக்முஹத்திஸ் (ரஹ்) அவர்களும் தேவ்பந்து உலமாக்களின் சிரேஷ்டர் அல்லா ரஷீத் அஹ்மத் கங்கூஹியும் பரெலி வகுப்பு ஹனபி உலமாக்களின் முஜத்திதெனப் போற்றப் பெற்றவரும் மௌல்வி அஹ்மத் ரஸா கான் ஸாஹிப் முதலியோரும் இமாமென்று போற்றி அவர்களின் நல்லெண்ணத்துக்கு இறைவனருள் பாலிப்பானாக என்று துஆச் செய்திருக்கிறார்கள். (முபாஹிஸா ஸுல்தான் பூர் 34 ப. பத்ஹ்ற ஹக்கானீ 40-மாத பத்த பிஸ்ஸுன்னு ஷஹர் ரபீஉல் அவ்வல், பதாவா, ரஷீதிய்யா வா. 3. ப. 28 முதலியவைகளிற் பார்க்க) எனவே, தற்காலம் நிகழ்ந்துவரும் மௌலிது ஷரீபை அறவே ஓதக்கூடாதென்றும் பிதுஅத்து என்றும் கண்டித்துவரும் அல்லாமா இபுனுல் ஹாஜ் முதலியோரை சுன்னத்து ஜமாஅத்து மேதாவிகள் வஹ்ஹாபி என்று கூறாமலிருக்க மௌலிது ஷரீபை ஓதி நாயகமவர்களின் மகிமைப் பிரதாபங்களை வெளிப்படுத்த வேண்டுமெனக் கூறும் முஸல்மான் கோஷ்டியாரை

1. அல்லாமா ரஷீத் அஹ்மத் கங்கூஹி (ரஹ்) அவர்களிடம் வஹ்ஹாபி என்பது யார்? என்று கேட்டதற்கு அவர்களிறுத்த விடையாவது:— இக்காலத்தில் விசேஷமாக இந்தப் பாகங்களில் சுன்னத்தைப் பின் பற்றின மதாபிமானிக்கு வஹ்ஹாபி எனக் கூறுகிறார்கள். (பதாவா ரஷீதிய்யா வா. 2. ப. 11.)

2. மௌலானா கலீல் அஹ்மது ஸஹாரன்பூரி (ரஹ்) அவர்களால் எழுதப்பட்டு பல விசேஷ உலமாக்களால் நன்மதிப்புப் பெற்ற நூலில் வஹ்ஹாபி என்பதைப் பற்றிக் கூறுவதாவது:—

— இந்தியாவில் வஹ்ஹாபி என்னும் பதமானது இமாம்களைத் துயர்வதை விட்டவர்கள் மீது உபயோகிக்கப்பட்டது. பின்னர் இப்பதம் எவ்வளவு விசாலமாய் விட்டதென்றால் நாயகமவர்களின் சுன்னத்தின் பேரில் அமல் செய்து கெட்ட பிதுஅத்தையும் துர் வழக்கங்களையும் விட்டொழிக்கும்படி பிரசாரம்புரிவோர் மீதும் பிரயோகிக்கப்பட்டது. மேலும் பம்பாயிலும் அதன் பாகங்களிலும் அவ்லியாக்களுடைய ஸமாதிகட்கு சஜ்தாச்செய்வதையும் வலம் (தவாபு) சுற்றி வருவதையும் விலக்கப்பட்ட மௌல்வியும் வஹ்ஹாபி யென்று பிரஸ்தாபமாயிருக்கிறது. எத்தனை பெரிய முஸ்லிமாயிருந்தாலும் வட்டியை ஹறாமென்றவனும் வஹ்ஹாபியாம். இதற்குப் பின் வஹ்ஹாபி என்பது ஓர் ஏசல் பதமாய் விட்டது. எனவே ஓர் இந்தியன் ஒருவனை வஹ்ஹாபி என்றால் அவன் கெட்ட விஸ்வா சமுடையானென்பது கருத்தன்று. மேலும் அவன் சுன்னத்து

---

வஹ்ஹாபிக் கொள்கையுடையோரெனக் கழறுவது மதியற்ற முரட்டுத்தனமென்பதில் ஐயமுமுளதோ? இன்னும் காயல்பட்டிணத்திலிருந்து வெளிவரும் "அல்ஹிதாயா" 1347 ஷவ்வால் மாத சஞ்சிகை 344-ம் பக்கத்தில் தேவ்பந்து உலமாக்கள், ஷைகுல் ஹிந்து, லக்நவ், மௌலானா அப்துல்ஹை முதலியோர்களைப் பெரியோர்களென எடுத்துக் காட்டப்படுகிறது. நாகூர் மௌல்வி சைய்யிது ரஹ்மத்துல்லா ஸாஹிப் அவர்களால் இயற்றப்பட்ட ஹிதாயத்துல் அனும் இலா இஜ்திஹபி தர்ஜுமத்தில் குத்பாபைனல் அவாம் என்ற கிரந்தத்திலும் தேவ் பந்து தானூன் ஸஹாரன்பூர் முதலிய ஊர்களின் உலமாக்களை பெரியோர்களென மதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலின் மறுப்பு நூலாசிரியர் தமது அந்தகாரத்தால் காயல் பட்டணத்து உலமாக்களையும், நாகூர் உலமாக்களையும், வஹ்ஹாபிகளென்று கூறிவிடுவரோ வென்றும் அஞ்சவேண்டியதாக இருக்கிறது. ஏனெனில் அறிவீனமென்னும் அந்தகாரத்தால் முன் பின் யோசியாமல் எழுதுவதினாலேயாம்.

வல்ஜமா அத்து ஹனபீ முஸ்லிமாயிருக்கிறான். ஸுன்னத்தின்பேரில் அமல் செய்கிறான். பித்அத்தைவிட்டும் தவிர்ந்துகொள்கிறான். பாவத்தைச் செய்வதில் இறைவனைக்கொண்டு அச்சப்படுகிறான். என்பதே கருத்தாகும். (அத்தஸ்திகாத் 3. ப.)

ஈண்டுசமர்ப்பித்துள்ள ஆதாரங்களால் தற்காலத்தில் வஹ்ஹாபி எனக்கூறப்படுவோர் தக்க ஸுன்னி ஹனபீ மதாபிமானி என்பது புலனாகிறது. முஸ்லிம் சகோதரர்காள்! வஞ்சகர்கள் அறிவீனர்களின் வலையிற் சிக்கி ஏமாந்து மதாபிமானிகளை வஹ்ஹாபி எனப் பகராமல் விஷமிகளைக்கண்டித்து ஸுன்னத்தைப் பின் பற்றி ஜெயம் பெறுவீர்களாக. யாவற்றையும் படைத்தாளும் ரக்ஷகா! எங்களை எங்களது நபிகணாயகம் அவர்களுடைய நல் வழியைப் பின்பற்றி மோக்ஷம் அடைய அருள்புரிவாயாக. ஆமீன்! வஸல்லல்லாஹு அலந் நபிய்யிஸைய்யிதினா முஹம்மதின் வஆலிஹிவஸஹ்பிஹி அஜ்மயீன்.

பீரானியா பிரஸ். திருநெல்வேலி. 10—30.